உ

சிவமயம்.

கணபதிதுணை.

பட்டினத்துப்பிள்ளையார்

என்று வழங்கும்

திருவெண்காட்டடிகள் சரித்திரம்

அவரது பாடற்றிருமுறை.

இச்சரித்திரம்

ம-ா-ா-ஸ்ரீ, நாகை.

கண்ணு. இராமலிங்கபிள்ளையவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சென்னை பிரசிடென்சி காலேசு தமிழ்ப்பண்டிதரும்

சமரசவேத சன்மார்க்க சங்கத்து

வித்துவான்களி லொருவருமாகிய

தொழுவூர். வேலாயுதமுதலியாரால்

வடமொழியினின்றும்

வாசகமாக மொழிபெயர்க்கப்பட்டு

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

கலியுகாதி ௵ 4988.

விய ௵ ஆடி மீ

1886.

Registered Copy-right.

(இதன்விலை ரூ. கஉ.)

இப்பட்டினத்துப்பிள்ளையார் துறவுபூண்டு திருவண்ணாமலைக்குவந்தங்கிருக்குநாளில் ஓர்கணிகையைக்காமுற்றுவீரியத்தை வெளிப்படுத்த அதனை யவளுண்டு கருவுற்றுப்பிறந்தசேயே, திருப்புகழ்செய்தருளிய அருணகிரிநாதர் எனச் சிலர்கூறுகின்றனர். ஆயின் அதனுண்மை வெளிப்படுவது அருமையாக விருத்தலாலும் எமக்குங் கிடைத்த முதனூல்களொன்றனுள்ளும் அக்கதையினைக் குறிப்பியாமையாலும் யாமும் அதனை விட்டனம்.

இவரது சரித்திரங்களைத் தமிழ்ச்செய்யுளாற் கூறும் புராணமொன்றும் வடமொழியாற் கூறும் புராணமொன்றும் வழங்குகின்றன. ஆனால் தமிழ்ச் செய்யுளாற் கூறும் புராணம் செய்த நூலாசிரியர் இலக்கியவிலக்கண சாத்திர சம்பிரதாயங்களிலே சிறந்த கல்வி கேள்வியுடையராகவும் சிறந்தவாக்கியாகவும் தோன்றுகின்றார். ஆனால் அவர் செய்த புராணம் கையெழுத்துப்பிரதிகளில் பலவழுவுற்று வழங்கியபடி அச்சிடப்பட்டதாகக் காணுகின்றதன்றிச் சுத்தபாடநோக்கி யச்சிடப்படவில்லை யாதலின் அனேகவிடங்களிற்பொருள் விளங்கவில்லை. ஆனாலும் கருத்துமாத்திரம் மிக வாழமுடையதாகவிருக்கின்றது. ஆதலின் அந்நூலாசிரியர் சிறந்த பெரியோரென்பதற் கையமில்லை. அவரின்னாரெனப் பேரும் வரலாறும் தெரியவில்லை.

இவ்வாசிரியர் தாம் புராணஞ்செய்வதற்கு முன்னூல்பெறாது பெரியோர் வழங்கும் வாய்மொழிபற்றிக் கூறியதாக "வெண்கா[illegible]ர்குலவணிகரின்புகூர மன்னிய நல்லறிஞர் சிலர் பரந்த கதையினைத் தொகுத்து வகுத்துக்காட்டும் என்னவெழிற் புலியூரிலி கலைஞரறியு நெறியிசைத்துளேன்யான்." எனவும், "புலியும் பதஞ்சலியு முதலான பெரியோர் தம்புகழ்ப்புராணம், [illegible]வாமவர்க்கு முனங்கதியடைந்தோரளவிலவ ரியற்புரா[illegible]லபல வாமவைபோல வருவனவு மவ்வண்ணம் பகரலா[illegible]வடநூல்சொல்லி லென்சொல்லாலி[illegible]கதிக்கதை[illegible]மே" எனவும் கூறின[illegible]

தமும், இவர் செய்த மான்மியமும் கூறிலர். இவ்வாசிரி கதைதொகுத்து” என்றதால் இன்னு மநேக கதைக ழிந்ததாகக் காட்டுகின்றது.

அதற்கேற்ப அப்பட்டினத்துப்பிள்ளையா ளாற் குறிப்பிக்கின்ற கருத்திசையப் பலகதைக கள் கூறுகின்றனர். அக்கதை புராணத்துளில்லை க்கலாகாததாக விருக்கின்றது; மேலும் இந்நூலாசி யர் வட ழியிற் புராணமில்லையென்றே கூறினர். ஆகவே வடமொழி யிவர்க்குக் கிடைத்தபடி யன்று போலும்.

இனி எமக்குக் கிடைத்த வடமொழிப்புராணமோ “ யோத்தர புராணத்துள் திருவிடைமருதூர் மான்மியத்தில் கூ பட்டதாகக் கூறுகின்றது. கதைகள் சற்றேறக்குறைய சாங்கம விருக்கின்றது. ஆயினும் அதன் சொன்னடைமுதலியன வி டுஞ் சிறந்ததாகக் காணப்படவில்லை ஏனெனில் அடிகளார் அ ளிச்செய்த திருப்பாடல்களின் கருத்தமைந்த தோத்திரங்க ன்றும் பொருந்தவில்லை.

இனி எமக்குக் கிடைத்த திருவகைப்புராணங்களுள்ளும் இ பட்டினத்தடிகளுக்கு ஞானாசிரியர் திருவிடைமருதூருடையாரா கிய சிவபெருமானே மகவாக வந்து முடிவிலருள்செய்து மறைந் ததாகக் குறிப்பித்திருக்கின்றது. அங்ஙனமிருக்க.

“திருவேடமாகித்தெருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றுனைப்பதம்பணிந்தேன்
கருவாகுமேதக்கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோவிங்ஙனேசிவனுற்றதுவே.”

என்ற அவரது செய்யுளைப்பற்றிப் பட்டினத்தார் வழக்கப்படியடி யவர் பூசைசெய்ய நிமித்தம் தேடிச் சென்றிருக்கையில் சிவபெரு மான் அடியவர் கோலத்துடன் அவரது மனைக்குச்சென்று கா ற்றவூசியு மோலையுங் கொடுத்து இருந்தபடி பாவனை நிகழ்செ ய்து மறைந்ததாகச் சிலபெரியர் கூறுகின்றனர். ஆயினும் இ வகைப் புராணத்தைப்பற்றியே யாம் எழுதி யிருக்கின்றனம்.

...ம்ப்புராணத்துள், அடிகளார் அருளிச்செய்தது ... றித்திருக்கும் திருப்பாடல்களிற் சிலது கிடைக்க அவற்றைப் பிறைக்குறி ( ) யிட்டு அதனுள் அம்மு பெழுதியிருக்கின்றது.

இப்பட்டினத்துப்பிள்ளையார் துறவுபூண்டு திருவண்ணாமலைக்குவந்திருக்குநாளில் ஓர்கணிகையைக்காமுற்றுவீரியத்தை வெளிப்படுத்த அதனை யவளுண்டு கருவுற்றுப்பிறந்தசேயே, திருப்புகழ்செய்தருளிய அருணகிரிநாதர் எனச் சிலர்கூறுகின்றனர். ஆயின் அதனுண்மை வெளிப்படுவது அருமையாக விருத்தலாலும் எமக்குக் கிடைத்த முதனூல்களொன்றனுள்ளும் அக்கதையினைக் குறிப்பியாமையாலும் யாமும் அதனை விட்டனம்.

இவரது சரித்திரங்களைத் தமிழ்ச்செய்யுளாற் கூறும் புராணமொன்றும் வடமொழியாற் கூறும் புராணமொன்றும் வழங்குகின்றன. ஆனால் தமிழ்ச் செய்யுளாற் கூறும் புராணம் செய்த நூலாசிரியர் இலக்கியவிலக்கண சாத்திர சம்பிரதாயங்களிலே சிறந்த கல்வி கேள்வியுடையாராகவும் சிறந்தவாக்கியாகவும் தோன்றுகின்றார். ஆனால் அவர் செய்த புராணம் கையெழுத்துப்பிரதிகளில் பலவழுவுற்று வழங்கியபடி அச்சிடப்பட்டதாகக் காணுகின்றதன்றிச் சுத்தபாடநோக்கி யச்சிடப்படவில்லை யாதலின் அனேகவிடங்களிற்பொருள் விளங்கவில்லை. ஆனாலும் கருத்துமாத்திரம் மிகவாழுமுடையதாகவிருக்கின்றது. ஆதலின் அந்நூலாசிரியர் சிறந்த பெரியோரென்பதற் கையமில்லை. அவரின்னாரெனப் பேரும் வரலாறும் தெரியவில்லை.

இவ்வாசிரியர் தாம் புராணஞ்செய்வதற்கு முன்னூல்பெறுது பெரியோர் வழங்கும் வாய்மொழிபற்றிக் கூறியதாக "வெண்காடர்குலவணிகரின் புகூர மன்னிய நல்லறிஞர்சிலர் பரந்த கதை தைத்தொகுத்து வகுத்துக்காட்டும் என்னெவுதிற் புலியூரிவி கலைஞரறியு நெறியிசைத்துளேன்யான்." எனவும், "புலியும் பதஞ்சலியு முதலான பெரியோர் தம்புகழ்ப்புராணம், வாரமவர்க்கு முனங்கதியடைந்தோரளவிலவி ரியற்புராபலபல வாமனவைபோல வருவனவு மவ்வண்ணம் பகரலாலைவடநூல்சொல்லி லென்சொல்லாவிடி வன்கதிக்கதைமே" எனவும் கூறினர்.

சிவமயம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார் என்று வழங்கும்

திருவெண்காடர் சரித்திரம்.

வாழ்த்து.

பிறவியளக்கரும்பிழைப்பொற்றையும்
உறுவினைக்கானும்வெறுவியசுரமும்
வெருவியவீடுமேவருவயாவின்
அருட்புணைகெழீஇயவவலமோம்புபு
மடனிகுமூலகுமாதவத்தடத்துறீஇ
யிடரளறுறுய்பாக்கினியமுக்கட்
கடமியலொற்றைக்கொம்பருன்றுபவே
தெறுபுலவேடர்கறுவுநனியஞ்சுபு
குறவிதோண்மணந்தவேல்விடலைவேண்டுபவே

பெருந்
ஞதி

அதாஅன்று.

பொதியிற்பொதிந்துமறையின்மணந்து
தண்டமிழ்சுவைத்துவையநீடுய்ந்த
சுவடுபடுமிடற்றுக்கவடுபலபோக்கிய
மாவடியிருந்ததேவியலமுதை
உண்டுளங்குளிர்ந்துதொண்டகங்கிரம்ப
வாடாவார்வத்துமாண்பறம்பூத்த
பைங்கொடியடிநிழல்பற்றித்தொண்டத்
தொண்கக்குடிசுற்றஞ்சூழ்பவாழியரோ
அருட்பிரகாசனன்பர்வாழியரோ
வாழியர்நலனேவாழியர்நிலனே
வாழியர்மன்றயேவாழியர்முறையே.

ஆதிநடுவந்தமிலாவுண்மையனைப்பராபரனையனைத்துந்தாங்கும்
சோதியைத்தாக்கற்றிருந்த தூயனைமாயாதசுகவாரிதன்னை [கும்
யேதிலர்முப்புரம்பொடித்தவிறையவனையிச்சையெலாமிசைய நல்
மாதியலும்பாதியனைமணிமன்றமுடையானைமனத்துள்வைப்பாம்.

திருமணக்குமம்புயத்துத்தீர்த்தரிருவருந்தெய்வத்
தருமணக்குநிழலரசுமுதலவருந்தனிவழுத்தக்
கருமணக்காநெறியளிக்குங்கடக்களிற்றைக்கைதொழுது
மருமணக்கும்பட்டினத்துவள்ளலார்சதையுரைப்பாம். (உ)

பாயிரம்.

முன்பொருவரிக்கதையை முன்னூலைப் பெறுதமவோர் மொழியும
ந்த, வின்புகல்கொண்டுரைத்தனமென்றியற்றமிழ்ப்பாவதனாலேயி
சைத்தானன்றே, பின்பினியபவுடிகோத்தரத்தினரனடியார்கள்பெ
ருமைக்கூற்றி, னன்புபெறச்சொலக்கேட்டகிருட்டிணானந்தனவனா
ருண்மாணாக்கன். (௩)

முதனிலைக்கேமுடிவுநிலைமுற்றுணர்ந்துகடைப்பிடித்துமுயல்வோ
னான்ற, விதயனவன்சிவானந்ததேவன்முதம்பெரியோருமீசனரு
ளிற், சிதவலனுமன்பினருணாசலன்சேய்சண்முகனுஞ்செயல்வலா
னும், கதையுரியவடசொல்லைச்செந்தமிழினமைவித்தல்கடனென்
றோது. (௪)

ஓசைமறாவுயர்தவத்துவேங்கடாசலப்பெயரோனுதவுமைந்தன். [றி
நாவ்ர் இன்செயலெல்லாமின்னுயிர்கட்கிதமெனவேநயந்தான்மா
லீகைக்கீர்ன்றேவர்குறட்கிலக்கியந்தேர்நன்னெஞ்சனியல்பார்ஞா
வாகையானில்லிருந்தும்பற்றில்லான்கங்கைகுலமகிழவந்தான். [னா

கான்பெற்ற குவளையந்தார்க் கண்ணியானிராமலிங்கன் [illegible]
னைப்பிற், றான்பெற்றசெல்வமெல்லாந்தககார்க்கேயெனுந்தகை
யான்சாற்றுகிது, வான்பெற்றபெரும்பேறுமண்ணவர்க்காம்படியெ
ன்னமதித்துநானும், ஊன்பெற்றவுடல்பெற்றபேறென்னவாசகத்
தினுரைக்கலுற்றேன். (௬)

மலச்செருக்கிங்கறுத்தெம்மைவாழ்விக்கும்வெண்காடர்
நலச்செருக்கினின்சரிதநானுரைக்கும்படிதுணிந்தேன்
புலச்செருக்குப்புறந்தந்தோன்புரிதவமும்பொருளில்லான்
குலச்செருக்குங்கொடைச்செருக்கும்போலுமாங்குவலயத்தே. (௭)

நைமிசாரணியத்திறம்.

தெய்வத்தமிழ்நூலின்பொருளைப்போலும் விசாலமாய் அந்நூல்களைக்கற்ற பெரியோர்கள் புகழ்போலுயர்ந்து, அவர்கள் நற்குணம்போற் றழைத்துத் தண்ணளியோடு சாந்தமணம்வீசி, உள்ளம்போல மலர்ந்த பெருமையை யுடையதாகிய ஸ்ரீ நைமிசாரணியத்தில் வாசஞ்செய்கின்றவர்களும் தவஞ்சிறந்து கல்வி கேள்விகளால் நிறைந்தவர்களுமாகிய முனிவர்கள், சகல சாத்திரங்களையும் ஐயந்திரிபற நன்று யாராய்ந்து சைவசித்தாந்த முடிபுகளெல்லா

வற்றையு முற்று முணர்ந்து புராணங்க ளெல்லாவற்றையும் உள்ளிரகசியக்கருத்தோடு அளவிட்டறிந்த ஸ்ரீவியாசமுனிவர்மாணாக்கராகிய சூதமுனிவர் வரக்கண் டெதிர் சென்று பணிந் துபசரித்து அழைத்து வந்து இருக்கச்செய்து அருச்சித்துத் தாமனைவரும் சூழ விருந்து, அவரை நோக்கி, கவலைக் கடலுக் கொருகட்டுமரம்போல வெமக்குக் கிடைத்த பெருங்கருணை வள்ளலாகிய ஐயனே! இதுவரையில் சித்தசாந்தம் பிறக்கும்படி தேவரீரிடத்து அநேகமாயிரந் தெய்வக்கதைகள் கேட்டனம் ஆயினும் அவைகள் தேவரீருடைய வாக்கினின்றும் வரும் சொல்லமுதத்தோடு கூடி மிகுந்த சுவை யுடையதா யிருந்த படியால் இன்னும் கேட்டல் வேண்டுமென்னும் ஆசை வெள்ளம் கரை கடந்து பெருகுவதே யல்லாமல் இவ்வளவிற் போதுமென்னுந் திருத்தி பிறந்ததில்லை. பழகுந்தோறும் நல்லவர்களுடைய நட்பு எவ்வாறு இனிப்பைத்தருமோ அவ்வாறு இனிக்கின்றது. ஒருவன் இவ்வுலகத்துள்ளே பெறத்தக்க செல்வம் எல்லாவற்றுள்ளேயுஞ் சிறந்தது செவிச்செல்வமாகிய கேள்வியே யன்றோ? அக்கேள்வியை மாத்திரம் தேவரீரை யொத்த பெரியோர்களிடத்தில் கேட்கப்பெற்றால் தூலமாகிய விவ்வுடம்பை நிலை நிறுத்தும்படி கொள்ளுகின்ற வேறு ஆகாரமும் வேண்டுமோ. இக்கேள்வியாகிய செவி யுணவு பெற்றவர்கள் இவ்வுலகத்திற்றானே அவி யுணவு பெற்ற தேவர்களோ டொப்பவர்களே. கல்வி யொரு சிறிதும் கற்றறியாதவனானும் ஒருவன் நல்லோர்களாலே நற்கேள்வி கேட்டிருப்பானானால் அது அவனுக்கு நேரிடும் ஆபத்துக்கிடமான வெல்லாச் சோர்வுகளையும் ஒழித்துவிடுமே. தேவரீரையொத்த பெரியோர்கள் வாயினின்றும் வருஞ்சொற்கள், வழுக்கு நிலத்தில் நடப்பவர்களுக்கு ஊன்றுகோல் உதவுவதுபோலும் இவ்வுலக வியல்பி லொழுகும் எங்கட்குத் தளர்ச்சி வராது தாங்குந் தரமுடைய வாமன்றோ? "செவியிற்சுவையுணரா வாயுணர்வின்மாக்கள், அவியினும் வாழினுமென்." என்று பெரியோர் கூறினர். கேள்வி உருசி யறியாமல் வாய் உருசி அறிந்து பிழைத்திருப்பதினும் சாவதே நலம். தேவரீரிடத்துப் பலபுராணக்கேள்விகள் அதிக நுட்பமாகக்கேட்டிருப்பதால் எங்களை யறியாமலே எங்களிடத்து உண்டாயிருந்த கல்விச்செருக்கு, தவச்செருக்குமுதலியவெல்லாம் ஒழிந்தேபோய்விட்டது. நல்ல கேள்விகளால் மிகவுந் தொளைக்கப்பட்ட காதுடைய நாங்கள், "பிழைத்துணர்ந்தும் பேதைமைசொல்லா ரிழைத்துணர்ந், தீண்டிய கேள்வியவர்." என்ற முன்னோர்கள் விதியை அனுபவமாகக் கண்டறிந்திருக்கின்றோ மாதலால் "எனைத்தானு நல்லவைகேட்கவனைத்தானும், ஆன்றபெருமைதரும்." என்னும்

ஆப்தவாக்கியத்தைச் சிந்தித்து, இப்போது தேவரீருக்குச் சிறிது வருத்தங்கொடுக்க வுடன்பட்டனம். ஆனால் அது எங்கள் மட்டிலே யன்றி யிவ்வுலகத்துள்ள மக்கட் பிறப்பை யுடையவர்கள் யாவர்க்கும் பெருநன்மை விளைக்கத்தக்கதாமாதலால், கடாக்ஷித்து தேவரீர் அந்த சிரமத்தை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும். அதாவது, முன் ஸ்ரீ சுதரிசனருடைய இன்ப சரித்திரத்தைச்சொல்லி முடித்தபின்னர், சிவானுக்கிரகத்தால் பரிபாகியாயிருந்த சிவசகனான குபேரன் இப்பூவுலகத்திற் றென்றிசைக் காவிரிப்பூம்பட்டினத்தில் வசியனாகப்பிறந்து, கடவுளை மகவாகப்பெற்று வாழ்ந்திருந்து சிவஞானியாய்ச்சித்தி முத்திகளை யடைந்ததாகத் திருவுளம்பற்றினீர். அச்சரித்திரத்தை விரிவாவெங்கட்கு விளங்கச் சொல்லி யருளவேண்டுமென்று பிரார்த்தித்து விண்ணப்பித்தனர்.

அதுகேட்ட சூதமுனிவர் பரவச முடையவராய்க் கண்களில் ஆநந்த நீர்பெருக, உடம்பு புளகம்போர்ப்ப, சிறிதுநேரங் கம்பித்தபடி தியான யோகத்திருந்து, ஐயா முனிவர்களே! நீங்கள் செயற்கரிய காரியங்களைச் செய்துமுடித்து நல்ல பக்குவம் பழுத்த சத்திநிபாதமுடையவர்கள் ஆதலால் இக்கதையைக் கேட்க விருப்பமுற்றீர்கள். சாதுக்களுக் கன்றிச் சிவஞானிகள் கதையைக் கேட்கும் விருப்பம் ஏனையர்க்குண்டாகாது. வண்டும், ஈயும் ஆறு காலுடைய சிறு பறவை யென்று பெயராலும் அவயவத்தாலும் ஒருவாறு ஒத்திருந்தாலும் வண்டு வாசனையுள்ள மதுரமான பூக்களின் தேனையே விரும்பித் தேடிச் சென்று உண்ணும்; ஈயோவெனில் நாற்றமுடைய அழுகற்புண்ணின் சீயையே விரும்பி யுண்ணும். ஆதலால் உங்கள் தரத்திற்கேற்ற கதையையே கேட்க விருப்பமுற்றீர்கள். இதை யுங்கட்குச்சொல்லுதலால் நானும் புனிதனாய் மெய்ப்பயன் பெற்றவனாவேன் என்று இனிய வார்த்தை கூறிப் பின்பு தமது ஆசிரியனைத் தியானித்து வழிபட்டு முனிவர்கட்கு அத்தெய்வ சரிதத்தினைக் கூறத்தொடங்கினர்.

கேளும், அந்தணாளர்களே! இக்கதை முன்னொரு காலத்தில் சாமவேத சாகையைச்சார்ந்த சாந்தோக்கியமுதலிய வுபநிடதங்களாலநுத்த ஞானியென்று புகழ்ந்தெடுத்து ஓதப்பட்ட சிவஞான முனிவராகிய ஸ்ரீ உபமன்னியபகவான், தன்மாணாக்கர்களாகிய பல முனிவர்களுக்கும் கூறியதாக பௌஷியோத்தர புராணத்திற் கூறப்பட்டுள்ளது.

புராண வரலாறு.

என்னவாறெனில் தன்னை யடைந்தவர் யாவர்க்கும் நிர்ப்பயத்தையும், துக்கநாசத்தையும், நோயிலலாமையையும், இஷ்டசித்தி

யையும், நித்திய சுகத்தையும் கொடுத்து ஊழிகாலத்தி லுலகமெல்லாமழிந்தாலுந் தன் தலைவர்போல அழிவற்றோங்குஞ் சத்திய ஞான சொரூபமாகிய ஸ்ரீகைலாசமலையின் சாரலிலே புகழெனப் பரந்து பொறுமைபோலோங்கித் தயவிற்குளிர்ந்து ஆசாரமொப் பப்பூத்து உதாரமென்னக் காய்த்துப் பழுத்தசெல்வஞ் செழித்த இன்ப மயமான வனமொன்றுண்டு. அதில் கற்றுணர்ந்தோரது அடக்கம்போலும் விளங்கும் பர்ணசாலை நடுவே ஒழுக்கங் கல்வியெல்லாம் வடிவெடுத்தாற்போலும் விளங்கிய படிவமுடையவர்களாய்க்கேட்டல், சிந்தித்தல், தெளிதலென்னுங்கடன் பூண்ட பல முனிவர்களாகிய சீடர்கள் புடைசூழ ஸ்ரீமன் உபமன்னிய பகவான் எழுந்தருளியிருக்கும்போது, அம்மாணவர்களாகிய முனிவர்கள் எழுந்து வணங்கி நின்று, ஓ! வியாக்கிரபாதமுனி புத்திரரே! சிவபெருமானாரால் அனுக்கிரகிக்கப்பட்ட திருப்பாற்கடலையுண்ட செல்வரே! வேதாகமங்களின் எல்லை கண்ட வெம்பெருமானே! ஸ்ரீகண்ணனார் சிவதீக்ஷாகுருவே! அடியோங்கள் உலகியலும் அருளியலும் ஒருமிக்க வுணர்ந்து உய்யும்படி ஸ்ரீ பத்தபரமேசுரர்களென்று வேதாகமங்களால் புகழப்பட்ட சாதுக்களாகிய சிவனடியார்கள் சரித்திரங்களைச்சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பித்தனர்கள்.

அப்போது ஞானாசாரியராகிய ஸ்ரீ உபமன்னிய பகவான் நெஞ்சங்குளிர்ந்து, உடல்பூரித்து, என்பு நெக்குவிட்டு, அன்பினுருகிப்பெருகி ஆராமைமேலிடக் குழைந்து குழைந்து பரவசராய்த்தம்பித்துநின்று, தெளிந்து கம்பிக்கச் சொல்லுவாராயினர். ஐயா! முனிவர்களே! எல்லாமுடைய விறைவராகிய சிவபெருமான் திவ்விய சரித்திரம்போலவே, அச்சிவமுணர்ந்த பெரியோர்களாகிய அடியார்களது அற்புதசரித்திரமும் அளவிடுதற் கரியதென்று இன்னமும் வேதாகமங்களே முறையிடுகின்றனவானால், நான் என்னென்று அறிந்து அளவிட்டுச்சொல்லப்போகின்றேன் உடம்பெல்லா நாவாகவும், ஊழிகாலமெல்லா நாளாகவும் கொண்டு இவ்வுலகமுழுவதும் ஒருங்குகூடிச் சிறிது சிறிதே எடுத்துக்கூறிச் சென்றாலும் முற்று முடியாதே!! நாம் என் செய்யக்கடவோம். ஆயினும் "கடலோடிப்பொருள்தேடினேன்." மலைகடந்து மருந்துதந்தேன்" என்பானைப்போல, ஆற்றலுக்குத் தக்கபடி சிறிது கூறுவேன். கேட்பீர்களாக, ஓ! அந்தணரே! உணர்ச்சிதேய வரும்பிறப்புவேதனைக்கும், பொறிபுலன்மனமுதலியவெல்லாங்கலங்கி யுடல் சோர வரும் மரணவேதனைக்கும் மிகப்பயந்து, அவ்விரண்டையுமொருமிக்கத் தொலைக்கும் வழி யெது வென்று தலையிற்றீப்பற்ற நீரைத்தேடிச் செல்லுவோனைப்போலுந் தேடிச்

செல்லுந் தேட்டமுடைய நீவிர்களாகிய வுங்கட்குச் சொல்லத் தக்கதொரு கதையுள்ளது; அது சுத்த மந்தனையும் அதிசீக்கிரத்தில் தீவிரனுக்கிப் பக்குவம் வருவித்துப் பிறவிநோய் நீக்கி அமிர்த நிலையாகிய முத்திசித்திகளைத் தரத்தக்கது; கேட்டவர்கள் யாரையும் மஹா புனிதராக்க வல்லது; சாவாநிலைக்கு வழிகாட்டியாயுள்ளது; சோகமோக மயக்கங்களை நாசஞ்செய்வது; அஞ்ஞானக்காட்டுக்குப் பெருந்தீயாயுள்ளது; ஞானமுதமழைபோல்வது பேரின்பப் பிரவாஹமாயிருப்பது; எவ்வகைப்பட்ட பயத்தையு மொழிக்கும் நற்றுணையாவது; நினைக்க நினைக்க நெஞ்சுருகச்சுவைப்பது! சொல்லச்சொல்ல நாவினிற்றேனூறுவது; கேட்கக் கேட்கக் கிளர்ச்சியாய்த் தைரியத்தை விளைப்பது; தருமங்களுக்கெல்லாம் விதைபம் போன்றது! செல்வங்களுக்கெல்லாம் காரணமாயுள்ளது; தேடுவார் தேடத்தக்க பொருளிதுவெனக்காட்டும் தீபமானது; முன் சைவாசிரியராகிய ஸ்ரீநந்தியடிகள் அருள்பெற்ற சனற்குமாரர் வழியில் வழங்கியது; சுவேதாரணியர் சரித்திரம் என்னும் திருவெண்காட்டடிகளுடைய திருக்கதை இதனைமற்றக்கதைகள்போல நினையாது உள்ளூன்றிச் சிந்தித்தறியவேண்டும். யாவர்க்கு மங்கலமுண்டாகவென்று சொல்லலாயினர்.

சிவபெருமான் திருவுலா வண்ணம்.

ஐயா முனிவர்களே! முன்னொருகற்பத்தில் புண்ணியமேலிட்டாற் குபேரபதவியைப்பெற்றிருந்த வொருவர், கீழ்ப்போன சன்மங்களில் சரியை, கிரியை யென்னும் இரண்டுபாதங்களையும் அனுட்டித்து முறையே தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கங்களைக் கடந்து பரிபாகியாய் மேல்யோகபாதத்தை அனுட்டித்துச் சகமார்க்கமடைந்ததால் சிவனுடைய தோழனென்று உலகுபுகழச் சிவபெருமானிடத்து அன்பும் நண்பும் பெருக வாழ்ந்திருக்குங் காலத்தில் ஒருநாள் ஸ்ரீகைலாசத்திற்குச் சிவதரிசனஞ் செய்யும்படி சென்றிருந்தார். அப்போது அங்கே, சர்வகாரணராகிய சிவபெருமான்மேல் நடக்குங் கருமத்தால் தாங்கொண்ட சகளகோலத்திற்கு ஏற்க; உலகில், இலீலாவிலாசமாக உலாவரும்படி திருவுள்ளத்தில் அருளிச்சைகொண்டு அபிநயித்து, உலகமாதாவாகிய மஹாதேவியாருடன் கூடி, இடபாரூடராய் ஸ்ரீகணபதி, முருகப்பிள்ளையார், வீரபத்திரர், கூர்மாண்டர், ஆடகேசுரர், காலாக்கினிருத்திரர், ஸ்ரீநந்தியடிகள், பிருங்கிமுனிவர், பிங்கிருடி, குண்டோதரர், கும்போதரர், பானுகம்பர், சங்குகன்னர்முதலிய பிரமதகணேசுவரர்களெல்லாம் ஜயஜயவென்று புகழ்ந்து சேவித்துவர, சூழந்த திருவோலக்கம் தரிசிக்கவந்திருந்த பிரமதேவர், விஷ்ணு, இந்திரன், ஆதித்தர், வசுக்கள், மருத்துவர், உருத்திரர் திக்குப

பாலகர், முதலியதேவர்களும், அகத்தியர், ததீசி, பிருகு, மார்க்கண்டர், வசிட்டர், அங்கிரா, பரத்துவாசர் முதலிய முனிவர்களும், அரக்கர், இராக்கதர், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர், இயக்கர், கிம்புருடர் முதலிய கணங்களும் புடைசூழ்ந்து ஹர!! ஹரா!! வென்று போற்றுதல் செய்யத் தமது அன்பின் றோழராகிய குபேரனும் பிரியாநேயத்திற் றொடர எழுந்தருளி வருகையில், வழிக்கணுள்ள ஸ்ரீஇமயம், மந்தரம், பசுபதீச்சரம், கேதாரம், காசி, ஸ்ரீசைலம், காளத்தி, வடவனம், காஞ்சி, அருணாசலம், விருத்தகிரி முதலிய மஹாக்ஷேத்திரங்களின் விபவங்களைக் கடாக்ஷித்து, எமது பிதாவாகிய வியாக்கிரபாதர் பேரன்பு செய்து பூசித்திருந்து நித்தந் திருநடனங் கும்பிடுங்காரணத்தாற் பெரும்பற்றப் புலியூரென்றோர் காரண நாமம் பெற்று விளங்கும் ஸ்ரீ சிதம்பர மஹாக்ஷேத்திரத்தின் மங்கலங்களை யனுக்கிரகித்துச் சிதாகாச ரஹசியத்தை வெளிப்படுத்தும் திருச்சிற்றம்பலம் என்னும் தெய்வத்தானத்துள் வீற்றிருந் தருளியிருந்தார்.

அந்த நாளில் தனதராகியதோழர், பெருமானுழையடைந்து போக்குவரவு ஒன்றுமில்லாத பரிபூரணப் பொருளாகிய எம்பெருமானே! ஒன்றினும் விருப்பும் வெறுப்பும் தேவரீர்க்கில்லையாயினும் அடியோங்கள்வேண்டுவதை யளித்துக்குறைமுடிப்பதே திருவருளினியற்கை யாதலால் இனி மற்றைய திருப்பதிகளையுஞ் சென்று, பெருமான் செய்யும் அருளப்பாட்டினைத் தரிசிக்கவென்று என்னுள்ளத்து ஓராசையெழுகின்றதென்று விண்ணப்பித்தனர். அதுகேட்ட ஆளுடையாரும் தமது தோழனார் குறையை முடிக்கத் திருவுளஞ்செய்து ஸ்ரீநந்திதேவர் முதலிய பிரமதகணங்களுந் தேவர் முனிவர் முதலிய யாவரும் புடைசூழ்ந்து சேவித்துவரச் சிதம்பரத்து நின்றும் எழுந்தருளி ஸ்ரீ சுவேதாரணியமென்னும் வடமொழிப் பெயரையுடையதாய் நினைத்தவர்கள் பாவத்தையெல்லாம் போக்கத்தக்க திருவெண்காடென்னுந் தலத்தை யடைந்தருளினார்.

அப்போது, ஆளுடையார் பக்கலாக வரும் சகராகிய குபேரனார், தமக்கு உத்தமசத்திநிபாதம் பிறந்து இனி ஞானசன்மார்க்கத்தை யடையும் பருவம் சமீபித்திருந்தபடியால் அத்திருவெண்காட்டருகு தேவர்களுலகங்களினுஞ் சிறந்த அழகுசெல்வம் வாய்ந்திருந்த காவிரிப்பூம்பட்டினத்தைப் பார்த்தார். அவ்வளவில் அது இவர் கண்ணையும் மனத்தையும் கவர்ந்துகொண்டது. ஏனெனில், முன்னாளிலே தேவேந்திரன், தன்னுடைய தாயாகிய அதிதியானவள் சாயாவனமாகிய திருச்சாய்க்காட்டுக்குத் தினந்தோறும் சிவதரிசனஞ் செய்யும்பொருட்டு வருவதைக்கண்டு, அவ்வருத்த

கிக்கும்படி அவ்வாலயத்தையே தன்னகரத்திற்கு எடுத்துச்செல்லவேண்டிவந்து ஆலயத்தினை அடியோடு பேர்த்தெடுத்தபோது, உலகெலாம் பெற்றமாதாவாகியபார்வதியார்புறம்போந்து "கூகூ" என்றோசைகாட்டப் பெருமான்கண்டிந்திரனை எடுக்காதபடி தடுத்தருளி அவனுக்கும் அவனன்னைக்கும் பேரருள்செய்யப் பின்னப் பாகசாதனன் அங்கு முன்போல ஆலயப்பதிட்டை செய்யும்படி நகரமொன்றுகண்டு வேதியர் முதலிய உயர்வருணர் நால்வரையுந் தந்து வசியர் மரபு மிகவும் தழைத்தோங்க வளம்படுத்தி, சாயாவனத்து ஸ்ரீ அமுதவண்ணப் பிரானுக்கும் "கூகூ" வென்ற காரணத்தால் வழங்கும் "கூவென்ற மென்மொழிப் பிராட்டிக்கும்" ஆலயஞ்சமைத்து, நித்தநைமித்தமுதலிய சிறப்புக்களை வழுவாது மேன்மேலோங்க நடத்தித் திருப்பல்லவனீச்சர முதலிய மற்றவாலயப் பதிட்டைத் திருப்பணிகளையு நிறைவேற்ற வகுத்தனன்.

அப்பால் அந்நகரங் காலமுறையிற் றன்னின் மேம்பட்டு, அற்புதன் கயிலைப் பொற்பினில் விளங்குஞ் சைவக்கோயிலால் விளக்கமுற்றபடியோ அச்சைவக்கோயில் விளக்கமுற்றபடியோ அறியேன், அருமறையோதுங்கிடக்கையும், அருநூல்பயிலு மிருக்கையும், அந்தணர் வாழுமுறையுளும், ஆகுதிவழங்குந் துறைகளும், சிறம்புரியுமிடங்களும் பேரறம்புரியுமடங்களும், தூநலம் பெருகுஞ் சாலையுந் தேனலமருவுஞ் சோலையும், இருநிலம்புரக்கு மரசரண்மனையும், அவ்வரசரைப் பிரிவருமொக்கலர் பெயராச் சூழலும், ஐவகைச்சுற்றத்தின ரமர்மாளிகைகளும்; உறுதித்துணையவர் உவந்தமாடங்களும், நிலாமுற்றத்தொடு நிரை நிரைக் காலதர், பல்கணிசாளரம் பலபலவிசைந்தன அரசிறைமண்டபம், அமைச்சியல்மண்டபம், முரசெறிமண்டபம், முன்னுறுமண்டபம், அத்தாணிமண்டபம், வித்தாரமண்டபம், சித்திரமண்டபம், விசித்திரமண்டபம், ஆராய்ச்சிமண்டபம், தேராயமண்டபம், பட்டிமண்டபம், குட்டிமமண்டபம், கலைபயில் மண்டபம், கழகமண்டபம், கல்விமண்டபம், செல்வமண்டபம், விநோதமண்டபம், மநோரதமண்டபம், சிலம்பமண்டபம், நிலலறிமண்டபம், அலங்காரமண்டபம், ஆசாரமண்டபம், ஆடல்மண்டபம், பாடல்மண்டபம், தேவமண்டபம, சேவல்மண்டபம் முதலிய மண்டபங்களும் அன்னசாலை, ஆயுதசாலை, எழுத்தறிசாலை, ஏகாந்தசாலை, நாடகசாலை, பாடகசாலை, மந்திரசாலை, யந்திரசாலை, தோரணிசாலை, தோரணசாலை, வசந்தசாலை, வாகனசாலை முதலிய சாலைகளும் கணக்கறிதெற்றி, வழக்கறிதெற்றி, கூடத்தெற்றி, மாடத்தெற்றி, வாதத்தெற்றி, சீதத்தெற்றிமுதலிய தெற்றிகளும், நீதிமன்றம், நியா

ஈமன்றம், நல்லோர்மன்றம், வல்லோர்மன்றமுதலிய மன்றங்களும், தேவர்வாழ்பொது, காவலர்சேர்பொது, ஊரவர் தேர்பொது, நேரலர்பேர்பொது, கற்றவர்முதலாமற்றையர் யாரும் நித்தமும் கூடும் வித்தகப்பொதுக்களும், சதுக்கமுஞ்சந்தியும், விதப்பருமிடங்களும், செய்குன்றுகளும், இருந்துசூளிகைகளும் கோபுரநிலைகளும், கூடமாடங்களும், நெடுந்தேர்ச்சாலையும், கடுமதயானைக்கூடமும், அடுபரிக்குதிரை மந்திரமும், பெரும்போர் மறவர் சூழலும், இருந்து படைபலபயிலும்வீரர்பாடியும், தேரோட்டுஞ்சூதரும், களிறுநடத்து மாதோரணரும், பரிசெலுத்தும் வாதுவரு முறையு முறையுளும், தேரோடுவீதியும், செண்டுவெளித்தெருவும், வேளாண் வசியர் தாளாண்மைக்குடி வீறுசால் வீதியும், கூறுசால்கூலமும், ஆவணமறுகுங் காவணநிலையும், பீடிகைத்தெருவும் மாடமாளிகைகளும், பொற்கருவூலம் பொலிமணிக்குவைகளும், சொற்பயில் கம்பலைச்சூழலும் நீழலும், அணிபலபகல்செயும் அழகிய முன்றிலும், யவனர், சோனகர், கவனமாமக்கர், சீனர், சாளுவர், ஊணநாட்டினர், பலதீவர், வங்காளர், ஈழர், கொங்கணர், மாகதர், மச்சர், மிலேச்சர், வன்வடுகர், பப்பரர், கூர்ச்சரர், பஞ்சகவுடர், அங்கர், வங்கர், அருங்கருநாடர், குட்டுவர், குடகர், ஒட்டர், பாஞ்சாலர் முதற்பெருநாட்டினர் விதப் பலசரக்கு, வேண்டி வந்துலவும் நீண்ட பண்டசாலைகளும், சுண்ணஞ்சந்தனம் வண்ணங்கலவை, நானமான்மத நல்ல வாசங்கள், தொடுபூவிடுபூதொடைலக்கண்ணி, நறுவேர் பச்சிலை விரைபுகைவிற்பவர், காசுத்தெருவும், பட்டுப்பருத்தி பலநிறக் கம்பலம், கட்டும்பட்டசாலியர் வீதியும், வயிரமாணிக்க மரகதம் பவளம், முத்துங்குயிற்று முழு வீதிகளும், அவரை துவரை உழுந்து பயறுமுதலிய முதிரையும், நெல்லும் புல்லும் வரகுந்தினையும் சாமையும் சோளமுமாதி கூலங்களை விற்கும் கூலவீதிகளும், பிட்டு முதலிய விற்கும் காழியர்வீதியும், அப்பம் முதலிய விற்கும் கூவியர் வீதியும், உப்பு விற்கும் உமணர்வீதியும், சங்குவளை முதலிய அறுப்பார்வீதிகளும் கள்விற்கும் கண்ணொடையாட்டியர்வீதியும், இலை கயிறு முதலிய விற்கும் பாசவர் வீதியும், தச்சர் தட்டார் கன்னார் கருமார்சிற்பரோவியர் பற்பல தொழிலினர் வியக்கும் கலங்கள் செய்து நயக்கும் வீதிகளும், கைவினைமக்கள் வீதியும், துளைக்கருவியாகிய குழலும், நரப்புகருவியாகியயாழ்முதலியவு மிசைக்குங்குழலரும்பாணரும்வாழும்வீதியும், தோற்கருவியாகியமத்தளமுதலியவுந்தாளமாதியவும் கொண்டு முழக்கும் குயிலுவரும், நின்று புகழுஞ்சூதரும், இருந்து புகழும் மாதகரும், வைதாளியாடும் வேதாளியரும், நாழிகைக்கணக்கரும், சாந்திக்கூத்தாடும் கண்ணுளரும், மதங்கரும்,

காவற்கணிகையரும், கழகக்கூத்தியரும், அகக்கூத்தாடும் பதியிலாராகிய ஆடற்கூத்தியரும், ஏவற்பெண்களும், பரியாசகஞ்செய்தாடி நகைப்பிக்கும் வேழம்பரும், மூங்கின்மேனின்றாடும் கழாயம்பரும் பிறதொழிலரும் வாழும் வீதிகளும், பண்ட மாற்றுவார் செய்யும் ஓசை, கடலொடு மாறி யொலிக்கு மியல்புடையவாய் மரமே காலாகக்கட்டப்பட்ட நாளங்காடியும், கண்டவர் வியந்து மயங்க நெருங்கி யிருப்பதேயன்றி, பூதமொன்று தேவேந்திரனா லேவப்பட்டு முசுகுந்தனென்னும் அரசனுக்குவருமிடையூறு காக்கவந்து நிற்கும் அந்நாளங்காடித்தெருவிலுள்ள பீடிகையும், கரிகாற் சோழன் வெற்றியின்பொருட்டு வடதிசைநோக்கிச்சென்று பரதேயமன்னரை வெற்றிகொண்ட நாளில், மனிதராலாக்கப்படாது தேவர் கம்மியனா லாக்கப்பட்டு யாவர்க்கும் வியப்பினையுண்டாக்கு மற்புதத்தனவாகியவற்றுள் ஒன்றாகி வச்சிரநாட்டரசன் திறையாகக்கொடுத்த நிழல் பிரியா இரவையும் பகலாக்கும் முத்துப்பந்தரும், மகதநாட்டரசன் இறையாகத்தந்தபட்டிமண்டபமும், (இது, யாமிக்க கல்வியுடையோமென்று விருதுகூறிவந்தவரை யெல்லாமளந்தறியவல்ல வித்தியாமண்டபமாம்.) அவந்திநாட்டரசன் கப்பமாகத்தந்த வாயிற்றோரணமும், (இது, பகைத்தவரை யச்சுறுத்திநட்டவரை யாதரிக்க வல்லதாம்) உடையதாயிருக்கின்றதுமன்றி, தாழிட்டவாயிலுங் காவலுமின்றிப் பல பண்டப் பொதிகளைப் பெயர் பொறித்து விடப்பட்டதாதலால் யாரேனுங் களவினாலவற்றைக்கொண்டு சென்றால் கருதிய விடத்துக்கு அவர்களைப் போகவொட்டாது தடுத்துத் தன் வெளியிடத்தே தானே சுழன்று கிடக்கப்பண்ணி யினியாரும் களவென்பதனைக் கனவிலுங் கருதவொட்டாது செய்யும் வெள்ளிடைமன்றமும், கூன்குருடு செவிடுமை தொழுநோயுமுடையார் சென்று வலம்வந்து பணிந்து முழுகினால் அக்குற்றம் நீங்கி அழகும் வலியுமுடைய யாக்கையராக்கவல்ல பொய்கையையுடைய இலஞ்சிமன்றமும், மருந்தூட்ட வுண்டு மயங்கினாரும் பித்தேறினாரும் பேய் பிடிக்கப்பட்டாரும் நஞ்சுண்டாரும் பாம்புகடிக்கப்பட்டாரும், பிறகாரணத்தால் அஞ்சினாரும் வந்தடைந்து வலஞ்செய்து பணிய அவர்க்கத் துன்ப மொழிவிக்கும் ஒளிநெடுங்கல் நிற்குமன்றமும், தவஞ்செய்வாரைப்போல் அபிநயஞ்செய்து தீயகாரியஞ்செய்யும் பாதகத் தவசிப்பூனைகளும், கணவர் நம்பும்படி யில்லறதருமம் வழுவாது நடத்துவாரைப் போற்காட்டித் தீயகாரியஞ்செய்யும் வஞ்சப்பெண்டிரும், தம்மை யாதரிக்கு நீதியரசரை வஞ்சிக்கும் துட்டமந்திரிகளும், தமது மனைவியை விட்டுப் பிறர் மனைவியால் விரும்பிச்செல்லுந் தூர்த்தர்களும், பொய்சாக்ஷி கூறுவாரும், பயன்பெறுங்காலத்தொருவர் பக்கத்

திருந்து புகழ்ந்து நின்று, பெருத காலத்தவர் பழிதூற்றும் சோளருமாகிய இவர்களென் கைப்பாசத்தாற் கட்டுண்டுதுன்பப்படுபவர்களாம் என்றெருபூதம் பெருங்கூச்சலிட்டுலாவும் பூதசதுக்கமும், அரசன் செங்கோன்முறை பிறழ்ந்தாலும் நீதித்தலத்தில் நடுவுநிலை தவறினும் சாக்ஷியாக நாவினற் சொல்லாது ஒரு பாவையிருந்து கண்ணீருகுத்துக் காட்டி யுண்மை யுணர்த்தும் பாவை மன்றமும் அமையவிளங்கியது. அன்றியும் முத்து, பவளஞ் சங்குப்பு முதலவாகும் அலைதருபண்டத்தாலும், மயிற்பீலியானைக்கோடு தேன் கழைமுத்த முதலியவாகும் மலைதருபண்டத்தாலும், பலதேயந்தீவுகளினுள்ள மணி பொன் பட்டு முதலியவான கலந்தருபண்டத்தாலும், குளிர் நன்னீர்நிலை, பல்பொருட்புதையல், பளிங்கு சீதவண்ணச்சிலையாதியாலும், நெல் கமுகு வாழை கரும்பு தெங்குபலாவாதியயன் செறிமரக்கா முதலியவற்றாலும், ஏனைய மருத நிலந்தருபண்டத்தாலும், கவரி வற்கலை பால் தயிர் இழுது முதலிய காடுதரு பண்டத்தாலும், குடை கண்ணாடி கருப்பூரங் கலவை வண்ணப்பொன்னுடை பணிமுதலிய நாடுதருபண்டத்தாலும் குறைவற்றதென்பானேன் எந்நகரத்திற்கு மெய்ப்பொருளாலுங் குறைவறுப்பதாயுள்ளதென்பதே தேற்றம். என்னை? அங்கு வாழ்வார் ஒருபொருள் வேண்டி மற்றெப்புறத்தும் புகாராகவே, அது பூம்புகார்ப்பட்டினமாயது எனவும்பொருள் படுதலால்.

குபேரன் பிறக்கும்படி யிறைவர் கட்டளை பெற்றது.

இங்ஙனந் தேவரு முனிவரு மானிடரும் விழைவு கொள்ளத்தக்க அற்புத மழகுஞ் செல்வம் வாய்ந்த அக்காவிரிப்பூம்பட்டினம் முன்னம் இறைவர் வலிது சென்று ஆவணங்காட்டித் தடுத்தாண்டருளப்பெற்ற நம்பி யாரூராகிய வன்றெண்டப் பெருந்தகையார் திருவாரூர்த்திருப்பூங்கோயிலமர்ந்த வீதிவிடங்கப்பெருமான் முதலடி யெடுத்துக் கொடுத்தருளக்கொண்டு பாடியருளி வைத்த திருத்தொண்டத் தொகையாகிய கருவூலத்து அமைந்த பொன்னன்ன வெமது இயற்பகை யடிகள் திருவவதாரஞ் செய்யப்பெற்றுள்ள தாதலால், தன்னைக்கண்ட சிவதோழனாகிய குபேரனார் மனத்தையுங் கண்ணையும் கவர்ந்ததேயன்றி யவர் தன்னை விட்டுப் பிரியாவகையும் பிணித்துவிட்டது. ஆகவே அவ்வச்சிர வண்ணர் தம்மைத் தோழமை கொண்டாண்ட தேவர் பெருமான் திருவடிகளில் பலகாலும் விழுந்து பணிந்து எழுந்து துதித்துநின்று, எம்பெருமானே! இத்தெய்வத்திருப்பதி யாதுகாரணமோ யான் தன்னைவிட்டுப் பிரியாவகையோராசையைத்தூண்டி என்னை முற்றும் வசஞ்செய்துகொண்டது; திருவுள்ளமானல் இங்கு சிலகாலம் வசிக்கப் பெறுவேனகவென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டருளிய நம்தாண்டவரும் மேல்நடக்குங் கருமங் கருதி, அக்குபேரனை நோக்கி,ஐய, நீ போக தனுவுடையவனாய்ப்போக பூமிவாழ்கின்றனை, இக்கருமபூமிவாழ்க்கை விரும்புவ தடாதாயினும் விருப்பம் விளைந்ததால் "அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மென்ஞான்றுந்தவாப் பிறப்பீனும்வித்து" என்றதறநூன்முடிபு ஆகவே மானுடயாக்கையை யடைந்து இங்கு வாழ்தியென்றருளிச்செய்தனர்.

அப்போது, தனதனார், பிறத்தலுக்கஞ்சி நெஞ்சுதுணுக்குற்று ட்ல் பதைக்கப்பணிந்து நின்று, எம்முடையாய்! முன்வினை யிருந்தவாறு சிறிதுமறியேன்; இங்ஙனம் விளைந்தது. இனி யென் செய்கோ! எம்பெருமானே! பேயும்பிரிவதற்கிசையாத திருத்தொண்டினிலைமை பிரியச்செய்த பெருந்தீவினையுடையேன்,பேதைமானுடப் பிறப்பினை யடைந்து செல்வத்தான் மயங்கும்வழி, தேவரீர்மேலே பான்மூளை விளையாதபடி கான்மூளையாகவந்து அவ்லமறுத்துண்மைநிலையனுக்கிரகித் தருளவேண்டுமென்று பலமுறை வணங்கினார். வணங்கிய தோழனாரை யவ்வாருக வென்றருளிப்பெருமான், உலகமெல்லா மீன்றருளிய பெருமாட்டியாரோடு மற்றைத் திருப்பதியாவுங் கண்டு சென்று கைலைபுக்கு வீற்றிருந்தருளினார்.

பட்டினத்துப்பிள்ளையார் திருவவதாரம்.

கேட்டீர்களோ முனிவர்களே! அப்பால் அக்குபேரனார் மூவருங் கடக்க முடியாத சிவபெருமான் திருவாணையைக் கடப்பதற்கஞ்சி, "செந்நெலாலாய செழுமுளைமீட்டுஞ் - செந்நெலேயாகி விளைதலா - லந்நெல் - வயனிறையக்காய்க்கும் வள்வயலூர-மகனறிவு தந்தையறிவு" என "அறநூல்" வகுத்தவின் யாவர்பாற்சென்றுசெனனமடைவோமென்ற விசாரத்துடனிருக்கையில், அத்தெய்வப்புகார்ப் பட்டினத்தொருசாரில், அந்நகர வசியமரபிலவதரித்துப் பொன்னைத்தேடி வளர்ப்பதுபோலவே தருமம், புகழ், ஒழுக்கம், அறிவு, அன்பு, அடக்கம், சிவபத்தி, அடியார்பத்தி, குருபத்தியையும் தேடித், தொகுத்துவைத்த சாக்கனைபோல விளங்கும் சிவநேசரென்பவர், திருமகள்விழையுமழகும், கலைமகள் புனையும் அறிவும், மலைமகளருளும் அறமும் அமைந்து, "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் - பெய்யெனப்பெய்யு மழை" என்றமுதுவோர் மொழிக்கு, இலக்கியமாகி யருந்ததியும் வணங்குங் கற்புடையாராகி இருபெருங்குலமும் விளக்கவந்த ஞானகலாம்பையென்னு மனைவியாரோடும் கூடித் தேவர் பூசை, பிதிரர்கடன், விருந்துபசரித்தல், பல்லுயிரோம்பல், பழமறை பயிறல் முதலிய ஐவகைவேள்விகளும் வழுவாது நாடோறும் நடத்திஇல்

லறம் புரிந்து ஒரே பெண், மகப்பேறுடையவராய் வாழ்ந்து வருங்காலத்து ஆண்மக்கட்பேறின்றி மிகவருந்தி மானிடப் பிறப்பினையடைந்தறிவினாற் சிறந்தோர்க்கு இம்மை மறுமையென்னு மிருவகை யின்பமும் பயத்தலால், "பெறுமவற்றுள் யாமறிவதில்லையறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என்றது தமிழ்வேதம் என்றுஎண்ணியெண்ணி நெடுமூச்செறிந்து நெஞ்சம்புண்ணாகியென்செய்க்கடவோம் என வருந்தி, அவ்வில்லறக்கிழவோர் இருவரும், விளக்கு நிலையொடு விரிச்சியாராய்ந்தும் கட்டு வைப்பித்தும் கணக்குய்த்துணருங் கண்ணுடைச்சோதிடநாடியும், புண்ணியதீர்த்தம் பொருந்தியாடியும், தனை மெழுகி யுண்டு தவம் பலபுரிந்தும், புழுதிபடக்கிடந்து போகந்துறந்தும், பகலுணா இரவுணாப்பட்டினி புரிந்தும், அருநோன்பு செய்தும் பெருவேள்வியாற்றியும், மாதவரைப் பேணியும் ஆதுலரை யளித்தும், வானவரை வழிபட்டுந் தானமது பலசெய்தும், அறவரை யடைந்து நெறிமுறைபணிந்து, கலைகளறத்தினஞ் சிவகதை கேட்டும், உலகினையளந்த நெடியமால் முன்னே, ஒருமகன் வேண்டிப் பெரியமாதவஞ்செய்து, பூசைபுரிந்த ஈசனை யம்முறை, கந்தனெந்தையொடு கவுரியென்னம்மை, பந்தமாவைத்த படி யருச்சித்தும் அந்தசீர்கேட்டும் ஆதரித்திருந்தும், பன்னாளுழந்தனரின்னோர்விரதம்.

அதுநோக்கிக் குபேரனாரும், இவர்களிடத்து நாம் மகவாகப் பிறப்பதே பெருநன்மை, அறிவொழுக்கங்குறையாது வளரும், அறம்பெருகும் பாவந்தேயுமென்றெண்ணிச் சிவத்தியானத்தோடும் அந்த ஞானகலாம்பையாருடைய கருப்பத்திற் பிரவேசித்தனர். அப்போது அவ்வம்மையார் முத்துக்களைக்கருவில் வைத்த செல்வச் செங்கரும்புபோல வயிறுவாய்த்து விளங்கினர். அதனைக் கேள்விப்பட்ட சுற்றத்தினரும், நட்பினரும், அயலாரும், பிறருங் கார்ப்பருவங்கண்ட கலாபமயிலாயினர். புதல்வர்ப்பேறுவேண்டிய விருவர்க்கேயன்றி யூரிலுள்ளார் பலர்க்கும் நற்கனவுகாணல், இழந்த பொருளைப்பெறுதல், சிறுமுயற்சியாற் பெரும்பயன் பெறுதல் பகைவர் வலிந்துவந்து உண்மையினட்புக்கொள்ளுதல், கருத்தின்றிச்சிவத்தியானம் புண்ணியசிந்தை யுள்ளக்கிளர்ச்சி யுண்டாதல் முதலிய பல நற்குறிகளுண்டாகவே, யாவரு மிக்கருவின்கணுள்ள சிசுவினால் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரும்பயன் விளைவுண்டாம்போலுமென்று சிந்தித்துக்களித்திருந்தனர். மாதம் வளருந்தோறும், சிவநேசனாரும் பும்ஸவனம் சீமந்த முதலிய கருப்பக் கடன்களை நிறைவேற்றிவந்தனர். ஞானகலாம்பையாரும் கருவளரவளர மேனி விளர்த்துப் பச்சை நரம்போடிக்கண்பசந்து குழிய

மயக்கப்பொய்த்துயில்கொண்டு புளிக்குடியும் விரும்பிச் சிவசிந்தனையோடும் அக்கருவைப்போற்றிவந்தனர்.

இங்ஙனம் பத்துத்திங்களு மாகவே நல்ல திதிவார நக்ஷத்திர யோககரண மமைந்த தினத்தில் ஐந்துகோள்களுச்சமாய் *மற்றவையோடு திரிகோணகேந்திரங்களி லமையச் சுபலக்கினத்தில் வலம்புரிச்சங்கம் ஒளிபொருந்திய நல்ல முத்தினைப் பெற்றாற்போலும் பாற்கடல் சந்திரனைப் பெற்றாற்போலும் அந்த ஞானகலாம்பையானவர் புத்திரனைப்பெற்றார். உடனே தேவர் பூமழை பொழிந்தனர் தேவதுந்துமி முழங்கிற்று; இளந்தென்றற் காற்றுவீசிற்று; கூவல்குளம் ஓடைகயம் முதலிய நீர்நிலைகள் தெளிவை யடைந்தன; ஆகாய மறுவின்றி விளங்கியது;, காரணமின்றி யெல்லா வுயிர்களுக்கும் உள்ளக் கிளர்ச்சியும் ஊக்கமும் களிப்பும் பொங்கியெழுந்தன; மரமுதலிய வோரறிவுயிரும் பருவங்கடந்தவாயும் தளிர்த்துப்பூத்துச் சிறந்தன;யாவர்க்குஞ் சிவஞானமும் பத்தியும் அன்பும் அடியவர்கள்பால் ஆராதகாதலும் பெருகியது;சைவர்கள் வலத்தோளுங் கண்ணுந்துடித்தன. பெற்றவர்கள் களிப்பையென்னென்று பேசுவது; சுற்றமுதலிய மற்றவர்கள் வாராதவாழ்வு வாய்த்தவர்களானார்கள்; அதுகண்டந்நகரத்திலுள்ள அறிவறிந்த முதியோர் யாவரும் ஆநந்தமடைந்து சிவபுண்ணியமெல்லாந்திரண்டொருவடிவமாயிற்றோ? சிவஞானம் யாம்பெறவேண்டி யிவ்வாறு வந்ததோ? சிவன்றிருவருளிங்ஙனம் தடுத்தாளக்குழந்தை வடிவில் வந்ததோ வென்று அதிசயித்துத் துதித்து நின்றார்கள்.

உடனே வேளாண்மையிற்சிறந்த பிதாவாகிய சிவநேசனாரும் தெய்வக்காவிரியாற்றிற்குச்சென்று நீராடிப் பிதிர்தேவதைகள் களிப்ப நீர்க்கடன் முற்றி மனைபுகுந்து சுருதிமிருதிகளைக் கற்றுங் கேட்டு முணர்ந்த முதுமறையோர்களை யழைப்பித்து, விதை வழங்கி நவமணிகளையும் பொன்னையு நிலத்தையும் பிறவற்றையும் தானமாகக்கொடுத்து, யாவர்க்கும் முப்பழங்கண்டு சர்க்கரைதாம்பூலம் பகிர்ந்தளித்து,அன்னதானமுதலிய சிறப்பச்செய்து தேவாலயத்துச் செல்வ விழாவும் பூசையுங் குறைவற நடத்துவித்து, ஏழைகள் அனைவர்க்கும் வேண்டியவாறு குறைவறத்துபகரித்து, நல்ல கணித முணர்ந்த சோதிடர்களால்சாதகருமஞ்செய்வித்து,மனைத்தெய்வச் சிறப்புப் பூசனையும் வேள்விச்சாந்தியு முடித்துப் புத்திரப்பேறு திருவிழாக்கொண்டாடினார். அப்பால் பத்துநாளும் எண்ணெய் விழாமுதலிய சிறப்பச்செய்து பதினோராநாள் பெற்றோ ரிருவரும் நீராடி மகவாகிய மணிக்கும் நீராட்டிப்,பொட்டிட்டுத்தொட்டிலிற்கிடத்தி தெய்வக்காப்புச்செய்து நல்லோரையில்

பந்துக்கள் வேதியர் முதலியோர் புடைசூழ விருந்து, விதிப்படி திருவெண்காடர் என்று நாமகரணஞ்சாத்தி அருமை பலசெய்தார்கள். அச்செல்வக்குழந்தைதொட்டிலிற்கிடந்து, அம்மையப்பனைப்பிரிந்து வருந்துமக் குறிப்பு வெளிப்பட அழுதும், இனிபாசப் பிணிப்பையும் மயக்கப்பற்றையு முதறி யுதைத்துத் தள்ளுங்குறிப்பு வெளிப்படுத்துவதுபோற் கையுதறிக் காலுதைத்து ஆடியும், உலகர் பேய்மதிகண்டு நகைப்பார்போல் நகைத்தும், பிறவித்துன்பத்திற் கஞ்சுவார்போலஞ்சியும், மயல் கவிழ்குறிபோலமுகங் கவிழ்ந்தும் அருளொளிகண்டு தலையெடுத்தசைத்தாடுமது போல விளக்கொளிகண்டு தலையெடுத்தசைத்துச் செங்கீரையாடியும், மேற்சிவயோகத்திருக்குஞ் செய்தி வெளிப்படவிருந்து சப்பாணிகொட்டியுந், தாய்முகநோக்கிப்புன்முறுவல் செய்துமுலைநெருடி யுண்டும் மகிழ்செய்யும். இங்ஙனமாக அருமகப்பெற்றோரும் பெருநகரும்றோரும் பூரணசந்திரனைக்கண்ட சமுத்திரம்போல மகிழ்ச்சி பொங்க நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அச்சைவக் கொழுந்தாகிய பிள்ளைப்பெருந்தகையை வளர்த்து நான்காமாதத்திற் சந்தி மிதிப்பித்து ஆறுமாதத்தில் விதிப்படி உருத்திரப் பல்கணத்தாராகிய சிவனடியாரை உண்டி விளையாதியாற்பூசித்து, அம்மாஹேசுவரப்பிரசாதத்தால் அன்னப்பிராசனஞ்செய்வித்தார்கள்.

அப்பால் தவழ் பருவங்கடந்து தளர் நடைப்பருவ மடைதலும் கொந்தளமாகிய சூழியம் விளங்க, காதிற் சிறுகுதம்பை யூசலாட மார்பிலேம்படை மதாணி முத்தாரங்கள் மழலை வழிவோடமுகுசெய்யக் கையிற்கடகமின்ன, அரையின்மணிக்கோவைசிற்றோசைசெய்யக் காலிற்சிறுசதங்கையோடு தண்டைகலீரெனன வொலிப்பத் தத்தடியிட்டு நடந்துமோடியும், வீதியிற் சிறுதேருருட்டியும், பேதைச்சிறுமிய ரிழைத்தாடுஞ் சிற்றிலழித்தும், நற்றாய் செவிலித்தாய், கைத்தாய், ஊட்டுந்தாய், சேடியர், சிலதியர் பாங்கியரொடு பின்சென்று அழைப்ப வோடியொளித்தும் வந்து மேல் விழுந்து முத்தமளித்தாடியும், ஊரின்கண் யார்க்கும் காமப்பகுதிவெளிப்பட நமது திருவெண்காட்டையர் விளையாடி யருளினர்.

சிவநேசர் சிவபதப்பேறு.

இங்ஙனமாக, "மக்கண்மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர்சொற் கேட்ட லின்பஞ்செவிக்கு" என்ற திருக்குறளிலக்கியமாம்படி தாய்தந்தையரிருவர்க்கு மின்பம் விளைய இவ்விளைய பெருந்தகையார் அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், நிராசை, சத்தியம், தவம், ஆராய்ச்சி, சிவநேசமுதலியவெல்லா முடன் வளர வளர்ந்து ஐந்து திருவயதடைந்தார். அக்காலத்தே, தந்தையாகும்படி தவஞ்செய்

த சிவநேசனூர், அம்மைந்தர் வரலாற்றை முற்றுங்கண்டு களிக்கப்பெருது வினவயத்தராய்த் தேகவியோகஞ்செய்து சிவபதம் பெற்றனர்.

அப்போது அவர் மனைவியாரும் சுற்றத்தினரும் நட்பினரும் கடலென மறுகினர். பின்பு குழந்தைப்பருவத்திருந்த திருவெண்காட்டையர், அன்னையா ரேவற்படி சுற்றத்தார் சார்புபெற்றுப் பிதாவுக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலிய யாவும் நூன்முறை தவருது செய்து முடித்தனர்.

பிள்ளையார் வித்தியாப்பியாசம்.

அப்பால் கணவனை யிழந்த அத்தாபதமகளாகிய தாயார் தமது தவப்பயனுகிய மைந்தர்பால் ஆராத காதலையுடையராய் வளர்ப்பவர், மகனுர் கல்வி பயிலத்தக்க பருவம் வந்திருப்பதை யுணர்ந்து பலகலைகளையு முற்றுமுணர்ந்த நல்லதோர் வேதியரை வருவித்து, அவரை யுபசரித்துவேண்டுவன வெறுப்பக்கொடுத்து அவரிடந்தமதுபுத்திரரை யோதுவதற்குப் பள்ளியில் அமைத்தார். திருவெண்காடனூரும் தவக்குறை முடிக்கவந்தவராதலால், அவ்வளவில் கண்டவ ரெல்லாரும் வியக்கும்படி நிமித்தமாத்திரையில் ஆசாரியர் முன்னிலையாகவெல்லாநூலையுங் குறைவற வோதிமுடித்து, முற்று முணர்ந்தவர்களில் முதல்வராக விளங்கி யிருந்தனர். அவருக்குப் பூர்வவாசனையால் சிவஞானந்தானே விளங்கியது; சிவபத்தி, அடியார்பத்தி, ஜீவகாருணியம், உலகவிடயப் பற்றுக்களில் மனஞ்செல்லா தருவருத்தல் முதலிய பெரியோரொழுக்க முழுவதும், அப்பிள்ளையாரை யடுத்தவர்க்கும், அவர் சரிதங்கண்டவர்க்கும் கேட்டவிர்க்கும் இயற்கைக்குணம்போல அமைய விளங்கி வந்ததாலுல் அவர் செய்தி யித்தன்மைத்தென்று வேறு கூறுவானேன்.

பிள்ளையார் வஸ்துவிசாரணுசெய்தல்.

ஆகவே அவ்விளம்பருவத்தினராகிய திருவெண்காடாருக்கு முற்பிறப்பின் ரெடர்ச்சியால் சிவபூசையிற்பற்றும் விருப்பமும் மனத்திற் ரோன்றச் சிந்திக்கலாயினுர்.

எங்ஙனமெனில், கண், வாய், மூக்கு, செவி, குதம், குறியென்னும் ஒன்பதுவாயிலாலும் மலசலங்களை யொழுகச்செய்கின்ற இவ்வுடம்பு புழுக்களால் நிறைந்த பாண்டம்போலும் அருவருப்புள்ளதாய் ஒருகணமு நிலையென்று கொள்ளக்கூடாததாய்ப் பல துன்பங்களுக்குஞ் சாக்கறையாயுள்ளது. இவ்வுடம்பினைமுன்னம் தாய் நமது என்பாள், தந்தை நமது என்பான், மனைவி மக்

கள் முதலிய சுற்றத்தினர் நமது என்பார்கள், ஒழியாத நோய்களோ நமது நமதென்று நலித்துக்கொண்டு நிற்கும்; பின்னரோவெனில், நாய் நமது என்னும், நரி நமதென்னும், காகம்-கழுகு-பருந்து-பேய் - கூளி முதலிய நமது நமதென்னும், இடையிடையே யானு மெனதெனதென்றிருப்பேன், யோசிக்குமிடத்தில் இது யாரதோ? என்போல நின்றொத்தனைபேருடம்பு, எவ்வாறாய் விட்டது? என் கண்காண முன்னர் என்ன வுபசாரத்திருந்து பின்னால் இழிக்கப்பட்டு எடுத்துங்கிடத்தியும் புரட்டியும் அப்பா ஐயாவென்ற சொல்லை மறந்து பிணமென்றழைத்து எடுமென்றும், இடுமென்றும், சுடுமென்றும், மண்ணிலிட்டும் தீயிலிட்டும் வீணே கழிக்கநாறிக்கிடந்ததே, என்னபயன்பெற்றது? கருவொழியக் குழவிப்பருவத் தழிந்ததோகோடி; குமரப்பருவத்தழிந்ததோ பலகோடி; கிழப்பருவத்தழிந்ததோ கணக்கில்லை; அது நிற்க. இந்தப்பாடு, இவ்வோருடம்புடனே யொழிந்தவாறு, அல்லவே சமுத்திரதரங்கம்போல எத்தனைபிறப்புப்பிறந்து எத்தனை பாடுபட்டவாறுயுள்ளது; கல்லாய்ப் பிறந்து கடந்ததுகோடி; காடாகிநின்று கழிந்தது கோடி; புல்லாய்ப்பிறந்து புலர்ந்ததுகோடி; பூடாகித்தோன்றி மடிந்ததுகோடி; புழுவாய்ச்சனித்து மரித்ததுகோடி; பல மிருகம் பாம்பாகிப்பட்டதுகோடி; பறவை மீன் வர்க்கமாம்பாடதோ கோடி; அலகைப்பேயாகி யலைந்ததோகோடி; அரக்கரொடு தேவராய் அருமுனிவராகி, நிலைகுலைந்து நெறிமயங்க நேர்ந்ததோகோடி; நினைக்க நினைக்க ஐயோ!! நெஞ்சு துடிப்பதுவே! இதுவரையினும் இவ்வுலகத்தின்கண்ணே ஒவ்வொரு உயிர்களும், எறும்பு முதல் யானையீறாக அண்டசம், சுவேதசம், சராயுசம், உற்பிசம் என்னும் நால்வகை யோனியுள்ளும்; தேவர், மானிடர், விலங்கு, பறவை நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் என்ற வெழுவகைத் தோற்றத்துள் எடுக்காத யாக்கையில்லை, கிடக்காத நிலமில்லை, படுக்காதபாயலில்லை, அடுக்காதகாலமில்லை, பெறாததாயில்லை, உறாதசுற்றமில்லை உண்ணாத வுண்டியில்லை, பண்ணாத தொழிலில்லை, எடாதயெடுப்பில்லை, படாதபாடில்லை அந்தோ!! என்செய்வோம். உறங்குவதையும் விழிப்பதையு மெண்ணிப்பார்த்திரங்குவதென்னே? மறப்பது நினைப்பதுமே செத்து மறுபிறப்பாவதாயிருக்கின்றது. இவ்வகைத்தாக இடையிட்ட காலமோவெனில் பசி, தாகம், நித்திரை, சோகம், மோகமுதலியவற்றுள்ளும், அவற்றைத் தணிக்கும் வழி தேடு முயற்சியுள்ளும் ஒவ்வொன்றானே ஒழிவதாகவிருக்கின்றது. ஆனால், எக்காலத்தில் இப்பிறவிப்பெருந்துன்பத்தினையொழிக்கவல்ல திதுவென்றறிவதும்; அறிந்தவற்றைக் கடைப்பிடித்துச் செய்வதும், ஐயோ! என்செய்வோம்! என்று இரங்கி அழுதழுது வாடிவருந்தி

க்களைப்பு மிளைப்புமுற்றுக் கையறவடைந்து, "பிறப்பென்னும்பேதைமை நீங்கச்சிறப்பென்னுஞ்செம்பொருள் காண்பதறிவு" என்று, சிந்தித்துச்சிந்தித்து, "நடலைவாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர், சுடலை சேர்வது சொற்பிரமாணமே, கடலினஞ்சமுதுண்டவர் கைவிட்டால், உடலினார் கிடந்தூர் முனிபண்டமே" ஆகையால், "பூக்கைகொண்டரன் பொன்னடி போற்றிலார், நாக்கை கொண்டரனாம நவில்கிலார், யாக்கைக்கே யிரைதேடி யலமந்து, காக்கைக்கேயிரையாகிக்கழிவரே." இவ்வுலகத்தறிவில்லாதவர். அவர்களைப்போலவே "வாழ்த்தவாயு நினைக்கமடநெஞ்சும், தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச், சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே, வீழ்த்தவாவினையேன்நெடுங்காலமே." என்று ஆராமைமேல்கொண்டு, "கற்றுக்கொள்வனவாயுளநாவுள, இட்டுக்கொள்வனபூவுளநீருள, கற்றைச்செஞ்சடையானுளனுமுளோம்-எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே" என்று சிவபூசை செய்யநெஞ்சிற்றுணிவுகொண்டெழுந்தார்.

இங்ஙனம் விசாரத்தால் மனங்கனிந்தெழுந்த திருவெண்காடனார், இனி பூசிக்கப்படும் சிவலிங்க வியல்பினையாராய்ந்து "மலர்ந்த வயன்மாலுருத்திரன் மகேசன்-பலந்தருமைம்முகன்பரவிந்துநாத-நலந்தருஞ்சத்திசிவன்வடிவாகிப் - பலந்தருலிங்கம் பராநந்தியாமே." என்னுமாகமத்துணிபுணர்ந்து, இத்தகையசிவலிங்கத்தினை நாமெவ்வாறு பெறுவது, எவ்வாறு அருச்சனைசெய்வது, இக்கருமங் குருமுகத்தாலன்றி முடியாதே "நேயத்தேநிற்கு நிமலன்மலமற்ற-நேயத்தைநல்கவல்லோனித்தன்சுத்தனே - ஆயத்துவாதத்துவமுணர்ந்தாங்கற்ற-நேயர்க்களிப்பவனிடுங்குரவனே" என்றெண்ணி மனங்குழைந்து, "பரிசனவேதிபரிசித்தவெல்லாம்-வரிசைதரும்பொன்வகையாகுமாபோற் - குருபரிசித்தகுவலயமெல்லாம்-இருமலந்தீர்ந்துசிவகதியாமே." என்று குருமகிமையைத்தியானித்து, அந்தோ! வாழ்நாள்வீணாளாகக்கழிகின்றதே தேசிகோத்தமனது திருவடித்தீர்த்தமும், பரிகலச்சேடப்பிரசாதமும் என்று பெறுவோம்? என்னைக்கொண்டு தன்னையளிக்கும் எம்பெருமானார் எப்போது எழுந்தருளுவார்? எவ்விடத்திலெழுந்தருளுவார்? என்செய்தால் வருவார்? குருநாதன் திருவடியன்றி வேறு தாரகமுள்ளதோ மக்களுயிர்க்கு? "பத்திப்பணித்துப்பரவுமடிநல்கிச்-சுத்தவுரையாற்றுரிசறச்சோதித்துச் - சத்துமசத்துஞ்சதசத்துங்காட்டலாற்-சித்தமிறையேசிவகுருவாமே." "சுத்தசிவன்குருவாய்வந்து தூய்மைசெய்-தத்தனைநல்கருள்காணவிழிமூடர்-பொய்த்தருகண்ணால்நமரென்பர்புண்ணியர் - அத்தனிவனென்றடிபணிவாரே." குருவேசிவ

மௌனக்கூறினனந்தி - குருவேசிவமென்பது குறித்தோரார் - குரு
வே சிவனுமாய்க்கோனுமாயிற்கும் - குருவேயுரையுணர் வற்ற
தோர்கோவே.'' என்று துதித்து, என்னை யடிமைகொள்ளுஞ் சற்
குருசிகாமணி யெந்ததிசையாக வெழுந்தருளுமோ வென்று பேழ்
கணித்துருகிக்கரைந்து, நாம்பெறத்தக்க பேறெல்லாம் குருபரன்
திருவருளொன்றேயன்றோ அதுபெற்றால், ''சித்திகளெட்டொடுந்தி
ண்சிவமாக்கிய-சுத்தியுமெண்சத்தித்தூய்மையும் யோகத்துச்- சத்
தியுமந்திரசாதகபோதமும்-பத்தியுநாதனருளிற்பயிலுமே.'' என்
றன்பு பெருக வொன்றுந்தோன்றாது உணவிலும் நித்திரையிலு
ம் இச்சையு முயற்சியும் வரவரக்குறைந் தொருநாளிரவிற் சோர்
வுற்றிருந்தாராகப், பெற்ற அன்னையார் தம்மிளமைந்தர் மேனி
யிளைத்து வருவதையும், உண்டி யுறக்கங் குறைந்து வருவதையுங்
குறிப்பி னுணர்ந்து சிந்தித்திருப்பவர் அன்றுமிகச் சோர்ந்திருப்ப
து கண்டு வருந்தி அருகணைந்து நின்று, அப்பா! குழந்தாய்! வர
வர மேனியிளைத்தனை! உனக்கின்றுவந்தசோர்வென்னை? உன்னைக்
கலிதீர்க்கவந்த கருவூலமென் றெண்ணி யிருக்கின்றேன் ஐயோ!
வயிறுகுழைந்து வாடுகின்றதே! உண்ண வெழுந்திரு ஐயனே!
என்று அழைக்கக்கண்ட பெருந்தகையார் குருமோகங்கொண்ட
குணக்குன்றமாதலால் உண்டி வினையிற்சிறிதும்மனவூக்க மின்றித்
தாயே! எனக்கின்று பசியில்லை யாதலால் நீர் வருந்தாதிரும் நாளை
யுண்பே னென்று மறுத்தவரைப் போவுழிப்போகவிட்டுச் சிவசிந்
தனையோடும் படுத்துறங்கிக்கிடந்தனர்.

பட்டினத்தடிகள் கனவில் சிவானுக்கிரஹம்பெறல்.

அங்ஙனமிருக்க, இவரை முன்னமே தடுத்தாளும்படி திருவ
ருள் செய்திருந்த பெருங்கருணைக்கடலாகியசிவபெருமானார், இவ
ரது பருவத்திற்குமேற்பட்ட விசாரமும், ஒழுக்கமும், அன்பும்,
அதிதீவர நிலைமையுநோக்கித் திருவருள் சுரந்து, அன்றிரவி லிவ
ரது கனவில் ஆயிரம்பிறைகண்டதோர் முதுவேதியராய்த் திரு
மேனி முழுவதும் வெள்ளிமுளைபோன்ற நரையும், அழகின் கட்
லலைபோலுந்திரையும், திருமுடிநிலவமுதொழுகப்பூசிறுற்போலும்
புண்ணியப்பூச்சும், ஒருதலைமறைத்தபிறைபலதலை வெளிபட்டாற்
போலும் புண்டரமும், கண்டத்தே யொளித்தகாளவிடம்தானணி
பெற அக்கமணியாய் வெளிபட்டுச்சூழ்ந்தாற்போலும் விளங்கும்
உருத்திராக்கத் தாழ்வடங்களும், திருநீற்றுப்பொக்கணமும், கை
யிற்கோலும் மார்பினூலும் அழகை அழகு செய்வதாக அருண்
மேனிசாத்தி வந்தெதிர்நின்றருளி முன்னே புன்னகைசெய்து மூ
வர் பிழைப்ப முப்புரஞ்சுட்டதென்ன, அன்று இன்னகைசெய்து

மெய்யறிவின்பம் விளைந்து மும்மலப்பிணக்கறச்சுட்டுக் கனிவருள் செய்து, ஐயா! குழந்தாய்? வெண்காட! மேனி யிளைத்தனையோ! என வருடலும், பிள்ளையார் துணுக்குற்றெழுந்து அக்கணமே நனலாகக் காந்தங்கண்ட இரும்பென்னக் குழைந்துருகித் திருவடிபற்றிப் பன்முறை யட்டாங்க பஞ்சாங்க விதியிற்பணிந்து கண்ணொற்றித்தலைமுடித்து மணமோந்து அள்ளிமுத்தங்கொள்வராய் முகமொற்றி ஆராதகாதலால் அழுது தொழுது ஆடிப்பாடி இன்னிளநகையோ டுளவெயர்வெழ நாத்தழுதழுக்கத்துதித்துநின்று ஆற்றாமை மேலிட்டுச்சொற்குழறச்சொல்லுவாராயினர்.

எம்பெருமான்! எங்குற்றது, இங்குவர எத்தவ முடையேன் என்செய வல்லேன், என்செயக்கடவேன், இனிப் பிரிந்தாற்றேன், எம்மிறையே! எம்முறவே! எம்முயிரோ! என்னுடலே! என் வாழ்வே! என்னரசே! என்னையா! என்னப்பா! என்றாயே! என்னறிவே! என்றவமே! என்பயனே! என்பயனே! என்குருவே! என்கோவே! என்னுடையாய்! என்னுடையாய் கைவிடேல்! கைவிடேல் என்று பாதம்பற்றிப் பரிதபித்தலும், வந்த ஐயர், இவர் அன்பு அமுதாரவுண்டாராய்க்களித்து, சிறுவ! என்னைய! நின்னமுதவாசக மினிதினிது. நெஞ்சாரச் சுவைத்தன மென வின்மொழி கூறி அவர் கருத்தினுக்கிசைந்த வண்ணராக திருக்குறிப்புக் காட்டி நிற்றலும், திருவெண்காட் டடிகள் மீட்டும் வணங்கி நின்று, எம்பெருமானே! இன்றன்றோ நல்லநாள் யான் பிறந்த நாளானது; இன்றன்றோ வென்னுடம்பு நல்லுடம்பா யிசைந்தது; இன்றன்றோ யான் செய்ததின்றவமா யேறுற்றது; இன்றன்றோ என்னெஞ்ச நன்னெஞ்சமாயிற்று; இன்றன்றோ என்னுறவு நல்லுறவாயேற்றமுற்றது; இன்றேகாணென்னீன்றா ளீன்றாளுமாயினள்; இன்றேகாணென்குடியு மினியகுடியேயாயிற்று, அப்பனே, "போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதியின்பமும், ஏகநின்கழலிணையலாதிலேன் எனெம்பிரான், ஆகம்விண்டு கம்பம்வந்து குஞ்சிஅஞ்சலிக்கணே, ஆகவென்கைகண்கடாரை யாறுதாகவையனே." "ஐயநின்னதல்லதில்லை மற்றோர்பற்றிவ் வஞ்சனேன், பொய்கலந்ததல்லதில்லை பொய்ம்மையேன் எனெம்பிரான், மைகலந்தகண்ணிபங்க வந்துநின்கழற்கணே, மெய்கலந்த அன்பரன் பெனக்குமாகவேண்டுமே." "வேண்டுநின்கழற்கணன்பு பொய்ம்மைதீர்த்துமெய்ம்மையே, ஆண்டுகொண்டுநாயினேனை ஆவவென்றருளுநீ - பூண்டுகொண்டடியனேனும் பொய்ம்மைதீர்ந்து மெய்ம்மையே - மாண்டுமாண்டுவந்துவந்து மன்னநின்வணங்கவே." "[illegible] நின்னை யெம்பிரானில்வஞ்சனேற்-கும்

தலாவதுன்கணன்றி மற்றொருண்மையின்மையிற் - பைதலாவதென்றுபாது காத்திரங்குபாவியேற்கீதலாதுநின்கணொன்றும் வண்ணமில்லையீசனே." "என்னுயிரை யென்னுடலை யென்பொருளை வாங்கிநீயேற்றுக்கொண்டு, நின்னருளைநின்னடியை நின்னடியார் பணிவிடையை யெனக்குநேர்ந்து, முன்னியலும்பின்னியலு மூடமாம்பிறப்பியலும் முழுதும்போக்கி, யின்னியலைவந்தெழுந்தருளி யெனையடிமைகொண்டருளா யெந்தாயெந்தாய்." என்செல்வ முதலியயாவும் தேவரீரவே ஆதலா லவற்றை யேற்றுக்கொண்டருளுக என்று மீட்டும் பலதரம் பணிந்து தம்மை மறந்து பரவசராய் நிற்க; அடிமைகொள்ளவந்த ஐயர் கண்டருளிக் கடாக்ஷித்து, அப்பா! குழந்தாய்! திருவெண்காட! உன்பிரார்த்தனை மிகவும் சுவையுடையது. நமர்க்குக் களிப்பை விளைக்கின்றது. உண்மையாற் சிறந்துள்ளது. ஆயினும் இப்பொருளைக்கொண்டு யாமென்செய்வது? இந்த மண்ணுலகத்தையே யன்றி விண்ணுலகத்தைத்தான் தந்தாலும் அதில் எமக்குச் சிறிதும் விருப்பமில்லை. இவற்றிற்கு மேலாகிய சத்தியவுலகம், வைகுந்தமுதலிய புண்ணியவுலகங்களும், மகாப்பிரளயகாலத்தில் அழிவதானால் இவற்றைக் கொண்டு யார்தான் என்செய்வது; ஆனால் இப்பொருள், உனக்குச் சில காலம்வரையில் சிறிது வேண்டுவதாக விருக்கின்றது. ஏனெனில் குருலிங்க சங்கமங்களை யர்ச்சிப்பதற்குச் சிலசமயத்தி லிதுவுமொரு கருவியேயாம். "அற்காவியல்பிற்றுச் செல்வமதுபெற்ற லற்குபவாங்கேசெயல்." "தன்னதுசாயை தனக்குதவாதுகண் - டென்னதுமாடென் றிருப்பார்களேழைகள் - உன்னுயிர்போமுட லொக்கப்பிறந்தது - சண்ணதுகாணொளி கண்டுகொளீரே." செல்வந்தா னப்படிப்பட்டதாயிருக்க, இவ்வுடம்பினைக் கொண்டுதான் செய்யக்கடவனவற்றைச் செய்வோமெனில் "நெருநலுளனொருவ னின்றில்லையென்னும் பெருமையுடைத்திவ் வுலகு." "பண்டம்பொய்க்கூரை பழகிவிழுதலா - லுண்டவப்பெண்டிருமக்களும்பின்செலார் - கொண்டவிரதமும் ஞானமுமல்லது - மண்டியவருடன் வழிநடவாதே." "ஊரெலாங்கூடி யொலிக்கவழுதிட்டுப் - பேரினைநீக்கிப் பிணமென்றுபேரிட்டுச் - சூரையங்காட்டிடைக் கொண்டுபோய்ச்சுட்டிட்டு - நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தார்களே." ஆனபடியால். "நாச்செற்றுவிக்குள்மேல் வாராமுன்னல்வினைமேற் சென்று செய்யப்படும்." ஆகவே உள்ளநாளெல்லாம் மனத்தைவிடயங்களிலே செல்ல விட்டுத் தாமரையிலைநீர்போல வலைவது நன்மையல்ல. "ஐவரமைச்சருட் டொண்ணூற்றறுவர்க - ளைவருமைந்தரு மாளக்கருதுவர் - ஐவருமைந்து சினத்தொடேநின்றிடிலைவர்க்கிறையிறுத் தாற்றகிலோமே." "அந்

சுவசிங்க மடவியில்வாழ்வன - வஞ்சும்போய்மெய்ந்துசம் மஞ்சகமேபுகும் - அஞ்சினுகிரு மெயிறுமறுத்திட்டால் - எஞ்சாதிறைவனையெய்தலுமாமே.'' அங்ஙனமிருக்க; கிடைத்தற்கரிய இம் மானுட வுடம்பினைப் பெற்றும், குடிக்கத்தக்க பாலைக் கமரிற்கவிழ்த்தாற்போல மாதர் மயக்கத்தினு விழக்கின்றனர். ''புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு - அண்ணலதுகண் டருள்புரியா நிற்கும் - எண்ணிலிபாவிக ளெம்மிறையீசனை-நண்ணறியாமனழுவுகின்றாரே.'' ஐயோ! ''நினைவதும்வாய்மை மொழிவதுமல்லால் - கனைகழலீசனைக் காணலரிதாம் - கனைகழலீசனைக் காண்குறவல்லார்-புனைமலர்நீர்கொண்டு போற்றவல்லாரே.'' என்றவண்ணம் உணர்ந்து, ''மஞ்சனமாலை நிலாவியவானவர் - நெஞ்சினுள்ளீச னிலைபெறுகாரணம் - அஞ்சமுதாமுபசார மெட்டெட்டோடும் - அஞ்சலியோடுங் கலந்தர்ச்சித்தார்களே.'' ஆகையால், சிவபூசைசெய்யாத தேகம் வீணாய் நிலத்துக்குப் பாரமாகவும், குலத்திற்குக் கோடரியாகவும், தன்னுயிர்க்கு நோயாகவும் இருக்கும். ''வசையிலாவண்பயன் குன்று மிசையிலாயாக்கை பொறுத்தநிலம்.'' ஆதலால் நமது சொல்லைக் கடவாமல், நீ, இந்தப்பொருளைக் கருவியாகவைத்துக்கொண்டு முன்னே சிவபூசை, அடியார்பூசை நடத்திவருவையாகில், பின்னுல் நீ யெண்ணியவண்ணமெல்லாம் பெறுவாயென்று திருவாய்மலர்ந்தருளினார்.

அது கேட்டமாத்திரத்தில், திருவெண்காடர் பாலொடு தேன்கலந்துண்டவரினும் சிறந்து முன்னமே சிவார்ச்சனையில் பெருவேட்கையுற்றிருந்தவர் இங்ஙனம் ஆதியாசிரியர் திருவார்த்தையால் தாம் பெறத்தக்க பேறு இதனில் வேறொன்றுள்ளதென்பதுரினைப்பினுங் கொள்ளாதவராய்ச் குப்புற்றுக் கூத்தாடி நகையுமுவகையு மேன்மேலெழ நயந்துநின்று ஆளவந்தார் திருவடியிற் பணிந்து பணிந்தெழுந்து, எம்மரசே! என்பேறேபேறு, யான் செய்த தவமேதவம், என்பாக்கியமே பாக்கியம், என்புண்ணியமே புண்ணியம், என்னென்றுபேசுவேன்? என்னென்றுபேசுவேன்? எழுதமுடியாதே! எட்டிலடங்காதே! என்போல விப்பேறு யார்பெற்றார் இவ்வுலகத்து; என் ஐயனே! இனியடியே னிதற்குச்செய்வதியாது ''செய்வதறியாச்சிறுநாயேன் செம்பொற்பாதமலர்காணப் - பொய்யர்பெறும்பேறத்தனையும் பெறுதற்குரியேன் பொய்யில்லா - மெய்யர்வெறியார்மலர்ப்பாதம் மேவக்கண்டுங்கேட்டிருந்தும் - பொய்யனேனுன்உண்டுடுத்திங் கிருப்பதானேன் போரேறே.'' ''போரேறேநின்பொன்னகர்வாய் நீபோந்தருளியிருணீக்கி - வாரேறிளமென்முலையாளோ டுடன்வந்தருள வருள்பெ

ற்ற - சீரோறடியார்நின்பாதஞ் சேரக்கண்டுங்கண்கெட்ட - வூரே ருயிங்குழல்வேனே கொடியேனுயிர்தானுலவாதே.'' ஆதலின். அடியேன் எவ்வாறு எதுகொண்டு எவ்விடத்துப் பூசிப்பது கரு ணைசெய்திடுகவென்று விண்ணப்பித்து நின்றனர்.

அப்போது, ஆட்கொள்ளவந்த அடிகளார், திருவுள்ளங்கனி ந்து, ஐய! நாளையதினம், திருவோணத்தோடு கூடிய சோமவாரம் மஹாப்பிரதோஷகாலமாயிருத்தலால், அடுத்த திருவெண்காடெ ன்னும் திருப்பதியை யடைந்து, சுவேதாரணியப்பெருமானையும், அவரிடம் பிரியாதுறையும் ஞானவித்தை வடிவராகிய உமாதேவி யாரையும் விதிப்படி திருமஞ்சனமாட்டி யருச்சித்துச் சிவனடி யார்களையும் உபசரித்துப் பூசித்து அச்சந்நிதியில் காத்திருப்பை யாயின், அங்கே வேதாகம முதலிய கலைகளை யையந் திரிபற வு ணர்ந் தொழுக்கத்திற் சிறந்ததொரு வேதியர்வந்து, நீ அருச் சித்தற்குரிய தாபரமூர்த்தியாகிய தொரு சிவலிங்கப்பெருமானை யெழுந்தருளப் பண்ணிக்கொடுத்து, தீக்ஷாவிதிப்படி யுனக்குத் திருவெழுத்தைந்தினையு முபதேசித்து, பூசிக்கு முறைமையையும் அனுக்கிரகிப்பார், நீயவற்றைப் பெற்று நல்லன்போடு பூசித்துப் பரிபாகமுற்று, உலகியற்செல்வமும் அருளியற்செல்வமும் பெற் றுப் பேரின்பமடைந்து நீடூழிவாழ்கவென ஆசீர்வதித்துத் தமது அருமைத்திருக்கரத்தா லவர் நெற்றியிற் றிருநீறுபுனைந்து தலை மேற் கைமலர்சாத்தி அபயமளித்து மறைந்தருளினார்.

கேட்டீர்களோமுனிவர்களே! இவ்வுலகத்திற் சிவகீர்த்தனம், சிவபூசை செய்பவர்கள் பெறக்கூடாத பேறொன்றுமில்லை. அவர்க ளே நாம் தொழுந்தெய்வங்களாம். என்றுகூறி உபமன்னிய முனி வர் அப்பால் நடந்த கதையைச் சொல்லலாயினார்.

திருவெண்காடர் தமதுகனவினிலைமை தாயார்க்குரைத்தல்.

கேளும் முனிவர்களே! அப்பால் திருவெண்காடராகிய இரு வனார், உடனே கண்விழித்து எழுந்து, ஆராமைமேலிட்டு அழு து தொழுது, ஐயனே! ஐயனே! என்பிழைப்புக் கனவளவேயா யிற்றே! நனவென்றல்லோ நான்களித்திருந்தேன், எம்பெருமா ன் றிருவுளமிருந்தவாறிதுவானால் என்செய்யக்கடவேன் என்றி ரங்கியிருந்தனர். அப்போதுமகனார் அன்றிரவிலாகாரமின்றிப்படு த்துறங்கின ராதலிற் பெருங்கவலையோடும் நல்ல நித்திரையின்றி அருகே படுத்திருந்த தாயார் அரண்டு விழித்து எழுந்து, மைந் தனைநோக்கி என்செய்கின்றாய் ஐய! உனக்கடுத்தது என்னென் று வினவப் பிள்ளையாரும், தம்மன்னையை வணங்கித் தாங்கண்ட கனவினைக் குறிப்பினி லுணர்த்தக்கேட்ட அவ்வம்மை தம்முள்

ளத்தில் அதிக அச்சத்தோடு மன்போடும் பெருங்களிப்பினை யடைந்து இவரதுண்மை நிலைமையை யறியும்படி அவற்றை யுள் ளடக்கிக்கொண்டு மகனாரையெடுத் தச்சிமோந்து முதுகைத்தட வி, அப்பா! குழந்தாய்! இவ்வுலகிற் பெருஞ்செல்வமும் பேறுபெ ற்றாய்! உனக்குச் சிவனருள் கிடைக்குங்காலமடுத்தது. இது வரையு முனக்குள்ளிருந்த கவலையை யானறியாத வண்ணமறை த்து வைத்திருந்தனையே ஆயினும் இனிக்கவலையற்று, உனக்காண் டவன் கனவிலே கடாக்ஷித்தபடியே நடத்தி நல்லருள் பெறுதி. ஆனால் ஒன்று சொல்லுகிறேன். பொறுமையோடுங் கேட்டிடுதி.

தாயார் திருவெண்காடருக்குச் சிவபூசைத் திறமுரைத்தது.

அதாவது, சிவபூசைசெய்வதென்றால் எளிய காரியமல்ல. அரிய வற்றுளெல்லாம் அரிது. சிவன், தேவரிற் பெரிய மூவராலு மற் றை யாவராலும் இன்னதன்மையனென்று அறிவதற்கரியவன் என்றும், எல்லாக் கலைஞானங்கட்குந் தாயாயுள்ள வேதாகமமே இன்னம் அவன் மகிமையை யறியாது மயங்குகின்றன. அன்றி யும், அண்டப்பகுதிக ளெல்லாம் சிற்றணுவென்ன ஆழிச்சூழை வளியிலே "கொட்கப்பெயர்க்குங்குழகன் - முழுவதும்படைப் போற் படைக்கும்பழையோன்-படைத்தவைகாப்போற் காக்குங் கடவுள் - காப்பவைகரப்போன்- கரப்பவைகருதாக் கருத்துடைக் கடவுள்-திருத்தகும் அறுவகைச்சமயத்தறுவகையோர்க்கும்- வீடு பேறாய்நின்றவிண்ணோர் பகுதி-கீடம்புரையுங்கிழவோன் - சொற் பதங்கடந்ததொல்லோன் - உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் ப டாஅன்-கண்முதற்புலனாற்காட்சியுமில்லோன் - விண்முதற்பூதம் வெளிப்படவகுத்தோன்." அன்றியும், இவன், "திசைமுகன்செ ன்றுதேடினர்க்கொளித்தும்-முறையுளியொற்றி முயன்றவர்க்கொ ளித்தும்-ஒற்றுமைகொண்டு நோக்குமுள்ளத் - துற்றவர்வருந்த வுறைப்பவர்க்கொளித்தும், இத்தந்திரத்திற் காண்டுமென்றிருந் தோர்க்-கத்தந்திரத்தி னவ்வயினொளித்தும்-முனிவறநோக்கிநனி வரக்கவ்வி - யாணெனத்தோன்றி யலியெனப்பெயர்ந்து-வாணுதற் பெண்ணெனவொளித்துஞ்சேண்வயின் - ஐம்புலன்செலவிடுத் த ருவரைதொறும்போய்த் - துற்றவைதுறந்த வெற்றுயிராக்கை - அருந்தவர் காட்சியுட்டிருந்தவொளித்தும்-ஒன்றுண் டில்லையென் றறிவொளித்தும் - பண்டேபயிற்றுமின்றேபயிற்றும்- ஒளிக் குஞ்சோரனைக்கண்டனம் - ஆர்மினார்மினாண்மலர்ப்பிணையலிற்- றாடளையிடுமின்-சுற்றுமின்சூழ்மின்றொடர்மின்விடேன்மின் - பற் றுமினென்றவர் பற்றுமுற்றொளித்தும்-தன்னேரில்லோன்றானே யானதன்மை" உணர்த்தவுணரப்படுமன்றி வேறுவகையான்முடி

தாயார் திருவெண்காடருக்குச் சிவபூசைத் திறமுரைத்தது. ௨௫

யாதெனப் பெரியோர் யாவரும் சொல்லுகின்றார்கள். அஃதங்ங னமாக.

நீயோ இன்னும் மூலைப்பால் மணமறா வாயினை யுடைய சிறுகுழந்தை, இராவில் நான் தழுவி யணைத்த கையிறைபே நழுவுமாயினும், தனித்திருக்கின்றோ மென் றரண் டெழுந்து அழுகின்ற பருவத்தை யுடையவன்; பத்தி, வைராக்கியம், அறிவு, ஆசாரம், இவைகளி லொன்று குறைபடினும் சிவபூசை முற்றுப்பெறாது. உலகத்தையெல்லாம் பெற்ற மாதாவாகிய பார் வதியாராலேயே அப்பூசை நிறைவேறுவது அரியதாம். அவர் செய்யும் சிவபூசையையே சோதிக்கும்படி முன்னே சிவபெரு மான் கம்பாநதியைப் பெருகிவரச்செய்தனராம். இன்னமும்பெரி யோர்க ளதைச் சொல்லிச் சொல்லி யேங்குகின்றார்கள். மஹா தேவிக்கே யிவ்வகையானால் நாமெல்லாம் எவ்வளவு. அதுவுநிற்க. பூசை செய்வதற்குமுன் ஸ்ரீபஞ்சாக்ஷர செபத்தால் சித்தசுத்தி செய்துகொள்ளவேண்டும். மந்திரங்களுள்ளே அரசாயுள்ளது ஸ்ரீ பஞ்சாக்ஷரம். எப்படியென்றால், எல்லாமந்திரங்களும் வேதத்து ள்ளே யமைந்துள்ளது. அவ்வேதமெல்லாம், இருக்கு, யஜுசு, சா மம் என்ற மூன்றுவகைப்படும். அதர்வணம் இவற்றுளடங்கும் அம்மூன்றுவேதத்துள்-அறம்பொரு ளின்பமென்ற புருஷார்த்த மூன்றிலே பொருள் எப்படி சிறந்ததோ அப்படி யஜுர்வேதம் சிறந்தது. அவ்வேதம் - எழுகாண்டமாம். அவ்வேழுள்ளே நடுக் காண்டத்து நடுவேயுள்ளது ஸ்ரீருத்திரம் என்றமந்திரம். அம் மந்திரநடுவேயுள்ளது அந்த சிவபஞ்சாக்ஷரம். ஆதலால், "மந்தி ரநான்மறையாகிவானவர்-சிந்தையுணின்றவர் தம்மையாள்வன- செந்தழலோம்பிய செம்மைவேதியர்க் - கந்தியுண்மந்திரமஞ்செ ழுத்துமே" என்று மஹாவாக்கியம் பிறந்திருக்கிறது. இப்படிப் பட்ட ஸ்ரீபஞ்சாக்ஷரத்தியானம் செய்ய மஹாமுனிவர்களே அசா த்தியம் என்று பயப்படுவார்களாம். நீயோ, "காலைமலமொடு, கடும்பகற்பசி, நிசிவேலைநித்திரை" இவைகளாற்றுவக்குண்டசிறு குழவி. என்செய்வாய். இதுபோக, சிவபூசைக்குரிய திருமஞ்சன வகை, திருப்பள்ளித்தாமபத்திரபுட்பம், நிவேதனத்திரவியம் இவைகளைச் சுத்தமுள்ளவைகளாகத்தேடுவதுமிகவருமை. ஏனெ ன்றால், முன்னாளிலே சுத்தமானதீர்த்தம் வேண்டுமென்று மஹா ரிஷிகளெல்லாம் பெருந்தவஞ்செய்த கதைக ளொருகோடி நாம் கேட்டிருக்கின்றோம். சண்டேசுரப் பிள்ளையார் சுவாமி திருமஞ் சனத்திற்காகச் சேகரித்துவைத்த பாற்குடத்தில் பிதா காலிடண் டிற்றென்று, மழுவாலெறிந்தார். இதுவொன்றோ இவ்வாறனேக

முண்டு. அருச்சிப்பதற்குப் பழுதற்ற பத்திரபுட்பம் பெறாமல் சீர்காழியில் சிவபூசை செய்யவந்திருந்த தேவேந்திரன் ஸ்ரீகணேசர் திருவருளால், அகத்தியமுனிவர் கைலாயத்திலிருந்து சிவானுக்கிரகத்தாற் கொண்டுவந்திருந்த காவிரியாற்றை எப்பாடு பட்டுக் கொண்டுவந்தான். மடங்கிதழ், முடங்கல், வாடிவதங்குதல், மயிர்ச்சிக்குண்டல், முடங்குகாற்சிலம்பிக்கூடு, புழுக்கடி முதலாகிய பழுதுகள் மலரிலிருந்தாற்சிவபூசைக்காகாதென்றெண்ணி, சுத்தசன்மார்க்கசிவயோகமுனிவராகியமழமுனிவர்கைகால் நகங்கடோறும் கண்களையும்,மரத்திலேறி மலர்பறித்தல் அசுத்தமென்றுதாவிப்பறிக்கப்புலிக்காலையுந் தவஞ்செய்துபெற்று வியாக்கிரபாதரென்ற திருநாமத்தோடும்விளங்குவதுகேட்டிலையோ?விஷ்ணு,முருகனுயனூர், சிவகோசரியார் கதைகளையும் விசாரிப்பாய். நிவேதனத்திரவியங்களுடைய சிலாக்கியத்தைப்பற்றிய சரிதத்துள், இளையான்குடிமாறனூர், நென்முளைவித்த முதாக்கியதும், அரிவாட்டாயனூர் செந்நெலரிசி மாவடுகீரை கமரில்விழ ஊட்டியறுத்ததும், கோட்புலியார் சம்பாநெற்கோட்டை யழித்த வுறவினரைத் தண்டித்ததும், சிறுத்தொண்டதேவர் கறியமுதுக்குத் தக்கது வேறுகிடையாமைபற்றித் தமது மகவை யறுத்தூட்டியதும் நீபலதரமும் கேட்டிருக்கின்றாயே. தூபதீபப்பெருமைக்குக்குங்கிலியக்கலயனூரும், கணம்புல்லரும், கலியனூரும், நமிநந்தியடிகளுமேசான்று.

ஆதலால், அப்பெரியோர்களைப்போலத் திருமஞ்சனமும் திருப்பள்ளித்தாமம் நிவேதன பதார்த்தமுதலியவைகளைச்சிரத்தையோடும் புனிதமாகவும் தக்கதாகவும் சேகரிப்பதென்றா லுன்னிளம் பருவத்திற்கு அசாத்தியம், தக்கமுயற்சிசெய்ய உன்மேனிதாங்காது. ஆனபடியால் உனக்கு இவ்விளம்பருவம்போய்க் குமாரப் பருவம் வந்தபோது உன்னெண்ணப்படி சிவபூசைசெய்ய முயல்வது தகுதியென்றார்.

அங்ஙனம், தாய்வாக்கியத்தினைக் கேட்ட திருவெண்காடர், புன்முறுவலோடு அன்னையை வலம்வந்து பணிந்து நின்று, தாயே! எனது சிறுவிண்ணப்பத்தினைக் கேட்பீராக. தேவரீர் கட்டளையிட்டவண்ணம், சிவன்பெரியோன் என்பதிலும் அரியோன் என்பதிலும் எள்ளளவும் சந்தேகமேயில்லை. அவ்விடயத்தில்வேதாகமங்களே சத்தியஞ்செய்து முறையிடுகின்றது. அன்றியும், இவ்வுலகம் அவ்வுண்மையறிவதிற்படும்பாடு நாம் கண்டிருக்கின்றோம்; ஆனாலும், "பத்திவலையிற்படுவோன்" என்றும், "அளவறுப்பதற்கு அரியவன் இமையாவர்க்கு, அடியவர்க்கு எளியான்." என்றும்

பெரியரிற் பெரியோர் அனுக்கிரகித் திருக்கின்றனர். அன்றியும், "அன்புசிவமிரண்டென்பரறிவிலார் - அன்பேசிவமாவ தாருமறி கிலர் - அன்பேசிவமாவ தாருமறிந்தபின் - அன்பேசிவமா யமர்ந் திருந்தாரே." என்றும், "என்பேவிறகா யிறைச்சியறுத்திட்டுப்- பொன்போற்கனலிற் பொரியவறுப்பினும் - அன்போடுருகியகங் குழைவார்க்கன்றி - என்பொன்மணியினை யெய்தவொண்ணாதே." என்றும், "அன்பினுள்ளான்புறத் தானுடலாயுளான் - முன்பினு ள்ளான் முனிவர்க்கும்பிரானவன் - அன்பினுள்ளாகி யமரும்அரு ம்பொருள் - அன்பினுள்ளார்க்கே யணைதுணையாமே." என்றும் பெரியோர் மந்திரவாக்கியம் கூறியது. ஆகவே, "தானொருகாலஞ் சயம்புவென்றேத்தினும் - வானொருகாலம் வழித்துணையாய்நிற் கும் - தேனொருபாற்றிகழ் கொன்றையணிசிவன் - றானொருவண் ணமெ னன்பினின்றானே." என்ற சிந்திப்பு, அச்சிவனருளா லென்னெஞ்சத்தி லுண்டாயிருக்கின்றது. அதுவுமன்றி, சிவ பூசைசெய்வதற்குச் சாதியாவது, ஆச்சிரமமாவது, திரவியமா வது காரணமாவதில்லை, தேவர் முனிவரொழிய மானுடருள் ளே பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நாற்சாதியாருள் யார்தான் பூசிக்கவில்லை. பிரமசாரி முதலியவர் களுள் யார் பூசியாதவர். தீண்டாத பஞ்சமத் திருமேனியடை ந்த திருநாளைப்போவார் அருச்சியாதொழிந்தாரோ? மானதபூசை விடாதுசெய்தார். மானுடரிருக்கட்டும் பசு, புலி, யானை, நரி, குரங்கு, கருடன், வலியன், நாரை, ஆமை, பாம்பு, சிலந்தி, நண்டு, எறும்பு, முதலிய மிருகம், பறவை, நீர்வாழ்வன, ஊர்வனவுமா கிய சிற்றுயிரும் பூசித் தருள்பெற்றனவென்று கேள்விப்பட்டுள் ளோமே. இச்சிற்றுயிர்வர்க்கங்களெல்லாம் அன்பன்றி வேறு என் னபொருளைக்கொண்டு பூசித்தன. பரிபூரணனான சிவனுக்கு யாஞ் செய்யுஞ் சுத்தியும் புனிதமும் எவ்வளவினவாம். "பொருட்பற் றிச்செய்கின்ற பூசனைகள்போல்விளங்கச் - செருப்புற்றசீரடி வா ய்க்கலசமூனமுதம் - விருப்புற்றுவேடனார் சேடறியமெய்குளிர்ந் தங் - கருட்பெற்றுநின்றவா தோணோக்கமாடாமோ." என்று இழிந்த கொலையிலும் வேடசாதியிற் பிறந்த கண்ணப்பதேவர், செருப்புக்காலால் நிருமாலியங்களைக்கழித்து, வாயெச்சிலோடு கலந்த நீ ரா லபிடேகமாட்டித் தாழ்ந்த வூனை முன்னே தாமெச்சிற்படுத்திச் சுவைபார்த்தூட்ட, அப்பூசைக்கு உவந்துண்டு பெருமானவர்க்கா றுநாளில் அனுக்கிரகஞ்செய்து திருவடிநீழல்கொடுத்த பெரு மையைப் புகழாத மந்திரங்களுண்டோ? சிலந்தி வாயெச்சினூ லாற் பந்தலிழைத்துக் கோச்செங்கண்ணராகப் பிறந்து கதியடை யவில்லையோ? கோயில்விளக்கு நெய்யைத் திருடப்போன எலி

வால் அவ்விளக்கணையாமே தூண்டிய தான் மாவலிச்சக்கரவர்த்தி யாய் மூவுலகாண்ட கதை யறியாதாருண்டோ? மூசுக்கலையாகிய குரங்கொன்று அன்பு பத்தி ஒன்றுமறியாது வெறும் வில்வத்த ழையைச் சாதியியற்கையாற் பறித்தெறிந்தும் மூவுலகும் மெச்சு முசுகுந்தனுகப்பிறந்து முத்திபெற்ற செய்தியை மறந்தவருண் டோ? பாலியன் சிறுவனென் றென்னைத் தடுக்கின்றீர். ஐயோ! சிவபூசைசெய்து, எல்லாரையுங் கொல்லுகின்ற எமனுடைய வுயிரை வாங்கிய மார்க்கண்டேயமுனிவர் பாலரன்றி விருத்தரோ? உத்தானபாதராஜன் மகனை துருவன் மாற்றாந்தாய் கொடுமை சகியாது போய்ச் சிவபூசை செய்து அழியாத வுயர்ந்த பதம் பெற்றகாலம் பாலியமன்றிக் கிழவயதோ? நாரதமுனிவராலே தனக்கு இடி பயமுள்ளதென்று கேள்விப்பட்ட கிரகபதி என்னும் பிராமணகுமாரன் ஏழுவயதில் சிவபூசைசெய்து ஆண்டவன் திருவருளால் அக்கினிபதம் பெறவில்லையோ? வியாக்கிரபாத முனிவர் திருமகனை உபமன்னியர் சுவாமியிடத்தில் பாற்கடல் பெற்றது எந்தக்கிழவயதிலென்று நினைக்கிறீர்? சிசுப்பருவத்திலல்லவா? சுகமுனிவர்கருவிலே தானே யோகமார்க்கத்தால் மானத பூசை செய்யவில்லையா? புலோமருடைய பெண் தாய்வயிற்றிலே சிவத்தியானத்துடனிருந்து வெளிவந்தபோது பூருவஞானமுடையளாய் நாபிக்கொடி யறுப்பதன்முன்னே யாவரும் அதிசயிக்கும்படி தாயை யழைத்துச்சிவபூசைசெய்தற்குரிய திருமஞ்சனம் பத்திரம் புட்பமுதலிய உபகரணங்களைக் கொண்டுவரும்படி சொல்லி வரவழைத்துப் பூசிக்கவில்லையா? அம்மணி! நீர் என்தேகந் தாங்காதென்று எண்ணித் தடைபடுத்தவேண்டாம்; பிள்ளைகட்கு நன்மார்க்கம் போதித்து நல்வழியிற் செலுத்துவது தாய்தந்தையர் கடன், தாங்கள்செய்த முன்றவப்பயனால் அந்தமக்கட்குத் தம் முயற்சி யின்றி நல்ல புத்திபிறந்து நற்கருமஞ் செய்யத்தொடங்கினுல் தடுப்பதுண்டோ? அம்மா! என்னைத் தடைபடுத்துவது தக்கதல்லவென்று மீட்டும் பணிந்து நின்றார்.

அதுகண்ட அவ்வம்மையார் தம்முள்ளே பெருங்களிப்பினை யடைந்தவராய்த் திருமகனைநோக்கி, ஐயா! உன்னெண்ணப்படியேயாக; ஆயினும், பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, ஆன்மசுத்தி, மூர்த்திசுத்தி, என்னும் பஞ்சசுத்தியும் செய்தலின்றிச் சிவபூசை செய்யலாகாது, அப்பஞ்சசுத்தி செய்வதற்கு மந்திரநாயகமாயுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரம் சித்தியாயிருக்கவேண்டும் ஆதலால், முதலில் சமயதீக்ஷைபெற்று, எவ்வளவு தீவிரனுனாலும் அதமபக்ஷம் ஒருவருடகாலமாயினும் பஞ்சதருமத்தோடு தினம் பன்னீராயிரவுருவாகச்செபித்தால் மந்திரசித்தி யுண்டாம். அப்

பால் சுவாமியைப் பூசிக்கத்தக்க தரம்வரும். இப்படி வேதாகமங்கள் விதித்தன. பஞ்சதருமமாவது, விபூதிதாரணம், உருத்திராக்ஷதாரணம், ஸ்ரீருத்திரத்தியாந பாராயணம், சிவதரிசனம், சிவனைவேதனப் பிரசாதங் கொள்ளல் என்பவைகளாம். இவற்றுள் மாதர்களுக்கு ஸ்ரீருத்திர பாராயணம் கூடாது ஆனாலும், அந்த உருத்திரத்திரத்தின் இதயமாயிருக்கிற ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தியானம் கூடும். இதை பிரமா விஷ்ணு உருத்திரர் மகேச்சுரர் சதாசிவமூர்த்தியும் தியானித்துக்கொண்டிருக்கிறார்கள், மஹாமாதாவாகிய உமாதேவி, ஸ்கந்தர், கணராஜர், நந்தி, பிருங்கி, பிங்கிருடி, வாணனார், பானுகம்பராதிபிரமதகணதீசுவரர்களும் இந்திரன்முதலிய உலகபாலகரும், வசு, உருத்திரர், ஆதித்தர், மருத்துக்களுமாகிய முப்பத்துமுக்கோடி தேவரும், முனிவரும், அசுரரும், யக்ஷரும், சித்தரும், கருடரும், காந்தருவரும், வித்தியாதரரும், கின்னரரும், கிம்புருடரும், குய்யகருமாகிய மற்றெல்லாக் கணங்களும் நித்தமும் தியானிக்கின்றார்கள். இது மந்திரசித்தி யொன்றைத்தான் கொடுக்குமென்று நினையற்க. "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும், நெஞ்சகநைந்து நினைமினுநாடொறும், வஞ்சகமற்றடி வாழ்த்தவந்த கூற் - றஞ்சவுதைப்பனவஞ்செழுத்துமே." என எமனைவெல்லுமுபாயமுமிதுவென்று விதித்திருக்கின்றது. இம்மையிலும், சொற்றுணைவேதியன்சோதிவானவன்-பொற்றுணைதிருந்தடிபொருந்திக்கைதொழக்-கற்றுணைபூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்-நற்றுணையாவது நமச்சிவாயவே." என்றனுபவமந்திரவாக்கியமுமுண்டு. கல்லோடுநம்மைக்கட்டிக்கடலிலிட்டாலும்அவ்வைந்தெழுத்தைக்கொண்டுபிழைக்கலாம். "நானேயோதவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்" என்று அடிகள் அருளப்பாடிருந்தால்வேறுஎன்ன சொல்லலாம்." ஓதியநம்மலமெல்லா மொழித்திட்டவ்-வாதிதனை விட்டிறையருட்சத்தியாற் – றீதில்சிவஞானயோகமேசித்திக்கும்– ஓதுஞ்சிவாயமலமற்றவுண்மையே." எனவும், "நமவென்னு நாமத்தை நாவிலொடுக்கிச் - சிவவென்னு நாமத்தைச்சிந்தையுளேற்றிப் - பவமதுதீரும் பரிசுமதற்றால் - அவமதுதீரு மறும்பிறப்பன்றே." என்றது திருமந்திரம், இதனாற் சித்திபெற்றோர் சரித்திரங்களெவ்வளவென்று கூறுவேன். அக்கதைகளைக்கூறுதபுராணமில்லை ஆதலால், நீயும் நல்ல குருவினிடத்தில் அப்பஞ்சாக்ஷரத்தை உபதேசமுறையிற்பெற்றுச் சிலகாலம் அதனையனுட்டித்துப்பின் சிவபூசை செய்கவென்று கூறினார். கேட்டீர்களோ முனிவர்களே! இவர்களன்றோ தாயும் பிள்ளையுமென்று சொல்வதற்குத் தகுதியானவர்கள். இப்படிப்பட்ட அறிவும் துணிவும் யாருக்குண்டாம். இவர்கள் சரித்திரங்கேட்பதே நமக்குப் பெரிய விலாபமாம்.

சிவபூசைசெய்வதற்குத்தாயாரிடத்தில் விடைபெறுதல்.

கேளும் முனிவர்களே! அப்பால்! பெற்ற வன்னையார் சொல்லிய வாக்கியத்தைக்கேட்ட திருவெண்காடர் அத்தாயார் திருமுக நோக்கி அம்மணீ! தேவரீர் கூறியவெல்லாஞ்சத்தியமே! ஆயினும் வேதாகமம் சிவபூசைக்குக் காலவரையறுத்தது, கேவலம் நிராதிகாரிகளாகிய ஆபற்சைவர்களுக்கன்றிச் சாதிகாரிகளாகிய சுத்த சைவர்களிலும் மரணபயங்கொண்ட தீவிரர்களுக் கல்லவென்பது தேவரீருக்கே தெரிந்த விடயம். நீரும் உமது கணவனாரும் பரம்பரையிற்றானே சுத்தசைவர்கள். அன்றியும் அளவிறந்த சிவபுண்ணியமுடையவர்களாய்ப்பரிபாக முற்றுத்தவமொருவடிவ மானீர்கள். உங்கள் சார்பினிற்பிறந்த நான் இப்போது எவ்வளவு அபக்குவனாயிருந்தாலும் தேகம் நிலையல்லவே "அன்றறிவோமென்னாதறஞ்செய்க மற்றதுபொன்றுங்காற்பொன்றாத்துணை" என்று மூதறிஞர் திருவாணையிருக்கின்றதால் காலம் வீணாகக்கழிக்கலாகாதென்ற பயத்தாற் பீடிக்கப்பட்டவனாயிருக்கின்றேன். இதுவரையி லிவ்வுலகத்தில் ஆபத்தையடைந்தவர்களெல்லாம் சிவபூசையாலவ்வாபத்தையொழித்துச் சுகமடைந்தார்களென்று எல்லாப்பெரியோராலும் நூல்களாலும் கேள்விப்படுகின்றோம். ஆதலால், இன்னம் என்னை யிவ்விதப்பிரசங்கத்தால் மனநிலை சோதிப்பதற்கு முயலாமல், பெற்றுவளர்த்த கருணையோடு என்னை அனுக்கிரகிக்கவேண்டும். இனியென்னுயிர் தரியாதென்று பலமுறைநமஸ்காரஞ்செய்து மிட்டுஞ்சொல்லுகின்றார்.

அம்மணீ! மற்றொரு செய்தி கேளும், முன்னொரு காலத்தில் நடுவனாகிய யமதருமராஜன், நரகவாசிகளை விசாரித்துவருகையில், அவருட் சிலர் தீவாய் நரகில் விழுந்து கண்வெந்து, முகந்தீந்து, உடம்பெல்லாங் கொளுந்துண்டு, நாவறந்து, தாகசோகப்பட்டு அடிக்கடி மயங்குவதும் தெளிவதுமாயிருந்தார்கள்; சிலர் ஈர்வாளம்பு மயமானநரகில் கண்பெயரக் காது அருவுண்டு நாவறுபட்டுப்பற்றகர்ந்துஉடம்பெல்லாங்குத்துண்டுபுண்பட்டுச்சீழும்புண்ணீருமொழுகப் புழுக்கள் சோரத் துடிதுடித்துக் குடர் நடுங்கப் பயத்தான் மூர்ச்சிப்பதும் அடிக்கடி யெழுந்திருப்பதுமாக விருந்தார்கள்; சிலர் பேரிருட்டறையில் ஒருவர்க்கொருவர் தலையோடு தலைதாக்கித்தோள்துடைகால்முதலிய வுறுப்புக்களொன்றோடொன்று தாக்கி முறிந்துஞ் சிதைந்தும் தகர்ந்தும் நசுங்கியும், வழி துறை தெரியாது குழிவீழ்ந்தும், மேடுமுட்டியும், சேறுபாய்ந்தும், பரன்முள்ளிற்புரண்டும், சுவரின் மோதியும் சோர்ந்தலைந்தவதிப்பட்டிருந்தனர்; சிலர் மலம்புழுமுதலியவற்றை யருவருப்போ

டுண்டும் பசி தணியா துடம்பலுக்க வருந்திப் பதைபதைத்துச் சோர்ந்து கிடந்தனர்; சிலர் பலபல நோய் நலிக்க வுபசரிப்பாரின்றிப்பாம்பு தேள்முதலிய விஷசெந்துக்கள் வருத்தக்கொசு மூட்டை யெறும்பு முதலியவைகளா லிம்சையுற்றுக் கணமேனும் இளைப்பாறுதற்கிடமின்றி யுழன்று வருந்தியும் அந்தோ! அப்பா! அம்மா! ஐயா! வென்று பேரிரைச்சலிட்டுத் தலை யடித்துக்கொண்டிருந்தனர். இங்ஙனம் அந் நரக பேதங்களில் வருந்துகின்ற வருத்தத்தினை நெஞ்சால் நினைப்பதற்கும், வாயால் வகுத்துக்கூறுவதற்கும், கண்ணாற் காண்பதற்கும் அந்த தண்டகர்த்தாவாகிய கூற்றுவனுக்கே சகியாமல், உடனே சித்திரகுத்தனென்னுங் கணகனைத்தூதுவரால் வருவித்து இவர்கள் என்னதீவினையெப்போது எவ்வளவு செய்தனர்; இத்துன்பத்தினை எவ்வளவு காலமாக அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு எப்போது விமோசனம். ஐயோ! எனக்கே பார்க்கவுங் கேட்கவும் சகியாமற் பரிதாபத்தை விளைக்கின்றதே! வினை கொடிது கொடிது. ஆ! ஆ! இதோ இவர்களைக்கண்டமாத்திரத்தில் அத்துன்பமுழுதுவதும் நானே படுவோனாயினேன்; ஆதலால், நீங்களிவர்கள் கணக்கினைப்பார்த்து வகுத்துரைமின்களென்று கூறக்கேட்ட, அக்கணக்கரும் வந்தித்து அவர்கள் வினையே டெடுத்தாராய்ந்துரைப்பாராயினர். கேளும்! தருமராஜனே! அந்தத்தீவாய்நரகத்து வருந்துவோர்கள், நல்லகல்விப்பொருள் செல்வப்பொருளிரண்டினைத்தேடியும், அதுகொண்டுசிவபூசைதோத்திரம் தியானம்திருப்பணி யிவற்றைச்செய்யாமலும் சிவநாமசங்கீர்த்தனங் கேளாமலு மிருந்து தம்வாழ்நாள் முழுவதும் உண்டும் உடுத்தும் பூண்டும் களித்தும் வீணே கழித்த பாவியர்கள் பக்கத்தில் ஈர்வா ளெரியம்பால் வருத்தப்படுகின்றவர்களோவெனில் சிவநிந்தை குருநிந்தை அடியார் நிந்தைசெய்கின்ற பாதகர்களோடு நண்புகொண்டும், சைவதூஷணையைக்கேட்டு மனம்பொறுத்தும் அத்தூஷணைசெய்யும் அவர்களோடு பழகியும், மருவியும், அவர்கள் தங்குமிடத்திருந்தும், அவர்களை யுறவர்கக்கொண்டும், அவர்களைப்பார்த்தும் அவர்களோடு விழைந்து பேசியும் வயிறுவளர்த்துத்திரிந்த மகாபாவியர்கள். இருட்டறை கிடந்த கொடியோர், வேதம், ஆகமம், புராணம், மிருதி முதலிய கலைகளை நன்கோதி யுணர்ந்தும் அவற்றினுண்மை யுணராது, மாயைவயப்பட்டு ஆணவத்தராகித் தருக்கித்து, உண்மையொருக்கால் நெஞ்சுட்டோன்றிய வழியும் கல்வி முதலியசெருக்கால் விழுங்குற்ற வராகிச் சிவநிந்தைசெய்து சைவதூஷணைக்குச் சிறிதும் வாய்கூசாது! "யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகி யெங்கண், மாதொருபாகனரும் வருவர் மற்றைத்தெய்வங்கள், வேதனைப்படு மிறக்கும் பி

நக்குமேல் வினையுஞ் செய்யு, மாதலா லவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே'' என்றவுண்மையைக் குருமுகத்தாலறியாது, பேதபாவனையால் அறிவுமயங்கி, என்றெய்வம் உன்றெய்வம் என்று பிரித்தும், பெரிது சிறிது என்று தருக்க வாதங்கள்செய்தும், கொடுவினை விளைத்து வாழ்நாள் வீணாளாகச்சிவனருள்வேண்டுமான்மகோடிகளைப் பெருந்தேவரென்று மருண்டு, சிவனடியார்களைப் பிழைகூறி யுழன்ற பெரும்பாவிகளாம்; மலம் புழுக்களைப் புசித்துப்பசியால் வருந்துந் தீயோர், கடவுளில்லை, முத்தியில்லை, சொர்க்கநரகமில்லை, அறம்பாவமில்லை. ஆன்மாவென்ப தொன்றில்லை, இவ்வுடம்பினை யோம்புவதே பொருளென்று "எவ்வுயிருமீசன் சந்நிதியேயாகும்" என்றபடி சிவன் கோயிலென்று வேதாகமங்களாற் கூறப்பட்டுள்ள பலவுயிர்களையும் கொன்று அவற்றின் ஊனைத்தின்றுழலும் கொடியராயினோராம்; நோயாலும் விஷசெந்துக்களாலும் வருந்துகின்றபேதையர், "தானலாதுலகமில்லைச் சகமலாதடிமையில்லை" என்ற தமிழ்வேதமாகிய தேவாரத்தின் ஆணையைக் கடைப்பிடித்து, எல்லாவுயிர்களும் பரமேசுவர னடிமையாதலால் முற்றுக்கும் அடிமை என்று அடிமைத்திறஞ்செய்ய வறியாமற்போனாலும், அதிகாரபேதம்நோக்கி "மாலறநேய மலிந்தவர்வேடமும் ஆலயந்தானு மரனெனத்தொழுமே" என்றதனையாவது கடைப்பிடித்துப் பத்திசெய்யாமல் ஜீவகாருணியம், பற்றறுதி, கடவுட்பத்தி, மெய்யுணர்வும் அமைந்திருந்தமை கண்ணாரக்கண்டும் காதாரக்கேட்டும், அழுக்காறு காரணமாக நல்லடியார்களுக்கும், சிவாலயங்களுக்கும் பலதீங்குகளை விளைவித்துப் பெரியோர் மனம்வருந்துபடியான தீமைகளைத் தாமே செய்தும் பிறரைக்கொண்டு செய்வித்தும் செய்வார்க்குத் துணையாகியும் இருந்து வாழ்நாளைக்கழித்த இழிந்தபிறப்பினராம். கேளும் காலநாதனே! இவர்கள் எப்போது இந்நரகில் வந்தாரெனில் நாமறிந்தபடியல்ல; முன்னெந்தகற்பமோ தெரியவில்லை. இக்கணக்கு எங்களாலெழுதப்படுவதல்ல. தருமதேவதையா லெழுதப்படுவது. அது என்றும் நித்தமாயுள்ளதாதலால், இவ்வுண்மை அத்தருமதேவதைக்கே தெரியும். இவர்களுக்கிந்த நரகவேதனையொழிவுகாலம் இக்கணக்கில் வெளிப்பட்டதன்று. ஆனால் கற்பாந்த விமோசனம் என்றிருக்கிறது. அது எந்தகற்பாந்தமோவென்று சொல்லக்கேட்ட தருமராஜன் திடுக்கிட்டு நடுநடுங்கி யுடல்பதற நாக்குழற வஞ்சியோடி யப்பாவிகளைப் பார்த்ததோஷம் பரிகாரமாம்படி சிவத்தியானம் செய்யலாயினார் என்று ஆகமங்களுள் சிவநிந்தைசெய்வா ரிழிவுகூறுங் கண்டங்களிற் கூறப்பட்டுள்ளன.

சிவபூசையாகிய பெருந்தவம் எளிதிற்கிடைப்பதல்ல. தாயே! அதுவும், "தவமுந்தவமுடையார்க் காகுமவமதனை யஃதிலார்மேற்கொள்வது." என்று பெரியோ ராணையிட்டிருப்பதால் சித்திப்பது அருமையே. ஆதலால் முன்செய்தவக்குறையா லித்தனைகாலம் வீணேபோய்விட்டது. "பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே." என்றது தமிழ்வேதமாதலால் போனநாள் யமனுடைய நாளாகப்போயினும் இனியுள்ள நாளாவது நம்முடைய நாளாகும்படி சிவபூசை செய்வோமே. சிலர் சிவபூசை மோக்ஷத்தையன்றோ தருவது, அதனைப் பின்பு பார்த்துக்கொள்ளுவோம்; இப்போது நன்றாய்ப் பொருளைத் தேடி யுண்டுடுத்துப் பூண்டு இம்மைச்சுகத்தை யனுபவித்தொழிப்போமென்று, காலைதொட்டு மாலையளவுங்கடாப்போ லுழைத்தும் உழைப்புக்குத் தக்க கூலிபெறாது அரிதே சிறிது பெற்றுவந்து, அச்சிறிதுந் தங்குடும்பப் பாதுகாப்புக்கே பற்றாது "துப்புரவில்லார்துவரத் துறவாமையுப்பிற்குங் காடிக்குங் கூற்று." என்றபெரியோர் வாக்கியத்தை நினைத்து நினைத்து இரவெல்லாம் உறக்கமின்றி வருந்திக்கிடந்து விடிந்தளவில் வேம்பு தின்னும் புழுப்போல வினைவசத்தராய் மயங்கி மீட்டும் பழையபடி உழைத்துவருந்துவர். அந்தோ! அது அவர் முன் சிவபூசை செய்யாதகுறை. "இலர்பலராகிய காரணநோற்பார் சிலர்பலர்நோலாதவர்." என்றபெரியர் வாக்கியம் வீண்போமோ? அப்படிக்கின்றி ஜென்மாந்தரத்தில் நீங்கள் நல்ல சிவபூசைசெய்திருந்தபடியால், இப்போது உங்களுக்குக் குறைவற்றசெல்வம் ஆண்டவன் அனுக்கிரகம் செய்திருக்கிறார். ஆகையால் உங்கள் வயிற்றிற் பிறந்த அடியேனும் இன்னும் மேலான செல்வத்தைப் பெற முயற்சி செய்ய விரும்புகின்றேன்; அம்மே! இதற்கு நீர் தடைபுரிவது தருமமோ! தகுதியோ! மக்களுக்கு ஆக்கந்தேடுவதன்றோ பெற்றோர் கடன்; ஆதலால் இனிமறுத்துத்தேவரீர் ஏதேனுமொன்றுகூறுவதாயிருந்தாலுமென்யாக்கை நீங்கும்போலும் என்று அஞ்சலி செய்து நின்றார். அப்போது, ஞானகலாம்பையாகிய அவ்வுத்தமத்தாயாரானவர், மகனார் வார்த்தைகேட்டு வியப்பும் பேரானந்தமுமடைந்து, இவனுக்கு இவன்றரத்தின் மேம்பட்ட அறிவு நேர்ந்தது பூர்வபுண்ணியமென்பதற்குச் சந்தேகமில்லை. இவன் கொண்ட கருத்து இவனளவிற்பயனுறுவதன்றி, "முவேழ்சுற்றமுமானுறுநரகிடை யாழாமேயருளரசேபோற்றி." என்ற மந்திர மொழிப்படி பெற்ற தாய்தந்தையளவுமே யன்றி யவர் முன்னோர் மூவேழுகாலுக்கும் பெரும்பேறாகத் தக்கதேயாம். எந்தகுலத்தில் எவனுக்கு ஈசுரபத்தி, அறிவு, ஒழுக்கம், சிவகாருணியம் சிறந்திரு

க்கின்றவோ அக்குலந்தான் பெரியதென்று பெரியோர் கூறுகின்ற னர். அச்சைவன்பிறப்பே யுயர்பிறப்பு. அவன்றான் உலகத்திற் பிறந்தவன். சாகாமனிதனுமவனே ஆதலால், இவன் கனவுகண்ட திற் பழுதின்று. உண்மையே இனி நாம் தடைசொல்வது தகுதி யல்லவென்று துணிவுற்று, மைந்தர் திருமுகநோக்கி, ஐய! வெண் காட! அஞ்சற்க! கவலற்க! உன்கனவின் வண்ணம் திருவெண்கா ட்டினையடைந்து, செய்கடன் முடித்துச் சிவதரிசனஞ்செய்து உன்னாசிரியன் வருமளவும் காத்திருக்கக் கடவையாகவென் றரு ளிச்செய்தார். அப்போது, அவர்கலிவிடிந்தாற்போலும் போது விடிந்தது. சூரியனுமுதயமாயினன்.

ஆசிரியனைநாடிப் பட்டினத்தையர் திருவெண்காடு சேர்தல்.

உடனே ஞானகலையம்மையார் எழுந்திருந்து காலைச்செய் கடன் கழித்து, சகலகலைகளு முணர்ந்த பெரியரைத் தருவித்து அருச்சித்துபசரித்து, அவர்களுக்குத் தம்மகனார் கனவைக்கூறக், கேட்ட அச்சான்றோர் அதிகஆச்சரியமும் களிப்புமடைந்து, அவ் வம்மையாரைநோக்கி, அம்மே! உமது புதல்வர் சாதாரணமான மானுடதேகியல்ல ஏதோ காரணதேகியாயிருக்கவேண்டும். பெரு ந்தேவர்க்குமரிய சிவனருள் இச்சிறுவயதில் வருந்தாது பெற்றன ர். இவர் மகவும் அல்ல. பெரியரிற்பெரியர். ஆதலால் இவர் கருத்தி ன்வண்ண மிசைவிப்பதே கடனென்றார்கள். அப்போது செய்கட ன் முடித்திருந்த வெண்காடனார், உடனேதம்மருமைத்தாயாரைத் திருவெண்காட்டுக்குப் போகும்படி முன் செலுத்திப் பின்னே சி வார்ச்சனைக்குரிய திரவியங்களோடு தாமும் அங்கிருந்த சிவநேசப் பெரியோருமாகப் புறப்பட்டுச்சென்று திருவெண்காடென்னும் அத்தெய்வத்திருப்பதியையடைந்து, காவேரிசங்கமுகத்துறையினீ ராடி விபூதி உருத்திரசாதனமணிந்து உள்ளன்புமிகச் சென்று சங் கமேச்சுரரை விதிமுறையே தரிசித்து வணங்கி அடியார்களைப் பூசி த்து அவர்கள் வெறுக்கும்படி வேண்டுவனவற்றைக்கொடுத் துப சரித்து, அவர்கள் இன்முகத்தையும் அருளப்பாட்டையும்பெற்று மாடவீதிவலம்வந்து ஆலயத்தையடைந்து கோபுரவாயிலைப்பணி ந்து சென்று முக்குளநீரிற் சங்கற்பவினைசெய்து மூழ்கிப் பலதான ங்களையுஞ் செய்து பட்டுடுத்துத் திருவெண்ணீறுத்தூளனஞ்செ ய்து திரிபுண்டரமாகத் தரித்து, சிரம் கண்டம் மார்பு தோள் மு ன்கையிலும் விதிப்படி உருத்திரசாதனமும் புனைந்து சிவத்தியா னத்தோடும் சைவவேதியர்கள் புடைசூழக் கோயிலுட் புகுந்து வலம்வந்து கணபதி சந்நிதிசென்று விசேடமாகத் திருமஞ்சனம் செய்வித்து பத்திர புட்பங்களாலும் அறுகாலும் அருச்சித்து,

இலட்டுக முதலிய அபூபவர்க்கங்களும், அவல், கடலை, பொரி, எள், கரும்பு வாழை தெங்கு முதலிய பலவகைகளும் வைத்து நிவேதித்துத் தூபதீபாராதனைகளை நடத்தி வணங்கித் தோத்திரம்பண்ணி நிர்விக்கினமுண்டாம்படிப் பிரார்த்தித்து அருள்விடைபெற்று, சிவனடியார்கள் பந்துக்கள் தாய்முதலியவர்களோடு சிவசந்நிதானத்திற்குவந்து திருநந்தியைப்பணிந்து சென்று அவ்வாறே சுவாமிகளையும்மஹாதேவியாரையும்அருச்சித்துப்பணிந்து ஆசிரியர் வரவுநோக்கி நின்றனர்.

அப்போது அங்கே யிவர் கனவு நனவாகக் கோடிமன்மதரும் வெட்கப்படும்படி, முருகப்பிள்ளையார் தமது ஷண்முகங்களையுங்கரந்தோர் வடிவெடுத்தாற்போலும் அழகிய திருமேனியுடையராய்ச்சடைமுடி விளங்க,அரையின் முஞ்சிப்புல்லரைஞாணும் மார்பில் முப்புரிநூலும் மான்றோலும் பிரகாசஞ்செய்ய, விபூதி உருத்திரசாதன முழுவதும் பேரழகுசெய்ய, வேதாகம முதலிய கலைகளை முற்றுமுணர்ந்த தன்மை வெளிப்பட, வேதமந்திர பாராயணஞ்செய்யு நாவினராய்ச் சைவவேதியப் பிரமசாரியொருவர் வந்து திருவெண்காட்டுப் பிள்ளையார் எங்கே யெங்கேயென்றங்கிருந்தவர்களை வினவிக்கொண்டே ஆலயத்துள்ளே பிரவேசித்தார். பிரவேசித்தவளவில் அங்கிருந்த அந்தணர் யாவரும் கண்டு, பேரன்பும், பெருவியப்பு முடையரா யெதிர்சென்று, ஐயரே! தேவரீர் எங்கு நின்று மெழுந்தருளுகின்றீர், திருவெண்காடரைத் தேடுகின்றீர் யாதுகாரணம் என்று வினவ, அம்மறையவர் குலக்கொழுந்து, அந்த பிராமணோத்தமர்களை நோக்கி, ஐயரே! நீவிர் அறியலாகாத தொன்றுமில்லை; ஆயினும், எம் வரலாறு முற்றும், சிறுவராகிய திருவெண்காடர்பால் யாமடைந்தவளவில் தெரிந்து கொள்ளலாமே யென்று சொல்லிக்கொண்டே வருகையில், எதிரே அப்பிள்ளையார், தம் அன்னையராகிய ஞானகலை அம்மையாரோடு, சிவபெருமான் திருமஞ்சனம் அருச்சனை முதலியவற்றிற்குரிய திரவியங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கக் கண்டு, அவர் முகக்குறி, தேகவளம், செயலின்திருத்தம், ஒழுக்க முதலியவற்றாலே யிவர்தாம் வெண்காடரொன்று எளிதிலுணர்ந்தவராய் மனமகிழ்வோடு மின்முகங்காட்டி மாதுரியமானசொல்லால், ஐய திருவெண்காட! உன்னைப் பார்க்கவேண்டு மென்னும் விருப்பத்தாலே யிங்குவந்தோம். உன்னெண்ண முழுவதும் யாமறிந்துள்ளோம். அக்கருத்து நிறைவேறுங்காலமடுத்தது என்று சொல்லி எதிர்நின்றனர்.

பட்டினத்தார் குருதரிசனம் செய்தல்.

அவ்வளவில், அத்திருவெண்காடர் அக்கோலமுற்று நோக்கி அவர் திருமுகக்கருணைபெற்று, நாம் கனவிற்கண்டபடி, நம்மை

சம்புடத்தை ஒரு வுயர்ந்த பீடத்தின்மே லெழுந்தருளப்பண்ணி மேலே மூடியிருந்த கவுசனையை வாங்கினார். அப்போது அங்கிருந்தவர்கள் யாவரும் அதிக காந்தியுள்ள பொன்னாலாகிய வச்சம்புடக் கோயிலைக்கண்டுலகந்தோன்றாது பிரமைகொண்டவர்களாயினார்கள். திருவெண் காடரோ, அக்கோயில் வயத்தராய்க் காந்தம்பற்றிய இரும்புபோ லொன்றுந் தோற்றமின்றித் தம்மை மறந்து தறிபோல் அசையாது நின்று பின்னொருவாறு சிறிது தெளிவு வந்தவுடனே, குருவின் திருவடிகளிலே பலமுறை பணிந்து பொன்மாரியோடு இன்பக்கண்ணீர் மாரியுஞ் சொரிந்து துதித்து நின்றார்.

கேளும் முனிவர்களே! சிவஞானத்தை யாரறியவல்லவர்கள். வேதாகமங்களே அறியாவானால் அரியயனிந்திரன்முதலியதேவர்களோ அறியவல்லவர்கள் என்றுசொல்ல, முனிவர்கள் வியப்படைந்துமேல்நடந்தகதைவினவ வுபமன்னியர்சொல்லத்தொடங்கினர்.

திருவெண்காடர் சிவதீக்ஷைபெற்றது.

முனிவர்களே! பின்பு, அப்பிரமசாரியாய் வந்த தேசிகோத்தமன், மாணாக்கராகிய திருவெண்காடரது அதிதீவரத்தையறிந்து, அங்கிருந்த சிவநேசர்களாகிய அந்தணர்களது அனுஞ்ஞையைப் பெற்றவராய் அம்மறையவர் கூட்டத்துடன் திருவெண்காடரையும் அழைத்துச் சென்று காவிரிக்கரையடைந்து சைவதீக்ஷாசங்கற்பம் சொல்லி மீட்டும் ஸ்நானம் செய்வித்து, முக்குள நீரிலும் மூழுகப்பண்ணி விதிப்படி திருவெண்ணீறு உருத்திராக்கமணிவித்துச் சிவசன்னிதியிலழைத்துச் சென்று, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்துப் பின்பு, சைவசம்புடத்தை யெழுந்தருளச்செய்து அவ்வாசிரியன் அதன் மகிமையைத் தெரிவிக்கும்பொருட்டு அங்கிருந்த அந்தணரொவ்வொருவரையு மழைத்து அதைத் திறக்கும்படி ஏவுதலும், அவர்கள் ஒவ்வொருவருஞ் சென்று தங்களாலியன்றமட்டில் திறக்க முயன்றும் திறவாததாகக் கண்டு மனஞ்சோர்ந்தாற்போலக் கையுஞ் சோர்ந்து நின்றார்கள். அப்பால் சுத்தகிரியாதீக்ஷா குருவாய் வந்த வேதியர்குலமணி திருவெண்காடரை நோக்கி திருவெண்காட்டையா! நீ சென்று திறப்பாயாக வென்று திருவுளம் பற்ற, அவரும் அவ்வாசிரியராணை தலைமேற்கொண்டு சென்று, வெண்காடுடையானையும் அவரிடம் பிரியாப் பிரமவித்தியா நாயகியையும் பணிந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தியானத்தோடு அப்பெட்டகக் கோயிலை வலம் வந்து பணிந்து தமது திருக்கரத்தாலக் கோயிற் காப்பினைத் தொட்டார் அவ்வளவில், அக்கதவந்திருக்காப்பவிழ்ந்து திறப்புற்றது. அதில் கோடி சூரியர்

உதயமாயினும்போலும் பேரொளியவாய்க் கண்டவர்கண்ணையும்
மனத்தையுங் கவரத்தக்க வழகினவாய்ச் சிவலிங்கமூர்த்தியொன்
றும், விநாயகமூர்த்தியொன்றும் தெய்வமந்தாரப்பூக்களால் பூசி
க்கப்பட்டிருந்தன. அக்காட்சியைக் கண்ட யாவரும் பெருவிய
ப்புமானந்தமுமடைந்து, இம்மூர்த்தம் மாணிக்க மூர்த்தமோ?
நவமணிகுயின்றவோ! கடவுண் மணியாலியன்றவோ? முன் அடி
முடி தேடுவார் காணவெழுந்த சோதிப்பிழம்போ, இந்நிலவுலகத்
தவோ? தேவருலகத்தவோ? கைலையகத்தவோ? என்று ஐயமு
ற்றுத்தம்வாயில் வந்தவாறுதுதித்துத் திருவெண்காடர் தவத்தை
யும் அவர் பெற்றுக்கொண்ட பேற்றினையும் குறித்து மிகப்புகழ்ந்
துகொண்டாடினார்கள்.

பின்பு, பிரமசாரியாக வந்த ஆசிரியர், மாணுக்கரை நோக்கி
ஐயா? இன்றுநற்றினமாதலால்,உன்னுடைய ஆன்மார்த்தத்தினைப்
பூசிக்கக்கடவை. இப்பூசை செய்வதற்கு முன் இத்திருவெண்காடு
டைய நாயகனையும், உலகெலாமீன்ற ஞானவித்தை முதல்வியா
கிய பெருமாட்டியையும் விதிமுறையே பூசை செய்வித்திடுக. நீ
முன்னே முயன்ற புண்ணியம் மிகப் பெரிதுகண்டாய்,அதனாலன்
றோ? இன்று ஆவணித்திங்களும், திங்கட்கிழமையும், ஓணமும்,
பதின்மூன்றாநாளுங்கூடிய மஹாப்பிரதோஷகாலம்வாய்த்தது. இதி
ல்விதிப்படி பிரதோஷகாலத்தில் மஹாந்நியாச பூர்வமாய் ஸ்ரீ ருத்
திராபிஷேகஞ் செய்விப்பது சிறந்ததென்று வேதாகமங்களால்வி
திக்கப்பட்டிருக்கின்றது. சிவபூசையைச்செய்வதற்குமுன்சிவனடி
யாரைப் பூசிப்பதே சிலாக்கியமாம். இறைவன் அடியவரைப்பூசி
க்கின்றவர்களை நன்றாயறிவார். "ஏறுடையாயிறைவாவெம்பிரா
னென்று-நீறிடுவாரடியார் நிகழ்தேவர்கள் - ஆறணிசெஞ்சடைய
ண்ணலிவனென்று-வேறணிவார்க்குவினையில்லைதானே." என்றது தி
ருமந்திரம். ஆதலாலிவ்வண்ணம் சிவனடியாரையும் சிவபெருமா
னையும் பூசிக்கத்தொடங்குமுன் சங்கற்பஞ்செய்துநீராடி நித்தியக்
கடன்முடித்து, "புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தமெய்யுமஞ்
சேன் - கற்றைவார் சடையெம்மண்ணல்கண்ணுதல்பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டெனநினைந்தெம்பெம்மாற்-கற்
றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே." என்றது மந்திரவிதி
யாதலால் வேறு தேவருளராகச் சிந்திக்குஞ் சித்தவிகாரமின்றி
"பிணியெலாம்வரினுமஞ்சேன் பிறப்பினோ டிறப்புமஞ்சேன்-துணி
நிலாவணியானன்றன்றொழும்பரோடழுந்தியம்மா - திணிநிலம்பி
ளந்துங்காணாச்சேவடிபரவிவெண்ணீ-றணிகிலாதவரைக்கண்டாலம்
மநாமஞ்சுமாறே" எனவும் "இணங்கிலாவீசனேசத் திருந்தசித்த

ஆபரணங்களால் அவர் மனங்களிக்கச்செய்து, மேல் வேண்டிய வைகளையும் வெறுப்பக் கொடுத்து வணங்கி அவர்களருள்விடை பெற்றுப் பின் தமது ஆன்மார்த்தமாயெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானைத் தங்குருவருணெறியாலருச்சிக்கலாயினர்.

கேளும் முனிவர்களே! பின் திருவெண்காடர் குரவனோடிருக்கை சேர்ந்து காலலம்பி ஆசமித்துப் பூசை மடங்குறுகி ஆசிரியனை யோர்பீடத்தெழுந்தருளப்பண்ணியருச்சித்து, அருள்பெற்றிருந்து, ஆசமனமும் பிராணாயாமமுஞ் செய்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தைத் தியானித்து பஞ்சசுத்தி முடித்து, அருக்கியமமைத்துப்பின் விக்கினேசுரமூர்த்தியோடு ஆன்மார்த்தமாகியவுடையவரை அபிடேகவேதிகையிலெழுந்தருளப்பண்ணியருக்கிய தூபதீப நைவேதனம் பண்ணி யுபசரித்துத் தாம் செய்யும் அருச்சனைக்குத்திருவுள்ளஞ் செய்யும்படி பிரார்த்தித்து முதலில் அந்தரியாகபூசை செய்து, எம்பெருமானே புறம்பிலும் என் பூசையைக் கொண்டருள்கவென்று விண்ணப்பித்து, தைலம் பஞ்ச கவ்வியம் பஞ்சாமிர்தம் கலவைச்சாந்தமுதலியவற்றாலும் அன்புமயமாகியசுத்தநீராலுந் திருமஞ்சன மாட்டுவித்து, ஒற்றாடைசாத்தி வெண்பட்டுமுதலிய பரிவட்டங்களாலும், முத்துமுதலிய மணிப்பணிகளாலும் அலங்கரித்து வெண்ணீறு சாந்தஞ்சாத்தி முல்லையாதி வெண்மலர்க்கண்ணி, இண்டை, தொடை, ஒலியல் முதலிய நறுமலர்மாலை சூட்டி அட்டபத்திரங்களாலும் பூக்களாலும் அருச்சித்து, ஆன்ம நிவேதனமாகச் சுத்தபோனகவகைகளையும் தாம்பூலத்தையும் நிவேதித்து, உயிர் வாசமாகத் தூபதீபம் கருப்பூரவாலாத்திகவரிகுடை கண்ணாடி முதலிய பணிமாறி, அன்புபெருக ஆடல் பாடலைநடத்துவார் ஒன்றும் வகைகாணாராய் மயங்கி யருள் வழிப்பட்டு நின்றார். அப்போது, சிவானுக்கிரகத்தால், திருவெண்காட்டைய! எல்லாக் கலைஞானமும் உன்பாலாக என்று ஓரசரீரிவாக்குண்டாயது. அதுகேட்டங்கிருந்தார் யாவரும் பெருவியப்பினையடைந்து, இப்பிள்ளையார் முருகப்பிள்ளையார் திருவவதாரம்போலும் என்று துதித்தார்கள். உடனே திருவெண்காடர்தம்மையாளுடையவையனைத் துதிக்கலாயினர்.

தோத்திரம்-வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

அளவையில்பேரருட்கடலேயம்மையப்பாவனைத்துடையாய்
களவறுவானோரரசேகாலனைமுக்காய்ந்தோனே
துளவநறுந்தாருடையான்றேன்றலைத்தோன்றாணுக்கி
வளமருவுமலைமகளைமணந்தபிரான்வாழியவே. (க)

இன்னரசேயெனவுலகுவழுத்துமெம்மானெனக்குனிரு
பொன்னடியல்லால்வேறுபுகலிடமுமுண்டுகொலாம்
நன்னயமென்கரும்பிருக்கநவைவிரும்பைமெல்வார்போற்
பின்னையொருதெய்வத்தைப்பேசறியேன்பேயேனே. (௨)

இவையிரண்டுந்தரவு.

மலையரையன்றிருப்பாவைமகிழ்நித்தமணவாள
புலையறிவிற்புதுத்தொழும்பேன்புத்தடிமைகொள்ளுதியோ. (௧)
முன்னஞ்சாமதனம்புமுரணழித்தமெய்யானை
என்னெஞ்சேயிரவுபகலெண்ணிநீகிடவாயோ. (௨)
யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதற்கென்கடவேனென்
றூனுதபேரறிஞரருளினாரருளாலே. (௩)
என்செய்கேனெண்ணரியபிறப்பினுக்குமிருமிக்கோன்
முன்கொள்ளப்பின்றொடருமுழுமரணத்துயர்க்குமையா, (௪)
இன்னுயிர்க்குப்பிழையிழையாதினியனவேசெயிற்செய்துன்
பொன்னடிப்பூசனைமறவாப்பொய்யிலன்புமருளுதியோ. (௫)

இவையைந்தும்தாழிசை.

எனையடிமையினினிதுடையவவுலகினி
னினைநிகர்பவரிலையெனினுயர்பவரொவர். (௧)
பலவுலகுதவியபரைமகிழ்பயலவ
வுலைவறுபவமயலொருவுநர்பிறரொவர். (௨)

இவையிரண்டுமராகம்.

குடும்பமாக்கடலிடைக்குளித்தவென்றனை
இடந்திகழருட்கரையேற்றவேண்டுமால். (௧)
என்னுடையடிமைவேண்டாவுனக்கெனில்
பின்னெனக்கெவருளர்பேசவேண்டுமால் (௨)

இவைஇரண்டும் ஈரடியம்போதரங்கம்.

தாயினுமிகப்பெருந்தயாவினல்லையே
மாயிருமுலகெலாமருவுமெல்லையே
நோயுறுவினைப்பகைநொடிக்கவல்லையே
ஆயுறுசுகம்விளையண்ணலல்லையே

இவைநான்கும் ஓரடியம்போதரங்கம்.

எளியேமுக்குறவுநீ யாவர்க்குமிறைவனீ
அளியோடுகாப்பவனீ அறவாழியங்கடனீ
முழுமதியிற்சுந்தரனீ முன்னமுன்னச்சுவைப்பவனீ
கெழுமுமையாள்பாகனீ கெடுவில்வெண்காடுடையவனீ

இவையெட்டம்போதரங்கம்.

புகலுநீ புண்ணியநீ போதநீ நாதனீ
தகவுநீ சார்புநீ சற்குருநீ சயம்புனீ
விடையைநீ வேதியநீ மேதினிநீ வேதமுநீ
யுடையைநீ யுணர்வுநீ யுரியைநீ பெரியைநீ.

இவைபதினாறம்போதரங்கம்.

எனவாங்கு-இது தனிச்சொல்.

முதுவர்கூறியமுழுமொழியல்லதைப்
புதுமொழிவேறுபுகன்றனனில்லை
யாதலினையவெள்ளலை
பேதைபுகலெனப்பெரிதளித்தருளே.

இது சுரிதகம்.

என்று பாடி, ஆனந்தக்கூத்தாடி அழுதுதொழுதார். இதனைக்கண்டோர் யாவருங்களிசிறந்தனர். அப்பால், திருவெண்காடர் உத்தரபூசை முடித்துப்பெட்டகக்கோயிலுள் உடையவரையும், மூத்த பிள்ளையாரையும் எழுந்தருளப்பண்ணித் தமது நெஞ்சம்போன்றதோர் சுத்தக்காப்பி லிருந்தருளப்பண்ணி, நிவேதனமான பிரசாதத்தாலும் ஏனைய சிறந்த பொருள்களாலும் தம்மாசிரிரைப் பூசித்துக்களிக்கச்செய்து, அவர் கட்டளைபெற்றுத்தாயாரும் சுற்றத்தாருமுட னிருந்துண்ணச் சிவப்பிரசாதத்தினை யுட்கொண்டு நீறணிந்து, ஐந்தெழுத்தெண்ணி அலைவற்ற சிந்தைய ராயினார். சூரியாஸ்தமனமு மாய்விட்டது.

திருவெண்காடர் தாயாரோடு மகேசுரபூசைக்காக வுசாவுதல்.

அப்பால், அவ்வசியகுலதீபமாகிய வெண்காடர், தமது குரவருக்கும், சிவநேசச்செல்வராகிய அந்தணர் முதலிய அடியவர்களுக்கும் மிகுந்த தக்ஷிணை கொடுக்கவென்றெண்ணி அன்னையாரிடஞ்சென்று வணங்கிநின்று, தாயே! தேவரீர் கருணையினால் செய்து முடிக்கவேண்டுவன வெல்லாவற்றையுஞ்செய்து முடித்தவனாயினேன். ஆயினும் சிறுகுறை யொன்றுள்ளது அதனைக்கேட்டிடுதி. என்னெனில், வேதாகமங்கள் சிவலிங்க மூர்த்தத்தினை யிரண்டு வகையாகப் பிரித்துவைத்தன. அவற்றுள் ஒன்று தாவர மூர்த்தியெனவும், மற்றொன்று சங்கமமூர்த்தி யெனவும் பேர்பெறும். தாவரமூர்த்தி, சிதம்பரமென்னும் கோயில் முதலிய மஹா க்ஷேத்திரங்களில் பரார்த்தமெனவும், அன்போடு பூசைசெய்பவர்களாகிய அடியார்களிடத்தில் ஆன்மார்த்த மெனவும் கூறப்பட்டெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானும். தாவரமென்றும் ஸ்தூலமென்றும் பொருளொன்றே, சங்கமமூர்த்தி, அச

சிவபெருமானை இரவுபகலொழியாது இதயக்கோயிலில் வீற்றிருக்கச்செய்து நம்மை யடிமைகொள்ளும் பெருமக்களாகிய அடியார்களாம். அவர்கள்தான் வேதம், வேதாங்கம், ஆகமம், புராணமுதலிய கலைகளெவற்றினுக்கும் பிறப்பிடமானவர்கள். எல்லாத்தருமங்களும், ஆசாரங்களும், செல்வங்களும், இன்பங்களும் அவர்களிடத்திலிருந்தே யிவ்வுலகம் பிழைக்க வெளிப்பட்டன. சங்கமமென்றாலும் சரமென்றாலு மொரே பொருள். ஆதலால், தாவரலிங்க பூசையிலுஞ்சிறந்தது சரலிங்கபூசையாம். "படமாடக்கோயிற் பகவற்கொன்றீயில், நடமாடக்கோயி னம்பர்க்கங்காகா, நடமாடக்கோயினம்பர்க்கொன்றீயிற், படமாடக்கோயிற்பகவற்கதாமே." என்ற மந்திரமே சாக்ஷி. நாம் தரும்பொருள் தினையளவினதாயினும் "தண்டாதசிந்தை தபோதனர் தாமகிழ்ந், துண்டது மூன்று புவனமுமுண்டது, கொண்டது மூன்று புவனமுங்கொண்டதென், றெண்டிசை நந்தியெடுத்துரைத்தானே" ஆதலால் இங்குவந்துள்ள சைவமாகேசுரர்களாகிய வேதியர்முதலியயாவரையும் அருச்சிப்பது கடனாகவிருப்பதால் அதற்கான பொருள் சேகரித்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தார்.

அதற்கவ்வம்மையார், மைந்த! நீகூறியதெல்லாமுண்மையே, ஆயினும் இதுவரையும் நம்மிடத்திருந்த பொருள் முழுவதும் செலவாய்விட்டது. இனிக்கடன்வாங்குதலொழிய வேறுவருவாயுமில்லை. என்செயக்கடவேம் என்று கூறினர். அப்போது திருவெண்காடர் மனங்கலங்குற்று, ஐயர் அன்று கனவிலே "உனக்குப் பொருள் கிறிது சிலகாலம் வேண்டுவதுதான்" என்று சொன்னதுண்மையாயிற்று. என்செய்வது, "ஒண்பொருள் சாழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு ளேனையிரண்டுமொருங்கு" என்ற பெரியோர்மொழிபொய்யல்ல. இப்போது ஸ்ரீருத்திரபாராயணஞ் செய்த வேதியர்க்கும், நமது தீக்ஷாகுருவுக்கும் தக்ஷிணை கொடுக்கவேண்டுமே; என்னகொடுப்பது? யாது செய்வது? எவ்விடத்திற் கடன் கேட்பது? யார் நமக்கு வேண்டிய அவ்வளவு பொருள் கடன் கொடுப்பார்கள்? கடன் வாங்குவதற்கும் வயது சாலாவிளம்பருவம் உடையவனாயிருக்கின்றேன், சீச்சீ" இல்லாமை மிகக்கெட்டது. "இன்மையுளின்னாததியாதெனி னின்மையுளின்மையே யின்னாதது" என்ற துண்மையே யன்றோ! என்று பலவகையாலும் நெஞ்சுகவல்படச் சிந்தித்துத் தேறும்வகையுந்தேற்றுவாருமின்றி நைந்துவருந்தி, தமதுள்ளுறவாகிய கடவுளுக்கு விண்ணப்பித்துச் சிவத்தியானத்தோடு மிலத்துப்படுத்துறங்கினர். அவர் அன்னையார் ஞானகலாம்பையாரும் மகனார் மனக்கவலைநோக்கித்தாமும் கவ

லையுற்றவராய் அவரருகே நித்திரை செய்தார். மற்றைய வேதியர் முதலிய யாவரும், ஆலயமண்டபத்திலும், சோலை நந்தவனங்களிலும், மடங்களிலும் இச்சைவழியே சிவத்தியானத்தோடுஞ் சயனித்திருந்தனர்கள்.

கேளும்முனிவர்களே! அப்பால் எல்லாம் வல்ல கடவுளானவர், அவ்வெண்காடர் மனக்கவலையறுக்கத் திருவுளங்கொண்டு, அன்றிரவு அவர்கனவில், முன்னேவந்தாற்போலும் விருத்தராகிய சைவவேதியர் திருவடிவோடு கோலூன்றி வந்து, எதிர்நின்று ஐயா! திருவெண்காட! அஞ்சற்க. நெஞ்சக்கவலையொழிதி. நீ நமதன்பர்கட்கு இனியை யாதலால் எமக்கும் இனியை; ஆகவே நீ வேண்டும் அளவானபொன், மணி, பூண், ஆடை முதலியவெல்லாம் குறைவறக் கொடுத்தோம். அவை யெல்லாம் உன் மனை யகத்துள்ளன. அவற்றுள் நமதன்பர்கள் வேண்டியவைகளை வேண்டியவாறு வெறுப்பக்கொடுத்து நீ வேள்விப் பயனைப் பெறுதியென்று திருவாய்மலர்ந்தருளிப் போக்குங்காட்டி மறைந்தனர். அப்போது, திருவெண்காடரும் அக்கனவிற்றானே தொடர்ந்தோடி, எம்பெருமான்! எங்கெழுந்தருளுவது, இவ்வாறு கைவிட்டுப்போவதும் அருளியல்போவென்றரற்றி மறைந்தமைக்கு வருந்தி, உடனே விழித்தெழுந்து சிந்தித்திருந்தார். அப்போதருகே சயனித்திருந்த அவரன்னையார் அரவெழுந்து மகனுரை நோக்கி ஐய! பகலெல்லாம் சிவார்ச்சனைகாரியத்தில் அலந்த நீ இப்போது சிறிதுநேரமாயினும் அலைவற்றிராநது, என்ன கவலோடு இருக்கின்றாயென்றார். மகனும் எழுந்தவரை வணங்கித் தாங்கண்ட கனவினைக்கூறக்கேட்டுள்ளமுவந்து கடவுளருளைவாழ்த்தி அப்போது விடியுந்தருணமாயிருந்ததால் சூரியவுதயத்தையெதிர்பார்த்து மைந்தரோடு மிமையாது காத்திருந்தார்.

அத்தருணத்தில், காவிரிப்பூம்பட்டினத்து இவர்கள்குடிவாழ் மனையிற்காவல்பூண்டிருந்த மெய்காப்பளருட்சிலரோடிவந்து அவ்வம்மையாரை வணங்கி நின்று அம்மணீ! தாங்கள் பூட்டிட்டுக்காவல் வைத்திருந்த தங்கள் மனையுள்ளே அறை பிரவிலோர் பெருஞ்சோதியுண்டாய் இன்னதென்று எங்களால் மதிக்கவொண்ணாத வகையாயிருந்தது. எங்கள் கண்களுங் கூசின. ஆகவே, இவ்வதிசயத்தைத் தங்களுக்கு விண்ணப்பிக்க வந்தனம். அவ்வொளியின்னுமாறவில்லை என்றார்கள். அதைக் கெட்டமாத்திரத்தில் அவ்வுத்தமமாதரார், தமது மைந்தர் களு வுண்மையாம்போலுமெனமதித்து எழுந்தனர். சூரியனுமுதயமானான். உடனே காலக்கட

ன்முடித்துப்புதல்வராகிய திருவெண்காடரோடுங் காவிரிப்பூம்பட்டினம் வந்து மனைபுகுந்து வாயிற்காப்பு நீக்கி உட்புகலும், இந்திரனகரும், அளகையும்போலும் நிதிக்குவையயலால் கால் வைக்க எள்ளிடமும் பெறாது நிரம்பியிருக்கு மாளிகையறையிட முதலியவற்றைக்கண்டச்சமும், அன்பும், ஆனந்தமும், வியப்பும்பெருக, அந்நிதி சிவப்பிரசாத மாகையால் கிரமப்படி அருச்சனை செய்து தூபதிப நிவேதனங்களா லாராதித்து வணங்கி, அதினின்றும் அப்போதைக்குத் தமக்குவேண்டுமளவு பொன்னும், நவமணிகளும், ஆடையும், பூண்களும், மற்றவைகளுங்கொண்டு பண்டி யேற்றித் திருவெண்காட்டுக்கு முன் செல்ல வனுப்பிப்பின்னே தாமும் மைந்தருமாகத் தம்மாளிகையைத் தாழிட்டு முத்தரித்து மெய் காவல் வைத்துப்புறப்பட்டுத் திருவெண்காடு வந்து சேர்ந்து, அத்திரவியத்தையெல்லாம் அவ்வாலயத் தொருபுறத்திற் கருவூலஞ் செய்தமைத்து வைத்து, மகனைநோக்கி, ஐய! இனி நீ உன்னெண்ணம்போலும் குருபூசையும் மகேச்சுரபூசையும் செய்கவென்று சொல்லினார்.

உடனே, திருவெண்காடர், விதிப்படி நீராடித்திருவெண்ணீறக்கமாலைபுனைந்து நித்தக்கடன்முடித்து, தமது ஆசிரியரையும் அந்தணர்கள் முதலிய சிவனடியார்களையும் நல்ல ஆசனங்களில் எழுந்தருளப்பண்ணி, பாதபூசைசெய்து பாதோதகமுட்கொண்டு, அவர்களனைவர்க்கும் காதணி கடுக்கன் குண்டலம், கழுத்தணிசண்டிகை ஆரம் பதக்கம், கையணி வளையாழிமோதிரம், அரைஞாண்காலணி பாதுகை, பொன்னாடை, பட்டாடை, பருத்தியாடை, பூசாபத்திரம், அடுக்களைபாத்திரம், திரவியம், பசு, விளைநிலம், ஆளடிமை முதலியபலவும் வேண்டுவார் வேண்டியபடி வெறுப்பக்கொடுத்து வணங்கி உபசரித்து, குரவர் நீங்க மற்ற வேதியர்களைத் தத்தமிடம்போக இனிய வார்த்தை சொல்லி யனுப்பியபின்பு, தம்மாசிரியரிடம்மீட்டும்வந்துபணிந்துநின்று, எம்பெருமானே! தேவரீர்! கருணையால் எல்லாம் நிறைவேற்றினவனாயினேன்; யானும், என் குலமும், என் முன்னோரும் ஒருங்குய்ந்தோம். இனியாதொருகுறையுமில்லை. என் மனக்கவலை யெல்லாம் ஒழிந்தது. ஆயினும் இனி முன்னுக்கு அடியேன் செய்யத்தக்க பணிவிடையாது? அதனைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்துநின்றார். அப்போது அவ்வாசிரியர் அவரைநோக்கி, ஐய! நீ குறை முடிக்கவந்த தேகி. உன் சார்பில் வாழ்பவர்க ளனைவரும் சீவன் முத்தரே யாவர். ஆகவே உனக்குப்புதிதாக வுணர்த்தக் கிடந்த தொன்று மில்லை. ஆயினும், நீ நம்மை வினவியதால் உணர்த்துவதொன்றுண்டு. அதா

வது, "ஏதுக்களாலு மெடுத்த மொழியாலுமிக்குச் - சோதிக்கவேண்டா சுடர்விட்டுளனெங்கள்சோதி - மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றி வாழ்மின் - சாதுக்கள்மிக்கீ ரிறையேவந்து சார்மின்களே" எனவும், "அடியேனடுவுள் ளிருவீருமிருப்பதானு லடியேனுன் அடியார் நடுவுளிருக்குமருளைப்புரியாய்," எனவும், "அரியவற்றுளெல்லாமரிதேபெரியாரைப், பேணித்தமராக்கொளல்." எனவும் மஹாவாக்கியங்கள் விதித்தலால், இரவுபகலொழியாது சாதுசங்கமொன்றனைமாத்திரம் உறுதியாகப்பிடித்து அவர்களிடத்தி லன்புசெய்துவரக்கடவை. இதன்மேலுனக்கு யானறிவிக்கத்தக்க தொன்றுமில்லையென்றார். இங்ஙனம் கூறிய குருமொழியானது திருவெண்காடர் திருவுள்ளத்துப்பசுமரத்தாணி யறைந்தாற்போலும் பதிவுற்று, அதுமுதல் நாள்தோறும் உண்மையான அன்பும் பத்தியும் வளர்பிறையின் கலைபோல வளர்ந்து ஓங்க, குருபூசையும், சிவபூசையும், அடியார்பூசையும் கண்டவர்கேட்டவர்களெல்லாம் அதிசயிக்கும்படி நடத்திவந்தார். அவ்வருமைப்பாட்டினைச் சிவனன்றி உணர வல்லவர்களுலகத்தொருவரு மில்லையாயினர். கேளும் முனிவர்களே! இக்குருலிங்க சங்கமபத்தி செய்ய வல்ல பெரியோனைக்காண்பதும், அவன் சரித்திரங்களைக்கேட்பதும், அவனோடுறவுகொள்வதுமே இம்மானுட வடிவமெடுத்ததற்குப் பயன் என்று சத்தியமாக வுணரக்கடவீர்கள்.

திருவெண்காடர் திருமணம்.

கேட்பீர்களாக, அப்பால் சிலநாளிருந்து, ஆசிரியராகவந்தபிரமசாரி வேதியர் தம்மிச்சைபோன வழி சென்றபின், திருவெண்காடர் குருவருள் நெறிதவறாது, குருலிங்கசங்கமபத்தியை நடத்திச் சகலகலாஞானத்திலும் ஆன்றோராய்ப் பிறர்தம்மை யித்தன்மையரென்றுதெரியாவண்ணம் நீறுபூத்தநெருப்பேபோல வொழுகும்நாளில், இவர்க்குத் திருமணஞ்செய்யத்தக்கக் காலைப்பருவம் வந்தது. வரலும் இவரை ஈன்றெடுத்த தாயாரானவர், கண்டு சிந்தித்துத் தம்மரபுக்குஒத்தமரபு, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றால் குறைவற்ற குடியிற்பிறந்து நற்குண, நற்செய்கை, அறிவு, ஆசாரம், அடக்கம், அழகு, கற்புடைமை முதலியஅமைந்த கன்னி எங்குள்ளாள் என்று ஆராய்ந்துகொண்டிருந்தார்.

அப்படியிருக்க அக்காவிரிப்பூம் பட்டினத்திற்றானே உத்தம வேளாண்டகைமை சிறந்த வசியகுலத்திற்றோன்றி, அறிவால் அநந்தனையும், சுத்தத்தா லக்கினிதேவனையும், சம்பத்தால் அளகைக்கோனையும் ஒத்த சிவசிதம்பரசெட்டியாரென்பாரொருவர் தம்மரபுக்கொத்தமரபிற்பிறந்து அழகால் இலக்குமியையும், கற்பாலருந்

தியையும் வென்ற மஹா சீலையாகிய சிவகாமியம்மை யென்னு மனைவியாரோடு கூடித் தங்குலவொழுக்க மாறுபடாதவகையா யில்லறதருமம் வழுவாது நடத்திச் சிவநேசமும், அடியார் பத்தியுமே தமது பெரும்பேறாக வழுவாது பாதுகாத்து வாழ்ந்திருந்தார். அவரும் அவர் பத்தினியாரும் அருந்தவம்பலசெய்து, உலகத்துள்ள அழகுந் தவமுந் திரண்டொரு வடிவெடுத்தாற் போல வோர் பெண்கொடியைப்பெற்றுச் சிவகலையம்மை யென்று பேரிட்டுச்சுற்றத்தார் அயலார் யாவரும் வியக்கும்படி தஞ் செல்வத்திற்கேற்ப அருமை பலசெய்து வளர்த்துவருநாளில், அத்தவக்கொழுந்தாகிய சிவகலையென்னும் பெண்ணரசு அழகு, அறிவு, அடக்கம், ஆசாரம், அன்பு, தவம், பொறுமை, தயவு, ஈகைமுதலிய தம்மியற்கைக் குணங்களெல்லாம் கேட்டோர் யாவரும் வியக்கும்படி ஒருங்குகூடியுடன் வளர வளர்ந்து பெற்றோர்க்கின்பம் பெருகத்தளர்நடைப்பருவம் கடந்து பேதைப்பருவந்தாண்டிப் பெதும்பைப் பருவஞ்சென்றது. அதுகண்டு பெற்றோரிருவரும் நமது திருமகளுக்குத்தக்க கொழுநன் யாரென்று, தம்முள்ளே யெண்ணி யெண்ணிப் பின் திருவெண்காடராகிய நமது ஐயர் திருச்சரிதமுணர்ந்து இவரே யிப்பெண்ணுக்குரிய மணவாளநம்பி யாவரென்று நிச்சயித் திருந்தனர்கள்.

அக்காலத்தில், திருவெண்காடர் அன்னையார் அச்செய்தியுணர்ந்து தம்மரபிற் றக்க முதியோரைச் சிதம்பரசெட்டியார்பால்மகட்பேசவிடுப்ப, அவர்களுஞ் சென்றவரை வினவினர்கள். உடனே அச்செட்டியார் மகட்கொடுப்ப நேர்ந்து, செய்தி அனுப்பி, மற்றொருநாளில் கணிதநூல் வல்லோரை வருவித்து, நம்பிக்கும் நங்கைக்கும் தக்க மணவினைக்குரிய நாளுமோரையும் நிச்சயித்து, சுற்றத்தினர்க்கும் நண்பினர்க்கும் மணவோலைபோக்கித் திருக்கலியாணமண்டபம் சிறப்பாகச்செய்து வாழை கமுகு தெங்கு நாட்டிப் பூவாலும், ஆடைகளாலும், மணியாலும், கவரிகண்ணாடி விளக்கு பாலிகை முதலியவற்றாலும் அலங்காரஞ்செய்வித்தனர்கள். இச்செய்திகேட்ட அவ்வூரினுள்ளார் யாவரும் அம்மணத்தினைத் தங்கடங்கண் மணம்போல வெண்ணித் தத்தம் மனை மாளிகை முதலியவற்றினையும் அலங்கரித்து மாதரும் மைந்தரும் தாங்கடாங்கள்தம் முள்ளே களிசிறந்து மணவலங்காரம் புனைந்து, மங்கலங்கொண்டாடினார்கள். பின்பு குலமுதியோர் திருவெண்காடனார்க்கு முன்னைநாளே விரதசமாவர்த்தனம் செய்து, காப்புத்தரித்து, முளைபரப்பி மறுநாட்காலை வாசநீராட்டி வெண்பட்டாடை புனைவித்து, கடுக்கன் ஒட்டுகழுத்தணி யாரம்பதக்க முதலியனவணிவித்துக் கைய

ணிமோதிரம்பிறவும்பொன் அரைஞாண்பட்டிகையுந் தரிப்பித்து, தலைப்பாகை சூடி பூமாலை தொடையல்வேயச்செய்து, அழகுக் கழகுசெய்வதுபோ லணிந்தார்கள். அப்பால் அவ்வசியகுல மணி விளக்கானவர் திருவெண்ணீற்றுப் புண்டரமணிந்து தமதான்மார்த்த பூசைமுடித்து உடையவர்பால் விண்ணப்பித்து விடைபெற்றுச் சென்று சங்கமேச்சுரரையும், சாயாவனப்பெருமானையுந் திருவெண்காட்டிறைவரையும் சென்று பணிந்து மருதவாணரைத் தியானித்து நண்பினர் சுற்றத்தார் மிருகளிப்போடு புடைசூழ்ந்து வர, மத்தளம், சச்சரி, யாழ், வீணை, குழல் முதலிய துளைக்கருவி, பேரிமுதலிய வாத்தியங்கள் முழங்க மாதர்கள் நடநஞ்செய்யச் சிவிகையேறி ஊர்கோலமாகிச்சென்று சிதம்பரசெட்டியார் மனையருகாக வந்து சேர்ந்தார்.

அப்போது, சுமங்கலிகள் அஷ்டமங்கலத்தோ டெதிர்வந்து செந்நீராலத்தி சுற்றிக் கண்மிச்சல்போக்கப் பிராமணோத்தமர்கள் அக்ஷதை மலர்கள் வீசி ஆசீர்வதிக்கச்சிவிகைவிட்டிழிந்துவலத்தாள் முன்வைத்து கடிமணமண்டபத்தில் பிரவேசித்தவளவில் கடன் முழக்கம்போலப் பலவாத்தியங்கள் முழங்கின. அப்பால் நமது வெண்காட்டையர்சென்று கலியாணபீடத்தில் வீற்றிருந்தனர். சிதம்பரசெட்டியார் சுகந்தமங்கல நீராட்டிப் பட்டுடுத்துப் பலவகை மணிக்கலன்களால் பேரணிசெய்து வைத்திருந்த தமதுகுமாரத்தியாரை அச்சபையிலுள்ள பெரியோராணையின்படி நல்ல முகூர்த்தத்தில் சுமங்கலிகள் மங்கலம்பாடிச் சூழ அழைத்துவந்து கலியாணபீடத்தில் நம்பெரியோராகிய வெண்காடர் வலப்பக்கத் திருக்கச்செய்து, பத்தினியார் விதிப்படி யருச்சிக்கப்பட்ட கலச நீர்வாக்க வெண்காட்டு நம்பிகள் பாதம்விளக்கி வர்பூசைசெய்த பின் சங்கற்பித்து உபயகுலங்கோத்திரம் சூத்திரங்கூறி நம்பிகள் கரத்தில் நங்கையார் கரம்வைத்து யான் தவத்தாலீன்ற இக்கன்னியை வெண்காடரோ தேவர்கள்காண வுமக்களித்தேன் ஆதலால் நீர் இல்லறக்கிழமைபூண் டெமர்க்கு இருமையும் அளிப்பீராக” என்று தாரைநீர் சொரிந்து வாழ்த்தினார். சுமங்கலிய முதுமாதர் பல்லாண்டு கூறினர். அந்தணர் முதலிய பெரியோர் ஆசீர்வாதஞ் செய்தனர். அப்பால் புரோகிதர் மணவினை விதிப்படி மாங்கலிய தாரண முடிப்பித்து ஓமாக்கினியையும் நாந்திதேவர்களையும் பூசித்துப் பொரியினோடு பூரணாகுதிமுடித்து “சத்தபதி” யென்னும் அம்மி மிதித்தலையுஞ் செய்து தீவலம்வந்து தம்பதிகள் வணங்க யாவரும் மங்கலம்பாடி வாழ்த்தி அத்தம்பதிகட்குப் பால் பழமூட்டிக் களிகொண்டாடினார்கள். சிதம்பரசெட்டியாரும் அந்தணர்

முதலியோர்க்குப் பொன்னுடை நவமணிகள் முதலியவற்றைத் தாம்பூலத்தோடும் கொடுத்துப் பூசித்து, பின் அந்தணர் முதலி யோர்க்கும் தம்பதி சுற்றநண்பினராதியர்க்கும் அறுசுவையுண்டி யாலும் ஏனையதாம்பூலஞ் சந்தனம் புட்பம் முதலியவற்றாலும் உபசாரஞ்செய்து, அவரவர்க்குத்தக்க பரிசெல்லா நிறைவேற்றிக் கலியாணவிழாக்கொண்டாடினர். சுற்றத்தார் யாவரும் மகிழ்சிறந் தனர். நண்பினர் அயலவர் முதலியோர் பேராநந்தமடைந்தனர். இவ்வண்ணம் நான்கு தினமும் கிரமப்படி ஔபாசனாதிகளை நட த்தி ஐந்தாநாள் மங்கலஸ்நானமும் முடிந்தது.

பின்பு அப்புதுமணவாளர் நம்பியும் மனைக்கிழத்தியான நங்கை யோடு சர்வாலங்காரமுடையவராய் ஒக்கல் நண்பினர் சூழ்ந்து வரப் பெரியோர் ஆசீர்வதிக்க மங்கலவாத்திய முழங்கச் சிவிகை யேறி மணக்கோலத்தோடு தம்மனைபுகுந்து அங்குவந்திருந்த அந் தணராதி பெரியர் சுற்றம் நண்பினர் யாவரையும் உண்டிவினையா லும் மற்றை அணிபூணுடை முதலிய பலபரிசாலும் களிக்கச்செ து தத்தம்மிடஞ் செல்ல விடுத்துத் தாம் தம்மனைவியாரோடும், அன்னையாரையும் ஆட்கொள்ளவந் தெழுந்தருளியிருக்கும் ஆன் மார்த்த வுடையவரையும் காலந்தவறாது பூசித்து, "தென்புலத் தார் தெய்வம் விருந்தொக்கலுனென்றாங் கைம்புலத்தாறோம்பற லை," என விதித்தவண்ணம் இருவர்கருத்து மொத்து ஐம்பெரும் வேள்விகளையும் வழுவாது நடத்திக் குடிமுறை பிறழாது பல் வேறு தேயத்துந்நிபத்துமிகழும் வாணிப விருத்தியையும் செய்து வந்தனர். இவர்கள் இல்வாழ்க்கைத் திறத்தினைக்கண்டு வியவாதா ரொருவருமில்லையென்பானேன், இல்வாழ்க்கையை விரும்பினவர் யாவர்க்கும் இத்தம்பதிகள் எடுத்துக்காட்டிலக்கியமாய் அவ்வாழ்க் கை விதியினியல்லை விளக்கிநின்றார்கள். கேட்டீர்களோ முனிவர்க ளேயென் றுபமன்னிய முனிவர் கூறினர்.

முனிவர்கள் உபமன்னியரை ஐயம் வினவுதல்.

இங்ஙனம் உபமன்னியமஹாமுனிவர் வாக்கியத்தைக்கேட்ட முனிவர்கள் பெருங்களிப்பையுடையவர்களாய், சுவாமீ, திருவெ ண்காடர் திருவவதாரமும், அவர் கிரியாதீக்ஷை பெற்றுச் சிவபூ சை செய்யும் பேறு பெற்றதும், அவர் திருக்கல்யாண விபவமுங் கேட்டுப் புனிதராயினோம். சிவசரித்திரத்தினும் சிவனடியார் சரித்தி ரம் மிகவும் மங்களமாயுள்ளது. இனி, மூவர், தேவர், மானிடர் முதலிய சரவுயிர்களுக்கும், புன்மரமுதலிய அசரவுயிர்களுக்கும், பதியாவார் பரமசிவம் எல்லாப் பொருளிலேயும் கலந்திருந்தும் அவற்றுளொன்றேனும் தாக்குதலற்று அவைகளை முழுவதும்

நடத்துவிக்குமத்தலைவர்மண்முதலியமுப்பத்தாறுதத்துவங்கட்கு மப்புறப்பட்டவர் என்றும், மூலப்பிரகிருதி விஷ்ணுவென்றும், புருடதத்துவம்உருத்திரமூர்த்தியென்றும்,இப்பிரகிருதியும்புருடனும் ஆண்பெண்வடிவிற்கூடியகூட்டம்உலகப்படைப்பினுக்குக் காரணமாயிற்றென்றும்,இக்காரணங்கடந்துநின்றஅவ்விறைவர்தமக்குத் தாமே வயப்பட்டவராய்த் தமக்குமேலொருதலைவருமில்லாதவராயும்,அன்பர்க்கருள்த் தம்மருளிச்சையாற்றிருமேனிதரிப்பதல்லது புவன போகங்களைஅனுபவிக்கின்றஎம்போல் மலபாகதேகமுடையரல்லராயும்,கல்வியாதிய காரணமின்றி இயல்பாகவே எல்லாமொருங்குணர்ந்த பேரறிவினராயும், மலபாசங்களோடு என்றுங் கலவாதவராயும் தம்மை நினைப்பவர்க்கெல்லாம் இன்பம் விளைக்கின்ற பேரின்ப மூர்த்தியாயும், அணுவிலண்டமும் அண்டத்துளணுத்தும் அடைத்த அளப்பரிதாமாற்றலுடையராயு முள்ளவரென்றும் வேதாகமமுதலிய கலைகளெல்லா முறையிடுகின்றன. அன்றியும் பிரகிருதியாதாரமாகும் புருடத்த்துவ சொரூபியாகிய உருத்திரமூர்த்தியும் ஒரு கற்பத்தில் விஷ்ணுமூர்த்தி நாபிக்கமலத்திற் பிறந்த பிரமதேவன்தனக்கு உலகத்தைப் படைக்குந்தொழில் கைகூடாமல் வருந்தித் தபஞ்செய்தகாலத்தில் சிவானுக்கிரகத்தால் அப்பிரமன் நெற்றியில் அவதரித்தாரென்றும், அப்பிரமவிஷ்ணு முதலிய தேவர்கள் யாவரும், சாபமுதலிய காரணங்களால் மானுடயொனிகளிலும், திரியக்குயோனிகளிலும் பிறந்ததாகவும் கூறியுள்ளது. அல்லாமல், அவ்வேதாகம முதலிய கலைகளெல்லாம் சிவபெருமானையென்றும் பிறந்திறவாதவன் என்று சொல்வதுமாத்திரமோ? அவரது ஆயிர நாமங்களிலேயன்றி எவ்விடத்துஅவரைக்குறிக்கவேண்டுமாயினும் அவ்வவ்விடங்களிலும் பிறப்பிறப்பிலானென்பதே அவர்க்கு யோகரூடிப்பெயராக வழங்கி வருகின்றது. இச்செய்தியாரு மறிந்தபடி. இங்ஙனமிருக்க இவ்விறைவர் திருவெண்காடனுருக்கு எவ்வாறு புதல்வராயினர் என்பது பெரியதோரையம். அஃதங்ஙனமாக; அவரிருக்கும் காவிரிப்பூம் பட்டினத்திற்கடுத்துச் சாயாவனமுந் திருவெண்காடுமாகிய திருப்பதிகளிருக்க அச்சம்பந்தமான திருநாமங் கொள்ளாது மருதவாணனென்னுந் திருநாமத்தால் அவ்விறைவர் வந்து அவர் மகவாசை தீர்த்து, அருளுஞ்செய்ததற்கு நிமித்தம் யாது? இவற்றை விளங்க வெங்கட்கருள்செய்யவேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அப்போது, அவர்களை நோக்கி உபமன்னியர் சொல்லலாயினர்.

ஓ! முனிவர்களே! உங்கள் வினாமிகச்சிறந்தது. இது மோக்ஷத்தை விரும்பி முயற்சிசெய்வார் முன்னே அறிந்துகொள்

ளவேண்டுவதாக விருக்கின்றது. ஆகையால் ஞாபகத்தோடுங் கேட்பீர்களாக. முன்னொருகாலத்தில் மெய்ப்பொருளின்னதென்றுஅறியவிருப்பமடைந்த முனிவர் பலர் ஐம்பொறியின் வழியே புலன்களை நுகரச் செல்லவொட்டாது மனதை யொருவழிப்படுத்தி, அந்த திருவிடை மருதூரின் கண்ணே அருந்தவ நெடுங் காலஞ் செய்திருந்தனர். அப்போது பிரமதேவன் அவர்கள் தவத்தினுக் கிரங்கி, சரச்சுவதி தேவியோடு அவர்களுக்கு வெளிப்பட்டுத் தரிசனை கொடுத்தார். உடனே முனிவர்கள் கண்டுவணங்கித் தொழுது, எம்பெருமானே அறியாமையான விருளிற் கிடந்து,வாத தருக்கமென்னுஞ் சுவரின் மோதித் தலைபிளக்க வருந்துகின்ற அடியோங்களுக்குள்ளஐயத்தினைத்தேவரீர்அன்றிவிளக்குவார் பிறரொருவருமில்லாமையால் எங்கள் குறையைத் தீர்த்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கப் பிரமதேவனும் அவர்கள் விண்ணப்பத்தினைத்தம்முள்ளங்கொண்டார். அக்குறிப்பினையறிந்த முனிவர்கள் உடனே கேட்கலாயினர், ஐயா! தத்துவங்களையெல்லாம் அசைப்பித்து எவ்வகைத்தொழிலையும் நடத்துவோன்யார்? மேலானது என்ற பொருட்கெல்லாம் மேலானவன் யார்? ஒருபொருளை விரும்புதலும் ஒருபொருளை வெறுத்தலுமில்லாத பரமேச்சுரன் யார்? பிறவிக்குக்காரணமாகிய பற்றுக்களெல்லா மியல்பாகவே கடிந்துநின்ற பரிசுத்தன் யார்? வேண்டுவார் வேண்டும்பொருளெல்லாங் கொடுக்கவல்லனாகிப் புகழாற் பூசிக்கப்படுபவன் யார்? முடிவில் எங்கே ஒடுங்குவது? இந்த மஹா பூதங்களெல்லாம் யார்க்கு வசப்பட்டடங்கிநிற்கின்றன. எவற்றையும் ஆட்டுவிப்பபான் யார்? அவனை நாங்களெவ்வாறு அறியலாம். எவ்வகை முயற்சியாற் காணலாம். இச்சந்தேகத்தை இவ்வுலக பிதாவாகிய தேவரீர் தீர்த்தருளவேண்டுமென்று மீட்டும் பணிந்தார்கள்.

அப்போது பிரமதேவன் மிகமகிழ்ந்து சிவத்தியானஞ் செய்து கண்களில் ஆனந்த நீர்பெருக, மயிர்ப்புளக மரும்ப, அஞ்சலியத்தராக வெழுந்து நின்று அம்முனிவர்களை நோக்கிச் சொல்லத்தொடங்கினர். ஓ!முனிவர்களே! நித்தியமாயுள்ள வேதாகமங்கள் எல்லாம், நீங்களிப்போது வினவியவொருவனை யறியவேண்டித், தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை வுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்பமுடைமையென்னும் எண்குணங்களைப் பற்றித் தேடித்தேடிச் சென்றும் உண்மை யறியாது அலுத்து நின்றுவிட்டன. இன்னமுந் தேடு நிலைமையிற்று னிருக்கின்றன. இவ்வுண்மையை அனுபவமாகக்

கண்டு சுசமடைந்தோனே வித்துவான் அவன் ஒன்றற்கும் தன்னெஞ்சில் அஞ்சான். அதுநிற்க.

அவ்விறைவனை "ஒருநாமமோருருவ மொன்றுமில்லான்" எனவும், "அவனருளேகண்ணாகக்காணபதல்லா லிப்படியனிவ்வுருவ னிவ்வண்ணத்தா னிவனிறைவனென் றெழுதிக்காட்டொணாதே" எனவும் மறைமொழி யுள்ளனவாயினும், "வசி" என்பது வசத்திலுள்ளது என்னும் அர்த்தமுடையது. எனவே தனக்குள்ளடக்கியது என்றபடி. இலக்கணையால்விரும்பத்தக்கது. எனவும், ஒளியினை யுடையது, எனவும் பொருள்படும். அது ஹிம்சி என்னுஞ் சொல் எழுத்து நிலைமாறி சிம்ஹம் என நின்றாற்போல எழுத்துநிலை மாறிச் சிவவென நின்று அந்த இறைவன் திருநாமமேயாகி யோகரூடியால்வழங்குகின்றது. ஆதலால், முனிவர்களே! நீங்கள் வினவியவிலக்கணமுடைய தலைவன் சிவனேயாம். அசைவனவும் நிற்பனவுமாகியவெல்லாவற்றுணின்றும்நடத்தலாற் கடவுளெனவும், குணங்களையும் மனமுதலியகரணங்களையும் புலன்களையும், பூதங்களையும், பொறிகளையும், மற்றைத் தத்துவங்களையும், அரிபிரம ரிந்திரர் முதலிய யாவரையும் முதலிலே தானே தோற்றுவித்தலால் அம்மையப்பனென்றும், "முழுவதும்படைப்போற் படைக்கும்பழையோன் படைத்தவை,காப்போற்காக்குங் கடவுள் காப்பவை, கரப்போன் கரப்பவை கருதாக்கடவுள்" என்றும், தனக்குயர்வும் ஒப்பு மில்லாமையின் "ஒருவனென்னு மொருவன் காண்க" என்றும் எல்லாப்பொருளையும் உடைமையால் ஈசனென்றும், உற்பத்தி நாசமென்பது என்றுந்தனக்கின்மையால் அரன் என்றும், அவ்வேதாகமங்கள் துதிக்கின்றன. அன்றியும், மோக்ஷத்தை விரும்புவோரெல்லாம் ஞானாகாசமே வடிவமாகவுடைய அச்சிவபெருமானையேதியானிப்பார்கள். தியானபலத்தினாலவர்கள் ஞானியராவர். என்னை முதலிற் புதல்வனாகப் பயந்தோர் அக்கடவுளேயாம். பாலிலே சுவையும், மணியிலே ஒளியும் எல்லாப் பொருளிலும் ஆகாயமும் எப்படி கலந்துள்ளவோ அப்படி எல்லாவண்டங்களிலும் அச்சிவன் பரிபூரணமாகக் கலந்திருத்தலால் "சிவமயம்" என்றரூடியு முண்டாயிருக்கின்றது. "ஒருவர்" என்னுஞ் செந்தமிழ்ப் பெருவழக்குச் சொல் அவ்விறைவனையே பொருளாகவுடைய தென்பது கற்றுணர் புலவரால் அறியத் தக்கது. அச்சொல் மற்றைக்கடவுளர்க்குஞ் செல்லாது. "தோலுந்துகிலுங் குழையுஞ்சுருடோடும்,பால்வெள்ளைநீறும்பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ், சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக், கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ." என்றலின், சூரியனிற்சோதியும், ச

ந்திரனிற்குளிர்ச்சியும், ஆகாயத்திற்கலப்பும், காற்றில்வன்மையும், தீயில் வெப்பமும், நீரிற்குளிர்ச்சியும், மண்ணிற் றிண்மையும் வைத்துலகு தொழிற்பட்டு வரவமைத்தோ ரவரோ வென்பதற்குவேறு அளவைநாம் கூறவேண்டுவதில்லை; மேல் அச்சிவமென்ற சொற்பொருளொன்றே யுணர்த்தும். கடவுளில்லை யென்று வாதிக்கும் நாத்திகரும் அச்சொற்பொருளைத் தேற விசாரிக்கு மிடத்தில் அங்கடங்குவர். திரிபு, கேடு, இல்லாத தென்பது "இயற்கை" ஆம் ஆகவே, அவ்வியற்கை யென்பதே அச் "சிவம்" என்று உணரக் கடவீர்கள். எங்ஙனமென்னில், இயற்கையு ளடங்காத மதவாதிகளுலகிலொருவரு மில்லை. ஆதலால் அவ்வடங்குதலே "வசி" ப்பொருளானால் "சிவம்" என்பதே "இயற்கை" என்றவாறும். இனிப்பிரமம் என்பதும் சிவமென்பதும் ஒரு பொருட் கிளவி. நிலம், நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், உயிர் என்ற எட்டும் அக்கடவுள் திருமேனியென்று வேதாகமங்கள் கூறுமால் இவற்று ளடங்காததெது? இவ்வெட்டி னுபகாரத்தை வேண்டாததெது? ஆகவே யார் என்ன வுபாசனை செய்தபோதிலும் சிவனையுபாசித்தபடியாம். ஆதலாற்றான் "விரிவிலா வறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்" என்று தமிழ்வேதங் கூறியது. இக்கடவுள் எல்லாவற்றிற்கும் வித்தாயிருத்தலால், இவரை முற்கூறிய பெயராலே யன்றி வேறு எக்கடவுள் பெயரால் எப்பொருளின்பெயராற் கூறினுங் குற்றமில்லை. எல்லாப்பெயரும் அவர் பெயரேயாம். எல்லா வடிவும் அவர் வடிவேயாம். எல்லாக்குறியும் அவர் குறியேயாம். யார், யாரைத்தொழுதாலும் எதைஉபசரித்தாலும, அச்சிவனைத்தொழுததுமுபசரித்ததுமாகவே முடிவில் முடியும். இக்கருத்தாலன்றோமுன் அருச்சுனன் பாரதப் போர் பதின்மூன்று நாளிரவிற் கண்ணனைப் பூசித்த தவ்விறைவனைப்பூசித்தவாறாயிற்று. அன்றியும் இவ்வுலகத்தில் பசுவின்கன்று கட்டும் கட்டுத்தறியும், நென் முதலியவற்றையளக்குங்கருவியாகிய மரக்காலும், புற்றும், பலகையும், மண்ணும், கல்லும் இவைபோல்வன பிறவும் சிவகுறியேயாயிற்று. உண்மையை ஆராய்ந்து பார்க்கு முணர்ச்சியில்லாதவர் என்றும் ஒன்றும் உணராதவரோ யாவர். இவ்விறைவனை வைவதும் அவர்க்கு வாழ்த்தேயாம். முன் வனவாசகாலத்தில் அந்த அருச்சுனன் பாசுபதப்படைவேண்டித் தவத்திற்குச்சென்றிருந்தபோது அவனிடுக்கண்களையும்படி அவ்விறைவன் வேடவடிவத்தோடு வந்து பொய்ப்போர் புரிந்தகாலத்தில், அப்பாண்டவர் நடுவன் கடவுளென்றறியாது வில்லாலடித்த அடியும், மதுரையில்திருவாதவூரடிகள் பொருட்டுவர விடுத்த வைகைப் பெருக்கை யடைக்கும்படி

பிட்டுவிற்கும் வந்தியார் ஆளாக வந்து அரிமர்த்தன பாண்டிய ராஜனுற் பட்ட பிரம்படியும், சாக்கியர் கல்லடியும் அருச்சனையாக வே முடிந்தவன்றோ? உண்மை யறிந்த பெரியோர்கள் தாய், தந்தை, உடன்பிறந்தார், மனைவி, மக்கள், சுற்றம், நட்பு, அயலார், பகைவர் என்ற கூட்டந் தம்மைச்சேர்ந்தகாலத்தில், அக்கூட்டத்துள்ளாரை யெம்மவர் என்ற பந்தநினைவாற் பாராமல் இவர்கள் எம்மைப்பரிபாகப்படுத்திப் பின்முழப்பிக்கவந்த சிவவடிவாகிய குரு லிங்க சங்கமகோலத்துள்ளவர்களென்றே கொள்வார்கள். இக்கருத்தை அறுபத்து மூன்று நாயன்மார்கள் முதலிய பெரியோர் சரித்திரத்தா லறிவீர்களாக. அவ்வேதாகமமுதலிய கலைகளும், நானும், விஷ்ணுமுதலிய எல்லாத்தேவரும் அவ்விறைவனது அனந்தசத்திகளுள் ஒவ்வொன்றே யாவேம். இதற்கு வேதாகமமே சாக்ஷி. அன்றி அனுபவத்தாலேயு மெளிதிலுணரலாம். இக்கருத்து, அடங்குவதும், அடக்குவதும், அடங்கிக் கொள்வதும் அடக்கிக் கொள்வதும் ஏன்? எது நிமித்தம் என்று நடு நிலைமையோடு ஒவ்வொரு வஸ்துவையும் பற்றி விசாரித்தறிவார்க்கு வெளிப்படும். கேளும் முனிவர்களே! இவ்விடயத்தி லின்னம் சொல்லப்புகுந்தா லென்னுயுள் போதாது அதுநிற்க.

முனிவர்கட்குப் பிரமன் இடைமருதுமான்மியங்கூறியது.

இனி இத்தலைவனைப் பூசிப்பவர்க்கு எவ்விடத்திலும், எக்காலத்திலும் எவ்வுருவத்திலும், எப்பெயராலும், தாம் அறிந்த எவ்வகையாலும் பூசிக்கலாம். இன்னவிடத்தி லிக்காலத்தி லிவ்வடிவத்தி லிப்பெயரா லிவ்வாறு பூசிக்கவேண்டுமென்னும் நியமம் வேண்டுவதில்லை. ஏனெனில், உலகத்தின்கணுள்ள எல்லாவிடமும், எல்லாக் காலமும், எல்லா வடிவமும், எல்லாப் பெயரும், எல்லாத்தொழிலுமுடையா னவ்விறைவனே யன்றோ? எழுத்தின் மணமறியாத வேடர் குடிப்பிறந்த கண்ணப்பதேவர், எச்சின் மயங்கச் செய்த திருமஞ்சனமும், சூடித் தந்ததிருப்பள்ளித்தாமமும், சுவைகண்டறிந்த வூனமுதும் அவ்விறைவர் மகிழ்ந்து கொண்டருளியவன்றோ? ஆகவே உண்மை அன்பே பூசையாவதன்றி வேறில்லை. "அன்பினுள்ளான் புறத்தானுடலாயுளான்-முன்பினுள்ளான் முனிவர்க்கும் பிரானவன்-அன்பினுள்ளாகி யமருமரும்பொருள்-அன்பினுள்ளார்க்கே யணைதுணையாமே." என்ற மந்திரவிதிசான்று.

ஆயினும், சன்மார்க்கத்திற் செய்த முழுப்புண்ணியர்க்கன்றி அத்திறம் வாய்ப்பதரிது. ஆகவே, புத்தடிமை செய்யமுயல்வார்க்கு என்றே அச்சிவமுணர்ந்த பெரியோர் வகுத்தமைத்த இடம்,

காலம், உருவம், மந்திரம் செய்வகை முதலியனசிலவுள்ளன. அவற்றுள் உருவத்தினை முன்னுணர்த்தியே‌னையவற்றைப் பின்னுணர்த்துகின்றும். ஓ! அந்தணாளரோ! கேண்மின்கள்.

அவ்வகண்டாகாரசிவத்தினிடத்தில் விளக்கொளிபோற்பிரிவற்றிருந்த சிற்சத்தியுணின்றும் பராசத்தியார் வெளிப்பட்டனர். அப்பராசத்தி அனுக்கிரக கருபியாம். ஆதலால் பத்தியானினைப் பவர்கணினைத்தவண்ணம் காட்சிதரும். அப்பராசத்தியார், குணங்குறியற்றவைவற்றிற்குங் காரணமுமாவர். இயற்கையறிவினர். நித்தமானவர். இச்சாஞானகிரியை வடிவாக வெளிப்படுவர். க்ஷரம்=அவ்வியக்தம்=வெளிப்படாதது. அக்ஷரம்=அமிர்தம்=நாசமற்றது, இவ்விரண்டு வடிவமும் அவர்தான். யாவற்றையுமளித்ததாயாதலால் உமையென்றும் கூறப்படுவர். சந்திரனுங் கிரணமும் பிரிவற்றிருந்தாற் போலும் அச்சிவசத்திகள் பிரிவற்றுள்ளன. இவற்றை வேறுபிரித்தெண்ணுவோன் பாவியாம். பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் பஞ்சகருத்தாக்களையும் கட்டிலாகக்கொண்டுவீற்றிருப்பார். ஆன்மாக்களுள்ளத்தாமலத்தில் வீற்றிருப்பார். கோடிசூரியருதயமானாற்போலும் பேரொளியுடையார், ஆன்மாக்களுக்குப் பந்தமுத்தியிரண்டிடத்து முண்டாகும் இச்சையையே பாசமாகவும், அன்பவினைகளையொழிப்பிக்குங் குரோதத்தையே அங்குசமாகவுமுடையவர். அருளினாலே நமது பயத்தையொழிக்குங் குறியுடைய கரத்தையும், வேண்டும் வரத்தைத் தருங் குறியுடைய கரத்தையும் உடையவர். தத்துவங்களையுணருமுணர்ச்சி, சீவனாகிய தன்னையுணருமுணர்ச்சி, சிவத்தையுணருமுணர்ச்சிக்குங் காரணமான சூரியன், சந்திரன், அக்கினி என்னுமுச்சுடரையுங் கண்களாகவுடையவர். விஷயங்களைப்பற்றாத சுத்த சத்துவவைராகமாகிய செவ்வண்ணமுடையதோயாப்பூந்துகிலுடையவர். அடியார் இச்சித்தவண்ண மருளும் பெருந்தயாளு. காணக்கருதவினிய அழகின் பேருருவானவர். "பெருந்தனநாயகி" என்னும் திருநாமமுடையார். எப்பொருட்குந் தலைவி. எல்லா வண்டங்களினுட்புறத்து மப்புறத்தும் வீற்றிருப்பர். காயத்திரி தெய்வமாய்ச் சூரியனிதயத்தில் அமர்ந்திருப்பவர். எவ்வகையணிகளுக்கும் ஓராணியாயுள்ளவர். எண்ணிறந்த மந்திரங்களும் தம்வடிவமாகக்கொண்டவர். அம்மந்திரங்களே தாமிருக்கும் பீடமாகவமைத்தவர். "சருவாங்கசுமங்கலே, சருவவித்தியாகாரணி. சருவ ஞானங்குசை. சிவஞானப்பிரதாயினி. சந்திரமண்டலவாசினி. நித்தியகலியாணி. நித்தியசுந்தரி. அமிர்தகிரணமுகமண்டலி. தயாரசபூரிதவிலாசலோசனி. ஜராமரணநாசநமௌக்

திசை. ஸ்துதிப்பிரிய சுரோத்திரி. மதுரவாக்குவிநோதினி. நித்தியமாங்கலிய சங்கக்கிரீவை. ஆபீத குசவல்லி. பிரமாதி ஜகத்திருதாரவுதரை. பஞ்சதசாக்ஷரீமந்திரார்ச்சநாநுக்கிரகபதுமபாதா. சோடசாக்ஷரீ மந்திரமகாமூர்த்தி. சருவஜகந்மஹாமாதா. சருவைசுவரியகாரணி. மஹாராஜை. மஹாதேவி. சிருஷ்டி, ஸ்திதி, சமஹார, திரோபவாநுக்கிரதாயினி. சர்வதந்திரேசுரி. சர்வயந்திரேசுவரி. சர்வந்திரேசுவரி" என்று வேதங்களாற்றுதிக்கப்பட்டவர். திரிபுரை சுந்தரி யந்தரி சிந்துரப் - பரிபுரை நாரணியாம்பரலவண்ணத்தி - யிருள்புரையீசைமனோன்மனியென்ன - வருபலவாய் நிற்கு மாமாதுதானே" "தாளணிநூபுரஞ் செம்பட்டுத்தானுடை, வாரணி கொங்கைமலர்க்கன்னல்வாளிவில், ஏரணியங்குசபாசமெழின் முடி, காரணிமாமணிக்குண்டலக்காதிக்கே" "அவளையறியாவமரருமில்லை, யவளன்றிச்செய்யுமருந்தவமில்லை, அவளன்றியைவராலாவதொன்றில்லை, அவளன்றியூர்புகுமாறறியேனே." என்றது மந்திரவாக்கியமும்.

இனி. இப்பராசத்தி நிலைமையை "போகஞ்செய் சத்திபுரிகுழலாளொடும் - பாகஞ்செய்தாங்கே பராசத்தியாய் நிற்கும் - ஆகஞ்செய்தாங்கே யடியவர் நாடொறும் - பாகஞ்செய்ஞானம் படர்கின்றகொம்பே." என மந்திரங்கூறியதால் அப்பெருந்தனநாயகி (பிருஹத்குசாம்பா) உள்ளமாகிய தகராகாயத்தில் சுவயம்புவாகிய பரமசிவம், "மஹாலிங்கமூர்த்தி" என்ற திருநாமத்தோடும் யாமனைவரு முய்யும்படி சிவலிங்கமாக வெளிப்பட்டனர். அங்ஙனம் வெளிப்பட்ட க்ஷேத்திரந்தான் திருவிடைமருதூர். சிதம்பரத்துள் உலகுவடிவான விராட்புருடனுடைய இதயத்து வெளிப்பட்ட சிதாகாயமூர்த்தியாம். அவ்வாறன்றி அவ்வுலகையெல்லா மீன்ற அம்மையாகிய வுமாதேவியாரிதயமாகிய தகராகாயம் திருவிடைமருதூரொன்றுலதனினுமிது சிறந்ததாமன்றோ. அன்றியும் சிவபெருமான் சிதம்பர தலத்துள்ளே சிதாகாயவடிவுமாய் எழுந்தருளி யிருப்பர். இந்தக்ஷேத்திரத்தில் மஹாலிங்கவடிவமாக வெழுந்தருளி யிருப்பர். அந்த காரணத்தினாலே மற்றைய திருப்பதிகளிற் கொண்டிருப்பதுபோல வேறுதிருநாமங்கொள்ளாது, இத்திருப்பதியில் "மஹாலிங்கம்" என்ற திருநாமஞ்சிறப்பாகக்கொண்டருளியது. இத்திருநாமம் மற்றெந்தத் திருப்பதியிலுமில்லை. இம்மஹாலிங்கப்பெருமான் என்று மொருபடித்தா யெழுந்தருளியிருந்து, பிரமனாகிய வென்னாலும் மற்றையதேவர் முனிவர்களாலும் பூசிக்கப்படுவர். "இருண்மலமொழிக்குமுக்கணிறையவன் குணமொன்றில்லான், பொருணிறைகுணங்கட் கெல்லாம் பொருந்

துமாதாரமானான், அருள்சதாசிவனீறில்லான் ஆய்ந்திடுங் குறிவி காரம், மருவிலான்குணத்தையாக்கிமூவரைவகுத்தான்மன்னே.” “வலத்தினிலென்னைஅந்த வாமத்தில்அரியைமத்தித், தலத்தினி லுருத்திரப்பேர்த்தனயரையளித்தியாசொன்னப், பலத்துறுதந்தை யாம்நீர் பாலகர்தொழிலோர்மூன்றும், நலப்படப்பெற்றோர் மூம் மை நயந்தெமைப்பூசைசெய்மின்.” என்று, “பூசைசெய்திறத்தை யன்று புண்ணியன் உரைத்தான்மூவர்க், கீசன்முன்சொன்னவ ண்ணம் இயம்புவனுங்களுக்கு, நேசமாமுனிவீர்கேண்மின். நிமலி யை முன் பூசித்து, ஆசையால்மகாலிங்கத்தைப் பின்பருச்சித்த ல்வேண்டும்.” “ஏனெனில் மகாலிங்கம் முன் சத்தியாதாரமாகத்-தான் வெளிவந்ததாலே சயம்புவாம் அந்தலிங்கம்” சிருட்டி,திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்க ளையுஞ் செய்வதற்குப் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்னும் ஐந்துதலைவர்களுடைய தோற்றத்திற்கும் எ ழுவாயாக விருந்தது. அன்றியும், ஈசானம், தற்புருடம், அகோர ம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் பஞ்சப் பிரமங்களும் அம்மகாலிங்கத்திற்றான் தோன்றின. இவற்றுள், ஈசானம், ஆதி யும் மகத்துமாய்ப் பிரகிருதிக்கு அதிகாரியாய் ஆன்மாவைப்பற்றி நிற்கின்றது. அது மஹாலிங்கமென்னப்பட்டு இம்மூவுலகத்துள் ள இலிங்கமூர்த்திகளெல்லாந் தோற்றுமிடமாம். தற்புருடம், அ வ்வியத்தத்திற் கதிகாரியாய் முக்குணம்பற்றி நிற்கும். இதில்தரும முதலிய எட்டு அங்கங்களோடும் கூடி புத்திதத்துவம் பிறக்கும். அகோரம், அவ்விலிங்கமூர்த்தியிடமாக வூற்றுமுற்றிருக்கும். வாம தேவம், அகங்காரதத்துவத்திற் கதிகாரியாயிருக்கும். சத்தியோ சாதம், ஒளிப்பிழம்பாய் மனமென்னுந் தத்துவத்திற் கதிகாரியா யிருக்கும். இந்த பஞ்சபிரமலிங்க மூர்த்திகளும் இம்மஹாலிங்கத் தினுக்கு ஒருகுரோசத்துள்ளே அமைந்துள்ளன. இப்பஞ்சமூர்த் திகளையும் முபாசித்தவர்களுக்கு எல்லாநன்மையுமுண்டாம். நன் மைக்கே வித்து இவையாதலால், இவ்வுலகெல்லாம் தேவதேவரா கிய சிவபெருமானார் பஞ்சமூர்த்தவடிவமாம். சூத்தரிகன்பாவை யைக் கயிற்றாலாட்டுவதுபோலும் இறைவனும அறம்பாவமென் னுங் கயிற்றாற் கட்டி யாட்டுகின்றனர். எவ்விடத்துள்ள சிவகுறி யும் இம்மஹாலிங்கத்துட்டோன்றியவே. இம்மூர்த்தியை வழிபடு வோர்க்குத் துக்கமென்பதொன்றும் எப்போது முண்டாகாது. இத்திருப்பதியிலுள்ள துரும்பும் சிறுகல்லும் சிவமயமே யென்று பெரியோர் கூறுவர். அண்டத்துளாகிய விப்பூமி தன்னு ளிம்மகா லிங்கத்தைக்கொண் டிருக்கின்றது. இவ்விடைமருதீச னொப்பொரு ளுந்தாமேயாவர். இவ்வுண்மையையுள்ளவாறுணர்ந்தவன் பிறப்பு

இறப்பு என்னுந் துன்பத்துளென்றும் அகப்படான். பொன்மயமாகிய விப்பிரமாண்டமும், அதனுட்பாலிருக்கும் ஆண்பெண்ணென பிராணிகளும் தோற்றுமிட மிம்மகாலிங்கமேயாம். பெருந்தன வல்லிபாகன்பிநாகி, வெள்விடையேறி விரிபொற்சடையோன், அங்கண்மலரோன் அருண்மேனியானேன், ஆளுடைநாயகி யமலவுள் வெளியில், நீள் ஒளிக்கொழுந்தாய் நின்றனன் ஆதலின், வேருண்ணீர் மரத்தின்கிளைகட்கெல்லா மாயவாறுபோல இந்த மஹாலிங்கத்தை யருச்சித்தால் நடப்பனவும் நிற்பனவுமாகிய எல்லாவுயிர்த்தொகைகளும் திருத்தியுற்றுக்கிளர்ச்சியை யடையும். இச்சிவகுறியின் பெருமையை மாயவன் அறியான், வானவர் அறியார், ஆயிரமணிமுடிச்சேடனும் அறியான், சனகாதியோகியர் தாமுமறியார் மயங்கும் பிறப்பின் மானுடரறிவரோ, அருவமாய் உருவமாய் அருவுருவமுமாய், முதல் நடுமுடிவிலா முழுமுதலாகி, அறிவே மயமாய் ஆருயிர்க்குயிராய் தாணுவாய் அமர்ந்த தற்பரன்மகிமையை, அவன் ஒரு படைப்பில் அடங்கியதேவர், யாவர்தாம் அறிவார் யாதுகாண்குவர்கள். சதுர்யுகமாயிரந்தானெனக்கொருபகல், என்பரமாயுள் இலங்கு அரிக்கு ஒருபகல், அவ்வரி ஆயுள் அரனுக்கு ஒருபகல், அவ்வரன் ஆயுள் ஈசனுக்காம்பகல், அவ்வீசன் ஆயுள் அருள் சதாசிவன் பகல், ஆளுடையிறைவனுக்கு அளவொன்றில்லை. ஆனால் அளவுடை அமரர்கள் அறிவரோ? அவ்விறைவன் எழுந்தருளிய இந்தத்தலத்தில் வசிக்கும் பசுபக்ஷி எறும்பீறான எவ்வகை யுயிர்களும் பிறப்பிறப்பில்லாத சிவலோகவாசிகளான வுருத்திரகணநாதர்களே யாவர்கள். இந்தத்திருப்பதியில் வந்திறந்தவர்கள் இந்திரன் விஷ்ணு முதலிய தேவர்களாலும் அடைதற்கு அருமையாகிய சிவலோகத்தை எளிதில் அடைவார்கள். மண்ணுக்குமேல் சுவர்க்கம், அதற்குமேல் சத்தியவுலகம், அதற்குமேல் விஷ்ணுபதம், அதற்குமேல்சிவலோகமாகியவுருத்திரவுலகம். இங்கு வசிப்பவர்களும் அவ்விடம்பெற்றவழிதான் அழிவின்றிவாழ்வார்கள். அவ்வாறுஉமாதேவியாருக்குசிவபெருமான் அநுக்கிரகித்திருக்கிறார். ஆதலால் முனிவர்களே! பூருவபுண்ணிய பரிபாகமடைந்த சுத்தான்மாக்களாகிய சத்திய பத்தியுடையவர்கள் இவ்விடத்தில் சிவபெருமான், மஹாதேவியார், கணபதி, முருகப்பிள்ளையார், சண்டேசப்பெருமான் என்னும்பஞ்சமூர்த்திகளையும் இயன்றளவில்உள்ளன்பு பொருந்த, பிறர்மதிக்கவென்றெண்ணாமல் தாம் உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பூசித்துக்கடைத்தேறுவர்கள் என்று சொல்லிப் பிரமதேவர்மத்தியார்ச்சுனப்பெருமானைவணங்கி அருள் விடை பெற்றுத தமதுலகமே போயினர்.

கேளும் முனிவர்களே? சிவபெருமான், மெய்யன்பர் பாவனை வசப்பட்டவர். "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்ற வேதவிதி சத்தியம். அன்பு வழி அறியாத மன்மதன் இட்ட தாமரைப்பூ, முல்லைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, நீலப்பூ என்னும் ஐந்து வகைப்பூவும் பாணமாகி முடிவில் அந்த மன்மதனுயிருக்கு உலையாய் நின்றன. இன்றும் அவன் அனங்கனாகி யொழிந்தான். அன்பின் வழிநின்ற சாக்கியர் இட்டகல்லே மலராகி அவரை என்றும் அழிவற்ற இன்பத்தை யுடைய சிவலோகத்தேறப்பண்ணிற்று. ஆதலால் அடியார் மனக்கோயில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் திருவெண்காடர் இரவும் பகலும் மறவாத நேசம் வைத்துப் பூசித்து வாணிபத்தின் மிகச்சிறந்து கற்புக்கரசியாகிய தமது மனைவியாரோடு பெருஞ்செல்வராய் வாழ்ந்துவருநாளில், அவர்க்கு வயது முப்பத்தைந்தாக அதுவரையும் மக்கட்பேறில்லாமையால், மனத்துட் சிறிது வருத்தங்கொண்டு, "படைப்புப்பலபடைத்துப்பலரோடுண்ணு, முடைப்பெருஞ்செல்வராயினுமிடைப்படக், குறுகுறுநடந்து சிறுகைநீட்டி, யிட்டுந் தொட்டுங் கௌவியுந்துழந்து, நெய்யுடையடிசின் மெய்படவிதிர்த்து, மயக்குறுமக்களையில்லோர், பயக்குறவிலர்தாம் வாழுநாளே" என்று சிந்தித்து, பின் ஒருவாறு தேறித்தமது குறைவைத் தம்மை யாளாகவுடைய திருவிடை மருதுருடையாருக்கு விண்ணப்பித்துப் பலவகைத் தானமுதலிய செய்கடனை நிறைவேற்றி வந்தனர்.

சிவசருமர் சரித்திரம்.

அக்காலத்தில், பிரமாமுதல் சிறுபுல்லீறாகிய வுயிர்கள் தோறும்நிறைந்து நின்று அவ்வவர்க்கும் புவனபோகங்களை யூட்டுவிக்கும் அம்மையப்பராகத்திருவிடைமருதூரிலமர்ந்த அருளாளர் திருவெண்காடர் விண்ணப்பத்தைத் திருவுளமேற்று அவர்க்குத் தாம் முன் அனுக்கிரகித் திருந்தபடி அருள்செய்யவென்று கருணைவைத்தார். அப்போது, அந்த மஹாக்ஷேத்திரத்தில் தம்மை மறவாதுள்ளன்போடும் வழிபட்டு வரும் "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்" ஆகிய ஆதிசைவரும், நால்வேதங் கரைகண்டவரும், ஆகமப்பெருங்கடல் கடந்ததோணி போல்வாரும், சகல சாத்திரங்கட்கும் கருவூலம்போன்ற வரும், நல்லொழுக்கமே வடிவானவரும், சிவபத்தி அடியார் பத்தியன்றி மற்றொன்று மறியாதவருமாகிய சிவசருமரென்னும் அந்தணர் குலமணியானவர், கற்புக்கரசியும், அழகுக்கு அணிகலமுமான சுசீலையென்னும் மனைவியாரோடும் இல்லறம் வழுவாது நடத்திக்காலங்கடோறும் பெருந்தன நாயகியாரையும், அவரையிடம் பிரியா மகாலிங்கநாதரையும் விதிப்படி

அருச்சித்துவரும் நியமம்பூண்டவர் தமதுபெருஞ்செல்வத்தையெல்லாம் அச்செல்வம்பெற்றபயனென்றுசிவார்ச்சனைக்கும் அடியார் மகேச்சுர பூசைக்கு மாக்கிவந்தனர். இங்ஙன மொழுகுநாளில், அவர் அன்பினிலைமையை யாவர்க்கும் வெளிப்படுத்துவராய் எல்லாமுடைய பெருமான் அவர் செல்வத்தினைப் பூரணைகழித்த சந்திரன் கலைபோலச்செய்யத் திருவுளம் வைத்தலும், அது, புலானுண் பார்தவம்போலாயிற்று. அங்ஙனமாயும்சிவசருமர்தம்முள்ளன்பும் ஊக்கமும் குறைவின்றி மேன்மேலும் பெருகிவரவோர்நாள்உதய காலத்து மனைவியாரைநோக்கி, நல்லவளே! இன்றுசிவார்ச்சனைக்குரிய வுபகரணங்கள் சேகரித்திடுதி என்ன, அவ்வம்மையார் வணங்கி, என்னிறைவரே! குழந்தைகட்காக எடுத்துவைத்தசிலபண்டங்களிருக்கின்றன. அவற்றைக்கொண்டு இன்றைக்குச்சிவபூசைமுடிக்கலாமென்றார். அதுகேட்டசிவசருமரும் மனக்களிப்போடு அவ்வுபகரணங்கொண்டு கோயிலையடைந்து வழக்கப்படி திருமஞ்சன நிவேதன முதலியவற்றை முடித்து, அடியார் பூசைசெய்யும்படி மனைக்குத் திரும்புகாலையில், மத்தியார்ச்சுனப் பெருமான் பசியால் பீடிக்கப்பட்டஒருவிருத்தவேதியராகிவந்து சிவசருமரைநோக்கிப் பசிக்கன்னமிடுதியோஎன்ன, அவர்அவ்வேதியரை மனைக்கழைக்க, ஐயர் மனைபோமளவும் பசிபொறுக்கலாற்றேனெனச், சிவசருமர் அவ்விடத்திற்றனே அவ்விருத்த வேதியரைஉண்டிமுதலியவற்றாலுபசரித்தார். அவ்வளவில்அந்தவிருத்தர்நூற்றுவர்க்காம்படிசேகரித்திருந்த வெல்லாவற்றையுந் தாமொருவரே யுண்டிளைப்பாறிமறைந்தார். சிவசருமர்உடனேகடவுளென்றறிந்து பேராநந்தமடைந்து, மருதவாணரைப்பல்காற்பணிந்து துதித்தாடிப் பாடிக்கொண்டிருக்கையில், பரிசனர் வந்து சிவனடியார் பலர் மனையிற்பசியோடு வருந்திக்காத்திருக்கின்றனரெனத் திடுக்கிட்டு மனைக்குப் போதலும் மனைவியார் கண்டு, தலைவரே நிவேதனமான சிவப்பிரசாதமெங்கே, அடியார் பலர் பசியோடு வருந்திக்காத்திருக்கின்றனரே யெனக்கேட்டுச் சிவசருமர், பெண்ணே நிவேதன வமுது மருதவாணர்க்கே யோக்கியமானதாயிற்று என, அக்குறிப்பை யுணர்ந்த அக்குலமகள் ஏதோ இதுவோர் சிவலீலையாக விருக்கின்றது, எல்லாம் பொறுத்தறிவோம் இப்போது சிவனடியார்கள் பசியாற்றும் வகை தேடுவதே முறையென்றெண்ணி, உடனே கணவரைப்பார்த்து, என்னையுடையவரே! நாமும் குழந்தைகளும் பட்டினி யிருக்கினு மிருக்கலாம் வந்த சிவனடியவர்கள் பசித்திருப்பது முறையல்ல; இவ்விடத்து மறுபடியும் சமைப்பதற்கும் வேறு உபகரணங்களில்லை. காலமோ பகலுக்கு அதிகரித்து விட்டது. ஆதலால் இந்த மங்கலியத்தையாவது மாறி வந்தவிலைப் பொருள் கொண்டு

அமுதுபடி கறியமுது முதலியவற்றைச் சேகரித்துவந்தால், அடிய வர்பூசை செய்யலாமென்று தங்கழுத்திலிருந்ததைக் கழற்றிக்கொ டுக்க, சிவசருமர் வாங்கிச்சென்று, அவ்வாறேவேண்டுவனவற்றை த்தரக்கொண்டவ்வம்மை மறுபடிபாகஞ்செய்து, அடியவரை யமு தூட்டி யுபசரித்துச் செலுத்தித் தாமுமக்களுமுண்டவ்விரவு சிவ தரிசனம்செய்து வழக்கப்படி சயனித்திருந்தார்கள். உதயகாலத் தில்துயிலுணர்ந்தசுசீலையாரும்சிவசருமரும், எழுந்துசிவத்தியான ஞ்செய்துமுடித்து இன்றைக்குளன்செய்வோமென்றுசிந்தித்திருக் கையில், கற்பின் கிழத்தியாகிய அச்சுசீலை யம்மையார்க்கொருஞா பகம்வந்து, ஐயரோ!! நமது ஆண்டவர் "வேண்டுவார் வேண்டிற் றாயும்விண்ணவராம்" அன்றோ? அவரிடத்து ஏன்? தேவரீருக் குள்ள குறைகளைக் கூறலாகாதெனச் சிவசருமரும், நல்லது ஆல யத்துப் போவதற்கு வெறுங்கையாலெப்படி கூடுமென, அவ்வம் மையார் கேட்டு, எம்பெருமான் இன்றைய பூசைக்கு வேண்டுவ ன குறைவில்லை கொண்டுசெல்லலாம் என்றுசொல்ல, உடனே யெழுந்து காலைக்கடனைக்கழித்து, நித்தியஞ் செய்யுமான்மார்த்த பூசை, திக்கடன் நிறைவேற்றி ஆலயம்போய் நியமப்படி மருதவா ணரையும், பெருந்தனநாயகியையும், திருமஞ்சனம், அருச்சனை, நிவேதனமுதலியவற்றால் குறைவறப் பூசித்துத்துதித்துவணங்கி வழிபட்டு, நிவேதனமான, அன்னம் வியஞ்சனம் அபூபவருக்க முதலியவைகளை அடியார்களுக்கு ஆம்படி தமது திருமனையிற் சேர்ப்பிக்கப் பரிசாரகர்கட்குத்திட்டஞ்செய்தனுப்பிவிட்டுத்தாம், ஸ்ரீபஞ்சாக்கரத்தியானத்தி லிருந்தார்.

இருக்கையில், அப்பரிசாரகர்கள் அவற்றைத்திருமடப் பள்ளி யில் வைத்து விட்டுத் தங்களுச்சிக்கடன் முடிக்கும்படி அவ்வால யத் தருகுள்ளகாருணியாமிர்த தீர்த்தத்திற்குப்போயினர். அப் போது, மருதவாணர் முன்போல் ஓர் விருத்தவேதியர் வடிவாய்ப் பசித்துவரக்கண்ட சிவசருமரும் பெருங்களிப்புட னெதிர்சென்று பசரித்தழைத்து வந்து திருவடிவிளக்கிப் பாதோதக முட்கொண் டு பூசித்து, ஒருபீடத்திருக்கப்பண்ணிப் பரிகலந் திருத்திவைத்து நிவேதனப் பிரசாத வமுதுபடைக்க, அன்றும் அவ்வமுதுமுதலி யவற்றுள் சிறிதும் மீதியாகாதபடி முற்றும் புசித்தருளிக் கைகால் சுத்திசெய்து, ஓரிடத்திருந்து இளைப்பாறுபவராய் வீற்றிருந்த ருளினார். அங்ஙன மிருக்க, இறைவராகிய அந்தணர் பெருந்த கை, மனைவியார் வேண்டுகோளால் செல்வத்தை விரும்பிக் கேட் கும்படி எதிர் நிற்கும் சிவசருமர் கருத்தை யுணர்ந்து, வேள்வியி ல் அவியமுதுண்ணுமவர் அன்பமுதுண்டமையால் அச்சிவசரும ருக்குப் பெருஞ்செல்வமளிக்கத் திருவுளத்தடைத்து, ஓய் சிவசரு

மரே! அந்தணர்களாகிய சிவன் அடியர் அனேகர் உமது மாளிகைக்கண்ணே பசித்திருக்கின்றனர். அவர்கள் மனம் புலர்ந்து செல்வார்களானுல் உமதுபிதிரர்யாவரும் நரகமடைவர்; ஆதலால் விரைவாக மனைக்குச் சென்று அவர்களை உபசரித்தனுப்புமென்று சொல்லி அங்ஙனே மறைந்தருளினர்.

மறையவே சிவசருமர், தாயைப்பிரிந்த விளங்கன்றுபோற்றுடித்துப் பூமியில் விழுந்து மூர்ச்சித்துப் பின் தெளிந்தெழுந்து, அரசே! ஐயா! கருணையா! என்னையுமோர்பொருளாகக்கொண்டெழுந்தருளிவந்து, நிவேதித்திட்ட சிறு பொருளைப் பேரன்பமுதாக அமுது செய்தருளிய தேவரீர் இவ்வண்ணம் என்னை வருந்தும்படிவிட்டுப் பிரிந்துபோவதும் அறமோ! அருளோ? என்செய்கேன் என்செய்கேனென்று ஆராமையால் அரற்றிப் பலவாறு துதித்து, ஆண்டவரைப் பூசிக்கப் பெற்ற பேற்றினுற் களித்தாடிப் பரவசராய்ப் பின்தெளிந்து, மனைக்குச் செல்லும்படியிறைவரிட்ட கட்டளையை மறுக்கவஞ்சி, பெருமான் சந்நிதியிற் பலமுறை பணிந்து எழுந்து விடைபெற்றுத் துணிந்து மனைக்குச் செல்லலுற்றனர். அத்தருணத்தில் முன் நிவேதனப் பிரசாதத்தைத் திருமடப்பள்ளியில் வைத்து, மாத்தியானிகஞ் செய்யச்சென்ற பரிசாரகர்கள் வந்து பார்க்கத் தாம்வைத்த பதார்த்தங்களொன்றுமின்றி வெறும் பாத்திரங்களேயிருக்கக்கண்டு பயந்து சிவனடியவர்கள் பசியோடு காத்திருப்பார்களே என்செய்வோம் என்றஞ்சி, வெளிவிட்டுச் சொல்லமாட்டாதவர்களாய், யாரெடுத்தனர், யார்புசித்தனர், ஏதாயிற்று என்று எண்ணி யெண்ணி ஒன்றுந்தோன்றுமல் கலக்கமுற்று வேறுவகை காணுதவர்களாய்ச் சிவசருமருக்கு விண்ணப்பித்தனர். அது கேட்ட சிவசருமர் நடந்த உண்மையைச் சிறிதும் வெளிப்படுத்த மனமில்லாதவராய் ஒன்று மறியாதவர்போல, சிவலீலைக்கு நாம் என்செய்வோமென்று சொல்லி அவர்களையழைத்துக்கொண்டு வருகையில், மனைக்கண்ணே சிவனடியவர்களும், அறக்கிழத்தியாரும், மக்களும் பசியோடுகாத்திருப்பார்களே என்செய்வது, பெருமான் திருவுளம்போலாக என்று சிந்தித்து மெல்லமெல்லச் செல்லலுற்றனர். இவர் செய்தியிதுவாக.

முன்னே இச்சிவசருமரை அடியவரோடு அமுதுகொள்ளும்படி மனைக்குப்போகவென்று கட்டளையிட்டு மறைந்த மருதப்பெருமானுர், தாம் சிவசருமராகவும், பிரமதகணத்தலைவர்கள் பரிசாரகர்களாகவும் திருவுருவந் தரித்து நிவேதனப் பிரசாதங்களை வழக்கப்படி பாத்திரங்களிலெடுப்பித்துக்கொண்டு, இவர் வருதற்கு முன்னே இவர் மனைக்கேகி, சுசீலையம்மையார்கையிலளித்துச் சிவனடியவர்கள் அமுது செய்யப் பரிகலந்திருத்தியிடம் பண்ணுவித்தி

தோவருகின்றேனென்று போக்குக்காட்டி மறைந்துவிட்டனர். சுசீலையாரும் உண்மையாகத் தமது கணவர் தாம் எழுந்தருளினவ ரொன்றுஎண்ணி, வழக்கப்படி இடம்பெறத்திருத்திவைத்துத்தமது கணவனார் வரவை யெதிர்பார்த்துத் தலைக்கடைக்கு முள்ளுக்கு மாக ஆடை நெய்வோன் குழல்போலுலாவிநின்றனர்.

அத்தருணத்தில், அடியவரை அமுது செய்விக்கும் வகை என் னவென்ற சிந்தையோடு பரிசாரகர் புடைசூழ்ந்துவர மெல்ல மனையருகே செல்லும் சிவசருமரை அவர் தருமபத்தினியார் நோக்கி, இதோ வருகின்றேன் மகேசுர பூசைக்குப் பரிகலந்திருத்தெ ன்று சிவநிவேதனப் பிரசாதங்கொடுத்துச் சென்றெவ்வளவு நேர மாயிற்று, அடியவரனைவரும் பசித்திருக்கின்றாரோவென்றதம்மில் லறக்கிழத்தியார் சொற்கேட்டுப் பெருவியப்படைந்துள்ளேசென் று பார்க்கையில் கோயிலில் விருத்த வேதியருக்குத் தாம் அமுது செய்வித்த பதார்த்தங்களினும் எண்மடங்கதிகமான சுவை, மணம் அளவு முதலியவற்றாற் சிறந்த அறுசுவை யுண்டி வகைகளிருக்கக் கண்டு, இது நம்மையடிமையாக்வுடை இடைமருதவாணர் நமக் கருளிச்செய்ததாகுமென அவ்வரலாற்றை மனைவியர்க்குத் தெரி யவுரைத்தருளி, அப்பிரசாதத்தினை மருதவாணராகவே கருதிப் பூசித்து மும்முறை வலம் வந்து பணிந்து பெருங்களிப்போடு சிவனடியவர்களை யுண்பித்துபசரித்தனுப்பிச் சேடப்பிரசாதத்தி னைத்தாம் மனைவிமக்கள் சுற்றம் பரிஜனர் முதலியவர்களுடன் உ ண்டு பெருமகிழ்வுகொண்டு, இறைவர் தமக்கருளிய வருளைப் பாட் டினையெண்ணியெண்ணியேமாப்புற்றிருந்தார். வடமீனினுஞ் சி றந்தகற்புடைய அவர் மனைவி சுசீலையார் பெண்பாலாகலின் இங்ங னம் அருள் செய்த பெருமான் சிறிது பொருள் அனுக்கிரகிக்கலா காதோவென்றெண்ணி மௌனத்திருந்தனர். இங்ஙனமிருக்க.

வழக்கப்படி அன்றிரவு கழிந்து விடியற்காலமாகுந் தருணத் தில் சிவசருமர்கனவிலும் அவர் மனைவி சுசீலையார் கனவிலும் வி ருத்த வேதியராயெழுந்தருளி, நம்பால் மிகுந்த பேரன்புடையீர் கோயிலருகான காருணியாமிர்த தீர்த்தக் கரையின் கீழண்டையுள் ள வில்வமரத்தடியில் நாம் ஒரு குழந்தை வடிவமாகயிருப்போம். நம்மை நீங்கள் எடுத்துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம்பட்டினத் தில் மகவில்லாமல் வருந்தி அருந்தவம்பல செய்யும் திருவெண்கா டர் என்னும் வசியகுலமணியொருவருண்டு. அவர் நம்மிடத்தில் மெய்யன்புடையார் அவருக்கு நம்மைக்கொடுத்து நம்மளவு பொ ன்பெற்றுநும் வறுமை நீர்ந்து இருமைஇன்பமும் அடைமின்களெ ன்று திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்டுச் சிவசருமர் நீயிலி

ட்ட புழுப்போற்றுடிதுடித்து, பிரம விஷ்ணுக்களும் வேதமும் பெறுதற்கரிய பெரும் பொருளாகிய எம்பெருமானைக் கொடுத்தோ பொன்னைப் பெற்று யாம் உயிர்தரித்து வாழ்வது; இதனிலும் தீப்பாய்ந்தேனும், கங்கை பாய்ந்தேனும், வரைபாய்ந்தேனும், விடமுண்டேனும் உயிர்துறத்தல் இன்பமாம்போலும். எங்ஙனம் துணிந்து எம்பெருமானைக் கொடுப்போம். சீச்சீ!! இச்சமுசாரம் சவிகெட்டது. என்னைச்சுட்டாலும் தீராது. கொடிது கொடிது. வறுமை தீவினையாலானது என்பதுண்மையே. இவ்வுலகத்திலென்றுமமாறாப் பழிபாவத்துக்கு ஏதுவான இக்காரியஞ் செய்யத் தோலோதோல் நான் உடன்படேன். என்னிறைவனே! இவ்வறுமையால் யான் இன்றே அழியினும் அழிக என்றார். அது கேட்டுப் பெருமான், ஓ உத்தம வேதிய உமது நிலைமையும் மனைவியின் திறமும் யாமுணர்வோம். உங்களை இவ்விழுக்குக் காரியந் தொடங்கச் செய்யவேண்டுமென்பதல்ல நமது கருத்து; முன்னொருகாலத்தில் நமது தோழனான குபேரன் மானுடப்பிறப்பையடையும்படி நேரிட்டது. அப்போது நாமவனுக்குப் புதல்வனாக வருவோமென்று அனுக்கிரகித்திருந்தோம் ஆதலால் அவ்வாறு நிறைவேற்றுங்காலமிதுவாக நேர்ந்தபடியால் இங்ஙனம் உம்மை ஏவினோம் அன்றி வேறல்ல. அக்குபேரன்தான் காவிரிப்பூம்பட்டினத்துத் திருவெண்காடரென்னும் வேளாண் வசியன். அவனுக்கு மெய்ஞ்ஞான நிலைமை அனுக்கிரகித்து நாம் எப்போதும்போல மறைந்துவிடுவோம். அக்காலத்தில் உமக்குக் குடும்பத்தோடு முத்தியளிப்போம். நீர் ஒன்றற்கும் அஞ்சாது யாம் சொல்லியவண்ணம் செய்யுமென்றருளிச்செய்து மறைந்துவிட்டார்.

உடனே சிவசருமர் விழித்தெழுந்து அற்புதமும் ஆனந்தமுமுடையவராய்ப் படுக்கைவிட்டு நீங்கித் திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து பெருஞ்சிந்தையோடு திரும்பினார். அதற்குமுன்னே தானே கணவனார் கண்ட கனவையே கண்டாரெழுந்து அவர் விழிப்பையெதிர்பார்த்திருந்த சுசீலையம்மையார் வணங்கித் தங்கனவைக் கொழுநரொடுகூற, அவர் தாங்கண்டதையுங் கூறி இருவரும் அச்சமுந் துன்பமுமுடையவர்களாய் முன்பின் தோன்றாது கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் சுசீலையம்மையார் "வறியாரிருமையறியார்" என்ற மந்திரவாக்கியம் உண்மையே. சீச்சீ!! வறுமைகெட்டது. இவ்வறுமைக் கொடுமையாலன்றோ நம்மையுடைய பெருமானிடத்தில் விண்ணப்பஞ் செய்யவும், அதனைத் தீர்க்கும் வழியாக ஆண்டவன் இவ்வண்ணம் கட்டளையிடவும் நேரிட்டது. "அட்டுண்பாரிட்டுண்பார்" என்ற தமிழ்வேதமொழி பொய்யல்லவே. நாம் அவ்வறுமைக்கஞ்சுவானேன், இவ்வண்ணம் குலதெய்

வத்தை விற்று அடாப்பழி சுமப்பானேன் *"சதையை விற்று சங் கடந்தீர்வது" என்றவலத்து அழுந்திய அவரது நிலைமை நோக், கிக் கொழுநராகிய சிவசருமர், பெண்ணே நீகூறிய துண்மையே, நமது வினைப்பயன் குறித்தே மருதவாணரிவ்வண்ணம் அருள்செ ய்தார். ஆனால் நாம்சிவாஞ்ஞையைத்தடுக்கலாமா? பிரமவிஷ்ணுக் களே தடுக்கமாட்டார்களென்றால் நாம் செய்யத்தக்க தென்னிரு க்கின்றது. இறைவனாணையை மறுப்பதற்கு வேதமுமஞ்சி நிற்கி ன்றது. விதியில்லை. ஆகையால் நீ இங்குத்தானே நல்லெண்ணத் தோடுமிரு, நான்போய்வருகிறேனென்றார். அதுகேட்டவ்வம்மை மனம் பதைபதைத்து, எம்பெருமானே! தேவரீர் கட்டளைப்படியி ருக்கக்கடவேனேயொழியமறுத்துரைக்கக்கடவனல்லன்.எவ்வாறா யினுமாக அடியேனைத் தேவரீர் உடன் வரும்படி கட்டளையிட்டரு ளவேண்டும். மூவராலும் அறியொண்ணாத மூர்த்தி எம்போல் வார்பிறப்பிறப்பை யொழிக்கும் பெருங்கருணையால் தாம் ஓர் மா னுடக் குழவியாவரோல் வளர்க்கும் தவப்பேறு எனக்கில்லையாயி னும் தேவரீர் அடிமையானவெனக்குப் பார்க்குந்தவப்பேறுமில்லை யாவதுமரயோ? என்று இருகண்ணீருஞ்சோரவிண்ணப்பித்துநின் றார். அதுகண்டச்சைவவேதியமணி,மனமிரங்கிப்பெண்ணேஉன் கருத்திதுவாயின் விரைந்து வருகவென்ன, தம்பதிகளிருவரும் ம னைகடந்து சென்று ஆலயம்புகுந்து வழக்கப்படி பெருந்தனநா யகியாரையும் மருதவாணரையும் பணிந்து வலம் வந்து தொழு து, இறைவர் கட்டளையையெண்ணி, காருணியாமிர்த தீர்த்தத்தி ன்கீழ்பால்வந்தனர். அங்கே சத்தியந்தழைத்துத்தயைமலர்ந்துசை வமணம்வீசி அன்புதுளித்து உபகாரம்பலித்து இன்பப்பழுத்த சிவனடியார் திருக்கூட்டம்போலத்தழைத்துப் பூத்து மணந்து தேன்றுளித்துக் காய்த்துப் பழுத்திருக்கும் சூதம், பனசம், நாளி கேரம், பூகம், நாரந்தம், சம்பீரம், குருந்தம், குரவங்கம், குருக் கத்தி,பாடலம், புன்னாகம், வகுளம், மந்தாரம், சம்பகம், பாரிசா தம்முதலிய விருக்ஷங்கள் நெருங்கி, முல்லை, மாதவி, முதலிய கொ டிகளசைய இளந்தென்றல்வீசப் புளினத்தடங்கடோறு மன்ன முலாவ மயில், குயில், கிளி, சகோரம், சக்கிரவாகம், வண்டான முதலிய பறவைகள் பாடியுமாடியுங்களித்துத்திரிய,விந்திரனது நந் தவனமும் நாணும்படி வீற்றிருக்குங்கோயிலுய்யான வனத்துள் இளங்குழந்தை அழுகுரல் கேட்க, அச்சத்தோடும் அன்போடும் விரைந்துகுரல்வழிச்சென்று, குருவருள் மந்திரவழிச் சிவத்தைக் காணும் பரிபாகிகளைப்போல, வேதமும் பிரமனும் விஷ்ணுவும்

---

* "ததை, சசையெனமருவிற்று.

துதிக்க, இந்திரன்முதலியதேவர் பூமழை பொழிந்து கவரிகுடை முதலிய பணிமாற, கைலைக் கல்லாலமரமொத்ததோர் வில்வமரத்தடியில், மந்திர பீடமன்ன மணமலரணைமேல் பெரியரிற் பெரியோன் சிறுமகவாய் வீற்றிருக்கக்கண்டனர்.

சிவபெருமான் மகவாகவெழுந்தருளியது.

கண்டளவில் அப்பொதுவாகிய பார்வையாற்றானேபெருந்தவக்கொழுந்தாராகிய தம்பதிக ளிருவரும் தம்மைக்கண்டிலர். பேரழகன் வடிவாகிய காந்தமிவர் நெஞ்சமென்னு மிரும்பைக் கவர்ந்து தன் வசஞ்செய்தது என்றால் மற்றைய அவயவங்களின் அழகினையெவ்வாறு தனித்தனி கண்டுரைக்கவல்லார்கள். அவ்வவயவங்களுக்கு உவமை கூறத்தக்க பொருள் யாவை? ஒப்பநோக்கக் காலமேது? இடமேது? ஐயோ! முன்னமே மறைமொழியானது, "நித்தமணாளர் நிரம்பவழகியர் சித்தத்திருப்பா ரன்னே யென்னும்" என்று வாளாங்கு விட்டதே. இனி அத்திருவங்கவழகினைத்தனித்தனி ஆராய்ந்து வருணிக்கத்துணியும் வன்கண்ணர் யாரோ நாம் அறியோம். சந்நிதிப் படுமுன்னே குளிரையொழிக்குஞ் செந்நெருப்புப்போலும், சமூகத்தைக் குறுக நினைக்குமுன்னமே மனத்திட்பத்தை யொழிக்குந் திறங்கண்டன்றோ "நீராயுருக்கியென் னாருயிராய் நின்றானே" என்றது அருட்டிருவாசகம். ஆகவே இத்தம்பதிகள் கருணைவடிவைக் காணும்வரையில் அவர்கள் நெஞ்சக்கரணம் தலைகாட்டி நின்றதே ஆச்சரியம்! அவர்கள் முன்செய்த நல்வினைப்பயத்தாலதுவரையிலவர்கள்மனம் இரும்புருவந்தரித்தவாறுபோலும். அங்ஙனம்சிறுபோது தம்மை மறந்திருந்தசிவசருமர்தெளிந்து, அத்தெய்வக்குழவியைவிரைந்தாவலோடுமெடுத்துமார்போடணைத்து உச்சிமோந்து மெய்ப்பயன்பலவகையாலும்பெற்றாராய் ஐயனே! அரசே! அழகின் பயனே! அறிவானந்தமே! அற்புதப்பேறே! அருட்கருவூலமே! அரும்பெரும் பொருளே! ஆசைப் பேரெல்லையே! அமுதப் பிரவாகமே! அன்பின் பிழம்பே! ஆருயிர் நிலயமே! ஆக்கவிளைவே! அண்ணலே! அப்பா! வென்று நாத்தடித்துக் குழற அழைத்தரற்றிக் கண்களிலன்பு நீர்பெருக வெடுத்துச் சென்று, நினைவற்றுத் தம்பம்போனின்ற மனைவிகையிற் கொடுத்தார். அவ்வளவில் அவ்வம்மையார் நினைவெழவெழுந்தணைத்துக் கண்ணொற்றி நெடிதுயிர்த்து மோந்தள்ளிமுத்தங்கொண்டு, அன்பின்மிகுதியால் தனங்களிற் பால்சுரப்ப வூட்டுதலும், ஐயர் உண்பார்போ லபிநயித்தார். அபிநயித்தலும் கலிகெட வந்த கற்பகமே! ஐயா! கண்ணுக்கினியானே! காதற்பெருக்கானே! எண்ணுக்கரியானே! எங்கட் கெளியானே! பண்ணுக்குப்பண்ணானே! பார்வைக்கோர் பார்வையனே! மண்ணுக்குவாழ்வானே! மாதவமே

ஆதரவே! என்று சீராட்டித் தங்கணவனை நோக்கி, எம்பெருமானே! நாம்பாற்குழவி யாகாமல் நம்பாற்குழவியாகிய வித்தெய்வ மணியைப் பிரிந்து முயிர்தரிக்குமோ, இவ்வுலகத்து வேறுவாழ்வும் வேண்டுமோ, இம்மகவைக் கண்டாலெந்நெஞ்சு முருகுமேயானுலென்னெஞ்சுமாத்திரம் கன்னெஞ்சா? ஓகோபிரிவு கொடிது! ஆதலாலிக்குழந்தையைப் பிறர் ஒருவர்க்குங் கொடுக்கவென் மனமிசையயாது, பொருள் வேண்டில் நீர் வேறுவகையிற் பெறமுயலுவீராக, யாம் நம்மனைக்கிப்போது செல்வேம் என்று எடுத்துப்போகலாயினுர். அவ்வாறுபோகையில் சிவானுக்கிரகத்தால் போகுந் திசையிது வென்றறியாமற் சென்று திருவிடைமருதுக்குக் கிழக்கின் கண்ணிருகாவதத்ததாகிய காவிரிப்பூம் பட்டினம் வந்து ஓர் முகூர்த்தப்போதில் சேர்ந்து பசிதாகத்தாலிளைப் பினையடைந்து அங்கோர் மனைப்புறமடுத்ததோர் ஆராமத்தினையடைந்தார். அவ்விடத்து இனிய குழைதழைகளைப் பரப்பி அதில் தங்கையிலிருந்த தெய்வக்குழந்தையைக் கிடத்தி அக்குழவியையே பார்த்தவண்ணமா யிளைப்பாறியிருந்தார். அவர்கணவராகிய சிவசருமரும் அவர் மக்களும் நிழல்போற்சென்றவ்விடமடைந்தயர்வுயிர்த்திருந்தனர். கேளும் முனிவர்களே! இவ்வேதியர் மனைவி யில்லஞ்சேரவெண்ணிச் சென்றும், அடைந்தது கடவுள் கட்டளையின்படி காவிரிப்பூம் பட்டினம். சிவனுணையை யாவரால் கடக்கமுடியும். "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்" என்பது முதுவோர்மொழியன்றோ என்றப்பால் உபமன்னியர் சொல்லத்தொடங்கினர்.

திருவெண்காடர் மகப்பேற்றுக் கனுத்திறம்.

முனிவர்களே! இஃதிப்படி யிருக்க, திருவெண்காடர் நாடோறும் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த-மக்கட்பேறல்லபிற" என்றமுதுவர் மொழியைப் பலகாலுஞ் சிந்தித்துருகித் தம்மை யுடைவர் பூசையையும் அடியவர் பூசையையும் வழுவாது நடத்தி வாணிபத்தால் வளம் பெருக்கிவருகையில், அவர் மனைவியார் அச்செல்வங்கண்டு மகவில்லா வறுமை குறித்துத் தங் கணவர்பால் குறைகூறி வருந்துவார். ஆகவே அன்றிரவில் அவ்விருவர் கனவினும், திருவிடை மருதுடைய பெருமான் சைவ விருத்த வேதியராக எழுந்தருளி, மகவு வேண்டிப் பெருந்தவம் புரியும் மாதவத்தீர்காள்! இனிவருந்துத லொழிமின், உங்களுக்குச் சிறந்தவிப் பிறப்பில் கருவிருந்து வருந்திப் பெறும் புத்திரப் பேறில்லையாயினும், நோவாது பெறத்தக்கதோர் பிள்ளைப் பேறுண்டு. எங்ஙனமெனில், நாளையதினத்தில் உங்கள்மனைப் புறத்திருக்கும் ஆராமத்துச் செல்வீர்களாயின் அவ்விடத்தில்சிவ

சருமரென்றும் சுசீலையம்மையென்றும் பெயரையுடைய ஆதிசைவதம்பதிகளிருப்பார்கள். அவர்களில் அச்சுசீலையம்மையார் கரத்தில் மிக இளையதோர் ஆண்குழவியிருக்கும், அவர்களை உபசாரத்தோடு அழைத்து வந்து பூசித்து ஆடையாபரணங்களால் அலங்கரிப்பித்து அவர்கள் மனங்களிக்கச் செய்தால் அவ்வம்மை அக்குழவியைத் தருவள். பின்பு நீங்கள், அக்குழவியை ஒருதுலையிலிட்டு, அவ்வளவு பொன்னை நிறுத்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டுக் குழந்தையைப் பெற்றுக் கொள்வீர்களாக. அதைப்பொருள் கொடுத்துப் பெற்றபிள்ளை யென்றெண்ணவேண்டா. உங்கள்தவத்துப் பாவனை முதிர்ச்சியால் அருள்கொடுத்த பிள்ளையாக நினைமின்கள்; அது கருவிருந்து பெற்றதேயாம். அக்குழவியே உங்களுக்கு இம்மை மறுமை வீடுதரும் சுபுத்திரனாவான் நாமகரணமுதலிய கருமங்கள் உங்கள் குலமுறைப்படி நடத்திக் கொளுங்கள். என்று கூறி மறைந்தனர்.

திருவெண்காடர் மனைவியார் சிவசருமர் மனைவியார்பால் மகவைப்பெற்றது.

உடனே அவ்விருவரும் துயிலுணர்ந்தெழுந்து கைகால் சுத்திசெய்து ஆசமனித்துத் திருவெண்ணீறு தரித்து சிவத்தியானஞ் செய்து ஒருவர்க்கொருவர் கண்ட கனவு கூறியொப்பிட்டுப்பேரானந்த மடைந்தவர்களாய்த் திருவருளை நினைத்து ஆராமையோடும் வெண்காடர் தந்தாயிடஞ் சென்று கனவுகூற அவர்கேட்டாநந்தத்தோடு பின்பு அனைவரும் விடியும் நாழிகை யெண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்போது சூரியனும் உதயமாக, ஆகாயந்தெளிந்தது. சுகந்தமாகவிளந்தென்றல்வீசிற்று. பறவைகள் இனியஒலித்தன. வேதமுழக்க முழங்கிற்று. மங்கலவாத்திய மியம்பின. யாவர்க்கும் மனத்தில் காரணமின்றி ஊக்கம், மகிழ்ச்சி, சிவத்தியான முதலிய வுண்டாயின. வலத்தோள் வலக்கண் துடித்தன பூமழை பொழிந்தன. இந்தநற்குறிகளைக்கண்டவெண்காடனார்களிப்புற்று நித்தநியமமுடித்துச்சிவார்ச்சனைசெய்துவந்தஅடியார்களையும் வேதியர்களையும் பூசித்து மனைவியாரோடுதம்மனைப்புறக்கடைப் பாங்கராகிய ஆராமத்துட் சென்றார். செல்லலும் அங்கு சோலையுற்றிருந்த தம்பதிகளிருவரையுங் குழவியோடிருக்கக்கண்டவுடனே மருதூருடைய பெருமானும் பெருமாட்டியுமாக வெண்ணி அருகு சென்று வணங்கி யினிய மொழிகளைக் கூறியுபசரித்தார்கள். அவ்விருவரு மிகமனங்களித்துச் சோலையெல்லாம், அவர்களின்சொல்லாற்றணிந்து, இன்பநிலையராயினர்.

அப்போது, திருவருளாணையால், அச்சுசீலையா ரென்னும் பார்ப்பினியார் கருத்துத் திரிபுற்றுள்ளங்கனிந்து களிப்போடு திரு

வெண்காட்டடிகள் பன்னியாராகிய சிவகலையம்மையாரைநோக்கி, அம்மே! நீர்மிக நல்லராகவிருக்கின்றீர், இக்குழவியோ தெய்வக் குழவி, அழகும், அருளுந் திரண்டொருவடிவானது; இதையெங் கணவர் யார்க்கோ பொருளாசையாற் கொடுக்க விருக்கின்றனர்; ஆதலால் நீர் இதை உம்முடையமகவுபோல வளர்ப்பீராயின், உம க்கு எல்லா நன்மையும் செல்வமும் பெருகும். நான் வேண்டும் போது வந்து பார்த்து என் கலியாறுவேன். என்சொல்லைமறுதீர். இது இனி என்மகவல்ல நும்மகவேயென்று அவர் கையிற்கொடு த்தார். உடனே சிவகலைத்தாயும் தாங்கண்ட கனவு நனவாக முடி யக்கண்டு பேராசையும் அச்சமும் கொண்டு, கண்களில் ஆனந்த நீர்பொழிய விருகையு மேற்று வாங்கியவளவில் தனங்களினின் றும் அன்பு பாலாகப் பெருகக் குழவிவடிவாகிய பெரியபெருமா னுக்கு ஊட்டலும், முன்தாயனார் ஊட்டிய மாவடுவுங் கீரையும், இளையான்குடிமாறனாருட்டிய முளைநெல்லமுதும், கண்ணப்பதே வருட்டிய எச்சில் ஊன்அமுதும் உண்ட அன்புக்கெளியார் அரு வருப்பரோ? உண்டருளி, அழுகைதீர்ந்து பசியாறினமை காட்டி னார். சுசிலையாரும் சிவசருமருங்கண்டு களித்தார்கள். உடனே சிவசருமர், வேறுஞாபகந்தோன்றத் திடுக்கிட்டு, நாம் கண்டகன வென்ன? இப்போது நமது இல்லக்கிழத்திசெய்த காரியமென்ன? வேளாண்மை சிறந்த திருவெண்காடர்க்கன்றோ இக்குழவியுரிய து? என்று சிறுபோது சிந்தித்து, அங்ஙனே தெளிவுற்றுச் சிவலீலை எவ்வாறுமோ முழுவதுஞ் செல்லச்செல்லப்பார்ப்போம் என் றுள்ளடக்கிக்கொண்டிருந்தார். இவ்வதிசயமெல்லாம், அரு கிலிருந்து பார்த்த திருவெண்காட்டடிகளார் திருவருளையெண்ணி யுடல் பூரித்துப் புளகம்போர்ப்பச்சிறிதுபோது, கம்பித்துத் தம் பித்து நின்று பேராநந்தத்தா லொன்றுந் தோன்றாது பின்தெளி வுற்றுச் சிவசருமரைநோக்கி, ஆனந்தநீர்பெருகப் பேரன்போடும் எம்மையரோ என்னசிந்திக்கின்றீர், என்னையாண்ட மருதவாணர் திருவருளாலன்றோ வும்மை நானிங்குப்பெற்றேன். தேவரீர் எங் குடிக்கலிதீர்த்த கருணையாளரன்றோ? இது வுமது திருமாளிகை யேயாம், எழுந்தருளுமென் றுபசரித்தார். சிவகலையம்மையாரும் சுசிலையாரைநோக்கி, அம்மே அஞ்சவேண்டுவதின்று நீர்கட்டளை யிட்டவண்ண மிக்குழவியைக் காப்பேன். சிவானுக்கிரகத்தால் கிடைத்த விம்மகவு என்மகவேயாம். நீர் யாதோரையமும் கொ ள்ளவேண்டாம் யானும், இம்மகவும், இம்மாளிகையும், எங்கள் செல்வமும் உம்மதே. இதில்சந்தேகம் இல்லை. தேவரீர் எம் மை எவ்வகையானும் ஆண்டுகொள்ளலாம் என்றார். அப்போ து சிவசருமர் இவ்வார்த்தைகளைக்கேட்டு, நமதுஇறைவர் கனவிற்

குறித்தருளிய திருவெண்காடரிவரோபோலும் என்று திருவருள் தோற்றுவிக்க வெண்ணிநின்றார்.

அப்பால், சிவகலையம்மையார் தங்கையிலிருந்த அற்புதமகவைத் தங்கணவர்கையிற்கொடுப்ப, அவர் வாங்கி "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம்" என்ற மெய்ப்பயனை நுகர்ந்து, சொல்லின் முடிவாக விளங்கி யின்பம் பரவிக் கொந்தளமாகிச் சிகழிகை முடித்த திருமுடியையும், தேய்பிறையின் குறைவறுத்த அருட்டிருமுகத்தையும், நீற்றுக்காப்பணிந்த திருநுதலையும், இருளறுக்கு மொளிக்குமொளியாக விளங்குந் திருவிழியையும், உலகுயிர்ப்ப வுயிர்க்குங் குமிழ்நாசியையும், மறைமணம் வீசும் பவளவாயையும், இசைவிளங்க விளங்குந்தோடணிகாதையும், உயிர்களைப் புரந்த குறிதிகழ் மணிகண்டத்தையும், போகமார்த்த பொன்னனையாளைத்துப் புகழெனப் பரந்தமார்பையும், திசைப்பேராற்றல் திரண்ட தோளையும், வள்ளன்மைமலர்ந்த மலர்த்திருக்கையையும், வையமடிக்கப்பெற்றமஞ்சுளவயிற்றையும் சிந்திப்பரியவுந்திச்சுழியையும் கண்கவர்கடியையும், கவின்பெறுதொடையையும், முன்னுறநீண்ட முழங்கழலையும், கோமளமாகித், தாமரைமலர்ந்த செம்மைபழுத்துத், திருவெலாங்கனிந்து, சொல்லளவாதுகல்லென்னெஞ்சைநீராயுருக்கிப், பேராசைபெருக்கி, ஆதாரமாகி, அமுதாயணையப், போதார்தெய்வப் புதுநலம்விளைத்துக், கரணங்கவர்ந்து, மரணந்தவிர்த்து, மீதானத்துமின்னெனத்திகழ்ந்து, காணற்கரிதாய்க் காணற்கினிதாய்க், காதமணக்குமெல்லியகுழகின் நல்லடிமலரையும், இன்னதெனவொணாப்பின்னழகினையும், தனித்தனிநோக்காதுநோக்கிச் சிவயோகிகள்மௌனவின்பத்துமூழ்குமாறுபோல இன்பவெள்ளத்துண்மூழ்கினார். இங்கே இத்திருவெண்காடனார் தம்மைமறந்தனர், தந்நிலையறிந்திலர், மெய்ம்மைதெரிந்திலர்பொய்ம்மையொன்றறியார், அச்சேயழகினை யிவருண்டாரோ? அச்சேயினழகிவரையுண்டபடியோ? அறியேம்சற்றுப்பொறுத்து இவருலகுமுகமாயினார். அது திருவருள்திருப்பியவாறேபோலும். அங்ஙனே கண்ணெற்றி மார்பணைத் துச்சிமோந்து எச்சின்மயங்காமையள்ளிமுத்தங்கொண்டங்குமிங்குமாகவாசையிழுத்தலைப்பவுள்ளமூசலாடவோவா வுவகைவெள்ளந்திளைத்துப்பல்காற் புதிதுபுதிதாகநோக்கிநோக்கிக்கனைந்துகனைந்து புல்வண்ணமன்றிச் சொல்வண்ணமறியாது, மூகரோபோல, வேகநாயகனாகியதம்மைந்தனைமீட்டுந்தம்மனைவியார்கரத்தளித்துச், சிவசருமரையும் அவர்மனைவி சுசீலையாரையும் உபசரித்தழைத்துச்சென்று அவர்களை ஆதனத்திருத்தித் திருவடிவிளக்கியருச்சித்து ஆடையாபரணங்களாலவரைப்புனைந்துமீட்டும் பலபடியாலும் பூசித்து நேசித்துத், தந்திருமகனைத்தொட்டிலி லப்போ

தே கிடத்திப் பொன்னாலு மணியாலும் புனைந்து, ஊரும், ஒக்க லும், நட்டாரும், உற்றாரும், அயலாரும், அடியாரும், அறிஞரு, மாக விச்செய்திகேட்டுக் களிப்பிற்காணவந்தார்க்கெல்லாம் ஓகை சிறப்பப் பொன்மணியாடைபூண் உண்டி யாவுமளித்துபசரித்து, இரவலர் யார்க்கும் தம்பண்டாரந்திறந்து மிடிகெட நிதிமழை சொரிந்து மகவிழாக்கொண்டாடினார். மங்கலியமாதர் யாரும் வாழ்த்தினர். வேதியர் பூவும் பொரியும் அக்ஷதையுந்தூவி மறைவழி பல்லாண்டுபாடினர். மங்கலவாத்தியமுழங்கின. கணிகையர் நடித்தனர். சூதர் மாகதர் வந்தியர் புகழ்ந்தனர். அன்றவ்வூர் முழுவதும் மகிழ்ச்சிதாங்கிப் பெருவிழாக்கொண்டாடிற்று.

திருவெண்காடர் புத்திரோச்சவங் கொண்டாடல்.

அத்தருணத்தில், திருவருளாணையால் மற்றையர் கேளாதவண்ணம், ஓ! சிவசருமரே ! திருவெண்காடரே! உங்களுக்கு கனவில் இட்ட கட்டளைப்படி சீக்கிரத்தில் முடிக்கக் கடவீர்களென்று, ஓர் அசரீரி வாக்குண்டாகவே, சிவசருமர் அதைக்கேட் டச்சத்தோடும், இருக்குமொழிகளாற் றுதித்தார். திருவெண்காடர் கேட்டு அன்பும் ஆராமையும் மேலிட, எம்பெருமானே! மகவுபெற்றமகிழ்ச்சியின் மயங்காமை கருணையாற் செய்வகை தெரிவித்து உய்வகைசெய்யும் பேரருளாளனே போற்றி, யாவைக்கு மூலமே போற்றி, முதலு முடிவுமில்லாதாய்போற்றி, மண், நீர், தீ, காற்று, வெளி, மதி, ஞாயிறு, இயமானனுமான வெண்வகை வடிவாம் அரசே போற்றி, ஆதாரமொன்றின்றியே யாவைக்குமாதாரமாகும் அமுதமேபோற்றி, பிறப்பிறப்பிலாத பிஞ்ஞகனேபோற்றி, குறிகுண மிலாத குணக்குன்றமே போற்றி, யோகியர்யோகத்து ஒளியேபோற்றி, அவர்களுணர்ச்சியேபோற்றி, மெய் அறிவு இன்பவடிவாபோற்றி, பிரமமேபோற்றி, பரமனேபோற்றி, பெரியவபோற்றி, அரியவபோற்றி, பொன்வண்ணபோற்றி, பூதநாதனேபோற்றி, அங்கணபோற்றி, அனைத்துலகுமானாய்போற்றி, உயிர்க்குயிரான வுத்தமாபோற்றி, பூரணாபோற்றி, புண்ணியா போற்றி, ஆரணாபோற்றி, அற்புதாபோற்றி, தேவர்கள்புகழும்தேவனேபோற்றி, மூவர்கள்போற்றும் முதல்வனேபோற்றி, தத்துவ போற்றி, தயாநிதிபோற்றி, வித்தகபோற்றி, வேதியபோற்றி, கண்ணுதலேபோற்றி, கனகண்ணேபோற்றி, எண்ணுதற்கு எட்டா ஈசனேபோற்றி, அம்மையேபோற்றி, அப்பனேபோற்றி, அம்பிகை பங்குடையயனே போற்றி, வஞ்சகரறியாமாமணிபோற்றி, நெஞ்சகத்து ஆசை நிறைத்தாய்போற்றி, காதலாபோற்றி, காவலாபோற்றி, தேசனேபோற்றி, செல்வனேபோற்றி, நேசனே போற்றி, நித்தனேபோற்றி, எண்ணியவண்ணம் இசைவித்தாய்

போற்றி, புண்ணியம்பழுத்த புராணனேபோற்றி, போற்றிபோற்றி புராதனபோற்றி, போற்றிபோற்றி புராந்தகபோற்றி, போற்றிபோற்றி புயங்கபோற்றி, போற்றிபோற்றி புனிதனேபோற்றியென நாத்தழுதழுக்கத் துதித்து மெய்ப்புளகமரும்ப வியர்த்து நெக்குருகிக் கண்ணீர் வாரப்பல்காற்பணிந்து தொழுது ஆடிப்பாடி அவலமறுத்தாராயினர்.

அப்பால் திருவெண்காடர், புதியதோர்மணித்துலை தருவித்து மந்திரமுறையாற் புனிதஞ் செய்து பூசித்துச் சாந்தி வினைமுடித்து, மெல்லியஅணையையோர் தட்டிற்பரப்பி, அதன்மேற் றம்பெறலரும் பேறாகிய தெய்வக்குழந்தையைக் கிடத்தி, மற்றொருதட்டிற் பொன்னும் மணியும் பெய்வாராயினர். அப்போது சிவானுக்கிரகத்தால் பொன்னிடுந் தட்டு மேலெழுந்தே நிற்கக்குழவியிருந்ததட்டு நிலத்திற்றாழ்ந்து கிடந்தது. இது நியாயமே, சிவபெருமான் அடியவர்களன்பு மேலேறமேலேறத் தாமதற்குள் ளடங்கியே நிற்றல் என்றுமுள்ள வியல்புவழக்குத் தானே. முன் அமர்நீதிப் பெருந்தகையாரிட்ட பொன்னின்றட்டினுக்குக் கோவணக்கள்வராகிய ஐயரிட்ட கோவணத்தட்டு தாழ்ந்தேகிடந்ததன்றோ. அவ்வற்புதத்தைக் கண்ட யாவரும், மனமருண்டு. இஃதோர்தெய்வக்குழவியோ? சிவனருளோ? சிவபெருமானே யிவ்வடிவொடு வந்தவாறோ? திருவெண்காடர் புண்ணியமோ? வென்றுதத்தமக்குத் தோன்றியவாறு கூறினர்.

சிவசருமர், அவ்வாச்சரியத்தைக்கண்டுள்ளத் தச்சமிகவடைந்து துலைவலம்வந் தஞ்சலிசெய்து எதிர்நின்று, இடைமருதுடைய எந்தைபிரானே! அடியேன் பொருள்விழைவாற் றேவரீர்க்கடிமைப்பட்டவாறன்றே, திருவடித்தொண்டுக்கன்றோ ஆசையுற்றடிமைபூண்டது. அங்ஙனமாகத் தேவரீர் திருவுளமிருந்தவா றென்னையறியேன்? என்னைச் செல்வக்களிமயக்கில் வீழ்த்தவோ? அல்லது, இவன்செய்தது புறத்தொண்டுதானே, அதற்குக் கூலிப்பயனிவ்வளவிற்றாகவென்று பொன்னைக்கொடுத்துப் புறந்தள்ளவோ? எத்திறத்து மிப்பொன்னால் நான் அபராதியேயாவேன். என்குடும்பப் பாதுகாப்பினுக்காகப் பொன்னளிக்கத்தேவரீர்க்குத்திருவுளமாயின் அளவைகடந்த பொன்னைக்கொடுப்பின்யான் என்செய்யக்கடவேன். இப்பொன்னைப்பாதுகாத்தற்கே என்வாழ்நாள் முழுதுமாய்விடின் உய்வகையின்னேது? அதுவுமன்றிக்கண்டார்யாவரும், இவ்வேதியன்மாயம்வல்லன்கொல்லோ! பொருள்விழைவால், இப்புண்ணியவடிவரான திருவெண்காடரை வஞ்சிப்பான் சிறிது செய்தபடியோ வென்ன நினைக்கவுமன்றோ ஏதுவாயிற்று. ஆகவே எம்பெருமான் கருணை யேழையேனை யுய்விக்கவென்றிருப்ப

துண்மையாயினித்துலைத் தட்டிவ்வளவிற் சமனிலையடைகவென்று மந்திராக்ஷதை யிறைத்து வணங்கினர். அங்ஙனே துலைத்தட்டு திருவருளாணையாற் சமனிலைபெற்றது. பூமழைபொழிந்தது. தேவதுந்துமி முழங்கிற்று. அங்குநின்ற சராசரவுயிரனைத்தும் அன்புபெருகிக் குதுகுதுப்புற்றன. அடியவர்யாரும் ஹரஹரமுழக்கஞ் செய்தனர். திருவெண்காடர், சிவசருமரைப் பல்காற்பணிந்து பரவிநின்றனர். சிவசருமரும் அருளுன்னித் தம்மை மறந்தவராய் நின்றனர். அப்போது, சிவனாணையால், "ஓசிவசருமரோ! உம்மைச் செல்வமயக்கிலாழ்த்தவென்றல்ல இங்ஙனம்செய்தது. இத்திருவெண்காடர் பொருள்முற்றும் அறத்தோடுமீட்டப்பட்டது. அதனைப் பெறற்குரிய கலம் நீர் ஆதலால் இங்ஙனம் செய்வித்தனம். அஞ்சலிர். அஞ்சலிர். இன்றுதொட்டுப் பதினாறுண்டெல்லைகழிந்த தினத்து நீரும்உமது குடும்பமும் நமதுபதத்தழிவின்றிவாழ்ந்திருக்கப் பெறுவீர்கள். கவலொழிமின். இப்பொன்னைக்கொண்டுஇனிஇடைமருதடைமின்" என்றோர்அசரீரிவாக்குஉண்டாயது. அதுகேட்டங்கிருந்தார் யாவரும்கடலொலிநாண ஹரஹர முழக்கஞ் செய்தார்கள். சிவசருமர்மனத்தவலமறுத்துப்பலகாலிறைவனைப் பணிந்து துதித்தனர். திருவெண்காடர் மீட்டும்சிவசருமரை வணங்கினார். சிவசருமர்அதுகண்டஞ்சிஅவர்வணங்குமுன்தாம்அவர்க்கஞ்சலிசெய்து தழுவிக்கொண்டனர். அன்று அக்காவிரிப்பூம்பட்டின முழுவதும் கைலையோலக்கமே போன்றது. முனிவர்களே! இதனாற்கடவுட்டிறம் அன்பளவன்றிப் பொருளளவல்லவென்பது வெளிப்படுகின்றமை அறிமின்.

இங்ஙனம் விலைவரம்பறியாத மணியைமகவாகப்பெற்றவெண்காட்டடிகள். துலைநின்றுமகவையெடுத்தணைத்து, மிச்சில்போக்கத் தக்கபொருள்களாற்கண்மிச்சில்போக்கி, இருக்கைசேர்த்து, பொருள்களையெல்லாம் திருவிடை மருதூரிலிருக்கும்சிவசருமர்திருமாளிகைக்குப்பரிசனராற் பொதிசெய்தனுப்புவித்துப் பின், அற்றைப் பொழுதே நன்னாளாகத் தம்மைந்தர்க்குத் திருநாமஞ் சாத்தக்கருதி அங்கிருந்த முதியோரையும் சிவனடியரையும் சிவசருமரையும் வினாவலும் சிவகிருபையால் அனைவருள்ளத்தும் ஒருபடித்தாய் "மருதவாணன்" எனத்திருநாமஞ் சாத்தவென்று, திருவெண்காடர் கருத்துப்போற்றோன்ற, அதனைச் சிவசருமர், அருளேவலான் முந்தி, மருதவாணன் என்று நாமகரணஞ் செய்கவென, அனைவரும் வியப்படைந்து, யான் கருதியதிது, யான் கருதியதிதுவென்று கூறிக்களித்தனர். உடனே வேண்டுமுபகரணங்களைத் தருவித்துச் சிவசருமரே புரோகித உரிமை கொண்டு வேதாகம விதிப்படி தேவபூசை ஓமத்தீக்கடன் சாந்திவினைமுடித்து, பிள்ளைப்பெரு

மானுக்கு "மருதவாணன்" என்று திருநாமஞ் சாத்தினர். மறைமுழக்கமும் மங்கலதூரிய முழக்கமும் மலிந்தன. நற்சகுனம் பலவும் தோன்றின. திருவெண்காட்டையர் மிக மனங் களித்து வேதியர்முதலாயினோர்க்குப்பொன், அணி, ஆடை, நெல், மணி, ஆனிரை, விளைநிலம் முதலாயின வெறுப்பக் கொடுத்து, இரவலர்க்குப் பெருநிதி வழங்கிச், சிவனடியவர், அந்தணர், ஒக்கல், நட்பினர் முதலியோரையும் ஏழைகண்முதலிய பல்லுயிரையும் உண்டி முதலியவற்றால் நன்குபசரித்துப் பிறவிப்பெரும்பயன் கொண்டார். அங்குவந்திருந்தார் யாவரும் திருவெண்காடரையும் அவர் மைந்தரையும் பன்முகத்தாலும் வாயாரவாழ்த்தித்தத்தமிடஞ் சென்றனர்.

சிவசருமர் திருவிடைமருதூரடைந்து இருத்தல்.

அப்பால் சிவசருமர் விருந்துண்டு அன்று கழிந்து மறுநாள் போய் மற்றை நாட் காலையிலே திருவருட் கட்டளையின்படி திருவிடை மருதூருக்குச் செல்லவேண்டிய தங்கருத்தைத் திருவெண்காடர்க்குக் குறிப்பிக்க, அவரும் அவ்வேதிய மணியை நன்றாகப் பூசித்துப் பொற்றேர் செய்து அவரையும் அவர்பன்னியையும் மக்களையுமேற்றிப், பிரிவாற்றாதுபின்சென்று நெடுந்தூரம் வழிவிட்டு, அவர் கட்டளையால் தம்மனைக்குமீண்டனர். தேரேறிச் செல்லுந் தம்பதிகள் அருளாணையைக் கடப்பதற் கஞ்சித் தெய்வக்குழவியைத் திருவெண்காடர்க்குக் கொடுத்து வந்தார்களாயினும், அன்பிழுத்தவர்களை யலைக்க, மருதவாண! மருதப்ப! மகாலிங்க! மத்தியார்ச்சுன! மாணிக்க வள்ளலே! மைந்தனே! மணியே! வாழ்வளிக்க வந்த பெருவாழ்வே! மருந்தே! அப்பா! ஐயா! என அழைத்தழைத்து வருந்தி முன்செல்லக்காலெழாது திரும்பித் திரும்பிச் சிறிது தூரம் பார்த்துச் சென்று, அப்பால் முழுவதும் பிரிவாற்றாமைத்துயரால் விழுங்கப் பட்டாராய்த் தம் வசஞ் சிறிது மின்றித்தேரிற் சாய்ந்தனர். அதுகண்டு அவர்கள் மக்கள் வருந்தவே தேர்ப்பாகன் தேரை நிறுத்தி அவர்களுக்குச் சைத்தியோபசாரம் செய்து களைதெளிவித்தலும், விழித்தெழுவோர் ஐய! மருதவாண, என்றெழுந்தார்கள். அப்போது அன்பரன்புக் கெளிய பெருமான் கருணையால் அம்மருதவாணப் பேர்த்திருக்குழவி வடிவ மொன்றெடுத்து இவர்கள் கவலையறஅத்தேரினோர்புறத்தி லவர்கள் மைந்தர்களோ டிருக்கக்கண்டு, துணுக்குற்றுக் குழந்தையை வாரி யெடுத்து அணைத் துச்சி மோந்து ஐயனே! எவ்வாறு வந்தனை எவ்வாறுவந்தனை? அப்பா! உன்னைப் பிரிந்தாற்றுவோமோ என்று அன்பினாலுருகிக் கதறித் தேரை விரைவாக நடத்திக்கொண்டுபோருகையில், அத்தம்பதிகட்கு அருளாணை

யின்படி, தேர் வேகத்தாற் சுழுத்தியொன்றுதோன்ற, தேர் திருவிடைமருதூர் அடைந்து திருமாளிகை வாய்தலைச்சேர்ந்தது. சேர்தலும் அவர்கள்மயக்கமொழிந்து, அணைத்திருந்தகுழந்தையாகியமருதவாணனைப் பார்க்கையில் அம்மாயக்குழவி காணுதாக, திடுக்கிட்டு உடல் பதைக்க, ஐயோ! அணைத்திருந்த குழந்தையேதாயிற்றோ! தேர் வேகத்தால்யாமுறங்கி விழுந்தபோது தவறிக் கீழே விழுந்ததோ? அல்லது குழவிவந்ததுபோற்கனவுதான்கண்டனமோ? யாரோனும் கொண்டு போயினரோ? என்று துடிதுடித்து ஒன்றுந் தோன்றாது மயங்கிநின்று,கண்ட புன்மரமும்உருகும்படி வருந்திநிற்கையில், சிவசருமர் ஒருவாறு தெளிந்து தம்மனைவியார் முகநோக்கிப் பெண்ணே நாம்வீணே வருத்தப்பட்டுக் கொண்டிங் கிருப்பதிற் பயனில்லை; நீ உன்மக்களை வைத்துக்கொண்டு உடையவர் அருள்செய்த செல்வ மிகுதியாயிருப்பதால் அதிதிபூசை தவறாது நிறைவேற்றி வருதி. நான் காவிரிப்பூம் பட்டினஞ் சென்று, நமது அற்புதக் குழந்தையிருக்கப்பார்த்து வருகிறேன். பார்க்க நேரிடாவிட்டால் தேகத்தை யொழித்து விடுகிறேன் என்று கூறினர். அதுகேட்ட அச்சுசீலையார், முன்னினும் மிகவருந்தி, எம்பெருமானே! தேவரீரைப் பிரிந்தால், இம்மக்களும் செல்வமும் என்ன செய்யும், நீர் பிரியுமுன் என்னுயிர்தான் பிரியும், ஆதலால் தேவரீருக்கு அடியேனைப்பற்றிய கவலை யொழிந்துபோம் என்றார். அதற்குச் சிவசருமர் சொல்வகையொன்றும் தோற்றாதவராய் மயங்கிநின்றார்.

அங்கே காவிரிப்பூம் பட்டினத்தில் அத்தெய்வக்குழவி, கண்ணிமைபோல் காத்திருக்கும் சிவகலையம்மையாருக்கும்திருவெண்காடருக்கும் பலவிங்கிதங்களைக் காட்டிக் களிப்பித் திருந்தது. இங்ஙனமிருக்க, அக்குழந்தையளவாகத் திருவெண்காடர் நிறுத்துச்சிவசருமருக்குக் கொடுத்த திரவியம் மூன்று தினமாகப் பண்டியில் திருவிடை மருதூர்க்கு வந்துகொண்டிருந்தவன்றோ; அன்று ஏனையமுற்றும் மெய்காவலரோடுவந்து சிவசருமர் மனைக்கண் சேர்ந்தன. ஆகவே; அம்மெய்காவலர் கூட்டத்துள் இறைவர் கட்டளையால் அச்சேவகர்கள் வேடமாக வந்திருந்தகணுதிபர் ஒருவர் ஓர்கவளிகையையுந் திருவெண்காடர் எழுதியவருக ஓர் ஓலைமுடங்கலையும் சிவசருமருக்குக் கொடுத் திச்சை வழியே போவாரோடும் போயினர். பின் சிவசருமர் அவ்வோலை முடங்கலை நிமிர்த்து வாசித்து அதனுள் மருதவாணப் பேரிளங்குழவி சுகத்தி லங்கே பலவிளையாடல் செய்திருக்கும் செய்தியும் இவரது பிரிவாற்றாமையகல அக்குழவி திருவடிவமாகவமைக்கப்பட்டபொற்பட மொன்றனுப்பியமையுந் திருவெண்காடர் குறித்தெழுதிய வண்ணமிருக்க

க்கண்டு, மிகுமகிழ் சிறந்தெழுந்து கூத்தாடி உடனே அக்கவளிகைக் கட்டவிழ்த்து நோக்குதலும், அதில் தெய்வக்குழவியைமெய்ம்மையிற் கண்டவாறுகண்டு, அவலமற்றவராய்த் தம்மனைவியாருக்குங்காட்டிப் பெண்ணே! இனி நாம் குழவியின்பொருட்டு வருந்துவதுமுறைமையல்ல;சிவபெருமான் ஆணையை வேதம், அரி பிரமர், இந்திராதி தேவரும் கடக்கவல்லாரல்லர். நாம் கடக்கவல்லமோ? ஆளுடையார் திருவுள்ளம் அத்தெய்வக் குழவி திருவெண்காடர் பாலிருக்கவேபோலும். நீயே நினைத்துப்பார் கோயில் நந்தவனத்திலக்குழந்தையைக் கண்டெடுத்த நீ உன்னிருப்பிடங் கொண்டுபோகவென்று, என் சொற்கடந்தோடினையன்றோ? சிவலீலை எவ்விதமாக முடிந்தது? திசைகெட்டுச்சென்றுநெடுங்காதத்திருக்கும் காவிரிப்பூம் பட்டினத்து, முன்பின் அறியாத அத்திருவெண்காடர் மனைப்புறத்தோட்டத்தை யடைந்தாய். அம்மட்டிலோ? இன்னொன்று விசாரித்து அறியாமல் வலிய அத்திருவெண்காடர் மனைவியார் சிவகலையம்மையார் கையில் நீயே கொடுத்து, உன்பிள்ளையாக வளர்க்கக்கடவை யென்றும் சொல்லினாய். அதுநிற்க, இந்தப்படத்தைப் பார்த்தனையோ? இவ்வாறு இவ்வுலகத்தில் சாதாரணமாய் யாவரால் எழுதக்கூடும். இதுமானுடரால் எழுதப்பட்டதன்று. நமது ஆசையும் ஆராமையும்கண்டு அக்குழந்தை வடிவம் அமையக்கடவுளே யிப்படத்தையும் தீட்டுவித்தனுப்பிய வாறு போலும். ஆதலால், நாம் நமது ஆசைதணிய வித்திருவுருப்படத்தை யுபசரித்து நமது மற்றையநாளைக் குருவருளாணைப்படிகழிக்கக்கடவேம் என்று மனைவியாரைத் தேற்றினார்.

உண்மையே யன்றோ? * "மைப்படியுங் கண்ணாளுந் தானுங் கச்சிமயானத் தான் வார்சடையான் மாசொன்றில்லான் - ஒப்புடையனல்ல னொருவனல்லனோ ரூரனல்லனோருவமனில்லி, யப்படியனவ்வுருவ னவ்வண்ணத்தானவனருளே கண்ணாகக் காணினல்லா, லிப்படியனிவ்வுருவ னிவ்வண்ணத்தனிவ னிறைவனென்றெழுதிக்காட்டோணாதே." என்றதன்றேமறைமொழி. அப்பால் அதுகேட்ட கற்பரசியாகிய அவ்வம்மையாரும் இஃதுண்மையாமென்று எண்ணித் துயரமாறினர். அதுமுதல்சிவசருமர் அத்திருப்படத்தையலங்கரித்ததோர்கூடத்தமைத்துக் காலங்கடோறும்மகவுக்கும்கடவுட்கும் செய்யும்அன்பும்,அச்சமும்பொருந்தவுபசரித்

* மைப்படியுங் கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையானென்னினல்லா - னொப்புடையனல்ல னொருவனல்லனோரூரனல்ல னோருவமனில்லி - யப்படியுமந்நிறமுமவ்வண்ணமுமவனருளே கண்ணாகக்காணினல்லா லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தனிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே என்பதுஉமபாடம்.

து, தங்கள் நியமப்படி சிவபூசை, பிதிரர்கடன், அடியவர்ச்சனை, வேதாகமமோதல், சுற்றந்தழுவல், பல்லுயிரோம்பல், ஏனைய வேள்விமுதலிய நித்தநைமித்தங்களைக் குறைவற நடத்தி வந்தனர். முனிவர்களே! இவர் முத்தியடைந்த செய்தி பின்னும் கூறுவோம். இனித்திருவெண்காடர் செய்தி கூறுவோமென்று ஸ்ரீ உபமன்னிய பகவான் அப்பால் சொல்லத்தொடங்கினார்.

அருட்குழவிப்பெருமான் திருவிளையாடல்.

அந்தணாளரே! அப்பால் திருவெண்காடரும் அவர் மனைவியாரும் தமது அருமைமைந்தனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வருகையில், குழவி, முகங்கவிழ்ந்து செங்கீரையாடிப், பின்னிருந்து சப்பாணிகொட்டிப், பெறுது பெற்றோர்க்குப் பேரானந்தம் விளைத்தது. பெற்றோர்கள் தக்ககாலத்து, அன்னப்பிராசனமுதலிய கருமங்களை நடத்தி, குழவிப்பெருமானுக்கு உச்சிச்சூழியமுஞ் சுட்டியுஞ்சாத்தி, காதிற் குதம்பை புனைந்து, மார்பிலேம்படைமதாணி முத்துவடம் விளங்க அரையிற் பொற்சிறுமணி கட்டிக், கையிற் கடகமும் பவளமும் பொன்மணியுமாகக்கோத்தணிந்து, சிறுவிரன்மோதிரமழகுபெறவமைத்துக் காலிற் பாடகமுஞ் சிறு சதங்கையுந் தரித்து, கைத்தாய் செவிலித்தாய் சேடியர் புடைசூழ்ந்து கண்ணிமைபோலக் காத்துப் பாராட்டிச் சீராட்டியவ்வூரும் சுற்றத்தோரும் பெருமகிழ் தூங்க அரசனுலகோம்புவதுபோற்போற்றுவாராயினார். ஆயினும், மூவருமேனைத் தேவரும் பதினெண்கணத்தவரும் நாடோறுங் கைலையோலக்கங் காணச் செல்லுமாறு காவிரிப்பூம்பட்டினத்து வந்து ஐயர் குழவித் திருவிளையாடலைத் தரிசித்துய்வுற்றாராயினர். ஞானிகளுள்ளக் கண்ணாற் காணும் பெருமானைச் சராசரவுயிரனைத்தும் ஊனக்கண்ணாற் கண்டு மண்மேற்பிறந்த பயனைப்பெறலாயின. அந்நகரச் சூழல் முழுவதும் வறுமை, பிணி, அகாலமரணம் முதலிய துன்பங்களொழிந்தே போயின. மலடிகள் எல்லாம் மக்களைப்பெற்றனர். பெரும்பாவியர் புண்ணிய சீலராயினர். கொல்லா விரதம் குதுகலித்து ஓங்கித் தயாமூலதருமந் தலையெடுத்து வழங்கிற்று. தருமசீலரனைவர்க்குஞ் சத்திநிபாதந்தானேபதிந்தன. சிவனேசமும் அடியார் பணித்திறமும் அனைவர்க்கும் சாதனமின்றிவிளங்கின. அடங்காதாரெல்லாம் அமரரேயாயினர். வேறுகுருமொழி பெறுது சிவஞானம் அனைவருளத்தும் விளங்கச் சீவன்முத்த நிலைபெற்றனர். யார் எத்தொழிலைச் செய்யினும் சிவபூசையாயின. யார் எதைக்கூறினும் சிவமந்திர ஜபமேயாயிற்று. யார் எதை நினைக்கினும் சிவத்தியானமாயிற்று. ஆண் பெண்ணுயிர்களனைத்தும் சிவமுஞ் சத்தியுமாயின. ஆகவே எல்லாஞ்

சிவமயமென்பது விளங்கிற்று. அந்நகரமனைகடோறும், இத்தெய்வமகவைப்பற்றி அன்பு செய்து புகழ்வாரும், அருமைசெய்து புதுமையாகவெண்ணிப் போய்ப்பார்ப்பாரும், கைத்தொழில் மறந்து சீராட்டு வாருமாயினர். ஆயின் இஃது ஓர்வியப்பன்று. ஏனெனில், தீ அடுத்த திரணங்களைத் தன்மயமாக்குவதும் ஆச்சரியமோ.

இங்ஙனம் எம்மருதவாணப் பெருந்தகை வளர்கிறகாலத்து மெல்லத்தளர்நடைப்பருவமடைந்து தாயர்பின்றொடர விளையாடிச் சிறுதேருருட்டி வீதியிற் சிறு பேதைப்பெண்களிழைத்தாடுஞ் சிற்றிலழித்தும், அவர் வண்டலாட்டு விருந்தாயும், தமது திருவிளையாடற் பருவத்தோடொத்த ஏனையவாணிபச் சிறுவரோடு வேறுபல விளையாடியும், திருமேனி புழுதியாடி அன்னையர் யாரும், "ஐயவருக அண்ணல்வருக அமுதவருகவருகவே, அப்பவருகஅழகவருகஅத்தவருகவருகவே, செய்யவருகதேசவருகசெல்வவருகஅல்லல்தீர், தீர்த்தவருகமூர்த்திவருகசீலவருகவருகவே, தூய்யவருக சோதிவருக துணைவவருக மகவிலாத், துக்கமகல வந்தவின்ப சுகசொருப வருகவே, வையமுழுது முய்யவந்த வள்ளல்வருக வருகவே, மாசிலாதமருதவாணவருகவருகவருகவே." "பழிசெயாமலுலகமெங்கள் பாரசெல்வம்வீறவே, பரிவுசெய்துகுருவிருந்த பாலசீல வருகவே, கழிவிலாசை தணியவந்த காதலாள வருகவே, கவலைதீர வாரம்வைத்த கலைகளுள வருகவே, ஒழிவிலாதெமுள்ளமுருகவுவகைசெய்தநிதியமே, உம்பர்இம்பர்வம்புபோலுதித்தஐயவருகவெம், வழிகெடாமைவாழவைத்த,மாதவம்வருகவே, மருதவாணவருகவெங்கள்மருதவாண வருகவே." "சீத்தமின்புமுத்திதரவே செல்வமக்கள்வேண்டுவார், பித்தர்போலுமுலகர்கண்டபேர்கள்யார்பின்வருவதை, மத்தர்சொல்லைக்கொண்டிலே மதிக்கிலேமேலாவதை, யத்தவெங்கள் மருதவாண வருள்கமுத்த மருள்கவே." "கண்ணமுத்தமருள்கவெங்கருத்தமுத்தமருள்கசெவ், வண்ணமுத்தமருள்கவான் வரம்பமுத்தமருள்கவெம், பண்ணமுத்தமருள்கவெம்பாலமுத்தமருள்கவெம்,மெண்ணமுற்றுமருதவாணவெந்தை முத்த மருள்கவே." "சங்கமுத்தமேகமுத்தந்தாமரைப்பூமுத்தநல், மங்கைமார்களத்துமுத்தம் வரைகொள் முத்தமிப்பியின், துங்கமுத்தம்யானைமீன் துலங்குமுத்தம்வேண்டிலேம், எங்களையமருதவாணவீகவாயின்முத்தமே." "செம்மையானகண்டுசர்க்கரைசெழித்தபாலுமெம், அம்மைதருவ மோடிவருக வருள்கமுத்த மொன்றுமேல், விம்முபுழுதிபோக்கலாம் விரைந்துவருகமுத்தமொன், றிம்மெனத்தராயோவைய வெங்கள்மருத வாணனே." என்று அழைப்பவோடிமேல்விழுந்து முத்தமளித்தாடியும், மழலைதழையப்பேசியும் பெற்றோரை மகிழ்செய்தனர். "மக்கண் மெய்தீண்ட

லூட்டற்கின்பமற்றவர் சொற்கேட்டலின்பஞ் செவிக்கு. அமிழ்தினு மாற்றவினிதே தம்மக்கள் சிறுகையளாவியகூழ்" என்றுதிருக்குறள் கூறியஇன்பத்தை உண்மையாக நுகர்ந்தவர்கள் நமது திருவெண்காட்டடிகளும் அவர் திருமனைவியாருமன்றி வேறு யாரை யாம் கூறுவோம். என்னெனில், பரமகாரணரான சிவபெருமானுரே மைந்தரானுல் மெய்யானமகவின்ப அனுபவம் யார்க்குண்டு. அது நிற்க.

இங்ஙனமித்தள்ர் நடைப்பருவ மொழிந்தவளவில், மருதவாணப் பெருமான் ஏனையவசியச் சிறுவரோடு கூடிக்கறங்குக முற்காய் முதலிய கருவிகொண்டு விளையாடியும், யானை, குரங்கு, மான், மரை, தகர், குறும்பூழ், சேவல் முதலிய வளர்த்தும், போர் செய்யும் விலங்கு பறவைகளைப் போர் மூட்டி யாடல்கண்டு களித்தும், சோலை, நந்தவனம், தோப்பு, தண்டலை, கூவல், வாவி, கயம், யாறு, கடல்களிற் சென்று பூ, காய், பழம்பறித்துச் சூடியுந், தின்றும், ஆடியுங், குதித்தும், நீந்தியும், நகரமனைகடோறுஞ் சென்று ஏககாலத்திலனைவருபசாரத்தையும் கொண்டு விருந்துண்டு அவர்க்கு வியப்பை விளைத்தும், அவர்கள் மறையவைத்த சிற்றுண்டிகளைத் தெரிந்தெடுத்துவந்து மகாரோடுண்டாடியும், அவர்களப்பண்டத்தைத் தேடுகையில் முன்னில்லாமை காட்டி மீட்டும் வேறோரிடத்திலப்பண்டமிருக்கக்காட்டியும், தந்தாயை விட்டுப் பிரியாமை மனைக்கண்ணேயிருந்துகாட்டி யூரிற் சிறுகுறும்பு செய்துலாவியும், பற்பல கூட்டமாகப் பிரிந்து விளையாடுஞ்சிறுவரோடு தனித்தனியிருந்து காட்டியும், அச்சிறுவர் விரும்பியவாறு உண்டியாடை பூணுதி கொடுத்தும் திருவிளையாடல் செய்தனர்.

மீனுயிருந்த மணிக்கிரீவன் சாபந்தீர்த்தது.

இங்ஙனம் பலபலவிளையாடல்செய்தொருநாள்அம்மகார்களோடுகடற்கரைசென்றுவிளையாடுவார், மணிக்கிரீவன் என்னும் கந்தருவன் சாபநீக்கத்திருவுளங்கொண்டு, மரக்கலமொன்று அச்சிறுவரானவரோடுமேறிநெடுந்தூரஞ்சென்றுதிரிந்துஆடிவருகையில், யோசனை நீளமுள்ளதோர்பெருமீன் இவர்கள் தோணி நோக்கி விழுங்குங்குறிகாட்டிப்பெருஞ்சினத்தோடு விரைந்தோடிவருதல்கண்டு, அவ்வசியமக்கள் யாரும் பொறிகலங்கி யஞ்சிப்பெருங்கூச்சலிட்டு, மருதவாண! மருதவாண! இனி என்செயக்கடவோம். யாமெல்லாரும் ஒருங்குமாளவந்ததே! இப்பெருமீன் வாயினின்றும் எங்ஙனமுய்யவல்லோம்! அறியாது வந்தாவியிழக்கலாயிற்றே! அந்தோ! நம்மன்னைதந்தையர் வரவறியாது வருந்துவரோ! என்று புலம்பி வருந்துகையில் அம்மீன் நாவாய்க்கருகே வந்து கூம்பின்றலை நின்

ற அவருளொருவனைப்பற்றி விழுங்கியது. விழுங்கவே மற்றையர்கள் நடுங்கி மூர்ச்சித்தவராயினர். அப்போது மருதவாண வள்ளல்கண்டு இரக்கமுற்றுச் சிறுவர் பயந் தீர்ப்பாராய்த் தமது திருவடி நீட்டி அம்மீன்றலையின்மேலுதைத்தனர். உடனே அம்மீன் உயிர் துறந்து மாண்டது. மாளலும் அதன் யாக்கையினின்றும் ஓர் தெய்வ வடிவப் புருடன் புறப்பட்டு விமானமேறி அந்தரத்தே நின்று, இம்மருதவாண வள்ளலை நோக்கி எதிரிறைஞ்சித்தொழுது, ஐயா! நான்மணிக்கிரீவனென்னும் கந்தருவன் வேடிக்கையாகத் திரிகையில், ஒருவனத்தில் சிந்து முனிவரைக் கண்டு என் அழகின் செருக்கால் அவரை யிகழ்ந்தேனாக, அவர் முனிவுற்று, உடனே என்னை மீனாகும்படி சபித்தார்.

அதுகேட்டஞ்சி யான் அவரை வணங்கி வேண்டலும் ஆளுடைய பெரியபெருமான் அன்பருய்ய வேண்டி மருதவாணப்பேர் மகனாய் எழுந்தருளும். அப்போது, அவர் செல்வத்திருவடி பட்டளவில் உன் மீனயாக்கையொழித்துய்வாயென்றருளிப்போயினர். அதுமுதல் யான் பல துயரப்பட்டு வருந்தி நின்றேன் அவ்வருத்த மெல்லா மின்று கட்டோ டொழிந்தது. பெருங் கருணையாளனே யென்று துதித்தலும், அவனுக்கருள் புரிந்து சுவர்க்கம் புகவிடுத்து, பயத்தால் மூர்ச்சித்து விழுந்திருந்தநாய்கமைந்தர்கள் உய்ந்தெழக் கருணையானோக்கலும், அவர்யாருங்களை தெளிந்தெழுந்து, மருதவாண நம்பி அருகே நிற்பதும் மீனிறந்து மிதப்பது நோக்கி, மிகவியப்புற்று அவரைத் தழுவிக் களிப்புடனே உபசார வார்த்தைகளைச் சொல்லித்தமது கூட்டத்துள்ளொருவனை அம்மீன் முன்னமே விழுங்கியதன்றோ அவன்மீட்டுந்தம்முடைய கூட்டத்துளில்லாமைக் கிரங்கி அம்மருதப்பிரானிடம் விண்ணப்பித்தார்கள். அதுகெட்டபெருமான் புன்னகை செய்து அதோ அவன் வருகின்றனன் பாருமென, அச்சிறுவன் அம்மீன் வயிற்றி னின்றும் விலையுயர்ந்த நவமணிகள் கணக்கில்லனவாரிப்பெரியதோர்சுமைசெய்துகொண்டு வாயின்வழியே சாதாரணமாய்த் துன்பமின்றி வரக்கண்ட அவ்விப்பர்மகார் அனைவரும் களிப்போ டெதிர்சென்றவனைத்தழுவி யழைத்துவந்து அவன் கொணர்ந்த மணிகளைக் கண்டு மகிழ்ந்து தாமும் அவ்வாறு மணிகளைச் சேர்க்கவிரும்பியதை மருதப்பெருந்தகையார்க்குக் கூற அவரும் கருணையாலவர்களை நோக்கிஉங்கட்குநவமணிகளில்விருப்பமிருக்கின், இம்மீன் வயிற்று நுழைந்து கொண்டுவம்மின் என, அச்சிறுவர்க ளவ்வாறே அம்மீன் வாய்வழி நுழைந்து அங்குத் தம்மாசை யெல்லைப்படுமட்டும் மணிகளை வாரிக்கட்டிச் சுமக்கலாற்றாது சுமந்துவந்து நாவாயிற்சேர்த்து, அவ்வவரும் தாந்தாங்

கொடுவந்த மணிகளிற் சிறந்தன தெரிந்து மருதப்பிரானுக்குக்காணிக்கையென்று கிழிமுடிந்து வெவ்வேறு பொதிந்து வைத்தனர். உடனே நெடுநேரமாயிற்று நம்மன்னைதந்தையர் நமது வரவு நோக்கிநிற்பராதலின் யாம்விரைவிற்செல்லக்கடவமென்று அனைவரும் தோணி செலுத்தி வரலாயினர். அவரங்ஙனமாக,

இங்கே நகரவணிகமாக்க ளனைவருந்தத்தமைந்தர்கள் மனைக்குக்காலத்தில்வராமைகண்டுமனம்வருந்தித் திருவெண்காடராகிய பட்டினத்துப்பிள்ளையார் திருமாளிகைவந்து வினவ, அவர்மனைவியாரும் தம்மைந்தர் வரவுகாணாது வருந்தினராய்த்தமது கணவர்க்கறிவிப்ப, யாவரும் நகரமுற்றுந்தேடினரா யெங்குங்காணாதுகடன்மேல் விளையாடச் சென்றிருக்கலாமென் றெண்ணிக் கடற்கரையடைந்து விசாரித்தவளவில், அங்குச் சிறுவரெல்லா மொருங்கேகூடி மிதவைமேலேறிச்சென்ற செய்தி யுணர்ந்து வருந்தி வரும்வழியெதிர் நோக்கி வாடிநிற்குந் தருணத்தில், தோணியும் வந்துநின்றது; மக்களனைவரும் மணிக்குவைகளோடு கரையேறித் தத்தம் குரவரை வணங்கி நின்றனர். அவர்களனைவரும் பெருங்களியோடு தம்மக்களை யழைத்துக்கொண்டு மனைக்குச் சென்று அவர்கள் த்ந்தமணிகளைக்கண்டு களிப்புற்றுப் பட்டினத்துப்பிள்ளையாருக்கு அவ்வரலாறுணர்த்திப் பெருவிழாக்கொண்டாடி யிருந்தனர். பட்டினத்தாரும் தம்மைந்தர் தந்த மணிகளைக்கண்டு வியப்புற்று வேதியர்கட்கும் எழையர்க்குமாக அம்மணிகளை வழங்கி மகனோடு மனைபுகுந்து இன்புடனிருந்தனர்.

மருதபிரான் வித்தியாப்பியாசம்.

இங்ஙனம் சின்னாள் கழியலும்மருதப்பருக்குக் கல்விபயில்பருவம் வந்தடுத்ததாகக் கண்ட திருவெண்காடர்தவஞ் செய்தாசிரியத்தன்மையடைந்தா ரொருவரைத் தருவித்து, அவரைப் பூணாடைமுதலியவற்றாலுபசரித்து இன்மொழியால் மகிழ்வித்து ஓர் நன்னாளில் அவரிடத்து மருதவாணரைக் கல்விபயிலவமைத்தனர். மருதவாணரும் சின்னாளிற்றானே அறுபத்துநான்கு கலைகளும்பயின்றுவல்லராயினார். பேருலகைக் கணமொன்றிலுணர்த்தவல்ல பரமாசிரியராகிய ஈசனார் சின்னாளிற் பயின்றானென்பது கொண்ட கோலத்திற் கேற்பக்கூறியபடியன்றி வியக்கத்தக்கபடியன்று.

அஃதங்ஙனமாக, அந்நியதேயத்தினின்றோர் வணிகன் பெறலரிய பருமணிமுத்து ஒன்றை அக்காவிரிப்பூம்பட்டினத்தில் வாழும்வசியர்பால்கொண்டுவர, அதனையவரனைவரும் கண்டளவிற் பிரமைகொண்டுமயங்கினான்றிவிலையறியமாட்டாதாராய்த்தம்முட்சி

றந்த திருவெண்காடர்பாற்கொண்டு வந்தனர். அப்போது திருவெண்காடர் அம்மணியை நோக்கி அதன் பருமனுக்கும் திரட்சி வடிவினுக்கும் ஒளிக்கும் நிறத்தினுக்கும் வியந்துநெடுநேரந் தம் மனத்துளாராய்ச்சியுடனிருந்து பின் எவ்வகைமணிக்கும் விலையாவது கொள்வோன் விருப்பினளவாமாயினும் இம்மணி பதினாயிரம்பொன்விலைபெறுமாகத்தோற்றுவது என்றார். அதுகெட்ட அவ்வாணிபரனை வரும் ஒக்குமெனவுவந்து நின்றனர். அதனைக்கொடு வந்தவனும் பெருங்களிப்புற்று நின்றான். அத்தருணத்தில் மருவாணப்பெருந்தகையார் பள்ளிக்குச்சென்று வருபவர் வழக்கம் போலும் தம் பிதாவுட னுண்ணத் தடை நேர்ந்ததாக அவரை யழைக்கவந்தனர். அங்குக்கூடியிருந்த வசியர்குழாத்தையும்அவரிடையிருந்த பெருமணிமுத்தையுங்கண்டு, அங்கிருந்தாரைநோக்கிப் பெரியீர்!இம்மணியெங்கிருந்து கிடைத்தது;இதன்விலையென்ன? யாரிதனை விலைமதித்து வாங்கினீர்களென்று வினவினர். அப்போது பட்டினத்துப் பிள்ளையார் மருதவாணரை நோக்கி, ஐய குழந்தாய்! இம்மணியைப் பற்றிய விசாரமுனக்கேன்? பசிபொறுக்கலாற்றாதவன் பள்ளிக்குச் சென்று வந்த நீ மனை புகுந்துண்டு பசியாற லாகாதாவென, அவரை நோக்கிமைந்தனார், அப்பரே!அங்ஙனமன்று பலகலைத் துறைபயில்வோருலகியலினு முலகியற் பொருளினும் உண்மையறிய முயல்வது கடனாதலின்,நவமணிகளிலக்கணத்தினையான் எம்மாசிரியர்பாற் பயிலும்போது கேட்டதோர் குறிப்பாடிம்மணியிற்கண்டேனாகலின் அதனை நுமக்கு வெளிப்படுக்கமுயன்றேன் எனலும், அங்குள்ள வசியரு ளொருவர் இவர் சொற்கேட்டு வியப்புற்று அதனையறிய விரும்பினராய்! ஐய எம்மருதப்பெருந்தகாய்! கேட்டருள்க. வேற்றாரினின்றும் இவ்வணிகர் தந்த விம்மணி எம்மான் மதிப்பரிதாய் நுந்தையாராகிய விப்பட்டினத்தையர் பாற்றந்தேமாக அவர் பதினாயிரம் பொன் மதித்தனர். இதன் வரலாறிது, இனிநீர் கூறுவது கூறுமெனக்கேட்ட, மருதையர், பெரியாரே! யெந்தையார் மதித்த பதினாயிரம் பொன்னையும் யானே தருகிறேன்; ஆனால் இம்மணிகண்ணானு நோக்கத் தக்கதன்று; என்னெனில், இதனுள் நீர் கிடந்துள்ளது. இது ஆணிமுத்தன்று. இதைத்தொட்டாலும் வறுமை நோய் முதலிய வுண்டாம். அதனை நீவிர் அனைவரும் பார்க்கவென்று, முன்பின் நோக்காதம்மணியையுடைத்தனர், உடனே அதனுள்ளிருந்த நீர் வெளிப்பட்டது. அதுகண்டயாவரும் வியப்புற்று மருதப்பிரானை மகிழ்ந்துகொண்டாடினர்.

பின்பு மருதவாணப்பெயர்வள்ளல் அம்முத்தினைத்தந்த வணிகனுக் கிரங்கித் தாமுரைத்த வண்ணம்பொருள்தரவெண்ணி,கடா

ரபுரத்து வாழுஞ் சிவநேசத்திற் சிறந்தஞானநந்தனென்னுந் தம துநேயனுக்குத் திருமுக மளிப்ப, அவ்வணிகன் அத்திருமுகம் பெற்றுக் கடாரபுரமடைந்து அச்சைவனிடந் திருமுகங் கொடுத் தளவில் அவன் அற்புதமும் ஆராமையுங் கொண்டு அன்போடெ திரேற்றுத்தலைமேற்றரித்துப் பூசித்து வாசித்து, உடனே அவ்வ ணிகனை உபசரித்து இனியனகூறிக்குறித்த பொன் குவியலைக் கொ டுத்து அனுப்பினன். இச்செய்தி யுணர்ந்த வெண்காடர், தமது மைந்தர்பால் அச்சமும் அன்பு மிகுந்தவரா யிருந்தார்.

மருதப்பெருந்தகை வாணிபத்தின் மேற்கலமேறிச்சென்றது.

இங்ஙனம் நிகழுநாளில் பதினறாண்டெல்லை குறுகியது, மருத வாணப் பெருந்தகையார் முன்னந் தாம் சிவசருமருக்கும், திரு வெண்காடருக்கும் அனுக்கிரகித்தபடி முத்திக்கு விடுக்குந் திரு வுள்ளமுடையராய் ஒருநாள் பட்டினத்துப் பிள்ளையாரிடஞ்செ ன்று, ஐயனே, கலமேறிக் கடலோடி வியாபாரம் செய்து புலதுறை பார்த்துவரமிக்க ஆசை யொன்றுடையேன். தீவாந்தரங்களில் விலையுயர்ந்தமணி முதலியன பலசிறந்த பண்டங்கள் இருப்பதா கக் கேள்விப் படுகின்றேன். வணிகராகப் பிறந்தவர்கள் இளமைப் பருவத்தில் வருந்தியும் பொருளைமிதப்பத் தேடவேண்டுவதே கடனன்றே? முதுமையில் என்ன செய்யக்கூடும். பொருள் மிதப் பவில்லாவிடி லிம்மை மறுமைப்பயனை அடைவ தெங்ஙனம் "ஒண் பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கெண்பொருளேனை யிரண்டுமொ ருங்கு" எனப் பெரியருங் கூறினரே. "திரைகடலோடியுந் திரவிய ந்தேடு" என ஔவையாரும் கூறினரன்றே. ஆதலால் எனக்குக் கட்டளையானல் தீவாந்தர வியாபாரத்திற்குச் செல்லும் இந்நகர வாணிகமாக்களோடு யானுஞ்சென்று சின்னளில் வருகிறேனெ ன்றனர்.

அதுகேட்ட வெண்காடர், நெஞ்சு திடுக்கிட்டு, அண்ணலே! என்னகூறினய்! பிள்ளைகலி தீர்க்கவந்த பெருமானே! உன்னைப்பிரி ந்து ஒருகணமேனும் உயிர்வாழவல்லனே! என்னிலைந்து என்ன செய்யத்துணிந்தாய்? உனக்குப் பொருளென்ன தாழ்வாகவாவுள் ளது. வேண்டிய செல்வநிரம்பி யிருக்கப் பல துன்பத்தோடு கட லோடி வருந்திப் பொருள்தேட வேண்டுமென்ப தென்னை? எத்த னைகாலம் நீ எவ்வாறு செலவு செய்யினும் உலவாதநிதிக்குவைய ல்பாசிப்பற்றிக் கிடக்கின்றனவே. நீ செல்வப்பிள்ளையாகி மனம் போனபடியுண்டுடுத் துலாவித்திரிவதை விட்டு இவ்வண்ணம் நெடு ந்தூரம் போக்குக் கிட்டம்வைத்திவ்வாறு சொல்வதுமுறையன்று.

நீ இன்னும் முலைப்பால் மணம் நீங்காதவாயையுடைய சிறுமதலை இக்காலம் உண்டுடுத்தாடுந் தரத்தது. இதில் பொருள்தேட விரும்புவது முறையல்ல. அன்றியும் உன் அன்னையும் மூத்தன்னையும் உன் பிரிவுக்கஞ்சி உயிர் துறப்பார்கள். ஆதலாலிப்போ திவ்வெண்ணத்தினை யொழிப்பாயாக ஐயனே! என்றுவருந்திச்சொல்லினர்.

அதுகேட்ட மருதப்பரும், சிறுநகைசெய்து, அப்பரோ! நீருரைத்தன முழுவதும் உண்மையே உங்க ளன்புக்கும் நிலைமைக்கும் தக்கதுவே கூறினீர். ஆயினும் "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல்" என்றபெரியோர் ஆணையை நிறைவேற்றுவது என்கடன். ஆகவே அக்கடனை மனமொழி மெய்யளவாகக் கழிக்கவேண்டுமானால் பொருளின்றி முடியாது. ஏனெனில், "தம்பொருளென்பதம்மக்களவர் பொருடந்தம் வினையான் வரும்" என்பது சான்றோர் துணிபு. அன்றியும் உலகியலறியாதவனுக்குத் தருமவியலும் கடவுளருளியலும் உணர்வதருமையாம். அவ்வுலகியலறிதலும் பலதேயஞ் சென்று வருதல், அரசவைபுகுதல், கற்றுணர் புலவர் கூட்டத் திருத்தல், இங்கித நட்பினரோடளவளாவலு மாகிய இந்நான்குங் கடைப் பிடித்து நல்லொழுக்கத்தோடும் ஒழுகினாலன்றி முற்ற முடியாது. இதற்கு இளமைப் பருவமும் ஒருகருவி. அறிவதறியும் பருவமாகிய இதுகடந்தால் தருமநுணுக்க மெவ்வாறு முதுமையில் வெளிப்படும். முன்தசரதன் தன் முதுமையில் தவஞ்செய்து வருந்தி யீன்ற இராமனிலக்குவனெனனு மிள மைந்தரை அரக்கரோடு போர்செய்ய வன்றோ விசுவாமித்திர முனிவர்பின் செலுத்தினர். நீர் அறியாத தல்லவே! குலவொழுக்கமும் தொழிலுமாயினும், மக்கள் காலையிற் பயில்வதே சிறப்பும் பயன்படுவதும் ஆம். "அகாலப்பயிரும் அன்னையப்பனில்லாப் பிள்ளையும் அல்லற்படும்" என்பதுலக வழக்கமன்றோ? எல்லாமுணர்ந்த நீரே இங்ஙனமானால் என் அன்னைமார் பெண்பாலார் அவர்கள் நிலைமை ஏதாகமாட்டாது. ஆதலால் என் விண்ணப்பத்தைப் பயனற்றதாக்காது கட்டளை தரவேண்டுமென்று கூறக்கேட்ட வெண்காடனார் தம்முடைய மைந்தர்குறிப்பைத் தெரிந்துகொண்டு, இனி இவர் தடைக்கு அஞ்சார் என்று எண்ணி, ஆயின், ஐய! யானு முன்னுடன் பொதுவல் போதுக என்றார்.

அப்போது மருதவாணர் அப்பரோ! யாமிருவரும் ஒருங்கே சென்றால் எம்மன்னையர் நம் இருவர் பிரிவு மொருங்காற்றா திறந்துபடுவர். அல்லதூஉம் என்முயற்சி ஊக்கமுற்றுச் சிறவாது. ஆகலின் நீர் கருணைசெய்திங்குத்தானே என்னன்னைமாரைக் காத்திடு

திர். யான்விரைவில் பொருள்தேடி வந்து சேர்கின்றேனெனச் சொல்லக்கேட்டு, பட்டினத்தையர் மறுக்கமாட்டாதவராய்ச் சிறுபோது மயங்கி நின்று பின்னொருவாறு தெளிந்து, அவர் வழிச்செலவுக்கும் வியாபாரத்திற்கும் வேண்டுங் கருவிகளையும் துணையையும் பண்டங்களையுங் குறைவறச் சேகரித்து, புதிய தொருகலத்தில் நிரப்பித்தக்க மீகாமனொருவனை நியமித்து, நன்னாளில் வழிக்கொண்டு தாய் மூத்தன்னை தந்தை சுற்றத்தினர் சிவனடியார்முதலிய பெரியோர் யாரையும் வணங்கி விடைபெற்றுக்கடற்றுறையடைந்தனர். அதற்கு முன்னமே அவ்வூரிலுள்ள வணிகமாக்கள் மைந்தரும் இவர்க்குத் தோழருமானவர்கள் யாவரும் வாணிபத்தை முன்னிட்டு அவ்வாறே பற்பலபண்டங் கொண்டு கலமேறவந்திருந்தவர்களோடு தாமும் ஏறிக்காற்றின்சாயலுமொத்துவரக் கலஞ் செலுத்தி மிகவிரைவிற் சென்றனர். இவர்கள் அன்னைதந்தையர் சுற்றமனைவரும் காவிரிப்பூம் பட்டினத்திற்றானே இவர்கட்கு ஊதிய மிகப்பல்கவென்று தத்தம் பழிபடுகடவுட் பராவி மைந்தர் வரவையெதிர்நோக்கி நின்றனர்.

மருதப்பெருந்தகை வாணிபத்திறனும் மீட்சியும்.

இங்ஙன மிருக்கையில் பொருள்வளர்க்க வாணிபங் குறித்துக் கலமேறிச் சென்றவர்களனைவரும் சிலநாளில் ஒருதீபத்தினையடைந்து அங்குத் தம்பாலுள்ள பண்டங்களைமாறிக்கொண்டு,வேறுபல நாடுநோக்கி, மருதவாண ரொழிய, மற்றையர் யாவரும் போயினர் மருதவாண ரவ்விடத்திற்றானே யிருந்துகொண்டு தம்பாலுள்ள பண்டங்களை மாறிப் பொருள்கொண்டு, கோயில், மண்டபம்,மடம்,சத்திரம்,சாலை, நந்தவனம், சோலை,குளம், கூவல்,தடாகம் முதலிய பல்வகையறங்களையும் சீவகாருணியத்தாற் செய்து ஏழையர்முதலியயாவர்க்கும் உபகரித்துக்கொண்டு பல்புகழ் நிறுத்தி வந்தனர். இவ்வாறு சிலமாதங்கள் கழிந்தன.

அப்பால், வாணிபத்தின் பொருட்டு வேறுதீபநோக்கிச்சென்றிருந்த அவர் நண்பர்யாவரும் அந்தந்த தீவுகளினும் நாடுகளினுமுள்ள பண்டங்களை மாறிப் பொருள்விருத்தி செய்தூதிய மடைந்தவர்களாய்ச் சின்னாளிற்றானே மருதவாண ரிருந்தவிடம் வந்து சேர்ந்தவரைக்கண்டு முகமன் கூறிப் பிரிவாற்றாமை வினவி மகிழ் கொண்டாடி யிருந்து, அவர்வாணிபத் திறம் வினாவினராக, அவரடைந்த விலாபம் வேறு பிறிதின்றியவர் பால்வரட்டிகளும், அவல் கடலையுமே யிருக்கக்கண்டு, திடுக்கிட்டு, ஐய, நீர் கொண்டுவந்த வுயர்விலைப் பண்டங்களும் பெருவிலைத் திரவியங்களுமேதாயிற்று,

உம்மிடத்தில் உலர்ந்த எருக் குப்பலும்,மிகுந்த அவல்கடலையுமே யிருக்கின்றனவே, என்ன காரியஞ் செய்தீர்?பட்டினத்துப் பிள்ளையாரெனப் புகழ்பெற்ற திருவெண்காடர் தவப்பேறாய் வந்த நீர் எம்மனைவர்க்குந் தலைவராக விருக்கின்றீர், எம்மினுஞ் சிறந்த அறிவாற்றலுடையீர், பொருள் வளர்க்க எம்மையேவினீர், அருள் வளர்க்குங் கொடையாளராயினீ ரன்றி மருள்வளர்க்கு மாண்பிலர்போல் என்னபண்டம் தேடிவைத்துள்ளீர். ஐயா! இது உமக்கு அடுக்குமே?நுந்தையார் கேட்டால் என்னினையார்?என்னுரையார்? நீர் என் செய்தீர் என்செய்தீர்? நும்மையர்க்கென்னுரைப்பீர் என்று,மிக்க பரிதாபத்தினரா யவர்கள் வினவ,மகாலிங்க மூர்த்தியாகிய மருதவாண வள்ளலார் அவர்களை அருக்கிய நோக்கினாற் சிறிது கடைக்கணித்து, அன்பரே! நீவிர்யாவரும் என்பொருட்டேன் அவலப்படுகிறீர்கள்? எந்தையார், இக்கருமம் பற்றி நுங்களை வினவாதவகை நேருமாக. என்றனர்.

அதனைக்கேட்ட தோழர்கள் யாவரும், என்னகாரணம் இதுவரையு மிருந்தவாறன்றி நமது மருதவாணவள்ளல் குணத்தான் மாறாற்றுக் குறிப்பு வேறுபட நின்றனர். திருவெண்காடர் தவப்பயனிதுவேயோ? யாமென் செய்வது ? போனதுபோக இனியாமனைவரு மிவரைப்பிரிந்து உறைவேமல்லேம். என்றுதம்முள் துணிந்தனராகி யிருக்கையில் அங்கு சிலநாள்கழிய மீட்டுந் தங்கள் காவிரிப்பூம் பட்டினஞ் செல்லயாவரும் எண்ணித் தத்த மரக்கலங்களிற்றாம் தேடியபொருளையும் பண்டங்களையு மேற்றுவித்துத்தாமு மேறிக் காற்றின் வாய்ப்பறிந்து நாவாயோட்டி வருகையில், எல்லாம் வல்ல மருதவாணப் பெருந்தகை ஓர் திருவிளையாடலைக் கருதித்திடீரென்றோர்பெருங்காற்று மழைவரப்புரிந்துதிசைதப்பிக் கலங்களோடச் செய்வித்தனர். ஆகவே அப்பெரும்பியலுட் சிக்கியாவர் மனமுழுளையக் கப்பலிருட்சூழலுட் புகுந்ததாகப் பலநாள் திக்குத் தோற்றாது அலைந்து திரிகையில் அவரவர்கள் சேர்த்துவைத்திருந்த வுணவுமுதலிய வுபகரணங்கள்செலவழிந்துபோய்க் குளிரான் மெலிந்து அதனை நீக்குவதற் கெரிதுரும்புமின்மையால் மிகவருந்திப் பெருங்கவலை யடைந்தவர்களாய், மஹாலிங்க மூர்த்திமாகிய மருதப்பரிடம் வந்து தோழமையா லினிய வார்த்தைகூறி, ஐயரே! உம்மையன்றி யித்தருணத்தில் எமக்கார் திக்கு எம்மனைவரையும் காப்பது உமதுகடன்.என்னெனில் பலநாளாய்க்காற்றுமழையுட் சிக்கித் திசைதப்பி யலைவதில் காவிரிப்பூம் பட்டினம் சேரும்வரையிலாவதாகத் தேடிவைத்திருந்த விறகு முதலிய வுபகரணங்கள்முழுவதும் செலவாய்விட்டன.இன்னம் மழைவிட்

டபாடில்லே. யாம் எங்குள்ளோமோ கலம் எத்திசை நோக்கிச் செல்கின்றதோ வொன்றுந் தெரியவில்லே. குளிரோவுயிருடலிற் றங்காவகை வாட்டுகின்றது. விறகுமுதலியன விலைக்குக்கொள்ளவென்றாலும் கரைதுறை யாதொன்றுந் தோற்றவில்லே. என் செய்வோம். உம்மிடத்துள்ள வரட்டியையேனு மித்தருண மெங்களுக்குக் கொடுத்து உபகரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். கேட்டீர்களோ! முனிவர்களே என்றுபமன்னியர் சொல்ல மேல் நடந்தகதை கேட்க ஆவலுடைய அம்முனிவர்கள் அவ்வாசிரியரைவணங்கி அப்பால்நடந்தகதைவினவக் கூறலாயினர்.

கேளும் முனிவர்களே! அன்பர்கள் வேண்டுதலுக்கு இரக்கமுற்ற நமது மருதவள்ளல் அவர்களை நோக்கி, அன்பர்களே! நீங்கள் ஊரைச் சேர்ந்தவுடனே என்வரட்டியிடைக்கிடையாகக்கொடுத்தாற்போதும் என்று சொல்லி அதற்கவர்களிசைவு பத்திரமெழுதிப் பெற்றுக்கொண்டவ்வாறே நிறுத்துக்கொடுத்தனர். பின்பவர்கள் யாவருந் தத்தங்கலங்கட்குச் சென்று குளிர் பசி தணிந்து சுகமுற்று மருதப்பரை வாழ்த்தியிருந்தனர். அப்பால் மழையும்விட்டது; காற்றுந்தணிந்தது. யாவரும் திசை கண்டுபிடித்துக் கப்பலோட்டித்துறைமுகமறிந்து காவிரிப்பூம்பட்டினம் வந்துசுகமாகச்சேர்ந்தனர்.

மருதப்பெருந்தகை ஊரடைந்தது.

இதற்குமுன்னே இவர்கள் பிரிவாற்றாமையால் வருத்தப்பட்டுப் பகலூணுமிரவுறக்கமுமின்றி ஏக்கங்கொண்டிருந்த அவ்வவர்கள் தாய்தந்தையருஞ் சுற்றத்தினரும் நண்பினரும் இச்செய்தி கேள்வியுற்றவளவிலே தங்கடங்களிட்ட தெய்வங்களை வாழ்த்தி வழிபட்டுக்காணிக்கை செலுத்தித்திருவிழாக்கொண்டாடினார்கள். திருவெண்காடரும் அவர் மனைவியும் துயரக்கடற்கரை காணாது உலகை மறந்து மருதவாணர் திருவுருவமொன்று தவிர மற்றொன்றும் புலப்பாடில்லாதவர்களாயிருந்தவர்கள், மருதையர் திருத்தோணி துறைமுகம்பற்றியமைவந்து சொன்னளவில், தம்மையறியா தெழுந்த களிப்பென்னும் ஊழித்தீபரந்து முன்னிவர்களைஉமிழாது விழுங்கிக் கிடந்த துயரப் பெருங்கடலிருந்தவிடங் காணாதபடி வாளச் செய்தது. அங்ஙனம் இன்ப மழை பொழிந்தது. இவர்கள் அங்கங்குளிர்ந்து ஐம்புலன் செழித்துத் தத்துவங்களெல்லாந்தலையெடுத்து அறிவும்பழுத்த வாறாயிற்று. உடனேதிருவெண்காடர் தமது பண்டாரத்தைத் திறந்து ஏழைகள் கொள்ளவிடுத்து, தமக்குச் செய்திவந்து சொன்ன பேரனைவர்க்கும்

ஆடை ஆபரண நிதிக்குவைமுதலியன வெறுப்பக்கொடுத்து, தக்கார்க்குத்தானமிதப்பவளித்துச் சுற்றத்தினர் நண்பினர் முதலியோர்கட்கும் உண்டாட்டுச்சமைத்து, தமது ஆன்மார்த்தமூர்த்திக்கும், திருவெண்காடுடையார்க்கும் சங்கமேசுரருக்கும் நைமித்திகத் திருவிழாக்கோளெடுப்பித்து, அங்ஙனே இல்லம் புதுக்கி அணிசெய்வித்து அட்டமங்கலம் அமைத்து நகர்களிகொண்டாட, யாவருந் தம்மைப் புடைசூழ்ந்துவரக் கடற்றுறைசென்று சிலரோடுபடகேறி, மருதையனையழைத்துவர நல்லோரை நாடிக் கப்பற்குச் சென்றனர். செல்லும்போது, மருதவாணரோடு வாணிபத்திற்குச் சென்றோருளொருவன் முன்வந்து இப்பட்டினத்துப் பிள்ளையாரோடு, ஐயா! நுமது திருக்குமாரனார் சிலநாளாய்ச் சித்த வியற்கை வேறுபட்டனராகக் கண்டேம். ஆதலால் இதனை உமக்குக் குறிப்பிக்கவே முன்வந்தேனென்று சொல்லிப்போயினன். அதனைக் கேட்டவுடனே நெஞ்சு திடுக்கிட்டு உவகைமாறிச் சற்றுக்கவலைகொண்டனராய், எவ்வகையாயினும் மகன்வந்துசேர்ந்ததுபோதும்,மேலே விகற்பங்களைச்சீர் செய்துகொள்வேனென்னுந் துணிவாலொருவாறு தேறிக் காலந்தாழாது கலம்புக்குத்தம் மைந்தரைத் தழுவிக்கொள்ள, அவரும் வழிபட்டு நிற்க,வெண்காடர் உச்சிமோந்தணைத்து ஆதரித்துச் சாவதானமாயருகிருத்திக்கொண்டு, பின்பு, அக்கலத்துள் சில்வரட்டிகளும் அவல்முதலிய சிவபண்டங்களுந் தவிர வேறில்லாமை கண்டு, பிரமித்து, உடன்சென்றோனொருவன் வந்து மருதவாணர் சித்தவிகற்பத்தினராயினனொன்று சொன்னதுண்மையேபோலும். நஞ்செல்வன் முகக்குறியுஞ் சிறிது வேறுபாடுற்றுள்ளது. ஆயினும் தேற விசாரிப்போமென்று,மெல்ல மகாலிங்கமூர்த்திமானை அழைத்துக்கொண்டுபடகிற் பிரவேசித்துக் கரையை யடைந்தோர் மணிமாடத்தில் மருதப்பெருமானையிருக்கப்பண்ணி, மெய்க்காப்பாளரையமைத்துக் காக்கத் திட்டஞ் செய்து, மீட்டும் மருதரசுவந்த கலத்திற்கேகி, அங்குள்ள சரக்குகளாகிய வரட்டி, அவல் முதலியவற்றினையும், எனையபெட்டி கணக்குமுதலியவற்றையுமெடுப்பித்துவந்துமருதவாணரோடு சென்று வந்த வாணிகமாக்களுடனிருந்து சோதிக்கும்போது, அவர் பெட்டியில் ஒரு வரட்டியும் ஓலையுமிருக்கக்கண்டு, முதலில் வரட்டிபெட்டியில்வர நிமித்தமென்ன? இதில் ஓர் விசேடமிருக்கவேண்டுமென்றெண்ணி அதனை யுடைத்துப் பார்க்கையில் அதனடுவே சூரியனொளிவிட்டெழுந்தாற்போலும் மாணிக்கமொன்றிருக்கக்கண்டு வியந்து, மற்றைய வரட்டிகளையும் சோதனைசெய்கையில் அவ்வாறே யெல்லாவற்றுள்ளுமிருக்கவே வியப்பும்களிப்பும் அடங்காதவராய்த் தம்மை மறந்து, தம்மைந்தர் திறத்

தையும் ஆற்றலையும் எண்ணியடங்காமகிழ்வோடுமற்றையவற்றை யும் சோதிக்கையில் அவல்மூட்டைமுழுவதும் பொன்மணல் விரவியதாகவுமிருந்தன. ஓலையையெடுத்துப்பார்க்கையில் அது உடன்சென்ற ஏனையவாணிகமர்க்கள் மருதவாணர்பாற் பெற்றுக்கொண்டவரட்டிக்காக, நகர்சென்றவுடனே அவ்வரட்டியைக்கொடுக்கும்படியொப்புக்கொண்டெழுதிக்கொடுத்த பத்திரமாகவிருந்தது கண்டு, அவ்வாணிபமைந்தரைநோக்கி, இதுநீவிர் எழுதிக்கொடுத்ததாமோவென அவர்கள் யாவரும் ஒப்புக்கொண்டு ஆம் யாமெழுதித்தந்ததே என்றுகூறித்தம்முள்வியப்பும் அச்சமுமெய்தி மருதவாணர் தரமறியாது மயங்கிச் சித்தவிகற்பங்கொண்டனரொன்றும், வாணிகம்முறையே செய்யவறியாது, வறிதே வரட்டியும் அவலும் கொண்டுவைத்தாரொன்றும் மயங்கி மோசம் போனோமே! அடைமழையில் அவர் பால்பெற்ற வரட்டிகளை நன்கு சோதியாமல் சாதாரணமானதென்றெண்ணி அடுப்பெரித்தொழித்தோமே! அவர் பத்திர மெழுதிக்கொடுக்க வென்றபோதும் யோசிக்காமற் போனோமே! இப்போது திருவெண்காடர் பத்திரப்படி வரட்டியைத் தரச்சொல்வாராகில் என்னசொல்லவல்லோம். உளவறியாது, மருதவாணர் சித்த விகற்பங்கொண்டாரொன்றும் யாரோ அவர்க்குச் சொல்லிவிட்டார்கள். இனி அவர் நம்மை என்னவகையில் எண்ணுவார்? நாம் அனைவரும் அவரை வஞ்சிக்க முயற்சித்தவர்களாக வல்லவோ முடிந்தது. என்ன நேர்ந்தது? என்செய்யக்கடவோமென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

பட்டினத்தார், மருதப்பிரானைக்காணாதுவருந்துகை.

திருவெண்காடரோவென்றால் தமக்குத்தம்மகனார் தேடித்தந்தமணிக்குவைநிதிக்குவைகளைக்கண்டு, களி ததும்பினவராய் அங்ஙனே ஓடித்தம்மகனைத் தழுவ ஆவல்கொண்டு அக்காவன் மாளிகைக்குட் சென்றார். அங்கே மருதப்பெருமானைக் காணாமல் திடுக்கிட்டு மெய்காப்பாளரை வினவ, அவர்கள், எம்முடையீர்! நீரிட்ட கட்டளைப்படியே காத்திருந்தனம், ஆயினும் தேவரீர் திருமகனார் சென்ற வழியாமறியோமென்று கலங்கிநின்றனர். திருவெண்காடர், மனத்துள்ளும் ஓர் கலக்கந்தோன்ற இனி என்செய்கோ! நான் என்மகனுண்மையுந் திறனுமறியாது தவறிழைத்தேனே! எவ்வாறினியவனைக் காண்பேன்! என்னகருதியதோ அவன் திருவுள்ளம்? தந்தை நம்மை இழிவெண்ணினரொன்று எண்ணுமோ? அறிவிலோர் சொற்கேட்டையர் அவமதித்தனரோ எனச்சிந்திக்குமோ? என்னுயிர்க்கிழவன் என்னெஞ்சென்னைச் சுடப்பண்ணிமறைந்தனனே! தவறு தவறு!! ஆயாதுசெய்யுங்காரியம் ஓயாத்துயரமாமன்றோ, "பதறாத காரியஞ் சிதறாது" என்னும் பழ

மொழியையுமறந்தேனே என்றிப்படி நெடுநேரஞ் சிந்தித்து, வேறோர் ஞாபகந் தோன்ற நெடுநாட்பிரிந்தபிரிவாற்றாமையால்தாய் முதலியோர்களைப் பார்க்கவென்றாவொருகால் போயிருக்கினும் இருக்கும்; ஆதலால் மனைபுகுந்து பார்ப்போமென்று விரைவோடும்போயினார். அங்கு பெருங் களிப்பிலிருக்குந்தம்மனைவி தாய்முகம்நோக்கிச் சிறிது மனத்துயரமாறினவராய்த் தம் மகனார் வரவை விசாரித்தனர். அப்போதவ்விருவரும் இப்போதே நமது சிறுவன்வந்துண்டு இதோ புறத்திற் சென்றான். எமக்கவன் வாணிபத்தினாற்றேடித்தந்து பூசித்தளித்த ஆடை பூண்மணியிவைவையெனக்காட்டக் கண்டும் ஒரு சற்றாறினரேயன்றித் தம் மனத்துட்டோன்றிய கலக்கமுற்று மொழித்தவரல்லர். ஆகவே மீட்டும்மருதவாணரை ஒருக்காற் பார்க்கவேண்டுமென்னும் அவாத் தூண்டிகொண்டேயிருப்பவெழுந்தங்குமிங்குமோடித்தேடி நகரமுற்றும்நாடுவாராயினர். நாடியும் எங்குங் காணாமையால் பெருங்கலக்கப்பட்டவராய் மறுபடியுந் தம்மாளிகைவந்து கிலேசப்பட்டுக்கொண்டிருந்தனர்.

மருதப்பிரான்றிருவுருக்கரந்ததும்சிவசருமர்முத்திபெற்றதும்.

இவரிங்ஙனமாக மருதவாணரோ, இடைமருதில் தம்மை அன்போடு படவுருவத்துப் பூசித்து நேசித்திருந்த சிவசருமர் பாவனைமுதிர்ந்து சிவயோகங்கூட, அவர் குடும்பத்தினரோடும் இரவுபகலற்ற சிவயோக சமாதியிலிருக்கையில், அவர்க்குக் கூறியிருந்த பதினாறாண்டும் நிரம்பியதால் சோதிப்பிழம்பாக வெளிப்பட்டச் சோதியில் அச்சிவசருமனையும் அவர் குடும்பத்தினரையும் ஐயிக்கம் பண்ணிக்கொண்டு தாம் தம்முடைய மூலலிங்கமூர்த்தியாகிய மஹாலிங்கத்துட்பிரிவறக் கலந்தெழுந்தருளி வீற்றிருந்தனர். கேளும் முனிவர்களே! கடவுள் "பந்தமும் வீடும் படைப்போன்றானே" என்ற முதுமொழி உண்மையாயிற்று என்றுபமன்னிய முனிவர் கூறினர்.

பட்டினத்தடிகள் திருவருள்பெற்றது.

அப்பால் நடந்த வரலாறு கூறுமென முனிவர்கள் வினவ உபமன்னிய பகவான் சொல்லலாயினர். முனிவர்களே! இவ்வாறு திருவெண்காடர் கிலேசப்பட்டு உண்டி வெறுத்தவராய்ச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவர் மனைவியார் ஒரு சிறு பெட்டியைத் தந்து அவர் முன்வைத்து இதனைத் தேவரீர் வந்தவுடனே கொடுக்கும்படி நமது மைந்தன்றந்துபோயினான்என்றார், உடனே பட்டினத்தார்மைந்தன்றந்ததெனவேபோரவலோடெடுத்துத்திறந்து பார்த்தார். அதில் ஓர்காதற்றவூசியும்ஓர் ஓலைநறுக்குமிருக்கக்கண்டுமிகுந்த ஆச்சரியமுடையவராய் அவ்வோலையைப்பார்க்கஅத

ளுள் "காதற்றவூசியும் வாராது காணுங்கடைவழிக்கே" என்றெ ழுதியிருந்தது. ஆயின் இவர் முன்னஞ் செய்தவக்குறை முக்கடி வந்த மூர்த்தியாதலால் மருதவாணப் பெருந்தகையார் திருநோக் கம், பரிசம், பாவனை, வார்த்தை முதலியவற்றால் மனம் முன்ன மே பக்குவப்பட்டிருந்த தாக, அவ்வளவிற்றானே இவரோடு ஒருமைப்பட்டிருந்த இருவினைக்கட்டமவே, மும்மலமும் பரிபாக ப்பட்டு, நாற்கரணமுஞ் சுத்தமாய்,ஐந்துபுலனுமொரு நெறித்தா கி, ஆறுபகையுமற்று,எழுபிறப்புங் காலம,வெண்வகைச் சித்தியும் எதிர்நின்று பணிகேட்ப, ஒன்பது நிலையுந்தாண்டிப், பத்துத்திசை யும் சிவானந்தம் பரந்தவெள்ளமாகவெழுந்து கவர, அதனுண் மூழ்கித்தேடும் பொருள் வேறொன்றின்றிக் கவலையற்றாராதலும் அருள்வாணி முன்னிற்கவே:

" பட்டைக்கிழித்துப்பருவூசிதன்னைப்பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்கையின்மூன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயக்காரிதன்காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோவிங்ஙனேசிவன்மீண்டதுவே" எ-ம்.

" சூதுற்றகொங்கையும்மானார்கலவியுஞ்சூழ்பொருளும்
போதுற்றபூசனுக்கென்செயலாஞ்செய்தபுண்ணியத்தால்
நீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டானென்றன்கைதனிலே"

என்றுசொல்லி இருவகைப்பற்றுமற்றவராய் உபசாந்தம்பிற ந்த சித்தவிருத்தியுடன் உலகத்தினையருக்கிய நோக்கால் நோக்கி, "தாம் பெற்ற பேறிவ்வுலகம் பெறுக" என்பது சிவமெய்ஞ்ஞானி களது தயாவினியல்பாதலால் உலகத்தாருய்யும்பொருட்டு, தமது நெஞ்சினை முன்னிலையாக்கி யுணர்த்துவார்.

"வாதுற்றதிண்புயரண்ணாமலையர்மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும்புகலுநெஞ்சேயிந்தப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமென்றேடிப்புதைத்ததிரவியமென்
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே" எனவும்.

"வேதத்தினுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்தபுண்ணியத்தா
லாதித்தன்சந்திரன்போலே வெளிச்சமதாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே. எனவும்,

உபனிடப்பொருளவாகிய திருப்பாடலருளிச்செய்து, தாயா ரை நோக்கி, அம்மே! உமது தவஞ்சிறந்தது.நீர் யாதொன்றற்கும் வருந்தாதிரும். உம்மை ஒருகணமும் பிரியேன். யான் குரு பரன் ஆணைவழியினிற்பவனாயினேன். என அன்னையாரும்அக்குறி

ப்பறிந்து, ஐய! எனக்கிறுதிநாள் சமீபித்திருப்பதால் என்னீமக்க டனைக் கழித்தாவது செல்லலாகாதாவென, அவ்வாறேயாக, என்று சொல்லி, எதிர்நின்ற தமது ஆத்தநண்பரும் தலைமைக்காரியக்காரருமாகிய சேந்தனுனை நோக்கியிப்பொருண்முழுவதும் இவ்வுலகிற் பல்லாருங்கொள்ளப் புரிவீரென்றுசொல்லி, சூறைவிடப்பணித்து விட்டு, தொடர்பொன்றுமில்லாராய்ப் புறப்பட்டனர். அக்காலத் திலவர்திருமேனிமேலாடைகழன்றிருந்தமையுமுணர்ந்திலர். அதுகண்டு அவர்மனைவியார் சிவகலையம்மையார்சென்று வணங்கியெம்பெருமானே! அடிமைக்குத்தேவரீரைவிட்டோர்கதியில்லையே! அடியேனும்முடன்வருகின்றேன் என்று பணிந்துகூற, பெண்ணே! யாவர்க்குங் கதியாவார் சிவபெருமானுர். ஆயினும் யான் குருபரன் றிருவாணைவழிநிற்பேனுயினேன் இனி இவ்வுலக முயற்சியில் உழல்வேனல்லேன், நீயோ! என்னேடு தொடர்ந்துவருமாற்றலில்லா தவளாதலால் சிவநேசம் அடியர்நேசமறவாமல் இங்கிருந்து திருவடியடைதி. என்னுரை மறுப்பதுன் கடனல்லவென்றுசொல்லி அவரைநிறுத்தி, எதிலர்போற் சென்று ஊர்ப்பொது மண்டபமடைந்திருந்தார் அப்போது, அவ்வூரிலுள்ள முதியோர், நட்பினர், சுற்றத்தினர், அயலவர்முதலிய யாவருமிச்செய்தியறிந்து வந்து கூடி அவரைக்கண்டு, ஐயரோ! என்செய்தீர், நீர் எங்கள் முதலியல்லீரோ? என்னகுறையுள்ளதென்றிப் பரதேசிகோலங்கொண்டீர்? இனி எமக்கு ஆதரவாவார் யாவர் என்றிரங்கினர். அதுகேட்டு வெண்காட்டையர் அவர்களைச்சுட்டி நோக்காமே பராமுகமாக நோக்கித்திருவருளைச் சிந்தித்து,

மனையாளுமக்களும் வாழ்வுந் தனமுந் தன்வாசன் மட்டே.
யினமானசுற்றமயானமட்டெவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகினுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகம்
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே.

எரியெனக்கென்னும்புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோவெனக்கெனுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும்புன்னுயெனக்கென்னுமிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தேனிதனுலென்னபேறெனக்கே.

அண்ணறன்வீதியர சிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநாலொன்பதாமவரோவனுநண்ணுமிவ்வூர்

துண்ணென் பசிக்குமடைப்பள்ளியானசுகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமேவிடுத்தனமெண்ணரிதே.

என்று நிலையாமையைப்பற்றிக்கூறிப்பின் தமது நெஞ்சை முன்னிலையாக்கி அவர்களுக்குமுன்னிலைப்புறமொழியாக.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே.

ஆறுண்டு தோப்புண்டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தைநெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவிமயங்குநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே.

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்று வெய்யிலுடங்கி வந்தாற்
றடுக்கப்பழையவொருவேட்டியுண்டுசகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணையெங்கெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே.

நாட்டமென்றேயிருசற் குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே.

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர் செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்நல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே.

என்று பெறத்தக்க தின்னமெதன உறுதியைக்கூறியபின் முன்னிலைப்படுத்தி,

ஊரீருமக்கோருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக்கழுவேற்றுநீற்றைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீங்கிச்சகநகைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே.

கண்ணுண்டுகாணக் கருத்துண்டு நோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்க வீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே.

என்ற திருப்பாடல்களை இதோபதேசமாகவருளிச்செய்து, வேறு, வாய் பேசாதுமௌனத்திருந்தனர். இவ்வாறு இவர் கூறியதை

க் கேட்டவர்கள் வெருவி நாணமுற்று இந்த நிலை யாம் பெறுவது கிடக்க, உணர்வதும் அருமையென்றுளங்கூசிச் சென்றனர்.

அரசன் சேந்தனாரைச்சிறைசெய்ததும் திருவெண்காடரைக்கண்டதும்.

அப்பால் இவர் துறவுபூண்டதும் இவரது செல்வமுற்றும் ஊர்ச்சூறை கொள்ளவிடப்பட்டதுங் கேள்வியுற்ற அந்நாட்டரசன்வந்து நிதியறைகொள்ளையாகாதவண்ணந்தடுத்து, திருவெண்காட்டடிகள் தமக்கைமைந்தனைத் தருவித்து இவருரிமைமுதலியன கொடுத்தங்கு இருக்கச்செய்து, முறைப்படியக் குடும்பப் பாதுகாப்பினுக்குவேண்டும்பொருள்தவிர வேனையவற்றைத் தனது பண்டாரத்துச் சேர்ப்பித்துத் தருமசாலைமுதலியவற்றிற்குபயோகிக்கக் கட்டளையிட்டான்.

அப்போது, திருவெண்காட்டடிகள் நண்பருந் தலைமை காரியக்காரருமாயிருந்தசேந்தனாரது உண்மைநிலைமையையறியாத அவ்வரசன் அவரைநோக்கிச் சேந்தனாரே! நமது திருவெண்காடர் செல்வமளவை கடந்தனவென்று பலருஞ்சொல்லக் கேள்வியுற்றிருக்கின்றேமாகையாலின்னு மெங்கெங்குள்ளதெனக் கேட்கச் சேந்தனார் அரசனைநோக்கி, மஹாராஜனே! அவர் நிதியுள்ளனமுழுவதும் காட்டிவிட்டேனாகை இனியொன்றுமறியேனென்று கூற, இறைமகன் அவர் சொல்லில்ஐயங் கொண்டவனாய்த் தன் பரிசனர்களை நோக்கி இவர் உண்மைகூறி, வெண்காடர் நிதி நிலைகளையெமக்குக் காட்டும்வரையில் இவரைச் சிறைசெய்மின் என்று கட்டளையிட்டுத்தவத்தைத் தளைசெய்தாற்போலுந் தளைசெய்து சிறையிலிட்டு, இவர்காணியிடம் பொருள் முழுவதும் வெண்காடர் பொருளென்று கவர்ந்தான். சேந்தனாரோ சிவம் பழுத்த நெஞ்சத்துப் பத்திவடிவினர்; யாதோர்வஞ்சமுமறியாதவர். ஆயினும் அவர்க்கித்துன்பநேர்ந்த காரணம், வெண்காடராகிய அவர் ஆசிரியர் தம்பொருளைச்சூறையிடப்பணித்தகாலையில் அறத்தின்வழியேஅரிதிற்றேடியவிப்பொருளுஞ் சூறையிடற்பாலவோவென்றுநெஞ்சிலெண்ணினர். இங்ஙனம் குருவாக்கியத்தின்மேல்விசாரம்பிறந்தகுற்றம்இவ்வாறு துன்பவிளைவுக்கேதுவாயிற்று. உடனே அச்சேந்தனார் மனைவியார் அரசன்கோன் முறைக்கஞ்சித் தமது ஓரே பேறாகிய ஆண்மகவினையெடுத்துக்கொண்டு வேற்றூரிற்சென்றுகற்புநிலைதவறாது கூலிவேலையாற்சீவனஞ் செய்திருந்தனர். இஃதிங்ஙனமிருக்க.

அரசன் பின்புபட்டினத்துப்பெருந்தகையாரைக்காணவேண்டிவந்து ஊர்ப்பொது மண்டபமடைந்து அங்கு சிவஞான நிட்டையில் வீற்றிருக்கும் எமது வெண்காட்டடிகளைநோக்கி, ஐயரே! நீர் இப்பரதேசி கோலங்கொண்டடைந்த விசேடப்பேறென்னை

யென்று வினவ, அக்கோமகனை நோக்கி "நீர்நிற்க நாமிருக்க" என்றார் அதுகேட்ட வேந்தன், நாணமுற்றுச்சென்றான்.

சிவயோகசாதனையிலிருத்தல்.

அப்பால்அடிகளாரும் பசிவந்தபோது ஊரிற்சென் றிருகையேற்றுண்டுதமது நாட்டமுழுவதும் சிவனடிக்கண்ணதாக மாறுபாடின்றி நின்று சிவயோகசமாதியில் சகசவனுபவம் பிறக்க, யாதொருபொருளினும் பற்று விடுதி யிரண்டுமற்ற நிறமே மனைவியாகவும், பலவுயிர்களும் மைந்தராகவும், சிவனடியவர்களே சுற்றத்தினராகவும், அறியாமையே பகையாகவும், அன்பே பொருளாகவும், அருளேயிடமாகவும், தத்துவங்களேயேவலாகவும், சாந்தமேசார்பாகவும், தவமே முயற்சியாகவும், தன்னிழப்பே போகமாகவும், பிச்சையூணும் நிலப்பாயலுங்கொண்டு நிரதிசயாநந்தத்திருந்தனர்.

இந்நிலைமை யறியாத அவ்வூர் வாழ்கின்ற விவர்சுற்றத்தினர் இவரது பிச்சையூணும் புறந்திண்ணைக் கிடக்கையுங்கண்டு, இவர் செய்கையால் தம் மரபுக்குத்தாழ்வு நேர்ந்ததாக வெண்ணி, அவ்வூரிற் பிச்சையிடாவண்ணம் தடை செய்தனர். அப்போது, பட்டினத்தடிகளிவர்களிடத் திரக்கமுற்று உண்மையறிவுண்டாம்படி பசுமேய்க்குஞ் சிறுவருடனோடியும், குப்பைமேற் புரண்டும், தறுநிலத்திற் றமது காலிற் பழுதைசுற்றிப் பற்றி யீர்க்கும்படி சிறுவரையேவியும், பிச்சனென நாட்டவர் பழித்துரைக்கும்படி குடியிருந்த மனைக்குக் கொள்ளிவைப்போம் என்று சொல்லிச் சரித்தும் வந்தனர்.

திருவெண்காடர்க்குத்தமக்கையார் நஞ்சிட்டதும், ஊர்பற்றியெரிந்ததும், தணிந்ததும், திருவெண்காடு சேர்ந்ததும்.

அதுகண்டவர் முன்பிறந்தார்மானம்பொறாதவராய்இவரிறக்கினு நன்றாமெனக்கருதி விடங்கலந்த ஓட்டப்பஞ்சமைத்து இவருண்ணக் கொடுப்பித்தனர். அதனைத் திருவெண்காடர்திருவருளாலறிந்து, "தன் வினைதன்னைச் சுடும் ஓட்டப்ப மூட்டைச்சுடும்" என்று சொல்லி அத்தமக்கையார் வாழ் மனையிறப்பிற்செருகலும் தீப்பற்றி ஒருவராலுந் தணிக்கமுடியாது பிராணிகட்குஞ் சேதம் வாராதபடி யூர்முற்றுஞ் சுட்டது. அதுகண்ட யாவரும் அஞ்சிப் பட்டினத்தடிகள் திருவடிகளை வணங்கி முறையிட, இரக்கமுற்று அத்தீயினைத் (தங்களைக்கேட்டுப் பிறந்திறந்திலம்) என்னும் செய்யுளைப்பாடித் தணித்தருளித் திருவெண்காட்டை யடைந்து சிவபெருமானைத் தரிசித்து (விளக்கினை வையமுய்ய) என்றது முதலிய பலதமிழ்ச் செம்பாடல்பாடிபலியேற்றுண்டுஅங்கு"குடியிருந்த மனைக்குக் கொள்ளி வைக்கவேண்டும்" என்று சொல்லி எழுந்தருளி யிருந்தனர்.

திருவெண்காடர் தாயார்க்குத்தகனகிரியைச்செய்தது.

அங்ஙன மிருக்கையில் காவிரிப்பூம் பட்டினத்தில்இவருடைய அன்னையார் வாழ்நாள் குறுகித் தேகவியோகமுற்றனராக, சுற்றத்தினர் வழக்கப்படி யீமக்கடன் கழிக்க மயானத்திற் சேர்த்தனர். திருவெண்காட்டிருந்த பட்டினத்தடிகள் அதனைத்திருவருளாணையாலுணர்ந்து பெருமான் கட்டளைப்படி தாம்தம்முடைய அன்னைக்குச்சொல்லிய வண்ண முடிக்கவெண்ணிப் புறப்பட்டுவந்துகாவிரிப்பூம்பட்டினத்து மயானவெல்லை யடைந்தவளவில் சுற்றத்தினர் வெருண்டொதுங்கவே தாம் அருகுசென்று, அவர்களடுக்கிவைத்த சிதையைத் தள்ளி வாழைப்பட்டையாற் சிதையடுக்கி அதன் மேலன்னையைக்கிடத்தி.

வெண்பா.

ஐயிரண்டு திங்களா வங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதேபரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக்கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி. (க)

முந்தித்தவங்கிடந்துமுந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனையாதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (உ)

வட்டிலிலுந்தொட்டிலிலுமார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலும்வைத்தென்னைக்காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (ங)

நொந்துசுமந்துபெற்றுநோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத்தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன். (ச)

அரிசியோநானிடுவேனாத்தாடன்க்கு
வரிசையிட்டுப்பார்த்துமகிழாம - லுருசியுள்ள
தேனேயமிர்தமேசெல்வத்திரவியபு
மானேயெனவழைத்தவாய்க்கு. (ரு)

அள்ளியிடுவதரிசியோதாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோகூசாமன் - மெள்ள
முகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. (சா)

விருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. (எ)

வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியேனையகோ — மாகக்
குருவிபறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதிவளர்த்தெடுத்த கை. (அ)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னைமறந்தாளோ — சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். (கூ)

வீற்றிருந்தா ளன்னைவீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள் — பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். (கo)

என்ற செந்தமிழ்பாடி உலகர்போலச் சடாக்கினியாற் சுடாதுதமது ஞானக்கினியால் தகனஞ் செய்து, அவளைச் சிவனடி நீழல் கூடும்படி தியான சமாதியால் அந்தியேஷ்டி நிறைவேற்றி, அங்ஙனே புறப்பட்டார். புறப்பட்டவர்,

பின் திருவிடைமருதூ ரடைந்தது.

மென்று விழுங்கிவிடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக்கென்கோவே — நன்றி
கருதார்புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

என்ற திருவெண்பா வோதித் திருவிடை மருதூர் சென்றடைந்தனர். அங்கே இவர் வரவுணர்ந்த சிவனடியர் எதிர்கொண்டு வணங்க, அவர்களைத் தாமும் வணங்கிப் பெருமான் திருவாலயத்தையடைந்து வலம்வந்து பன்முறை பணிந்து எதிர்நின்று மனமுருக வன்புபெருகி யுடல் குழைந்து என்பு நெக்குவிட்டு வியர்வெழுந்து, கண்ணீராறுக மடைதிறந்துபாய, நாத்தழுதழுக்க வாயாரப்பாடுவாராய்,

‘‘தெய்வத்தாமரைச்செவ்வியின்மலர்ந்து’’

என்ற வினைக்குற ளாசிரியமுதலாக வெடுத்துத் திரு மும்மணிக்கோவைபாடிப் புறம்போந்து மனைகடோறும் பலியேற்றுண்டு கோபுரத் திருவாயில்குடியாகக்கொண்டுசிவயோகசாதனையில்வீற்றிருந்தனர்.

அப்பால் ஒருதினத்தில்இடைமருதுடையார் அவரதுகனவில் அவ்வூர்க்காவலன்போற் றோன்றிப்புறந்திண்ணையிற்கிடக்குந்திருவெண்காடர் பால்வந்து கைக்கோலால் நிலத்தைத் தாக்கித்திருவடியாற்றீண்டி யுணர்த்தி நீ! யாரெனலும், அவர் ஊர்மெய்க்காவல! யானுவான் தோலோ, நரம்போ, தசையோ, உரோமமோ, எலும்போ, உதிரமோ, மூளையோ, மூச்சோ, மனமோ யாதோவறியேன் கலங்குறுகின்ற நெஞ்சக்கவலை யொழிதிறங்காணேன் என்றனர். அங்ஙனே ஆளுடைய பெருமான் மறைந்தருள,வந்தவர் இறைவனொன்றுணர்ந்து ஆராமைமேற்கொண்டன்பாற்கரைந்துருகியழுது தொழுது அவர்நின்ற நிலத்து அச்சுவட்டினைக்கண்ணொற்றிமார் பணைத்துப்பொடி முடிக்கணிந்து பன்னிப்பரவியிருந்தார். இருப்பவர் ஒருநாள் நீர் விடாய்ப்பட்டெங்குங் குடிநீர்பெறாது மருதையனைப்பாடிப் பின்னுடம்பை யருவருத்துக் கரும்பிடுங்கழனியிலே யீர்க்கப்பண்ணியனுப்புறுவித்து ஓர்புறந்திண்ணையிற் படுத்துறங்கினார். அப்போது மருதீசர் அவர் கனவிற்றோன்றி ஐய! வெண்காட! இனிநமது திருப்பதிகடோறுஞ்சென்று பாடுதியென்று கட்டளையிட்டருள, உடனே திருக்கண்விழித்து அக்கட்டளையுணர்ந்து உலகத்துயிர்கள் பிழைக்கும் வண்ணம் பலசமயப்பிணக்குகளற, அச்சமயபேதங்களையெல்லாம் ஆன்மாக்களுக்கு வினையளவாக வறிவூட்டிமுடிவிற் பக்குவத்திலவ்வான்மாக்களைத்தரவேண்டிப்பெருமான்றமது ஆறுதிருமுகத்து நின்றுந்தோற்றுவித்தமையும், அவற்றின் முடிபும், பயனும், விளங்கக்காட்டிமேலுண்மையுபதேச நெறியையுமுணரப் பலதமிழ்ச்செம்பாடலைப் பாடியருளி, மருதவனத்தையர் சந்நிதியடைந்து பலகாலும் விழுந்துபணிந்தெழுந்து கோயில்வலங் கொண்டு புறத்தணைந்தன்பினாற் கரைந்துருகிபாடிப்பாடிப் பிரியாவிடைகொண்டுபுறப்பட்டுத் திருக்குடமூக்கு, கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச்சுரம், குரங்காடுதுறை, மாயூரம், நனிபள்ளி, வலம்புரம், ஆக்கூர், கடவூர், தருமபுரம், சிவபுரம், வாஞ்சியம், புகலூர், செங்காட்டங்குடி, மருகல் முதலிய திருப்பதிகளை வணங்கித் திருவாரூர்க்குச் சென்று அடியவர் எதிர்கொள்ள வணங்கியுள்புக்குத் திருவீதி வலம்வந்து கோபுர வாயிலைப்பணிந்து பூங்கோயிலுடையாரையும் வீதிவி

டங்கப்பெருமானையும் பலகாற்றொழுது பாடிப்பிச்சையேற்று வீற்றிருந்தார்.

திருவாரூரில் இறந்தவனை யெழுப்பியது.

இங்ஙனம் அத்திருவாரூரிலிருக்கும் நாளிலே, மிகுந்த பத்திமானான சிறுவனொருவன் பூர்வ புண்ணியமுடைமையால் எமது திருவெண்காட்டடிகள்பால் பேரன்பும் பத்தியுஞ் செய்து காலந்தவறாது திருவமுது முதலியவற்றாலுபசரித்து இரவும்பகலும் பிரியானாகித்தொண்டுசெய்து வருகையில், இச்சிறுவன்றாய்க்கொருமகனாக, இவன்றந்தையோடு பிறந்த நல்லத்தையொருத்தியொரே பெண்மகப் பேறுடையவளாய் வேறுதிக்கின்மையால் அப்பெண்ணையிச்சிறுவனுக்கே கொடுத்துத் தமையன் குடியுந் தன்குடியும் விளங்கப்பண்ண வேண்டுமென்னுங் கருத்தினளாய் அவன்றாய்க்குணர்த்த, அவள் அதனை மகனுக்குணர்த்த அச்சிறுவனதற்கிணங்கானாய் நிற்கக்கண்ட அவ்விருமுதுகுரத்தியரும் வருந்தித் தங்குறையைப் பட்டினத்துப்பிள்ளையார்பால் விண்ணப்பித்து வருந்துகையில், ஐயர் அவர்கள் முறைப்பாட்டினுக்கிரங்கி, மேல்நடக்குங் கருமங்கருதி யிச்சிறுவனை நோக்கி, ஐயா! நின்தாய் அத்தையிவர்கள் குறைவை ஒழித்தி. இறைவன் றிருவருளாங்கா லுன்பாலாம். என் சொல்லைக்கடவாது கைப்பிடித்தி என்று கட்டளையிட்டருளினார். அதுகேட்ட அச்சிறுவன் அஞ்சி, ஆளுடைய அடிகளைவணங்கி, எம்பெருமானிரே! தேவரீர்திருவடியைப்பிரியாதுபணிசெய்து கிடக்கவெண்ணினேனுக்கு ஊழ்முறை யிங்ஙன மிருந்தபடிபோலுந்தேவரீர் இவ்வாறுதிருவுள்ளப்பாங்காய்க்கட்டளையிட்டிறம்என்செயக்கடவேன். ஆயினும், எம்பெருமானே! தேவரீர் அங்ஙனம் மணம்புணருங்கால் வந்தருளி ஆசீர்வதித்துய்யக்கொண்டருள்கவென்று வணங்கி விண்ணப்பித்தான். அடிகளும் அங்ஙனமாகவென்று அனுக்கிரகித்துவிடைகொடுத்தனுப்பியருளினார்.

அங்ஙனே அவன்றாயும் அத்தையும் களிப்போடும் அழைத்துச்சென்று நன்னாள்குறித்து மணம்புரிவித்தனர். அம்மணப்பந்தலிலே, பட்டினத்தடிகளுஞ்சென்று, அவன்கருதியவாறு வாழ்த்தி, அவ்வாழ்த்தினோடுமேலவன் உறுவதுங் கூறுவாராய்.

“நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலமொன்றுமறியாதநாரியரைக்கூடிப்
பூப்பிளக்கப்பொய்யுரைத்துப் புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்

காப்பதற்கும்வகையறியீர்கைவிடவுமாட்டீர்
கவர்பிளந்தமரத்துளையிற்காலுழைத்துக்கொண்டீர்
ஆப்பதனையசைத்துவிட்டகுரங்கதனைப்போல
அகப்பட்டீர்கிடந்துழலவகப்பட்டீரே.

என்ற செய்யுளைக்கூறிச் சேஷையிட்டு ஆசீர்வதித்து இச்சைவழி சென்றனர்.

அப்பால் அவ்விடலை மனைவியோடுகூடிவாழ்ந்திருக்கையில், சின்னாள் கழியலும், ஊழ்வினை துரப்ப ஓர்நாள் எண்ணெயிட்டு நீராடியன்றிரவில் காமங்கைமிக்கு மனைவியோடு புணர்ந்தனனாக, சன்னிபாதங்கண்டு, ஆயுள்முடிந்திறந்தான். இறத்தலும் அவன் மனைவிமாமிதாய் சுற்றம் அயலவரும் கூடிக்கடலெனமறுகியார்க்குஞ் சகியாதபேரழுகை செய்தனர்.

அத்தருணம், திருவருளிச்சைவழியுலாவும் எமது பட்டினத்தையர் அவ்வீதிவழிவரலும் கண்டார் சிலர் ஓடிவந்து வணங்கிநின்று எம்பெருமானே! தேவரீர்க்குப் பத்திப்பேரன்புசெய்து திருவாக்கால் வாழ்த்துப் பெற்ற அடிமைச்சிறுவன் இன்று சன்னிபாதத்தினால் இறந்தனன் என்று கூறக்கேட்டுக்கொண்டே வந்தபோது, அவ்வழுகையோசை செவிப்பட்டிரக்கமுற்று,அவனருகே செல்ல, அங்கு இரங்குவார்யாவரும் ஐயரைக்கண்டழுகையொழித்து வணங்கிநின்றனராகவே அப்பிணமகனைக் கருணையானோக்கி,

விருத்தம்.

வடிவந்தானும்வாலிபம்மகளுந்தாயுமாமியும்
படிகொண்டாருமூரிலேபழிகொண்டாடனீதியோ
குடிவந்தானுமேழையோகுயவன்றானுங்கூழையோ
நடுநின்றானும்வீணனோநகரஞ்சூறையானதே.

என்றசெய்யுளைப்பாடியங்ஙனே தம்மையாட்கொண்டார் பேருணிலையைநாடி,

விருத்தம்.

மண்ணுமுருகுமரமுருகுமாயையுருகுமானுருகும்
பெண்ணுமுருகுமாணுருகும்பேதாபேதவகையுருகும்
அண்ணலுருகுமிடத்தமர்ந்தவாத்தாளுருகுமரவணையான்
எண்ணியுருகுங்குருநாதனென்பாலுரைத்தவோர்மொழியே.

என்ற திருப்பாடலைப்பாடியருளினார். அவ்வளவில் இறந்துகிடந்த பிணமகன் உயிர்பெற்றுத் துள்ளித்துடித்து உறங்கி விழித்தவனைப்போலெழுந்து வணங்கிநின்றான். தேவர் பூமழைபொ

ழிந்தனர். அந்தரதுந்துபி முழங்கிற்று. அடியவர் ஹரஹரமுழக்கஞ்செய்தனர். அங்கு நின்ற சராசரவுயிர்களனைத்தும் ஆநந்த வெள்ளத்துண் மூழ்கின. * பின்பு உயிர்பெற்றெழுந்த காளை நடந்தவண்ண மொன்றும் அறியாதவனாய், பெருமான் திருவமுதுசெய்யக் காலந்தாழ்த்ததே என மனம்பதைத்து வருந்தினின்று, ஐயர் பிச்சை நிவேதனத்தைச் சித்தஞ்செய்வதற்கு முயலத்தொடங்கலும், கண்ட ஆண்டகையார் திருவுளங்கனிந்து,

வெண்பா.

எருவாய்க்கிருவிரன்மேலேறுபுழுக்கூட்டுக்
கருவாய்க்கேகண்சலக்கப்பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடந்தாயே
நீரோடுந்தாரைக்கேநீ.

---

* இது சிவஞானிகளனுபவ நிலைமையை விளக்கியபடியாம் என்னை? "துரியமலைமீதுளதோர் சோதிவளநாடு, தோன்றுமதிலையர்நடஞ் செய்யுமணிவீடு, தெரியுமதுகண்டவர்கள் காணினுயிரோடு, செத்தாரொழுவரொன்று கைத்தாளம்போடு" எனவும், "சொல்லாளப்பரிய சோதிவரைமீது, தூயதுரியப்பதியினேயமறையோது, எல்லாஞ்செய்வல்லசித்தர் தம்மையுறும்போது, இறந்தாரொழுவரொன்று புறந்தாரையூது" எனவும் என்னுடையார் கூறுதலாற்காண்க வென்க. எம்மை ஆளுடையபிள்ளையார் திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியபடியும், ஆளுடைய நம்பிகள் புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட பிள்ளையை மீட்டும் உய்ந்தெழுந்து வரச்செய்தபடியும் இதுவாம். "கொல்லாமைமேற்கொண் டொழுகுவான்வாழ்நாண்மேற் செல்லாதுயிருண்ணுங் கூற்று" என்றதனால் சாகாவித்தையின் சித்திநிலைமையும் வழியுமிதுவென்றதாம். இக்கருத்து வேதாகம வுபநிடதங்களானும் தேவார திருவாசகமுதலிய திருமுறைகளானும் வெளிபெறக்காண்க.

இன்னும், "அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தால்
மடியாமற்செல்வவரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே.
பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாண்மருந்துனக்கே.

என இத்திருவெண்காட்டடிகளாருடன்பட்டுக்கூறுதலானும் இவரது ஐயிக்க நிலைமையின் வரலாற்றானும் உணர்க.

என்று அருளி அச்சிறுவனுக்கு நல்லருள்செய்து அறிவுணர்த்தி வாழ்த்தி அவனை அங்கிருத்தி, அப்பால் எழுந்தருளுகையில், அவ்வூரிலுள்ளார் யாவரும்வந்து வணங்கி, எம்பெருமானே! அடியோங்களுய்யும்படி எங்களேழைமைத்தொண்டுகொண் டிங்கே தானே வீற்றிருந்தருள்கவென வேண்ட, அவர்கள் குறிப்பினை யுணர்ந்து,

வெண்பா.

வெட்டவெளியானவெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணுதே - இட்டமுடன்
பற்றென்றாற்பற்றாதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவேவைத்தவினிப்பு.

என்றருளிச்செய்து, அவர்களைநிறுத்திவிட்டு அங்கு நின்றும் புறப்பட்டு வழியிற் கிடைத்த பலதிருப்பதிகளையுந் தரிசித்து வணங்கிப் பாண்டிநாட்டையடைந்தார்.

பாண்டிநாடு சென்றது.

அங்கே மதுரைப்பெருநகருற்றுத் திருவாலவா யுடையாரையும் அங்கயற்கண்ணம்மையாரையுந் தொழுது,

கட்டளைக்கலித்துறை.

விடப்படுமோ விப்பிரவஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோ நின்னருளின்றியே தினமேயலையக்
கடப்படுமோ வற்பர்வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோ சொக்கநாதாசௌந்தரபாண்டியனே.

என்றது முதலாகப்பலதமிழ்பாடி அங்கு சிலபகல் வீற்றிருந்தருளினார். அப்பால் அந்நாட்டிலுள்ள திருப்பதிகளெல்லாஞ்சென்று உடையவரைக்கும்பிட்டு, மலைநாடு அடைந்து திருவஞ்சைக்களமுதலிய திருப்பதிகளைத் தரிசித்து ஆளுடையாரைப் பணிந்து பாடிக் கொங்குநாட்டையடைந்தார்.

கொங்குநாடுசென்றது.

அக்கொங்கில் பேரையூர், அவிநாசி, முருகன்பூண்டி முதலிய திருப்பதிகளிற் சென்று சிவபெருமானைத் தொழுது வாய்பேசா மோனவிரதத்தோடு அங்கிருக்கையி லோர்நாள் அரை யிருளில் வடவானலம்போலும் பசித்தீயெழுந்து வருத்த, பட்டினப் பெருந்தகையார் சென்று, ஒருஆர்க்கனை குடும்பியின் தலைவாயிலில் நின்று கைதட்ட அவன் இவரை அறியாது யாரோ காமக்கள்ளனென் றெண்ணித் தடிகொண்டோடிவந்து பு

டைத்துத் தீங்கிழைக்க, எம்மையர் நின்ற நிலைபெயராது சிவசிவ வென்றிருக்க, அடுத்த மனைப்புறந் திண்ணையிற்கிடந்த அம்மனைக் கிழவனுணர்ந்தோடிவந்து அம்மூர்க்கனை விலக்கி, ஏடா!! பேதையே!! இவர் சிவயோகஞ் சிறந்த பெரியராமே, ஏனித்தீங்கிழைத்தனை யென்றுவிலக்கி, நம்பெருமானை வணங்கி யழைத்துச்சென்று, திருவமுதுபடைத்துப் பசியாற்றுவித்து உபசரித்தனன். அப்போது, அடிகளார் திருவருளை நினைத்து,

பூணும்பணிக்கவல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனைக்
காணும்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே.

என்று சொல்லி, உடனே

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன் - பெருக்க
வழைத்தாலும்போகேனரனேயென்றேக
மிளைத்தாலும்போகேனினி.

என்றவெண்பாவைப்பாடி, அங்கிருந்து புறப்பட்டுத் துளுவம்புக்குக் கோகரணம்பணிந்துபோய், உஞ்சேனைமாகாளம் அடைந்து, மாகாளேச்சுரரைப் பணிந்து நகருடுத்த சிறுபுறங்காட்டிலுள்ளதோர் கணபதியாலய மடைந்து பரஞான நிட்டையில்வீற்றிருந்தருளினார்.

கழுமரம்பற்றியெரிந்தது.

அங்ஙனமிருக்க, அந்நகரத்தையாளும், பத்திரகிரிமகாராஜன் இருவினையொப்பு மலபரிபாகமும் உத்தமசத்தினிபாதமும் வாய்த்து அதிதீவிரபக்குவரா யிருந்ததால்அவரைத் தேற்றச்சிவனருள் புரிந்தமையின், அவர் அரண்மனையில் களவுசெய்யும்படி ஓரிச்சையுண்டாகச் சிலகள்ளர் ஒருங்குகூடிவந்து அக்குறுங்காட்டிலுள்ள கணபதி சந்நிதியை யடைந்து தங்களுக்குக் களவு வாய்க்கவென்று பிரார்த்தித்துச் சென்று பட்டணத்தைச் சேர்ந்து சோர்வுகாலம்பார்த்து அரண்மனையினுட் புகுந்து தங்கள் ஆசைதணியுமட்டும் வேந்தன் கருவூலத்து நிதிக்குவைகளையும் மணி பூண்வகைகளையும் வாரிச்சுமைசெய்து எடுத்துச் செல்லுகையில் பிரார்த்தனை பலிக்கச்செய்த மூத்தபிள்ளையார் ஞாபகம்வரவே ஓடி, சந்நிதியடைந்து தங்களுக்குக் கிடைத்த களவுப் பொருளில் விலையுயர்ந்ததோர் பதக்கமெடுத்து விநாயகர்க்குச் சாத்திச் செல்வுழிச்சென்றார்கள். அது இருட்போதாகையால் அவ்விலையுயராரம் அவ்வேகதந்தப் பெருமான் திருக்கண்டமணியாது தவறி அரு

கே சிவயோகசாதனையில் வீற்றிருந்த எம்பட்டினத்தையர் திருக்கழுத்தணிந்தது. இஃதிங்ஙனமிருக்க.

அங்கே அரசன் அரண்மனையிற் கருவுலத்துக்களவுபோன செய்தி வெளிப்படலும், அவ்வேந்தன் பரிவாரங்களும், காவன் மாக்களும் வெளிப்பட்டு அந்நகரமுற்றும் புறவிடம்பலவுந்தேடிச் செல்லுகையில் வேற்றோரடிச்சுவடு வெளிப்பட வச்சுவடுபற்றிச் சென்று குறுங்காட்டுட் புகுந்து நாடிவந்து அப்பிள்ளையார்கோயிலையடைந்தனர். அவ்வளவில் வைகறையாய் நிலந்தெளிந்துவர அருணோதயமாகவே, சிவயோகத்தில் வீற்றிருந்த பட்டினத்தையரையும், அவர்கழுத்தில் ஒளிவிடும் அரதனவாரத்தினையும் கண்ட அப்பார் மன்னன் படர்கள் பதைத்தோடி யெம்பெருமானைக் கள்ளருளொருவனென்று பற்றியீர்த்தலைத்துத் தமக்குத் தோன்றியபடியெல்லாம் துன்புறுத்து வாராயினர்.

அப்போது, நம்மையர் சமாதிவிட்டுக்கண்விழித்து விளைவொன்றுமறியாராதலிற் காலபடர்போன்றஇராஜகிங்கரர் அலைக்குந்தோறும் தடுத்தல் முதலிய முயற்சியொன்றும் புரியாது வேறொன்றுமுரையாது. "சிவசிவ"வென்று அருள்கருதிஉண்முகனோக்கிநின்றனர். நிற்கவே, அவ்விறைமகன் பரிசனருட் சிலர்இவன் பெருமாயக்கள்ளனென்றார்கள். சிலர் அக்கள்ளரிற்றலைவன், இன்னும் நம்மரசரணத்தற்றம்நோக்கிக்கொள்ளைகொள்ள வஞ்சகநடிப்புப்பூண்டுள்ளானென்றார்கள். சிலர்அப்படியல்லகளிமயக்காற்றனித்தனன்போலும் என்றார்கள். சிலர் நமது நல்லூழிவனைமயங்கச்செய்துஇங்கு கிடைக்கப்பண்ணிற்று; இல்லையேல் இக்கள்ளரை நாம் எங்கு கண்டுதேடிப்பிடிப்போம்; பிடியாவிட்டால் நம்மிறைவன் கொடுந்தண்டம் புரியுமே என்றார்கள். சிலர்பித்தனோவென்றார்கள். சிலர்ஏடா!! வாய் பேசாது மூகையாயுற்றனை. நுங்குழுவார் ஏனையர் யாண்டுற்றனர்? மற்றையபொருண்முற்றுமென்னவாயிற்று. கூறிலனேல் நீயுயிர்பிழைத்தலரிதாம் என்றார்கள். இவ்வளவு ஆரவாரத்திற்கும் சித்தவிகற்பங்கலக்கமொன்றுமின்றிச் "சிவசிவ" என்றே நிற்குநிலையைக் கண்ட அக்காவன்மாக்களுட்சிலர் உற்றுநோக்கித் துன்புறுத்தும் மற்றையரைத்தடுத்து, இவர் கள்ளரல்லர் சிவஞானச்செல்வமுடைய பெரியர்போலும் இருக்கின்றனர். கள்ளரானல் இந்தராஜயோக்கியமான கண்டாபரணம் பூண்டு, இவ்வளவு நகர் சமீபமானவிடத்தில் நமது கையிற் கிடைக்கவிருப்பரோ? அன்றியும் நாம் ஈர்த்தலைத்துச்செய்யுமிப்பெருந்துன்பங்களுக்குச்சிறிதாயினும் முகச்சுளுக்கும் துன்பத்துய்ப்பு மின்றிக்களிமுகத்தினராய்ச் "சிவசிவ" என்று உண்ணோக்கி நிற்றல் கூடுமோ? களிமயக்

கினனொன்பதற்குச் சிறிதுமிடனில்லை. பித்தரோ எனில் பித்துடையார்தேகவியலொன்றுமில்லை. ஆதலால் உண்மை தேறவிசாரித்து அறியாது, நாம் கொடுமை செய்தால் பழிபாவம் ஆவதன்றி இன்னும் என்னவிளையுமோ? எல்லாம் அரசனுக்கறிவித்துக் கட்டளைப்படி நடப்பதே நலம் என்றார்கள்.

இங்ஙனம் இங்கே நிகழுகையில், முன்னம் ஐயரைக்கண்டவளவிலே சிலமூர்க்கச் சேவகர்களோடோடி அரசனைக்கண்டுவணங்கி, எம்மிறைவ!! நமதுவைப்பறையைச் சூறையாடிய கள்வர்கள் தலைவன் ஊர்ப்புறத்துக் குறுங்காட்டிலுள்ள விநாயகர்கோயிலிற் கிடைத்தனன். அவனைக்கழுவேற்றினாலொழிய வேனையர்கிடைப்பது மரிது. இன்னும் நமதுபண்டாரமும் முற்றக் கொள்ளையாம். ஆகவேவிரைவிற் கட்டளைதருகவென்று பதைத்தார்கள். அவ்வளவில் அரசன் நல்வினைப்பரிபாகமுடையனாதலின், நெஞ்சத்தோர் கலக்கந்தோன்றி மயங்கி நிற்கக்கண்ட கிங்கார், கோமகன் மயங்கும் காரணம் யாது நஞ்சொல்லிலே நம்பிக்கையில்லைபோலும் என்று எண்ணி, எம்முடையாய்!! நாங்கள் பழிக்கிடமாம்படி ஆணைக்கஞ்சி வேற்றாளைப்பிடித்து வந்தபடியன்று, அக்கள்ளனிடத்தில் இன்றிரவிற் களவுபோன இராஜயோக்கியமான கண்டாபரணமொன்று இருக்கக்கண்டேபிடித்தனம். ஆதலின்வேறு ஆராய்ச்சிக்கிடனில்லை. தண்டனைக்கே கட்டளையிடவேண்டும். அக்கள்வன் மாட்டிருந்த ஹாரமிதுவென்றுந்தந்து காட்டினர்.

ஆகவே அரசனுத்தமராயினும் அனுக்கிரக சத்திபதிவதன் முன்திரோதை பதிதல்முறைமையாதலால் அத்திரோதை சத்திவசத்தினராய்மயங்கிக் கழுவேற்றக் கட்டளையிட்டார். அக்கட்டளையை யவர்கள் தந்து ஏனையர்க்குத் தெரிவித்தலும், அடிகள் பக்கல் காவலாளராய் விசாரித்திருந்த மற்றையர் மனமொவ்வா திருக்கவும் இறைமகனாணைக்கஞ்சி, ஐயரைக் கழுமரத்துக்கருகழைத்துச் சென்றனர். செல்லலும் ஐயர் கண்டு புன்னகையோடு மேலே நோக்கி,

"என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
உன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைபிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ஙனேவந்துமூண்டதுவே."

என்றதிருப்பாடலையருளிச்செய்தனர். அங்ஙனேகழுமரம்பற்றியெரிந்துவிட்டது. அவ்வளவில் அங்கிருந்தவரசன் பரிவாரத்தினர் கண்டு பயந்தோடி அரசனுக்கு நடந்த விவரங்களை விண்ணப்பித்

தலும், இறைமகன் திடுக்கிட்டு ஒன்றுந்தோன்றாதவராய் அச்சமே ற்கொண்டு தம்மையறியாத அன்பும் ஆர்வமையும்பிடரி பிடித்துந் த, என்னையாளுடைய ஆரியமணியோ வந்தருளியதென்று நின்ற நிலையிலே பாதசாரியாகவேயோடிவந்து, பற்றியெரியுங் கழுமரத் தண்டையில் நிற்கும்தவப்பெருமலையாகியவெமது வெண்காட்டடி களைத்தரிசித்துக்கண்பெற்ற பேறுபெற்றவராய் இவ்வுலகினை முற் றும் மறந்தனர்.

பத்திரகிரியார் திருவருள்பெற்றது.

அங்ஙனம் தமையிழந்து நின்ற அரசசிகாமணியாகிய பத்திர கிரியார் சிறிதுணர்ச்சி கூடவே அடியற்ற பனைபோல விழுந்து பல முறைவணங்கி நின்று எம்பெருமானே! அடியேனறியாமையால் திருமேனி மிகவருத்தமுற்றதுபோலும். பாதகனேன் என்செயக் கடவேன்! என்செயக்கடவேன்! தேறவிசாரியாத பாவியேன் என் று ஆராமையால் வருந்துகையில், பட்டினத்தடிகள் கருணை மீதூ ர்ந்து கடைக்கணித்து நோக்காதுநோக்கி அருள்பதிந்த வருளத் துச் சிவம்விளங்கத் தத்துவநியதிசெய்து,

"நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாக்குவாராரதருந்துவாரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லாலேதுக்காமிதைச்செப்புமினே."

"மானார்விழியைக்கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோனாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனாலும்பேறிருந்தாலுநற்பேறிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே."

என்ற திருப்பாடலைச் சொல்லியவளவிலே ஐயனைப் பூட்டியிரு ந்த தளைகள் தெறித்துவிழுந்தன. பின்பு அவர்க்குறுதி கூறும்படி

அஞ்சக்கரமென்னுங்கோடாலிகொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவாட்டிவளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேன்வளர்த்தேன்சிவபோகத்தையே.

என்ற திருப்பாட்டை யருளிச்செய்தார் உடனே அரசர்க்கர சான பத்திரகிரியார் நெஞ்சுதெளிவுற்றுத் துணிவுண்டாய் விரத் திபிறத்தலும், அந்நின்ற நிலையிற்றானே அரசகோலமுழுவதுமா ற்றி, சூழவிருந்த அரசசுற்றம் பரிவாரமொன்றனையும் பின்றிரும் பிப்பாராது, திருவெண்காட்டடிகள் திருவடியி லடியற்ற பனை போல் விழுந்து பற்றிக்கொண்டு, எம்பெருமானே! திருவடிக்குத்

தவறிழைத்த அபராதியாகிப் பெரும்பழிசுமந்த வென்னை உய்யக் கொண்டருள்கவென்று கண்ணீருங் கம்பலையுமாகக் கலுழ்ந்து குறையிரந்து நின்றார். நிற்றலும் ஐயர்,

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந்தாற்பதினாலுலகு
நீங்காமனீங்கிநிறையாகிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே.

என்று அருளிச்செய்து, பாவனைத்தீக்ஷையால் அவருளத்துச் சிவயோகவனுபவ நிலை பதியவனுக்கிரகித்து, அவரைநோக்கித் திருவிடைமருதூருக்குச் செல்க என்றருளிச்செய்து, அங்கு நின்றும் புறப்பட்டு விந்தம், காசி, கேதாரம் முதலிய வடதிசைத் திருப்பதிகளை வணங்கி ஸ்ரீசைலமடைந்து ஆளுடையாரைப் பணிந்து பாடி சிலநாளங்கிருந்து புறப்பட்டு மறுபடியும் மேல்கடற்கரையாகவே வந்து கொங்குட்புகுந்து பாண்டிநாடடைந்து திருக்குற்றாலம் பணிந்து,

வெண்பா.

காலன்வருமுன்னேகண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்ப்படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னேயூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு.

என்றதுமுதலிய பலதிருப்பாடல்களைப்பாடி இராமேச்சுரம் வேதாரணியமுதலிய திருப்பதிகளை வணங்கி, மறுபடியுந் திருவிடைமருதூரைவந் தடைந்து மருதவாணரைப்பணிந்து கீழைக்கோபுரவாயிலில் வீற்றிருந்தருளினார்.

பத்திரகிரியாரது பின்சரித்திரம்.

பத்திரகிரியாரும் குருவருளாணைப்படி சிவயோகசாதனை விடாது பிச்சையேற்றுண்டு தலங்கடோறுஞ் சென்று பணிந்து பட்டினத்தடிகள் வந்து சேர்ந்த தினமே தாமும் திருவிடைமருதூர் வந்து சேர்ந்து குருபரனைப்பணிந்து அவர் திருவாணைக்குறிப்பின்படி மேலைக்கோபுரவாயிலில் இருந்துகொண்டு நாடோறும்பிச்சை பண்ணிவந்து குருநிவேதனம் ஆனபின்புசேடத்தைத்தாமுமுண்டு சிவயோகத்தில் வீற்றிருந்தனர்.

இங்ஙனம் நிகழுநாளிலோர் நாள் பத்திரகிரியார் தமது ஞானாசாரியன் பரிகலச்சேடப் பிரசாதத்தினைத் தாம் அமுதுகொள்ளப் புகுந்தருணத்து, ஆதரிப்பாரற்றதோர் பெட்டைநாய்க்குட்டி வந்து வால்குழைத்துக் குறுகுறுத்து ஏழைமுகங் காட்டிப்

பசியால் வருந்துந் தன்னிலைமையைக்குறிப்பிக்கக்கண்டபத்திரகிரியார் பரமசிவகாருணியமூர்த்தியாதலால் அதனிடத் திரக்கங்கொண்டு அச்சேடப்பிரசாதத்திற் சிறிது அதற்கிட அதனை அப்பெட்டை நாயுண்டுபசியாறி அதுமுதல் பத்திரகிரியாரை விடாது அவர் செல்வழிச்சென்றும் நிற்புழி நின்றும் அடி நிழலெனப் பிரியாது அவர் திருமேனி காவற்றிருத்தொண்டினிலைமை பூண்டிருந்தது. அவ்வரசரேறும் அதனிடத்திரக்கம் வைத்து நாடோறும் தமதுச்சிட்ட சேடப்பிரசாதத்தினை அதற்கிட்டு வந்தனர். கேட்டீர்களோ முனிவர்களே! இழிந்த நாயாய்ப்பிறந்தும் அப்பெட்டை சிவஞானியின் திருவருளுக்குப் பாத்திரமாயிற்று. இப்பேறு இவ்வுலகத்தில் யார்க்குக் கிடைக்கும் என் றுபமன்னிய பகவான் கூறக்கேட்ட தவத்தினர் யாவரும் வணங்கி வினவுவாராயினர்.

எம்பெருமானே! "ஞாலமதின் ஞானநிட்டையுடையோருக்கு நன்மையொடு தீமையில்லை நாடுவதொன்றில்லைச்-சீலமில்லை தவமில்லை விரதமோடாச்சிரமச் செயலில்லை தியானமில்லை சித்தமில்லை-கோலமில்லை புலனில்லை கரணமில்லை குணமில்லை குறியில்லை குலமுமில்லை - பாலருட னுன்மத்தர் பசாசர் குணமருவிப் பாடலினோடாடலிவை பயின்றிடினும் பயில்வர்." என்ற வேதாகமக்கருத்தின்படி சஞ்சரிக்கின்ற பரமஞானியாகிய விப் பத்திரகிரியாருக்கு அந்நாயினிடத்தில் ஏன் இரக்கம் வந்தது? முன்னாளில் சடபரதர் என்பவருக்கு ஒருமான் கன்றினிடத்தில் உண்டாகிய தயவு காரணமாகப்பற்று விளைந்து பலபிறவி நேர்ந்தவென்று சில புராணங்கள் கூறிற்றே. இஃதென்னை? தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் பெறுதற்கரியதோர் சிவஞானியின் உச்சிட்டப்பிரசாதம், பிறவிகளுள் அறக்கடையதாயும் முற்றும் பாவதேகியாயுமுள்ள இந்நாய்க்குக் கிடைக்கத்தக்க புண்ணியத்தவமேலீடு யாவை? இவை விளங்கத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று மீட்டும் பணிந்தார்கள்.

அப்போது உபமன்னியபகவான் புன்னகைசெய்து, அம்முனிவர்களைநோக்கி, உங்கள் வினா மிகநன்று. இஃதுலகம் அறிந்துய்யத்தக்கபடியாம். இதனையாமுங்கட்குக் கூறுவேம். ஞாபகத்தோடுங் கேட்பீர்களாகவென்று சொல்லலாயினர்.

வேதாகமத்தின் முடிவானகருத்து.

* உலகத்தில் ஒருவன் ஒரு தொழிலைச் செய்யப்புகின், அத்தொழில் தனக்குப்பயன், பிறர்க்குப்பயன், தனக்கும் பிறர்க்கும் பயன், தனக்கும் பிறர்க்கும் பயனில்லாமையென நான்குவகைய

---

* "ஓங்கருளீசனோடொன்றியேநின்றோரும் - ஈங்கருணீங்காரொன்றுந்தீபற-எல்லாவுயிர்க்குமென்றுந்தீபற." என்றார் பிற்காலத்துப்பெரியரும்.

தாம். அவற்றுள் சிவ னிவ்வுலகைப்படைத்தது தனக்குப்பயனே எனில், தனக்குமேல் உயர்ந்தோ ரொருவரு மில்லான் றானாதலாற் புகழ்ப் பயனன்று. எவற்றிற்குங் காரணன் றானாகவே வேறுபய னு மின்று. தனக்கும் பிறர்க்கும் பயனெனில் தனக்குவமையில் லானாதலின் கூறவேவேண்டா. தனக்கும் பிறர்க்கும் பயனில்லை யெனில் மைந்தர் விளையாட்டாம், பேரறிவுடையா னாதலி னஃ தமையாது. மற்றென்னெனில் அனாதிமூல மலவிருளிற்கிடந்த வுயிர்கள் உய்யவென்ற கருணையாலாக்கலிற் பிறர்க் கேபயனாம். அங்ஙன மாக்குங் கால் ஆன்மாக்கள் குறை யிரந்து வேண்டிச் செய்தபடி யன்று, தானே பேரருளாற் செய்த தாமாகவே, அத்தகைய பேரருளாளனாகிய சிவனடி நீழல் பிரியாத சிவஞானி களும், சுடுமியற்கையில்லாத இரும்பும் நெருப்பின் கூட்டுறவால் சுடுந்தன்மை பெற்றாற்போல, அவனருட் சேர்க்கையால் நித்திய மான வான்மாக்களுக்குச் சுகதுக்கமில்லை. மாயாதனுவுக்கேயவை யுள்ளபடியென்றறிந்திருந்தார்களானாலும் பெத்த தசையில் அவ் வுணர்ச்சி யவ்வான்மாக்களுக் கில்லாமையாற் படும் துன்பத்திற் கிரங்கி யருள்செய்தல் இயல்பாம். இவ்வருளில்லாவிடின் முத்திப் பேறேயின்றாம். "அருளில்லார்க்கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலகமில்லாகியாங்கு." என்றதே சான்று. முத்திக்கு, அருளே சார்பு. என்பதை "நல்லாற்றானாடியருளாள்கபல்லாற்றாற் றேரினு மஃதேதுணை" என்ற பெரியர் மொழியாலுணர்க. அதனாற்றான் "அருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுளவென்றார். இனித்தமிழ்மறையாகிய தேவாரத்துள்ளு ம் "சலங்கெடுத்துத்தயாமூலதன்மமென்னுந் தத்துவத்தின் வழி நின்று சார்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே." என்றதும்என்க.

ஆனாற் கண்ணன் பாரதப்போர்த்தொடக்கத்தில் இருதிறப் ப டைகளையும்நோக்கித் தயவால்போர்செய்யேனென்றஅருச்சுன னு க்குப்போதித்த கீதையில், இச்சாஞானக்கிரியாசொரூபத்தால் ஆ ன்மாவொன்றே யாகவே தயவு செய்வானும் செய்யப்படுபவனும் வேறில்லையாக நீயஞ்சாது வில்லெடுத்துப் போர் புரியென்று பன் முகத்தாலும் கூறிஅவன் தயவைக்கெடுத்ததென்னையெனின்? அங் ஙனமன்று, அந்த கீதை, * ஆன்மசொரூபஞானந் திடப்படும்படி

---

* அருச்சுனற்குமிராமற்கு மதிகாரமவைபார்த்தே யறைந்தநூலின், கருத் தறியாய் ஞானமொன்றே பிரமாணஞ்சரிதையது கணக்கன்றாகும், விருத்தமறி வாசாரமுடையோனே ஞானியில்லோன் விருத்தனாகும், திருத்தமுடனமைச்ச விதுதுணிவென்றே யுட்கொள்வாய்திரஞ்கி. எனக்குமாரதேவர் மகாராஜாதுற வினுட் கூறுதலாலு மறிக.

பலமுகத்தும் விரித்துக் கூறியபடியல்லாது, ஆன்ம அநுபவஞானத்தைக்கூறியதன்று. அதனாற்றான் அவ்வருச்சுனனுக்கு உத்தரகீதையென்று மறுபடியுங்கூறினார். அன்றியும், கண்ணனும் அருச்சுனனும் பூபாரங் கழிக்கவந்த நிமித்திகர்கள். ஆகவே உண்மையநுபவஞானம்பற்றி விசாரிக்குங்கடனவர்கட்கில்லை. அங்ஙனமிருந்தும் நூன்முறை பிறழாதிருக்கவேண்டுமென்னுங்கருத்தால், "இருவகையுயிர்க்கு மினியனா யின்பதுன்பம் யானென்னதென்றறியா, தொருபொருளாலுங் குறைவுபாடின்றி யுள்ளமு மொருவழிப்பாடாய்ப், பொருவருந்துணிவுங் கருணையும்புரிந்து புலன்றெரியுணர்வை யென்பாலே, மருவி நின்றொழுகும் யோகி யென்பவனே மன்னவமற்றெனக்கினியான்." எனக் கருணையு மொருதலையாக வேண்டுமென்பதை விளக்கினார்.

அல்லதூஉம், அவ்வருச்சுனற்கு அங்கேவந்த தயவு, பாட்டன், மைத்துனன், மாமன், மகன், ஆசிரியன், நண்பன், உறவினன், படைஞன் என்றெழுந்த பாசசம்பந்த தயவேயன்றி, உண்மையாலே யான்மசொரூப முணர்ந்ததனாலுண்டாகிய சருவஜீவகாருணியமல்ல. அது உண்மை யுணர்ச்சியில் வந்த சருவஜீவ காருணியமேயானால் மாறவும் மாறாது. யுத்தமும் நடவாதென்றுணர்க.

இனி சடபரதர்க்கும் நான் வளர்த்தமானென்று சுதந்தரபுத்தியாலெழுந்த பந்த சம்பந்த தயவேயாம். அது அக்கதையானே விளங்கும்.

அப்பால் அப்பெட்டைநாயோ வெனில், முற்பிறப்பில் அங்கதேயத்து, அழகிலே சிறந்த விலைமாதொருத்தி மூத்தோரிளையோரென்ற வரம்பின்றிப் புணர்ந்து பலவகையாலும் வஞ்சித்துப் பொருள்தேடி, புலைகொலைகள்ளுண்டலிவற்றிலே தன்னாளெல்லாம் போகக் கழித்துத் தருக்குற்றுத் திரிந்து பலகொடுமைகள் செய்து திரிபவளோர் நாளுச்சிப்போதில் சிவஞானியான குரவனொருவனைப்படி பிச்சைக்கு வீதியே சென்ற தோர்மாணாக்கரான பக்குவியின் கையிலே தன்விடபுருடர்களோடுண்டு மிகுந்திருந்ததோர் சிற்றுண்டியைப் பத்திவகையின்றிப் பரிகாசப்பொருட்டாகக் கொடுத்தனள். அதை யம்மாணாக்கன் குருப்பிரீதிபண்ணித் தம்பசியாறி யிச்சைவழிசென்றனர். அப்பால் அவ்வேசை முதுமையடைந்து வறுமை பசி பிணி முதலியவற்றால் வருந்தி வினையுலப்பவிறந்தொழிந்தபின் கருமசேடத்தால் ஒரு பெட்டைநாயாய்ப் பிறந்தாள்.

கேட்டீர்களோ! முனிவர்களே!! அவ்வேசை தானுண்டதன் சேடத்தைப் பரிகாசமாக வொருசிவயோக சாதகியின் கரத்தளி

ந்த தோடத்தால் நாயாய்ப்பிறந்த னளாயினும் அச்சேடப் பண்டம் அவரது பசியைத் தணித்த பலவிசேடத்தால் முத்திக் கே வழியா யிப்போது பத்திரகிரியாராகிய சிவயோகியின் உச்சி ட்ட சேடப் பிரசாதத்திற்குப் பாத்திரமாய் அவர் திருமேனி காவற்பணிக்குரியதாகும் பேறுபெற நேர்ந்தது. திருமந்திரம் "மாத்திரை யொன்றினின் மன்னியமர்ந்துறை, யாத்தனுக்கீந்த வரும்பொருளானவை, மூர்த்திகண்மூவர்க்கு மூவேழ்குரவர்க் குந், தீர்த்தமதாமது தேர்ந்துகொள்ளீரே." ஆதலால், "அகரமா யிர மந்தணர்க்கீயிலென், சிகரமாயிரஞ் செய்துமுடிக்கிலென், பக ர்தருஞானிபகலூண்பலத்துக்கு, நிகரில்லையென்பது நிச்சயந்தா னே." ஆகவே. "ஏறுடையாயிறைவா வெம்பிரானென்று, நீறிடு வாரடியார்நிகழ்தேவர்க,ளாறணிசெஞ்சடை யண்ணலிவரொன்று, வேறணிவார்க்கு வினையில்லைதானே." என்றபடி சித்தித்தது.

கேளும் முனிவர்களே! அப்பால் இங்ஙனம் சின்னாள் கழிய வே, திருமந்திரம். "வித்தகமாகிய வேடத்தாருண்டவூண், அத்த னயன்மா லருந்தியவண்ணமாம், சித்தந்தெளிந்தவர் சேடம்பரு கிடின், முத்தியாமென்றுநம் மூலன்மொழிந்ததே." என்றபடி அப்பெட்டைநாய்க்குப் பரிபாகம் நேர்ந்தது நோக்கி, நம்மருதா ருடைய பெருமான் ஓர் அருட்சித்தவேடராய் பட்டினத்தடிகளி டத்தி லெழுந்தருளி, ஐயா! பசித்திச்சுடுதலால் பிச்சையிடவல்லீ ரோவென, அவரும் புன்னகைசெய்து, ஐயரே! யான் கோவண மே பாரமென்றுள்ளேன் தேவரீர் பசிக்குப் பிச்சையிடவல்லனோ? ஆயின் மேலைக்கோபுரவாசலில் ஓர் சமுசாரியுள்ளான் அவன்பாற் செல்வீரேலுமது பசிக்குத் தக்க பொருள்கிடைக்குமென்றார். அது கேட்டு வலிதாளும் பேரருளாளன் அங்ஙனே பத்திரகிரியார்பாற் சென்று, ஐயரே! கீழைக்கோபுரவாசலி லிருந்தா ரொருவரை நா ன் பசிக்குச் சோறிடுமென்றேனாக, அவர் எனக்குக் கோவணமே பாரமாகப் போக்கின்றி யிங்கிருக்கின்றேன். ஆதலால் மேலைக் கோபுரவாயிலில் ஓர் சமுசாரியிருக்கின்றான் அவன் பாற்செல்வீ ரேல் உமது பசியாறுமென்றார் ஆகவே நீரேனும் என்பசியாற்ற வல்லீரோ வென்றார்.

உடனே அவ்வுரைக்குறிப்புணர்ந்த பத்திரகிரிப்பெருமானும் உண்ணடுங்கி, இவ்விரந்துண்ணுமோடும், எச்சிலுண்ணுநாயுமோ என்னைப் பிச்சைதரவல்ல சமுசாரியாக்கியது. ஆண்டவர்திருவுள் ள மிப்படியாயின் இனிதுதா னெனக்கு ஏன்செய்யவல்லதென்று கையிலிருந்த வோட்டினைச் சுழற்றி எறிந்தார். அதுசென்று அப் பெட்டைநாயின் பொறியிற் றாக்கவே ஓடுமுடைந்தது நாயுமிற

ந்தது. பிச்சைக்குவந்த மருதப்பெருமானும் புன்னகையோடும் மறைந்துவிட்டனர். பின்பு, பத்திரகிரியாரும் திருவருணிலைமையை நாடிச் சகசநிட்டை பலிக்கத் திருப்புலம்பல் முதலிய அநேகஞ் செந்தமிழ்ப்பாடல்களை யருளிச்செய்து அலைவற்றசிவயோகத்தில் வீற்றிருந்தார்.

அப்பால் அப்பெட்டைநாய், "உடையாய் கூவிப் பணிகொள்ளாதொறுத்தாலொன்றும் போதுமே." என்ற திருவாசகத் திருவுளப்பாங்கின்படி பரமயோகிகையினின்று மெறிபட்ட வோட்டினால் இறந்தவளவிலே முன்பலகோடி பிறப்பினுஞ் செய்த தீவினையெல்லா மொழிந்துபோய்ப் புண்ணியமேலிட்டு, மக்களின்றித் தவஞ்செய்திருந்த காசிமாநகரத்தரசன் விசுவகுத்தன் என்பவனுக்கு மகளாகப் பிறந்து ஞானவல்லி என்ற பெயரோடு உலகத்தில் உயர்வு ஒப்பு இல்லாத அழகும், நற்குணமும், நற்செய்கையும் உடையளாய் சிவயோகியின் உச்சிட்டப் பிரசாதவிசேடத்தால் பூர்வஞானம் விளங்கக் குருவின் திருவடியில் நேயம்வைத்து வளருநாளில் அப்பெண்ணுக்கு மணஞ்செய்தற்குரிய மங்கைப்பருவம் வரக்கண்ட பிதாவாகிய அந்த விசுவகுத்த மகாராஜன் தன்மகளுக்குத் தக்க வரன்யாவனென்று நாடிக்கொண்டிருக்கையில் வரன் கிடையாதபடியால் ஓர்நாள் மிகவு மனம்வருந்திக் கன்னிகாமாடத்திருக்கும் தன்பெண்ணைப் பார்க்கவந்தவன் பெண்ணினழகை நோக்கித் தன்னருகிருந்த புரோகிதனைப்பார்த்து, ஐயா! இக்கன்னிகைக்குந் தக்க கணவன் இவ்வுலகி லொருவனுண்டோ? அந்தோ என்செய்வேன்! "பெண்களைப் பத்துவருடத்தின்மேல் மணம்புரிவியாது வைத்திருத்தல் பாவம்." என்று பெண்பாலும் சொல்லுகின்றார்களே என்று கண்ணீருகுத்தான்.

அதுகண்ட அப்பெண் திடுக்கென்று பயந் துடல்நடுங்கத் தந்தையை வணங்கி நின்று, அப்பரே! நீர் இப்போது கூறியதென்ன? என்னை யார்க்கு மணஞ்செய்விக்கக் கருதுகின்றீர்? யான் யாருக்கு முரியவளல்லள் எனது குருநாதன் தென்னாட்டில் திருவிடைமருதூரில் மருதவாணராலயத்து மேலைக்கோபுரவாயிலில் எழுந்தருளியிருக்கின்றார். ஆதலால் என்னை அவரிடத்தி லழைத்துக்கொண்டுபோ யொப்புவித்தால் அவர் யார்க்குக் கொடுப்பாரோ அவர்களுக்கு நான் உரியவளாவேன். நீர் என்னை வருந்திப் பெற்று வளர்த்த தந்தையென்ப துண்மையே லிவ்வுபகாரம் நீர் செய்யவேண்டும். இச்செய்கை ஆண்மகவில்லாத வுமதுகுடி முன்னோர் மூவெழுதலைமுறையாரும் முத்திபெறும் தவமாகமுடியும். ஆதலால் என்சொல்லை அவமதியாது சொல்லியவண்ண முடிப்பிக்கவேண்டுமென்று மீட்டும்பணிந்தாள்.

அதுகேட்ட அரசன் நெஞ்சுதுணுக்குற்று, இன்னுந் தாய் மடிவிட்டிறங்கியறியாத இச்சிறுகுழந்தைக்குக் குருநாதன் யார்? அவரிருப்புத் தென்னாடு திருவிடைமருதூர் சிவாலய மேலைக்கோபுரவாயிலாம். அது இவளுக்குத் தெரிந்தபடி எப்படி? பிறர்சொல்லக் கேட்டிருந்தவாறுமன்று. அரசாட்சிசெய்துவருகிற நான்இதுவரையில் கேளாதது, இவள் கேட்டதெங்கே. ஆனால் இவள் அழகு குணஞ்செய்கையை நோக்குமிடத்து, சாதாரணமான வுலகத்துப் பெண்களுள் ஒருத்தியல்லள். ஏதோ காரணமாதாகவே தோற்றுகின்றது. ஆதலால் இதை நன்குவிசாரிப்போமென்றுபுரோகிதரோடு தன்சபைக்குவந்து, நல்ல விவேகிகளும் யோக்கியதையுடையவர்களுமான ஒற்றுவரைத் தருவித்து, அவர்களுக்குத் தன்கருத்தைத் தெரிவித்து உண்மையையறிந்துவர, ஏவினான், அவர்களு மவ்வாறே தென்னாட்டு மருதூரடைந்து அடையாளப்படி பத்திரகிரியார் நிலைமை தெரிந்துவந்து அரசனுக்கு அறிவித்தார்கள். அங்ஙனே அக்கோமகன் பயமுற்றுத் தன்பரிவாரங்களோடும் மகளைச் சிவிகையிலேற்றிக்கொண்டு தானும் புறப்பட்டு வந்து திருவிடைமருதூரடைந்து ஆலயஞ்சேர்ந்து மேற்றிசைக் கோபுரவாயிலின் அருகே சிவிகையினின்றும் தன்மகளை யிழிச்சி நின்றான்.

அத்தருணம் பத்திரகிரியார் சிவயோகசமாதியி லிருந்ததால் அவ்வரசகன்னிகை அஞ்சலியத்தத்தோடும்எதிர்நின்றுகாலம்பார்த்திருந்தனள். ஐயர் சமாதியினின்றும் உலகமுகமாகிவிழித்து நோக்கலும், அப்பெண், எம்பெருமானே! அடிநாய்மீட்டும் திருவடிப்பேற்றுக்கே வந்ததென்று வணங்கலும், எல்லாமுணர்ந்த பெரியோராகிய அவரும் அவ்வரலாறு முழுவது மொருங்குணர்ந்து அப்பெண்ணைக் கைப்பற்றிச்சென்று அந்தக்கணமே கீழைக்கோபுரவாயிலி லிருக்கும் தம்முடைய ஞானாசிரியராகிய பட்டினத்தடிகள் சந்நிதியில்விட்டு, எம்பெருமான் எச்சிலுண்டநாய்க்கு மிப்பிறவிநோய்வரலாமோ என்று கண்ணீர்வார விண்ணப்பித்து நின்றனர். பட்டினத்தடிகளும், சிவச்செயலுக் கென்செயவல்லேமென்று திருவருளை நாடினராக; அந்நிலையில் ஓர் பெருஞ்சோதியுண்டாயது. அச்சோதியில் சிவபெருமான் திருவாணைப்படி பத்திரகிரியார் அப்பெண்ணோடு புகுந்து கலந்தனர். பூமழைபொழிந்தது. தேவதுந்துபி முழங்கிற்று. அங்கிருந்த சராசரவுயிரனைத்து மானந்தமயமே யாயிற்று. அடியவர் அரகரமுழக்கஞ்செய்தனர். விசுவகுத்தமகாராஜன் முதலியோர் பரவசராய்நின்றனர். உடனே சோதியும் மறைந்து மகாலிங்கத்துட்சென்றொடுங்கிற்று. கேட்டீர்களோ முனிவர்களே! நாய்பெற்றபேறு யாவரீ

லளூவிட்டுச் சொல்லத்தரம்? யார்க்குத் தான்கிடைக்கும் ஆதலால் உலகத்தில் சிவஞானிதரிசன விசேடமே மங்கலங்களுளெல்லாம் பெருமங்கலமாவதென்று வேதாகமங்கள் சொல்வதுண்மை. என வுபமன்னிய முனிவர் கூறினர்.

அது கேட்ட முனிவர்கள் யாவரும் அன்பு மாராமையுமேலிட உபமன்னியபகவானை வணங்கி, எம்பெருமானே! "சித்தந்தெளிந்தவர் சேடம்பருகிடின் முத்தியாம்" என்ற திருமந்திரப்படி அப்பெட்டைநாய் அதேதேகத்தில்முத்திபெறாது செத்து மறுபடியும் அரசகுமாரியாகப்பிறந்து பூர்வஞானம் விளங்க வளர்ந்திருந்து பின் முத்திபெற்றதன் காரணம் வெளிப்படையிலெங்கட்குணர்வுதிக்கும்படி அருள் செய்ய வேண்டுமென,ஸ்ரீ வுபமன்னியமுனிவரும் கூறத்தொடங்கினர்.

முனிவர்களே! கேளுங்கள்; நீங்கள் வினவியதுண்மையே ஆனால், அதே திருமந்திரம், "ஓரெழுத்தொருபொரு ளுணரக்கூறிய, சீரெழுத்தாளரைச் சிதையச்செப்பினோர், ஊரிடைச் சுணங்கனாய்ப்பிறந்தோருகம், பாரிடைக்கிருமியாய்ப்படிவர்மண்ணிலே." எனவும், "மந்திரமோரெழுத்துரைத்தமாதவர், சிந்தையின்நொந்திடத் தீமைகள்செய்தவர், நுந்தியசுணங்களாய்ப் பிறந்து நூறுரு, வந்திடும்புலையராய் மாய்வர்மண்ணிலே." எனவும் விதித்தது. ஆதலால், இந்நாய்ப்பிறப்பிற்கு முன்னடைந்திருந்த வேசைப்பிறப்பில் செய்தமற்றைத்தீமைகள்கிடக்க,சிவயோகசாதகியொருவரைப் பரிகாசஞ்செய்த குற்றம் சிறிதல்ல,பெரியதிற்பெரியது."அது அத்திருமந்திரம் விதித்தபடி பலபல சன்மமெடுத்து இறந்தாலொழிய வேறு வகையாலொழியாது. ஏனெனில், பிறக்கும்பொழுதோ;சிவதருமோத்திரம்." என்றென்றெண்ணியிருக்கு முயிரிடர்ப்பட்டழியுமெழில்வரைக்கீழ், ஒன்றுமொருவன் றனைப்போலக் கருப்பாசயப்பையுறுத்துதலான், மன்றவுததிமறிந்தாழ்வான் வருத்த மென்ன வருந்தியிடும், நின்ற கருப்பாசயவுதகவெள்ளங்கொள்ள நிறையழிந்தே." "அங்கியதனிற்றங்கியிடு மயோமயத்தகும்பத்திற், றங்குமொருவன்றபனம் போற்றபன மெய்துந்தாயுதரத், தங்கிசுடவேயழலனையசூசியதனுலாகத்தைப், பங்கித்திடவேபடுமிடரி னிருநாற்குணிதம்பட்டழுங்கும்." "கருப்பாசயமேகட்டமதாமதனிலதிகங்கடுங்காலும், முரிக்கமிகவுமோகமுற முன்னையுணர்வு மங்கிலையே, மரிக்கவாலைக்கரும்பெனவேயோனிவழியின்வலிதொலைய, நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்றுமுயி ருனிலையுடனே." என்றபடி கருப்பையுறுத்தல், அதிற்சலம்பூரித்தல்,உதராக்கினிசுடல், பிரசூதவாயுமுரித்துத்தள்ளுதல், யோனித்துவார நெருக்குண்டல் என்ற ஐவகைப்பெருந்துன்பமும் பொறுக்கமுடியாது, தாங்கமுடி

யாது, வேறொருவரால்தடுக்க முடியாதாயுள்ளன. இறக்கும்பொழு தோ? பெருந்திரட்டு, "பரணமாகியபெண்டிருஞ்சுற்றமும்பண்டுத ங்கையிற்றந்த, விரணமானவைகொண்டிட விவரைவிட்டியம்பிடா திவனேகும்,மரணவேதனையாவராலறியலாமயங்கியைம் புலனந்த க்,கரணம்யாவையுங்கலங்கிட வருந்துயர்கடவுளேயறிகிற்பான்." "வந்திடும்பிறவித்துன்பமறித்துரை செய்யப்போமோ,வுந்திமேலை யும்பித்து முணர்வொடுபொறிகலங்க,நந்திடாவிருளேமூடிநாவுலர் ந்தலமந்தென்னே,இந்தமாவிறப்பிற்றுன்பம்பவத்துன்பத்தெண்ம டங்கே."என்றபடி அப்பிறத்தலிலும் எண்மடங்கு அதிகமானதுக் கம். அதனாலன்றோ?"சாதலினின்னாததில்லை" என்றார் தேவர். "யானேதும் பிறப்பஞ்சேனிறப்பதனுக்குஎன்கடவேன்"என்றது திருவாசகம். "சாதல் சாதல் பொல்லாமை" என்றதுமது. மார்க் கண்டேயர் அவ்விறத்தலுக்கஞ்சிச்செய்த் முயற்சி சற்றல்லவே. இனி எந்தப்பெரியர்தான் சாவுக்குப்பயப்படாதவர்கள்; இழவு என்னுஞ்சொல் எப்பொருட்கேட்டுக்கும் பொதுவாயிருப்பினும் தேகக்கெடுதிக்கன்றோ வுலகம் அப்பேரிட்டு வழங்குவது. ஆதலா ல் வினையொழிவு, பிறத்தலாலும் இறத்தலாலுந்தான்நேரிடும். ஆக வே, பெரியோரைப்பழித்தகுற்றம் நாயாய்ப்பிறந்து பலிபாத்திரத் தாலடியுண்டுஇறத்தலாலொழிந்தது.குரு உச்சிட்ட பிரசாதபலத் தால் முன்னுணர்ச்சியோடு அரசகன்னியாகப்பிறந்து தூலவுடம் போடும் அருட்பெருஞ்சோதியிற்கலக்கப்பெற்றது. என்று சொல் லி அப்பால் நடந்த கதையைச் சொல்லலாயினர்.

கேளும் முனிவர்களே! அந்த அருட்பெருஞ்சோதி மறைந்த வுடனே திருவெண்காட்டடிகள் திடுக்குற்று ஆராமை மேலிட்டுக் கண்களில் ஆநந்த நீர்பெருகச்சிறுபோது அவசமுற்றுத்தெளிந்து அருட்டிற நாடி, இறைவர் சந்நிதிநோக்கி, எம்பெருமானே! மு ன் வரகுண பாண்டியனார் பத்தினியாரைத் திருவடியிற் கலந்து கொண்ட பெருங்கருணையாளனே இன்றுசெய்தபெருங்கருணைக்கு எல்லையென்னுள்ளது, இன்னும்என்னையும்என்வினையையும்இங்கு இருத்திவைத்திபோலும்,இனிஏழையடியேன்செய்யக்கடவனஎன் னென்று நின்றுருகுந்தருணத்தில், ஐயர் திருவருளால், "ஐய! நம் மொற்றியூர்க்குவருதி" என்றோர்அசரீரிவாக்குஉண்டாதலும்வண ங்கி விடைபெற்று அங்ஙனே புறப்பட்டு வழியிலிருந்த திருப்பதி களில் பெருமானை வணங்கித் திருவெண்காட்டினை யடைந்தார். என்றுபமன்னியமுனிவர் கூறக்கேட்டமுனிவர்கள் அவரைவண ங்கி, எம்பெருமானே! வாகுணபாண்டியனார் திருமனைவியை ஆளு டையார் திருவடியிற்கலந்துகொண்ட வரலாறென்னையெனக் கூற லாயினர்.

வரகுணதேவர் கதை.

முனிவர்களே! முன்னொருகாலத்தில் பாண்டிநாட்டில் துவாதசாந்தத்தலமாகிய மதுரையிலே அரசாண்ட சந்திரவமிசத்தர்களாகிய பாண்டியர் குடியிலவதரித்துச்சிவநேசமேவடிவமாயிருந்த வரகுணதேவர் மநுமுறை கோடாது அரசுசெலுத்தி வருநாளில் ஓர்நாள் தேரேறி உலாவரும்போது முதுவேதிய னொருவன் றேர்க்காலிற்சிக்கி யிறந்தானாகவே, அப்பிரமகத்தி அவ்வரச சிகாமணியைப்பற்றி வருத்த, வேந்தன் அஞ்சி நூன்முறைக்கழுவா யெல்லாம்புரிந்து மொழியாது கண்டு தங்குலதெய்வமாகிய திருவாலவாயுடையார் சந்நிதியடைந்து குறையிரப்பப் பெருமானுந் திருவுளமிரங்கி, ஐய! வரகுண, உமையவளிதயாகாசமாய் உருத்திரர் பூசித்தருள்பெற்ற திருவிடை மருதூ ரடையின் இப்பிரமச்சாயையொழியுமென்ன அசரீரிவாக்காலருளலும், உடனே அப்பஞ்சவர் கோமான் உலகோம்பலையமைச்சர்வசமிறுவி, மற்றைய புரோகிதர் முதலிய வுறுதிச்சுற்றமும் பரிவாரமும் புடைசூழச்சேனைட்டுத் திருவிடைமருதூர்புக்குக் காருணியாமிர்த தீர்த்தத்து நீராடி நித்தகரும முடித்துக்கோயில் வலம்வந்து கிழக்கோபுரவாயிலாற் புகுதலும் அப்பிரமசாயை அரசனைப்பற்றிச் செல்ல அஞ்சிப் புறத்தே நின்றது. பெரும்பாரங்கழியப்பெற்றோன் போன் றரசனாலயத்துட்புகுந்து ஆளுடையானை வணங்கித்தொழுது துதித்து வலம் வந்து பணிந்து விடைபெற்று வெளிப்படுகையில், அசரீரியால் கீழைவாயிலிற்பிரமசாயை நிற்றலால் மேலைவாயிலாற் செல்கவென்று அருளாணையாதலும், அவ்வாறே சென்று இருக்கைசேர்ந்து காலங்கடோறும் மருதவாணர் சந்நிதியடைந்து தரிசித்து அன்பு பெருக அங்கு வசித்திருக்குநாளில், ஓர்நாள் கள்ளனொருவன் அரண்மனையிற்சென்று களவுசெய்யக்காவலர் கடுகி அக்கள்ளனைப்பற்றிக்கட்டிவந்து இறைமகன் முன்னர்விடலும் பாண்டியரேறு அக்கள்ளன்உடம்பிற்றிருநீறு விளங்கக்கண்டு சிவனடியவனென்று கட்டவிழ்ப்பித்து வணங்கிஅவன் வேண்டும் பொருள் கொடுத்தனுப்பினார். மற்றொருநாளிரவில் ஊர்ப்புறத்து நரிகள் ஊளையிட அவ்வோசைசிவபெருமானைப்பாடிய பாடலோசையாகவெண்ணி அவற்றிற்குஆடைகள் பரிசாகவளித்தனர். பின்னொருநாளிரவில்மழை பெய்யுங்கால் தவளைகள் இரைச்சலிட அவ்விரைச்சல் சிவநாமம் போலச்செவிப்பட அங்ஙனே மனங்கனிந்து மணிகளையும் பொன்னையுங்கலந்து அந்நீரிலிறைப்பித்தார். ஒருகாலத்தில் பெருமானார் திருமஞ்சனத்துக்காம்படி தைலஞ்சமைக்கவென் றுலரவிட்ட வெள்ளினைக்காவிற்றின்ற வொருவனைக்கண்டு பிடித்துக்கொணியர் குலமணிபால் கொண்டுவர, அவனிவ்வெள்ளைத்தின்றதனால் இனிய

றும் பிறப்பு எருதாகப்பிறந்து சிவபெருமான் றிருவபிடேகத்திற் குத்தைலம் அமைக்குஞ் செக்குமரம் வலிக்கும் திருத்தொண்டு பெறலாமென்னு மாசையா லிங்ஙனஞ் செய்தேனெனக் கேட்டு, இங்ஙனமானால் யானும் அச்செக்கினையீர்க்கும் மற்றொருதாம் பேறுகிடைக்க உமது வாயிலிருக்கு மெள்ளினுட் சிறிதளியுமென் றிரந்துண்டுகளித்தார். ஒருகால் அம்மருதூ ரெல்லையி லுருண்டு கிடந்த வெற்றுத்தலையைக்கண்டிது மருதூ ரடைவா ரடிப்பொடி யணியவன்றோ விங்ஙனங்கிடந்துருள்வது, அப்பேறு எமக்குமாக வென்றத்தலையை யடுத்தடுத்திரந்துவந்தனர். வேறொருநாள் திருக்கோயில் வலம்வருகையில் சந்நிதியின் ஓர் புறத்தே நாய்மலமிருக்கக்கண்டிதனை யப்புறப்படுத்துவார்க்கென்னரசிற் பாதி தருவேனென்று கருதி, மறுவலம் வருகையில் ஒருவரு மதை நோக்காராக, இனி யெடுப்பார்க் கென்னரசு முற்று மளிப்பேனென்று கருதிச் சென்று, மூன்றுமுறை வலம்வருமளவும் யாரும் தொடாமைகண்டு தாம் தமது மேலிருந்த உத்தரியத்தால்வாரியெறிந்தார். பிறிதொருநாள் ஊர் உலாவருகையில் வேப்பங்கனி யுதிர்ந்திருக்கக் கண்டு அவை சிவலிங்கமாகத்தோற்றலின் ஆராமை மேற்கொண்டு அவற்றினுக்குவிதானங்கள் சமைப்பித்து ஆநந்தித்தனர். இங்ஙனம் அப்பாண்டி வேந்தன் விசாரமற்ற பத்திப் பேரன்புடன் பெருமானுக்குப் பலவகைத்திருத்தொண்டும் செய்துவருநாளில் விக்கிரமச்சோழர் திருமகளார், இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலிய தெய்வமாதர்கள் யாவரும்வணங்கும் பேரழகும் கற்பும் வாய்ந்த காந்திமதியென்னும் பெயரை யுடையவரைத் திருமணஞ்செய்தன்றிரவில் பள்ளியறைக்குச்சென்று மனைவியார் திருவடியைநோக்கி, இம்மாதரசு நம்மருதவாணருக்குத் தக்கவளாமே யென்றெண்ணி அங்ஙனே மனைவியார் கரம்பற்றி ஆலயத்திற்குட்புகுதலும், அத்தருணம் ஊரரவமடங்கி இராத்திரி நடுநேரமாகவே, அர்த்தயாம பூசை நிறைவேற்றித் திருக்காப்புச்செய்து அகம்படித்தொண்டரும் புறம்படித்தொண்டரும் தத்தமிடஞ்சென்றனராகவே அம்மன்னவர் பெருமான் றிருவாயிற்புறத்துநின்று, விரைவோடு "ஐய! மருதப்பா!" என்றழைத்துத் திருக்கதவைத்தட்டலும், பெருமான், அவ்வேந்தின் அன்பு வலைப்பட்டாராதலின். வரகுண? வந்தேன்! வந்தேன்!! என்றோடிவந்து திருக்கதவந்திறப்ப, உட்சென்று, எம்பெருமானே! இம்மாது தேவரீர் திருவுளப் பாங்கினுக்கு ஆமேயென்று கொண்டுவந்தேனென அங்ஙனே பெருமானும் அவர் கருத்தினுக்கிசையக்காட்டிச் சிவலிங்கத்தினிட மாகவயிக்கஞ் செய்துகொண்டனர். வரகுணதேவரும் திரும்பித் தம்மரண்மனை புகுந்து பெருங்களிப்புடனிருந்தார். கோயில் பழயவண்ணம் திருக்காப்பமைந்தது.

கேட்டீர்களோ முனிவர்களே! மறுநாள் வைகறையில் திருவனந்தலுணர்த்த, கோயிற்றுறையா ரனைவருந் திருக்காப்பவிழ்த்துட்சென்றபோது சிவலிங்கப்பெருமானுக்கு ஓர் புறத்து, வளைமுதலிய வணிந்த பெண்கரமொன்று மணிக்கட்டு மட்டும் வெளிப்பட்டிருக்கக்கண்டஞ்சி அனைவருமொரு முகமாக வரகுணச்செல்வர்பாற்சென்றறிவித்தலும், அவ்வரசர்பெருமான் அச்சமுநாணமு மேற்கொண்டு பெருமான் சந்நிதியடைந்து அகம்படித்தொண்டர்கள் தமக்கு அறிவித்தவண்ண மிருக்கக்கண்டு, பெருங்கவலையும் துன்பமும் மேலிட, எம்பெருமானே! பாவியேன் பற்றிய வெச்சிலென்றோ அக்கரத்தினையுட்கொள்ளாது விட்டபடியென்றிரங்கி விண்ணப்பித்து நிற்றலும், யாவருங் கேட்கும்படி அசரீரியால் "ஐய! வரகுண! உன்பணியை யுலகறியச்செய்ய வைத்தபடியன்றி வேறல்ல" என்று பெருமான் கட்டளையிட்டருளியவுடனே, அங்கிருந்தாரனைவருங் காணும்படி வெளிப்பட்டிருந்த அக்கை, சிவலிங்கத்துள் மறைந்தது தேவர்பூமழைபொழிந்தனர். அந்தர துந்துபி முழங்கிற்று. அடியவர் அரகரமுழக்கஞ்செய்தனர். எவ்வுயிரும் பேரின்பவெள்ளத்துண் மூழ்கின. அப்பால் வரகுணதேவரும் பலதிருத்தொண்டுசெய்து பெருமான் திருவடி நீழலை யடைந்தனர். கேட்டீர்களோ முனிவர்களே! பத்தியினிலக்கணம் இப்படி விசாரமற்றபடியில் வரம்பற்றதாக விருக்கின்றது. தேவர் மூவர் யாவர்க்கு மரிய சிவன் அன்பரன்புக் கெளியனாகவிருக்கின்ற தன்மைகண்டீர்களோ? அதனாலன்றோ "மெய்யன்பை யுடையாய்பெறநான்வேண்டுமே" என்றது அருட்டிருவாசகம். என்று சொல்லி மனமுருகித் திருவருளைத் தியானித்து அப்பால் பட்டினத்தடிகள் சரித்திரத்தினை முனிவர்களுக்குக் கூறத்தொடங்கினர்.

பட்டினத்துப்பிள்ளையார் மறுபடியும் திருவெண்காடு அடைந்தது.

கேளும் முனிவர்களே! நமது பட்டினத்தடிகள் திருவெண்காட்டை யடைந்த வளவிலே திருவெல்லையைப்பணிந்து திருவீதி வலம்வந்து கோபுரத்தை வணங்கிப் பெருமான் சந்நிதி யடைந்து அன்பு பெருக உரைதடுமாறி யுரோமஞ்சிலிர்ப்பக் கரமலர் குவித்துக் கண்ணீர்ததும்ப ஆநந்தபரவசராய் மனங்குழைந்து குழைந்துருகப்பாடுவாராயினர்,

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காட்டுத் திருவிசைப்பா.

பூதமுங்கரணம் பொறிகளைம்புலனும் பொருந்தியகுணங்களோர்மூன்றும், நாதமுங்கடந்தவெளியிலேநீயுநானுமாய்நிற்குநாளுளதோ, வாதமுஞ்சமயபேதமுங்கடந்தமநோலயவின்பசாகர

னே, ஏதுமொன்றறியேன்யாதுநின்செயலேயிறைவனேயேகநாயகனே. (க)

யாவரேயிருந்தும் யாவரோவாழ்ந்தும் யாவரோயெமக்குறவாயும், தேவரீரல்லாற் றிசைமுகமெனக்குத் திருவுளமறியவேறுளதோ, பாவலரொருவன் செந்தமிழ்க்கிரங்கிப்பறவையாருடலேமாற்ற, ஏவலாளாகியிரவெலாமுழன்றவிறைவனேயேகநாயகனே.( )

உண்டதேயுண்டு முடுத்ததேயுடுத்து மடுத்தடுத்துரைத்ததேயுரைத்தும், கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவுநாளெல்லாம், விண்டதா மரைமேலன்னம் வீற்றிருக்கும்விழவறுவீதிவெண்காடா, அண்டரோபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

திருநாங்கூர் - சேந்தனார்வரலாறு.

என்றசெந்தமிழ்த்திருவிசைப்பாபாடிவணங்கிப் புறம்போந்து அங்குவீற்றிருக்குநாளில், முன்அரசன் சிறையுளகப்பட்டிருக்குஞ் சேந்தனருடையமனைவியாரும், மைந்தராகியசிறுவரும்,பட்டினத்தையர் இங்கு எழுந்தருளியிருக்குஞ் செய்தி கேள்வியுற்று வந்து அவரதுதிருவடிகளிலே வணங்கிக்கோவென்றுகதறியழுதார்கள். அப்போது, ஐயர்இரக்கமுற்று, நீவிர்யாவர் நுமக்கடுத்தகுறையென்ன, என்றுவினவ, அவர்கள் நடந்தசெய்திகளையெல்லாம் விண்ணப்பித்துச்சேந்தனார் சிறையை விடுவித்தருளவேண்டுமென்றுஇரந்தார்கள். அதுகேட்டையர்பேரருளாளராதலால் திருவுளங்கனிந்து, சிவபெருமான் சந்நிதியிற்சென்று,

மத்தளைதயிருண்டானுமலர்மிசைமன்னினானும்
நித்தமுந்தேடிக்காணாநிமலனே * யமலமூர்த்தீ
செய்த்தலைக்கயல்பாய்நாங்கூர்ச்சேந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

என்றதிருப்பாடலையருளிச்செய்தமாத்திரத்தில், பத்திவலைப்பட்டபரங்கருணைக்கடலாகிய சிவபெருமான் மூத்தபிள்ளையாரைநோக்கிநஞ்சேந்தனையரசனிட்ட சிறைக்களனின்று நீக்குகவென்றருளிச்செய்யக்கணேசப்பெருமானார் அங்ஙனே துதிக்கரத்தால்சிறைக்களத்திருந்த சேந்தனார்தலையவிழ்ப்பித்துத் தூக்கித்திருவெண்காடர்முன்விட்டருளினார். சேந்தனாரும் துயிலுணர்ந்தவர்போல், வசமற்றிருந்தவர் தெளிந்தெழுந்து எதிர்நிற்கும் தமதுகுருமணியாகிய திருவெண்காடரைக் கண்டு திடுக்கிட்டுப்பணிந்து, எம்பெருமானே! அரசனிட்டசிறையினின்று மீட்பித்தாற்போலப்பாசச்சிறையினின்று மீட்பித்தருளவென்று மீட்டும்பணிந்தார்.

---

* நீபோயினாறு - எனப்பாடங்கூறுவாருமுளர்.

அப்போது,பட்டினத்தடிகள் இவர்பரிபாகநோக்கி,ஐயா! நின்
குடும்பத்தோடு காட்டுவிறகின் சிறுவிலைப்பொருள்கொண்டுசிவன
ன்பரொருவரை யூட்டியுண்டு திருத்தில்லைப்பதியி லுறைதி என்று
கட்டளையிட்டருளிச் சீகாழிநோக்கி எழுந்தருளினார். அங்ஙனே
சேந்தனார்-அவரையுந் திருவெண்காடுடையாரையும் பணிந்து சித
ம்பர தலத்தை யடைந்து குரவனாணைப்படி யொழுகுவாராயினார்.

இங்ஙனமொழுகுநாளில் ஓர்கால் ஏழுநாள் அடைமழைபற்
றிமனிதரியங்காவகைபெய்யப்பசியால் வருந்திக்காடுசென்று அரி
து முயன்றுவிறகுகொண்டுவந்தூரிலே மாறிப்பெற்றமாவைக்கொ
ண்டுசென்று மனைவியார் கரத்தளிப்ப அவர்களியமுது சமைத்துத்
தங்கணவனார்க்குத்தெரிவிப்பக்குரவனாணைப்படி யமுதூட்டச்சிவ
னடியாரைத்தேடி ஊர்முழுவதுந் திரிந்தலைந்து கோயின்மண்டப
ந்தோறும்புக்குநாடுகையில், இவரது பத்திப்பேரன்பமுதுசெய்ய,
அழகிய திருச்சிற்றம்பலமுடையாரோ மூப்பினாற்றளர்ந்த ஓர் அடி
யவர்திருவுருக்கொண்டுமிகுபசியால்வருந்தினாற்போல் ஓர்மண்
டபத்திற்றங்கியிருக்கக்கண்டு, திருவடிகளிற்பணிந்து எம்பெருமா
னே! ஏழையேன்சிற்றிருக்கைக் கெழுந்தருளிய முதுகொள்ளத்தி
ருவுள்ளமாமே என்ன,ஐயருமதற்கிசைந்து பின்றொடர்ந்துவர, இ
ருக்கை சேர்ந்து குளிர்போக்கிப் பாதம்விளக்கிப் பீடத்தெழுந்தரு
ளப்பண்ணிக்களியமுதுபடைக்கப்பெருமானுமமுதுண்டு சேடத்
தை முன்றானையின் முடிந்துஎழுந்தருளித் திருவம்பலம்புக்கு அங்
குத்தரிசனத்துக்கு வந்திருந்த திருமால் அயன்முதலிய வானவர்
முனிவர்யாவர்க்கும் அக்களியமுதின் சுவையைக்கூறிச் சேடப்பிர
சாதமளித்துச் சிவகாமியார்களிப்ப வீற்றிருந்தார். சேந்தனாரும்
தங்குடும்பத்தோடு குறையற விரதமுடித்தனராயச் சேடவமுது
ண்டு பரயோகநித்திரையி லெழுந்தருளியிருந்தார்.

அங்ஙனமிருக்க,சிவநேசத்திற் சிறந்த செல்வச் சோழமகா
ராஜன் நாடோறும் திருவம்பலத்திற்சிறந்தபூசனைநடத்திப் பூசை
முடிவில் இறைவனருளால் எழும்மணி யோசைகேட்டு அமுதுகொ
ள்ளும் விரதம்பூண்டான். அன்று நடுவிராத்திரியாயும் மணியோ
சைகேளாமையால் மனங்கலங்கி வருத்தமுற்றுத் தரையிற் கிடந்
துதுயின்றானாக, சேந்தனாரன்பை வெளிப்படுத்தும்படி கனவில்,
அம்பலத்தழகர்சென்று, அரசனே! வருந்துதலொழி இன்றுநம்
முடையசேந்தன்நிவேதித்தகளியமுதுண்ணச்சென்றிருந்தனமாத
லின்நீசெய்வித்த பூசனைக்கு வரத்தடைபட்டதென்றருளி மறைந்
தார். உடனே அரசன் விழித்தெழுந்தாராமை மேலிட அச்சே
ந்தனார் பேரன்பும் பத்தியும் எவ்வகைத்தோ? எவ்வாறவரையான்
தரிசிக்கப்பெறுவேனென்று வருந்தித் திருவருளைச்சிந்தித்திருந்து

அருணோதயமாதலும் நித்தக்கடன் முடித்துத் திருக்கோயிலுக்கு வந்தான். அங்கு, திருவம்பலத் திருமுற்ற முழுவதும் தெய்வமணம்வீசிக்களியமுது உதிர்ந்துகிடத்தலைத் திருவம்பலத்தடியரும் தில்லைவாழந்தணரும் தானுமாகக் கண்டு தன்கனவைக்கூறி, அவர்பத்தியைத் துதிக்க; யாவரும் அவரைத் தரிசிக்கும் விருப்பமுடையராயிருந்தனர். அஃதங்ஙனமாக.அப்போதுமார்கழி ஆதிரைத்திருவிழாநாளகத் தேரணிவிழாநடத்தற்கு முன்னநாள் மழையாற்றடையுற்றன்று மழைநிற்றலும் நடேசப்பிரானைத்திருத்தேர்விழாக்கோளுக்கெழுந்தருளப்பண்ண, தேர்நடவாதாக, யாவரும் வருந்துகையில், அங்குத்தரிசனைக்குவந்திருந்த சேந்தனாரைக்குறித்து, அவ்விடத்தத்தில்லைவாழந்தணர் அரசன்முதலிய எல்லாரும் கேட்கும்படி, "சேந்த!தேர் நடக்க நம்மைப் பல்லாண்டுபாடுக" என்றோர் அசரீரிஉண்டாகலும்,சேந்தனாரும் மனங்குழைந்துருகி எம்பெருமானே! நாய்க்குத்தவிசிட்டென்னவென்னையுமோர் பொருளாக்கி இத்திருப்பணி பூட்டிய திருவருட்கென்னை கைம்மாறென்று, ஆங்ஙனே.

திருச்சிற்றம்பலம்.

கோயில், திருப்பல்லாண்டு. பண் - பஞ்சமம்.

"மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப் [ங்க
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம் விள
அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே.

"எந்தையெந்தாய்சுற்றமுற்று மெனக்கமுதாமெம்பிரானென்றெ
சிந்தைசெயுஞ்சிவன்சீரடியாரடிநாய்செப்புமுறை [ன்று
அந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மே
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. [ற்

திருச்சிற்றம்பலம்.

என்றருளிச்செய்தலும் தேர் நடந்து வீதிவலம்வந்து நிலைசேர்ந்தது. பூமழைபொழிந்தது. வானதுந்துபி முழங்கிற்று, அடியவர்அரகர என்றார்த்தனர்.

அப்போது தில்லைவாழந்தணர் அரசன்முதலிய யாவரும் மிகக்களித்துச்சேந்தனாரைவணங்க, அவர்கள் வணங்குமுன் தாம் வணங்கித் திருவிடைக்கழிசென்று, அங்கு முருகப்பிள்ளையாரை,

திருவிசைப்பா. திருவிடைக்கழி.

மாலுலாமநந்தந்தென்கையிற்சங்கம்வவ்வினான்மலைமகண்மதலை
மேலுலாந்தேவர்குடிமுழுதாளுங்குமாரவேள்வள்ளிதன்மணாளன்
சேலுலாங்கழனித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற
வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென்மெல்லியலிவளே.

என்ற பதிகம்பாடித் திருவாவடுதுறை, திருவீழிமிழலை, திருவாரூர் முதலிய திருப்பதிகளை யடைந்து பெருமானைத் தரிசித்துத் திருவிசைப்பா திருப்பதிகம்பாடிக்குருவருளால் குடும்பத்தோடும் சிற்சபையிலாட வெடுத்த திருவடிநீழலில் வீற்றிருந்தருளினார். *

திருவெண்காடர்புகழை உலகெலாம்பரவித் துதித்துய்ந்தன.

இங்ஙனம் சேந்தனாரை முத்திவழிக்கு விடுத்து, ஸ்ரீபுகலிப்பதியடைந்த பட்டினத்தடிகள் ஆளுடையபிள்ளையார் திருவவதாரஞ்செய்த திருப்பதியென்று எல்லை வலம் வந்து பணிந்து சென்று கோயிலை யடைந்து திருத்தோணி வீற்றிருந்த பெரிய பெருமானையும் பெரிய பிராட்டியையும் வணங்கி யன்பு பெருகநின்று,

திருக்கழுமலம் மும்மணிக்கோவை.

"திருவளர்பவளப்பெருமலைமணந்த"

என்ற விணைக்குறளாசிரியப்பாமுதலாகவெடுத்து மும்மணிக்கோவைபாடி அங்கு சில பகல்வீற்றிருந்து, உலகெலாமுய்யச் சிற்சபையிலாடுந் திருநடங் கும்பிடவோரெண்ணமுண்டாதலும்,

"அத்தனைமுப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
சித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே."

என்றருளிச்செய்து கழுமலமுடையானைச் சென்று வணங்கி விடைபெற்றுப்புறப்பட்டு, வழிக்கணுள்ள திருப்பதிகளையெல்லாந் தரிசித்து கொள்ளிடக்கரையேறிப்பெரும்பற்றப்புலியூர்த் திருவெல்லையடைந்து பணிந்துட்புகலும், நந்தனவனங்களெல்லாம் சிவநேசஞ்சிறந்த மெய்யன்பர்போலத் தாது வெண்பொடிபூசி மலர்முகங்கண்ணீர் வாரவண்டொலி பழிச்சொலிகாட்டக்கண்டு வணங்கியப்பாற்செல்லுகையில் பரதநாடகஞ் செய்யு மாதர்போற் பூங்கொடியசைய, குயில், தவளை, நாரை, வண்டு ஒலிப்பன பல்லியமுழக்கிப்பாணர்பாடும் பாட்டொலிகாட்ட, சண்பகமரும்பி விளக்

---

* திருவாதிரைநாளில் இறைவருக்குக் களி நிவேதனம் செய்யும் சம்பிரதாய மிதுமுதலாக வுண்டாயிற்று. இச்சேந்தனார் திருத்தொண்டின்னிலைமையைப்பற்றிப் பின் சந்தானசாரியார் நால்வருள் ஒருவராகிய கொற்றங்குடிவள்ளலாரும்

"அவிழ்ந்ததுணியிலவிழ்ந்தவமுதை
யவிழ்ந்தமனத்தோடளித்த - தவிழ்ந்தசடை
வேந்தனார்க்கின்னமுதமாயிற்றேமெய்ப்பத்தி
சேந்தனார்செய்ததிறம்."

என்று துதித்தவாற்றாலும் காண்க.

கேந்த, தாமரை பூத்துப் பாலிகைவண்ணஞ் செய்யத், தெங்குபூர ணகலசமேந்த, கமுகுபாளைவிரித்துக்கவரியசைப்ப, கொம்பிற்றேத் தடை கண்ணாடிகாட்ட, பட்டினத்துப்பிள்ளையார் வரவுகண்டு அசரங்களு மெதிர்கொள்வபோன்றன. இங்ஙன மிவ்வணிகளைக்கண்டு பெருமான் திருவருட்டண்ணளியை எண்ணி, நான்மறை முழக்க மருத திருநகரத்துட்புகுந்து, துறக்கநாடுபோலும் செல்வ நிரம் பிய மாடங்களையுடைய திருவீதி நான்கையும் பணிந்து வலம்வந் து, எழுநிலைக் கோபுரவாயிலை வணங்கித் திருமாளிகையைப் பிர தக்ஷிணம்பண்ணிக் கனகசபை தொழுது சிற்சபையிற் சென்று உலகாடவாடும் ஆநந்தத்திருநடனம் கண்டார். கண்டவளவிற் றம்மைக்காணாராய் நெடுநேரம் தம்பித்துக்கம்பித்து நின்று பின் தெளிவு சிறிதுவரக் கரைந்து கரைந்துருகி யன்பின் கடல்மடை திறப்ப.

கோயினான்மணிமாலை.

வெண்பா.

பூமேலயனறியாமோலிப்புறத்ததே
நாமேபுகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்துகந்தான்றில்லையிடத்துகந்தானம்பலத்தே
கூத்துகந்தான்கொற்றக்குடை.

என்றெடுத்து நான்மணிமாலைபாடிக் குடந்தம்பட்டுக் கூத்தா டித் திருவருள் வெள்ளத்துட்படிந்தாராய் அரிது புறம்போந்தார். பின்பசியெழலும் (பஞ்சகவாடகப்பொற்பாதம்) என்று பாடுத லும், உலகமாதாவாகிய சிவகாமியார் வேதியமாதுருவமாய் உச்சி திவேனப்பிரசாதத்தினை வட்டகை நின்றும் கொடுத்தருள உண்டு பசியாறினவுடன் மறைந்தருளலும் பிராட்டியாரென் றுணர்ந்து ஆராமை மிகுதியால்,

கட்டளைக்கலித்துறை.

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
ல்ாடுமருட்கொண்டிங்கம்பலத்தேநிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே.

என்று துதித்து அலைவற்ற சிவயோகானுபவத்தில் வீற்றிரு ந்தனர். அங்ஙனமிருப்பவர்.

சோறிடுநாடுதுணிதருங்குப்பைதொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடுமேனியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே.

என்ற பாடலை யருளிச்செய்து காலங்கடோறுஞ்சென்று சிற்சபைத்திருநடங்கும்பிட்டு "நினைமின்மனனே" யென்றதுமுதலிய அனேகந்திருப்பாடல்களை யருளிச்செய்து, பலநாள் கழியத், திருவொற்றியூர்க்கு வருகவென்ற ஞாபகந்திருவருள் தோற்றுவித்தலும்,

"பாற்கடல்கடையப்படுங்கடுவெண்ணெயை"

என்றவடைக்கலத்திருவகவல்பாடி (வான்றேடுமறையேயோ) என்றெடுத்து (நான்றேடநாணுரோநாணுரோ) என்று அருளிச்செய்து திருநடம் கும்பிட்டுத் திருவம்பலம் தொழுது மாளிகை வலம் வந்து கோபுரவாயிலைவணங்கி வீதிதோறும்பணிந்து புறம்போந்து வழிக்கொண்டார்.

வழியில் திருத்தினை நகரடைந்து சிவபெருமானை வணங்கியங்குநின்றுங்கெடில நதிக்கரையடைந்து, ஆளுடையவரசுகளைக் கல்லாஅமணர் கடலிலேகட்டியிட்ட கற்றாணே மிதப்பாகக்கரையேற்றுவித்த திருநதியென்று பணிந்து மூழ்கித் திருப்பாதிரிப்புலியூரிலடியார்களுக்குத் தோன்றாத்துணையாயிருப்பாரைவணங்கியருந்தமிழ்பாடிச்சிலநாளிருந்து திருவதிகையடைந்து புரமட்டவீரட்டவாணரைப்பணிந்துபாடித் திருத்துறையூர், திருவாமூர், திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவல்வீரட்டமும் தொழுது விருத்தகிரியைத்தரிசித்துத் திருவண்ணுமலையைக்குறுகினார்.

குறுகுதலும்தூரத்தே மாலயன்தேட நின்றமலைக்கொழுந்தாரைக்கண்டுவணங்கி யூருள்ளேபோந்து திருவீதிபணிந்துகோபுரந்தொழுது திருக்கோயில்வலங்கொண்டு சந்நிதியடைந்து பெருமானையும் பெருமாட்டியையும் கும்பிட்டுத்துதித்து அருந்தமிழ் பலபாடி அன்பு மீதூரவுருகிப்பழிச்சி உடையவரைப் பிரியாவிடைகொண்டு புறம்போந்து திருமலைவலம்புரிந்து அங்கு சிலநாள் வீற்றிருந்தார்.

திருக்காஞ்சிபுரமடைந்தது.

அப்பால் அங்கிருந்து புறப்பட்டுத் திருவோத்தூர் முதலிய திருப்பதிகளைத்தரிசித்துச்சென்று திருக்காஞ்சிநகருக் கணித்தாகலும், திருவெல்லையைப்பணிந்து சிவலோகம்போலும் இருக்கும் சோலை நந்தவனம் முதலியவற்றை வணங்கிச்செல்லுகையில், திருவெண்காட்டடிகள் எழுந்தருளும் வைபவத்தைக்கேட்ட திருக்காஞ்சிப்பதிவாழுஞ் சிவனடியார்யாவரும் அட்டமங்கலம் கொண்டு ஆரணமுழங்க மங்கலவாத்தியத்தோடு எதிர்கொண்டுவந்து வணங்க,அவர்கள்வணங்குமுன் தாமும் வணங்கித்திருமதில்வாயில் கடந்து, அறங்களெல்லாமோங்க மூவரும் தேவரு முனிவரு நாடோறும் பெருமான் றிருவடிவணங்கித்திரியும் வீதிபணிந்து கோபுரவாயிலைக்கும்பிட்டுத் திருவேகம்பரத்தைவலங்கொண்டு வழுத்

தி அன்பு பெருக ஆராமையால் உளமுருகக் கண்களி லானந்த நீர் வாரத்தொழுது.

கச்சித்திருவந்தாதி.

கட்டளைக்கலித்துறை.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநம்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றெண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனென்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே.

என்றதுமுதலாகத்திருவந்தாதிபாடிப்புறம்போந்தங்கிருந்து திருவேகம்பமாலை, கச்சித்திருவகவல் முதலிய திருப்பாடல்களை ய ருளிச்செய்து கச்சிக்காரோணத்தருகில் வீற்றிருக்கு நாளி லொரு நாள்பசித்தீ மிகவருத்த, ஆற்றாராய்,

வெண்பா.

அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா - மெத்தப்
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரே.

என்றருளிச்செய்தார். உடனே அறப்பெருஞ் செல்வி யாகிய வம்மையார் காமக்கோட்டத்திருந்து அந்தணமாதுருவாய் வந்த முதளிப்பவுண்டு பசியாறிக்காமக்கோட்டம்,கச்சபாலயம், ஓணகா ந்தன்றளி, கச்சிநெறிகாரைக்காடு, அனேகதங்காபதமுதலியதிருக் கோயில்களைப் பணிந்து பலதமிழ்மாலை பாடி அனேகம் அற்புதங் கள் விளங்க சிலநாள் வீற்றிருந்து, அங்குநின்றும்புறப்பட்டு திரு வாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம் முதலிய திருப்பதிக ளைவணங்கி, கண்ணப்பதேவரும், சிவகோசரியாரும், சிலந்தியும், காளனும், அத்தியும் பூசித்துப் பேறுபெற்றதும் கடைச்சங்கவா ணராகிய நற்கீரதேவர் அருளிச்செய்த திருவந்தாதியாகிய கொழு த்த தமிழ்ச்சுவையுண்டறிந்ததுமாகிய காளத்தித் திருமலையை வணங்க எண்ணிவழிச்செல்வாராயினர்.

திருக்காளத்தியடைந்தது.

அங்ஙனம் பட்டினத்தடிகள் செல்லுகையில், திண்ணனை முன்வலிதாண்ட திருவருளுள்ளே தூண்ட ஆராவன்பு மீதூர்ந்து,

"முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவுமோகத்தினாற்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீச்சுரனே."

என்று துதித்து இரவுபகலுக்காது விரைந்து நடைகொண்ட போது, வழியில் பாம்புகள் மணிவிளக்கேந்திநின்றன. காட்டியா னைகள்நெகிடிபிடித்து முன் நடந்து முள்முதலியவிலக்கிவந்தன.

புலிகள்வாலினால் மார்க்கம் விளக்கிச்சுத்தஞ்செய்தன. புல்வாய்மான் மரைமுதலியன முன்னும்பின்னும் அணிவகுத்துவழிகாட்டுவனவாயின. மயில் வாரணமுதலியன சிறகுகளால் காற்றெழப்பண்ணியும் வெயிலுக்கு நிழல் பரப்பியும் சென்றன. குரங்கு முசுமுதலியன நல்லகனி கிழங்குவகைகளைத்தந்துபசரிப்பனவாயின. இங்ஙனம் விலங்கு பறவைகள் செய்யும் திருப்பணியை ஐயர்கண்டு, இத்திருப்பணி எம்மையுடைய காளத்தியாள்வார் திருவடிக்கன்றோ பொருந்துவவென்றும் பாம்புகளை நோக்கி யிவைமுன் எம்பெருமானை மணிகள் சாத்திப்பூசித்தகாளனார் மரபோ எனப் பணிந்தும், நெகிடியேந்திச் செல்லும் யானையை ஐயனைமுன்னருச்சித்த அத்தியின் சுற்றமோவென்று தொழுதும், மானினங்களை அப்பர் கையமைந்தமானின் உறவோவென்னத்துதித்தும், அவ்வாறே மற்றையவற்றையும் சிவபெருமான் றிருவடி நேயப்பற்றுள்ளவற்றினமாகவணங்கியும்செல்பவர், கண்ணப்பதேவர்திருத்தொண்டினையும் மற்றையடியார் திருத்தொண்டினையும் எண்ணியெண்ணி மனங்குழைந்துருகி,

"வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனினிச்சென்
றாளாவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே."

என்றதுமுதலாகத்திருத்தொண்டத்தொகையுட்குறித்துள்ள அடியவர் திருத்தொண்டினைத் திருப்பாட்டாக வருளிச்செய்து, திருமலையைத் தூரத்தே கண்டுதொழுது, அணித்தாகச் சென்றடிவாரம் பணிந்து திருமலைவலங்கொள்வார் அங்கு தவஞ்செய்யும் பெரியாரையெல்லாம் வணங்கி, வேறுதொழில் செய்யு மவரையுங் குறமகளிரையும் சிவகோசரியாராகவும் பெருமான் திருவடியடைந்த கன்னியராகவும் எண்ணிப்பரவிவந்து சந்நிதியடைந்து அன்புமீதூர வருந்தமிழ்பாடி யுடல் நெக்குவிட்டுருகக் குழைந்துகுழைந்து பலவாறுதுதித்து அரிதுபுறம்போந்து அங்கிருக்குநாளில் ஆளுடையபெருமான் வடகைலைத் திருவோலக்கஞ்சேவிக்கவிரும்பி,

"மந்திக்குருளையொத்தேனில்லைநாயேன்வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையையானென்செய்வேனெனைத்தீதகற்றி
புந்திப்பரிவிற்குருளையையேந்தியபூசையைப்போ
லெந்தைக்குரியவன்காணத்தனேகயிலாயத்தனே."

என்றதிருப்பாடலைப் பாடலும் தென்கைலைவாணர் அவ்வடகைலைக்கோலந் தரிசிப்பித்தருளத் தரிசித்துப் பலதமிழ்ச்செம் பாடல் பாடி அருள்விடைபெற்றுத் திருமலை வணங்கித் திருவொற்றியூரா

க்கருளி எழுந்தருளினர். கேளும் முனிவர்களே! எங்கும் சிவன் பரிபூரணமென்று நன்குணர்ந்த சிவஞானிகளும் அனுபவமுதிர்ச்சிபெறவும் உலகவாதனையோரிடம் பற்றி நின்று லொழியாதென வும் நம்மையுணர்த்தவேண்டி யிங்ஙனம் தலங்கடோறும் எழுந்தருளிப் பல அற்புதங்களை விளக்கினுமென்றால் வேறுயாம் சிந்திக்கத்தக்கதென்னை யுள்ளது. நெஞ்சினியம்மைப் புதியதையே நாடுவதாகவேநம்மனோருக்கவ்வுண்மையை யுணர்த்துங் கருணையானன்றோ அப்பெரியரித்திறங்களைப் பிடித்தருளிச்செய்தது என்றுபமன்னியர் அருளிச்செய்தார்.

அப்போதுமுனிவர்கள் அவரை வணங்கி, சுவாமீ! அவ்வாறு யின் இப்பட்டினத்தடிகளே தனித்திருவெண்பா,

"ஆரூரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென்
றாரூர்கடோறுமுழலுவீர் - நேரே
யுளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர்."

எனத் தலயாத்திரை செய்பவரை நோக்கி மறுத்துரைத் தருளிய வாறென்னை யென்று வினவ, ஞானசிரியராகியவுபமன்னியர்கூறுவார். கேளும் முனிவர்களே! இத்திருவெண்பாவிற் கூறியது, சாதகமுதிர்ந்து சகசம் பிறந்து காருணியத்தாற் றலயாத்திரை செய்கின்ற நல்லோர்களையன்று; ஞானாசாரியன் வேண்டுமென்று மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளைத் தொடங்கித் தவஞ்செய்கின்றவர்களையு மன்று; உண்மையுணராது உலகபோகம் வேண்டியறிவின்மையாற் காமிய தவமாகிய தலயாத்திரை செய்வாரை நோக்கியவாறும். மூர்த்தியருச்சனை விடயத்திலும், "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி மெச்சிச் சிவபதவீடருள்பவனை" எனவும். திருக்கழுமல மும்மணிக்கோவையுள், "தோணிபுரேசர்-அடித்தாமரைசென்று சார்வதற்குப் - போதும் பெறுவிடிற் பச்சிலையுண்டு புனலுண்டெங்கும் ஏதும்பெறுவிடினெஞ்சுண்டு" எனவும் அருளிச்செய்த இப்பெரியரோ, தனிப்பொதுத் * திருவிருத்தத்துள், "சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச்சுருதியிலும், அல்லிலுமாசற்ற வாகாயந் தன்னிலுமாய்ந்து விட்டோர் - இல்லிலுமன்பரிடத்திலு மீசனிருக்கு மிடங் - கல்லிலுஞ்செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" என்றார். ஏனெனில் முத்திசாதனமாகிய பத்திசெலுத்துமிடம் குருலிங்க சங்கமம் என மூன்றும். இவற்றுள் உண்மை யுணர்ந்து அக்குருலிங்க சங்கமங்கள் மூன்றும் ஒக்கக்கண்டு பணிசெய்யும் பக்குவிகளொழிய, உண்மை யுணராது

* திருவிருத்தமெனக் கலித்துறையை வழங்கு மரபு திருநாவுக்கரசுகள் முதற்றிருமுறையுட்காண்க.

மூர்க்கத்தால், கேவலவுபாதான காரணம் பற்றிக் குருவை மனிதனென்றும் அடியார்களைச் சாதாரண சீவர்களென்றும் தம்முளிகழ்ந்து இலிங்கமொன்றனையே பொருளெனக் கொண்டு நடிக்கின்ற காமியதவத்தினரையும், உலகபோகத்தை விரும்பியுழலும் வஞ்சக நடிப்பினரையும் நோக்கிக்கூறியபடியாம். ஆனால் அவர் தாமே தம தனுபவமாக "வெட்டாத சக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க் - கெட்டாத புட்ப மிறையாத தீர்த்தமினிமுடிந்து - கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே - முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே" எனவும், உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையறப் - புளியிட்டசெம்பையும் போற்றுகிலே னுயர்பொன்னெனவே - யொளியிட்ட தாளிரண்டுள்ளேயிருத்துவதுண்மையென்று - வெளியிட்டடைத்துவைத்தே னினிமேலொன்றும் வேண்டிலனே." எனவுங்கூறியவாறென்னையெனின்? தகரவித்தை சார்வான் மகவித்தையென்னும் ஞானவித்தையிரண்டனுள் இவ்வையர் தகரவித்தையுடையராதலால், அது, மந்திரம், கலை, வருணம், பதம், புவனம், தத்துவமென்னு மத்துவாவாறையு நியதிசெய்து மேனின்ற வருளைத்தரிசித்துப் பரையோகமுற்றுச்சிவத்தோடிரண்டற்று நிற்றன் முறைமையதாகவே, அம்முறைமை விளக்கியபடியாம். கல்லையுஞ்சாந்தையுஞ் செம்பையும் போற்றுகிலேனென வாளாகூறி விடாது உயர்பொன்னெனப் போற்றுகிலேனெனக் கொண்டு கூட்டமுடிந்ததுவே சான்றாம். இம்முறைமை இவரருளிச்செய்த பூரணமாலை, நெஞ்சொடு மகிழ்தல் என்னு மிவற்றுள் விளங்கக்காண்க.

திருவொற்றியூரடைந்ததும் முத்திபெற்றதும்.

முனிவர்களே! அப்பால் ஐயர் திருவொற்றியூரைக் கருதிக் கருதிய மனத்திலும் கடிது வருவார், பெருமான் றிருவரு ளமுதமூறிப்பெருகவே,

"கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழகிதாம் - தொண்டர்
உடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு."

என்ற தனித்திருவெண்பாவைப் பாடிக்கண்ட சராசர முழுவதுமகுருலிங்க சங்கமங்களாகக்கண்டு ஆராமை மிக அன்புபெருக,

"வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர் - பூவுலகில்
ஈதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோர்
ஓதுந்திருவொற்றியூர்."

என்ற திருவெண்பாவாற்றுதித்துப் பலதரமும் பணிந்தெழுந்து திருவெல்லையைக் குறுகிவணங்கியுட்புகுந்து திருவீதியடைதலும் தம்மையறியாதெழுந்த பேராசைக்கடலுண் மூழ்கி,

"ஓடுவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன் - கடுவருந்துந்
தேவாதிதேவன்றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி."

என்றதனித்திருவெண்பாவோதி மேலுமேலுமடங்காதகாதலால்,

"சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பில்
நடப்பவர்பொற்பதநந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே."

என்று துதித்து அத்திருவீதியை அங்கவலம் வந்து சந்நிதியடைந்து, அடியவர்தங்க ளாராவமுதனை அடங்காதகாதல் பெருகவிழியான்முகந்துண்டு அருட்கடலிலலைந்து அழுந்தி உடல் குழைய வென்பு நெக்கு விட்டுருகக் கரைந்து கரைந்து கண்ணீருங் கம்பலையுமாய்க்கைகளுச்சிமேலேற,

திருவொற்றியூர்த்தொகை.

"இருநிலமடந்தையியல்பினி லுடுத்த
பொருகடன்மேகலைமுகமெனப்பொலிந்த
வொற்றிமாநகருடையோய்."

என்றெடுத்து அகவலொருபாவொருபதாகிய ஒற்றியூர்த்தொகை பாடித்துதித்துத் தம்வசமிழந்து பரவசமுற்று நெடுநேரநின்று பின்தெளிந்து பிரியாவிடைபெற்று மீள்வார், படம்பக்கத்து நிரம்பிய பேரழகன்றிருவடிகளிலே,

"ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவல்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே."

என்று விண்ணப்பித்து, அரிது புறம்போந்து, திருவெல்லைபிரியாராய், சாக்கிரமுதலிய வைந்தவத்தைகளையுங்கடந்து அருளுக்குத் தம்மை யுணவாக்கி முழுவதும் விழுங்கப்பட் டாராய்த் தத்துவ முழுவது மிச்சைவழி பணிகேட்பப் பிரணவமே திருவுருவாக அருட் சகசம் பிறக்கவேயுலகு பேயாகப் பசுமேய்க்குஞ்சிறுவரோடுகூடி ஆடியும்பாடியும் பலவிளையாடல் புரிந்திருக்குநாளில் உலக மறிந்துபிழைக்கவும், உடனாடுஞ்சிறுவர்களிக்கவுமாக, முதல்வன் முறையிடு, அருட்புலம்பல், இறந்தகாலத்திரங்கல், நெஞ்சொடு புலம்பல், பூரணமாலை, நெஞ்சொடுமகிழ்தல், உடற்கூற்றுவண்

ணம் இவற்றை அருளிச்செய்து பசுநிரைமேய்க்கும் அச்சிறுவரோடுகூடி மணற்குன்றிலும் புன்னைச்சூழலிலும் பலவிளையாடல் செய்து வீற்றிருக்குநாளில், ஐந்தெழுத்தருச்சனை முறைப்படிசெய்து திருவருளுக்கு முற்றும் தம்மை உணவாக்கித் தத்துவமுழுவதுந் தம்மியல்வேறுபட்டு அருள்வடிவாய் தம் வசப்படவே தாம்-பஞ்சாவத்தையையுங்கடந்து, பஞ்சபூதகாரியமாகிய தூலவுடம்பே பஞ்சாக்கரகாரியமாகிய மந்திர சரீரமாகத் திரிந்து நின்றது. அப்போது திருவெண்காட்டடிகளும், உடன்விளையாடும் சிறுவர்களைநோக்கி, சிறுவீர்காள் நுங்கட்குச்சிலவிநோதங் காட்டுவல் என்னை யோர்குழியிற் புதையுமென அவர்களு மவ்வாறே புதைத்தவுடன், அவர்களுக்கு வியப்புண்டாம்படி வெளிப்பட்டு வேறோர்மணற்குன்றின்மேனின்றனர். அதுகண்டு அவர்கள் மனமகிழ்கொண்டு மீட்டு மீட்டும் புதைக்கப் புதைக்க வெளிப்பட்டு நின்று பராக்குக்காட்டி அப்பால் ஒருவிசை புதைக்கவெளிப்படாமல் சிவலிங்கவடிவமாக முளைத்து நின்றார். அப்போது சிறுவர்கள் கண்டு வியப்பும் அச்சமுமடைந் தூரிலேயுள்ளவர்கட்கு நடந்தனவற்றை அறிவிப்ப, அவர்கள் யாவரும் திரண்டுவந்து அவ்வற்புதத்தைக் கண்கள்செய்த தவப்பயன் பலிக்கும்படி தரிசித்தார்கள். பூமழைபொழிந்தது. தேவதுந்துபிமுழங்கிற்று. முனிவரும் சிவனடியவர்களும் அரகரவென்று முழக்கஞ்செய்தனர். உலகெலாம் பேராநந்தவெள்ளத்துண் மூழ்கின.

கேட்டீர்களோ முனிவர்களே! இம்முத்திநிலையே முடிவானதும் உண்மையானதுமென் றுணர்வீர்களாக. இங்ஙனம்பட்டினத்துப்பெருந்தகையாகிய திருவெண்காடர் சுத்தசன்மார்க்க முத்திசித்தியாகப் பெற்ற செய்தி உலகெல்லாம் பரவிப் பக்குவிகள் யாவரும் கேட்டுத் துதித்துப் பேராநந்த முற்றனர்.

இதற்குமுன்னே யிவர் பத்தினியாராகிய சிவகலையம்மையார் தங்கணவனார் திருவடித்தியானத்திலேயேயிருந்துசிவயோகமுற்றுச் சிவபதம் பெற்றனர்.

காவிரிப்பூம்பட்டினத்துள்ளார் யாவரும் ஐயர் ஐக்கியநிலைமைகேட் டங்குநின்றும் புறப்பட்டுவந்து திருவொற்றியூரையடைந்து தரிசித்துப் பலதிருத்தொண்டுசெய்து திருவருட்பாங்கராயினார்கள். யாவர்க்கு மங்கலமுண்டாக. என்றுபமன்னியமுனிவர், முனிவர்கட்குக் கூறியபடி, சூதபுராணிகர் சவுனகாதியர்க்கு ஸ்ரீபவிஷியோத்தரபுராணத்துள் திருவிடைமருதூர் மான்மியத்திலே கூறிய பட்டினத்துப்பிள்ளையார் திவ்விய சரித்திரத்தைக் கூறிமுடித்தனர்.

இந்த சரித்திரத்தை யுண்மையான பத்தியோடும் சிரத்தையோடும் வாசிப்பவர்கட்கு இம்மையில் ஆயுள், செல்வம், மக்கள், சிவஞானமும் உண்டாய் மறுமையில் பேரின்ப நிலையான சிவபதமும் உண்டாம்.

இது உண்மையான முத்திநிலையின்னதென்பதுணர்த்திற்று. எங்ஙனமெனில், மற்றைய சமயமார்க்கிகளெல்லாரும் கருமதேகமாகிய இத்தூலவுடம்பு பிராரத்தத்தைப் புசித்து ஒழித்து இங்கே விழுந்துபோக ஆன்மா சூக்குமதேகத்தோடு முத்தியடையுமெனவே கூறுவர். ஆனால் திருவாசகம், "செத்தேபோனுஞ் சிரியாரோ" என்றதுந் தவிர, "மண்மேல்யாக்கை விழுமாறும் வந்துன்கழற்கேபுகுமாறும், அண்ணுவெண்ணக்கடவேனு அடிமைசாலவழகுடைத்தே" என்றது. எனவே தேகம்பிணவியலா யிம்மண்ணிலே விழாது மூவகைச்சித்தியுள் ஓர்வகைச் சித்திபெற்று நிற்பதே முடிவான முத்திநிலையென்றவாறாயிற்று. தாயுமானவரும், "முத்தியிலுந்தேக மிசைமூவிதமாஞ் சித்திபெற்றோர் - எத்தனைபேரொன்றுரைப்ப தெந்தாய்பராபரமே." என்றார். என்றவர், அம்மட்டில்விடாது, "தேகம்யாதேனுமொரு சித்திபெறச்சீவன்முத்தி-ஆகுநெறிநல்லநெறியையாபராபரமே." என்றார்.

இனி தேகஞ் சித்திபெறப் பெறுமுத்தியேயன்றி, அதுவிழுந்தபின் ஆன்மா முத்திபெறுதலு முண்டு என்று கூறுவாரை நோக்கி அவரே, "உலகநெறிபோற் சடலமோயவுயிர்முத்தி, யில்குமெனல்பந்தவியல்பேபராபரமே." என்று உண்மைகூறி மறுத்தனர்.

குமாரதேவரும், "சுத்தசாதகம்" என்னும் நூலுள்ளே, "தொம்பதம்விளங்கின் மேல்வினைமறைத்த தொல்லிருளகன்றுபோயொளிக்கும், தம்பதமானதற்பதம்விளங்கிற் சஞ்சிதமாயைபோயொளிக்கும், அம்பதமானவசிபதம்விளங்கி லரும்பிராரத்தம்போயொளிக்கும், செம்பரவருளேவடிவதாயான்மா சிவத்திலுக்கங்கமாய்நிகழும்." எனவும்,

"அடுத்தமற்றிரண்டுசனனத்தில்வீட்டை யடைந்திடுந்தொம்பதநெறியோர் - அடுத்தமற்றொருசனனத்தில்வீட்டையடைந்திடுந்தற்பதநெறியோர் - அடுத்தவிச்சன னந்தனிலடைந்திடும் வீடசிபதநெறியுளோரிவரும்-அடுத்தவிவ்வுடலோ டடைந்திடாவிடின்மேல்யாக்கையொன்றெடுக்குமென்றுணர்வாய்." எ-ம்.

"ஒடுங்கிடுங்காலந்தோன்றினவடைவி னொடுங்கிடுமென்றுரைப்பதனால் - ஒடுங்கிடுங்காலஞ்சத்தியவாதிக் கொடுங்குமிவ்வுடறன்மாத்திரையில் - ஒடுநகிடுங்காலமசத்தியவாதிக் கொடுங்குமிவ்வுட

லசத்தியமாய் - ஒடுங்கிடுங்காலமுடலிங்கேவீழ்ந்தா லொடுங்கின தில்லையென்றுணர்வாய்.'' எ-ம்.

"மேலொருவடிவையெடுத்ததேயாகின் மேவுமிவ்வுடலிங்கே வீழும் - மேலொருவடிவையெடுக்கதின்றாகின் மேவுமிவ்வுடலிங் கேவீழா - மேலொருசிவத்தைச்சீவன்சென்றடையுமேவுமிவ்வுட லிங்குத்தானே - மேலொருசிவத்தின்வடிவதாமருளாய்வெளியதா முலகுகண்டிடவே.'' எ-ம்.

"சூக்குமமதனினின்றுமுன்வினையிற்றூலதேகமுமுளதாகும்- சூக்குமந்தனது காரணமடையிற் றூலமுஞ்சூக்குமத் தடையும்- சூக்குமந்தனது காரணமடையத் தூலமிங்ககன்றதே யென்றால்- சூக்குமந்தனதுகாரணம்விடுத்துத் தூலமென்றெடுத்ததென்றுண ர்வாய்.'' எ-ம்.

"தூலவிவ்வுடலைவிடுத்துநில்லாது சூக்குமஞ்சூக்குமம்விடுத் துத்-தூலநில்லாதீதிரண்டையும்விடுத்துத் தொல்லுயிர்நிலாவுயிர் விடுத்துத்-தூலசூக்குமங்கணின்றிடாதுயிருஞ் சூக்குமமும்முடிவ டைந்தால் - தூலமுமுடிவையடைந்திடாதிந்தத்தொல்லுலகினில் விழுந்திடுமோ.'' எ-ம்.

"வினையினிலெடுத்தவிவ்வுடல்மேலும் வினையுளதெனிலிங்கே யகலும்-வினையிலதெனிலிங்கிவ்வுடறானே வினையறுமோமயமாகி- வினையுளவுடல்போற்றோற்றன்மாத்திரமாய் விளங்கியேவெந்துறு புரிபோல் - வினையிலாப்பரமமுத்தியில்வெளியாய் விமலநல்லருள தாய்விடுமே.'' எனவும் விளங்கக்கூறுதல்காண்க.

இன்னுமிக்குமாரதேவர், இவ்விடயத்தில் வேதாகமங்கள் கூ றும் சாதகம், உபாயம் முதலியவெல்லாம் வெளிபெற அந்நூலுட் கூறுதலாலுமுணர்க. இந்நிலை தமக்கரியதென மற்றையவர் விட் டொழிந்தார்கள்போலும்.

இன்னும் அருணகிரிநாதர் - அநுபூதியுள் "சாகாதெனையே சரணங்களிலே'' எனவும், "கூகாவெனவென் கிளைகூடியழப் போ காவகைமெய்ப் பொருள்பேசியவா'' எனவும் பிறவாற்றானுங்கூறு தலும், முத்துத்தாண்டவர், "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்'' எனக்கூறுதலும் பிறசான்றோர் கூறு தலும் காண்க.

இனி முத்தியிலேயுந் தேகம்பெறும் மூவகைச் சித்தியாவன, உருவச்சித்தி, அருவச்சித்தி, உருவருவச்சித்தி எனவாம். அவற் றுள் ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேர மானும் திருமேனியோடுங் கைலைக்குச்சென்றதுபோல்வன உரு

வச்சித்தியாம். அவை சுத்ததேகமெனவும், சுவர்ணதேகமெனவும் பிராணவதேகமெனவும் வழங்கிநிற்கும். அருவச்சித்தியாவது, திருவாதவூரடிகள் திருமேனி சிற்சபையிலே பரமாகாசமாகக் கலந்து நின்றது. "உருவெளிதான்வாதவூருத்தமர்க்கல்லாலின்னுங் குருமொழிநின்றோர்க்குமுண்டோ கூறாய்பராபரமே." எனத் தாயுமானவர் கூறுதலும் காண்க. உருவருவச்சித்தியாவது, ஆளுடையபிள்ளையார், முருகனார் முதலியோர்கள் சோதியிற்கலந்ததும் அரசுகள் சிவலிங்கத்துட் கலந்ததும், போல்வன. அன்றித் தம் மேனியையே சிவலிங்கமாக நிறுத்துவதுமாம். ஆதலால், திருவெண்காட்டடிகளும் அங்ஙனம் நிறுவியுலகுய்யவழிகாட்டியவாரும். சிற்றம்பலநாடிகள் முதலிய பலபெரியரும் இவ்வாறே தம்முடம்பைச் சிவலிங்கமாக நிறுத்தியவர்களாம். ஆகவே முத்திமுடிவென்பது இதுவென யாவருமொருதலையாக வுணரற்பாலதாம். இனி திருத்தொண்டத் தொகையுள்ளே கூறிய மெய்ப்பொருளார், ஏனாதிநாதர் முதலிய நம்பெருமக்கள் திருமேனியை மண்மேல் வீழ்த்தியவாறு என்னையெனின், அவர்கள் உலகத்துள்ள பந்த சீவர்கள் உண்மையறிந்துய்யச் சன்மார்க்க முதலிய நான்குமார்க்கங்களையும் நடத்திக்காட்டி யுணர்த்தி யருளக் கருணையால் திருமேனி கொண்ட நிமித்தமூர்த்திகளாதலின், அவ்வவ்வுயிர்களின் வினைப் பரிபாக நிலைமை வெளியாம்படித் தாம் தந்திருமேனியை யிச்சை வழி நிறுத்தி யருளியபடியாம். ஆகலின், அதற்கு இவ்விதிகொள்ளற்க அதனுண்மையைக் குருமுகத்தாம்பெறுக.

வேதவேள்விவிதிமுறைவாழிய
ஆதிநீறெழுத்தைந்தன்பர்வாழிய
பேதியாமுத்திபெற்றவெண்காடனார்
காதைவாழியகற்பவர்வாழியே.

என்னையுமோர்பொருளாக்கி யோரும்வெண்காடரினியகாதை, மன்னியவிவ்வுலகேத்தத் தமிழ்வகுக்கமனம்வலித்த மரபுசான்ற, துன்னியமெய்யன்பரொலாமிசவாழ்கவுயிர்த்தொகைகள்சுகத்திளேங்க, வின்னியனல்லறம்வாழ்க வாழ்கமழையிவ்வுலக மினிதுமாதோ.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார் என்று வழங்கும்

திருவெண்காடர்சரித்திரம்.

முற்றுப்பெற்றது.

பிழைதிருத்தம்.

வசனபாகம் முகவுரை.

---:o:---

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧	௧௨	ெழுக்தன் ...	வழுக்கதனுள்
௨	௪	கிலர் ...	சிலர்
௪	௪௯	ஆகஷ்டு ...	ஆகஸ்டு

புராணம்.

௨	௧௩	ளிற் ...	ளிற்
,,	௨௧	போலும் ...	போல்
,,	௩௦	களைச்கற்ற ...	களைக்கற்ற
௭	௩௫	கொண் ...	கொண்
௮	௧௧	புக்ளை ...	புக்களை
௯	௩௪	நாப்புசரு ...	நாப்புக்கரு
௧௦	௧௬	பிரியா ...	பிரியாது
௨௩	௧௪	வெண்கர ...	வெண்கா
௨௬	௩௪	இமையாவர்க் ...	இமையவர்க்
௨௮	௪	தெறிந்தும் ...	தெறிந்து
௩௦	௨௨	மிட்டுஞ் ...	மீட்டுஞ்
௩௧	௧௦	கணகளை ...	கணக்களை
௩௩	௩௪	முவேழ் ...	மூவேழ்
௩௫	௨௦	ப்ரனபு ...	பேரன்பு
,,	௩௨	முகங்நாட்டி ...	முகங்காட்டி
௩௭	௧௩	வியப்படைது ...	வியப்படைந்து
,,	௩௬	கிருக்காத்தா ...	திருக்காத்தா
௩௮	௧௯	மூன்றுளும் ...	மூன்றுநாளும்
௫௦	௨௧	யொனிக ...	யோனிக
௫௨	௧௪	கீற்பன ...	திற்பன
௫௪	௧	அரிமர்ந்தன ...	அரிமர்த்தன
,,	௧௯	பிமன் ...	பிரமன்
௫௫	௬	கிரக்கரூபி ...	கிரசரூபி
௬௪	௨௯	பம்மை ...	யம்மை
௬௫	Foot not	"தை, சை" ...	"தை, சை"
௭௩	௨௧	மூனிவர். ...	மூனிவர்
௭௭	௧௯	பொல ...	போல
௭௯	௩௪	மருந்வாண ...	மருதவாண
௮௩	௩௦	செய்யதது ...	செய்யத்து
௯௧	௩௬	போவலோடு ...	போரவலோடு
௯௨	௨௦	துறையுளள ...	துறையுள்ள
,,	௨௭	துஞச ...	துஞ்ச
௯௩	௨௦	புணங்கு ...	புணக்கு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௯௩	௩௫	வருளிக் ...	வருளிச்
௧௦௭	௩௦	சொணடு ...	கொண்டு
௧௧௫	௩௬	வாருணை ...	வருணை
௧௧௬	௩௭	வெள்ளை ...	வெள்ளை
௧௧௭	௩௮	பெருங்நளி ...	பெருங்களி
௧௧௮	௨௨	பெநான் ...	பெறநான

பாட்டுப் பிழைத்திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௪	௧௨	௨௮	வலிதது ...	வலித்து
௧௮	௪	௨௬	மெம ...	மெம்
௩௦	௬௬	௧௧	சமலத்து ...	கமலத்து
௩௨	௬௯	௩௨	டான்டாணடிட்ட ...	யாண்டாண்டிட்ட
,,	,,	௩௮	பாப்பிப் ...	பரப்பிப்
௩௫	௨௩	௧	கடைமே ...	சடைமேம்
௩௭	௨௮	௨௩	சேந்தீ ...	செந்தீ
௪௯	௮௨	௩	விச்சரதரர் ...	விச்சாதரர்
௫௩	௨	௧௧	தாம்றி ...	தாமறி
௫௫	௬	௯	வறதொ ...	வறுதொ
௭௦	௧௨	௪	மெங்நள் ...	மெங்கள்
௭௧	௨	௨	வேறள ...	வேறுள
௭௩	௬	௪	கான்த்தி ...	காளத்தி
௭௪	௭	௧	குருளை ...	குருளை
௮௧	௬௦	௧	தான்றி ...	தானறி
௮௩	௨	௩	ழோற்றி ...	ழொற்றி
௮௭	௨௧	௩	மேமைழயே ...	மேழைமேடா
௯௧	௦	௬	பொஙகர ...	பொங்கர
௯௨	௦	௨௬	யெப்பட ...	யெப்படி
௧௦௬	௩௭	௧	மனுவு ...	மணுவு
௧௦௯	௮௯	௧	வெணணெய் ...	வெண்ணெய்

பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
அ.	
அகங்காக்கும்	௯௭
அக்கறுகு	௧௦௨
அக்கினிகற்	௯௬
அங்கங்கு	௧௧௦
அச்சமாங்	௮௮
அஞ்சக்கரமெ	௮௦
அஞ்சரத்தான்	௪௨
அஞ்சருளைப்	௧௦௧
அஞ்சுமுரு	௧௦௩
அஞ்செழுத்	௧௦௨
அடிசார்ந்த	௩௪
அடிநின்றகு	௪௦
அடிமையென்	௮௯
அடியாயிரங்	௩௭
அடியாருறவு	௮௧
அடியார்க்கெ	௭௦
அடியொன்று	௨
அடிவலப்பா	௪௪
அட்டாங்கயோ	௭௭
அணுவுக்குமேரு	௯௫
அண்டபிண்ட	௧௦௬
அண்ணறன்வீ	௭௮
அத்தமும்வாழ்	௭௬
அத்திமுத	௮௪
அத்தனைமுப்ப	௭௧
அநிதநியத்	௮௮
அப்பிறப்புந்	௯௭
அப்பென்று	௬௭
அம்பரங்கால	௪௩
அம்பலவரங்க	௧௧
அரிசியோ	௮௨
அரிதன்றிருக்	௪௨
அரிபிரமர்	௯௧
அரியவரிதே	௧௦௪
அருளின்கட	௧௮
அருளுவாழி	௧௧
அருளைத்தரு	௪௧
அருள்பழுத்த	௯௦
அருள்பாழத்	௧௯
அலையாதபே	௧௧௦
அல்லல்வாழ்க்கை	௬
அல்லாய்ப்பக	௧௧௦
அழகழிவிற்பெ	௪௪

பாட்டு.	பக்கம்.
அ.	
அழலுக்குள்	௬௯
அழுதாற்பய	௭௯
அளவிறந்த	௯௮
அளவினிலிற	௫௫
அள்ளியிடு	௮௨
அறந்தானி	௬௪
அறியாமலத்	௮௭
அறிவிலொழுக்கம்	௫
அற்புதமாய்	௧௦௧
அன்றினர்	௩௦
அன்றுமுதலி	௧௧௦
அன்றுமுதலின்	௯௪
அன்றும்பகை	௪௩
அன்றென்று	௩௧
அன்னம்பகிர்ந்	௧௦௦
அன்னையெத்	௬௯
அன்னவி	௬௫
அன்னைவயிற்	௮௯
அன்னவிகாரம்	௯௧
ஆ.	
ஆங்காரப்பொக்	௮௧
ஆங்காரமச்	௧௧௧
ஆசாரமில்லா	௯௯
ஆணுகிப்பெண்	௧௦௭
ஆணிபொருந்	௯௯
ஆண்டகுருந்	௧௦௨
ஆணபெண்	௧௧௧
ஆதரித்த	௨
ஆதாரமோ	௯௨
ஆதியாய்நி	௧௧௧
ஆதியென்பாரந்	௧௦௯
ஆத்தானுக்காத்	௯௫
ஆத்துமதத்து	௯௨
ஆயாய்பலக	௮௦
ஆயும்புகழ்	௭௦
ஆயும்பொழு	௮௦
ஆரணநான்கிற்	௧௮
ஆருமுருப்	௧௧௧
ஆரூரரிங்	௮௩
ஆர்ந்தவிட	௯௬
ஆலமருந்து	௯௯
ஆலயஞ்சார்	௪௭
ஆலாலிருட்	௯௭

பாட்டு.	பக்கம்.
ஆ.	
ஆவியொடு	௮௫
ஆளெனப்புதிதி	௮
ஆறுண்டு	௭௬
ஆற்றிற்களை	௬௭
ஆற்றேடுதும்	௭௧
ஆனவடியார	௯௧
ஆனையுரியோ	௯௦
ஆனேறே	௧௪
இ.	
இடத்துறை	௫௩
இடவஞ்சுறுக்	௪௫
இடைக்குமின்	௪௫
இடைபிங்க	௧௦௫
இடையாகி	௧௦௭
இடையில்பு	௯௦
இத்தனைகால	௯௮
இந்தமணமெ	௯௬
இந்தவுட்டு	௧௦௫
இந்நிலைமை	௯௩
இப்பிறப்பை	௮௫
இப்பிறப்பை	௧௧௧
இப்போபுதி	௯௬
இயங்குதிரி	௪௨
இரதம்பிரிந்து	௧௧௨
இருக்குமருதி	௩௫
இருக்குமிடங்	௮௫
இருநிலமடந்	௫௨
இருப்பது	௮௬
இரும்புநிறை	௯௬
இராக்கேயி	௭௩
இலவவெங்கா	௪௮
இலவிதழ்	௩
இல்லந்துறந்	௭௪
இழைபாரரவ	௪௯
இறைத்தார்	௪௬
இனியவரி	௪௫
இன்றிருந்து	௩௭
இன்றிருந்து	௯௮
இன்றுசெய்வோ	௫௧
இன்னம்பிறக்	௮௬
ஈ.	
ஈரவேரித்தார்	௧௩
ஈராறுதலை	௧௦௫
உ.	
உச்சிவெ	௧௦௪
உடக்கை	௧௦௨
உடலுக்குள்	௧௦௫
உடனுகவே	௧௧௧
உடுக்கக்கவி	௭௬
உடுப்பானு	௭௧
உடைகோவ	௭௫
உடைப்புலி	௪௪
உடைமணியி	௨௮
உட்கோட்	௯௩
உண்டதே	௭௨
உண்மைப்	௧௦௯
உத்துங்கயா	௪௩
உந்திக்கம	௧௦௪
உயிராயின	௫௦
உருத்திர	௧௦௪
உருத்திரனுர்	௮௯
உருப்பேத	௧௦௮
உருவாமுலகுக்	௫௩
உரைக்கைக்	௭௮
உரையின்	௧
உலகவிசார	௯௨
உலவியமின்வ	௪௯
உலவுசலதி	௮
உவரச்சொல்	௪௮
உழப்பின்வா	௨௭
உளக்கண்	௯௭
உளவார்குளிர	௪௮
உளிபிட்ட	௮௧
உள்ளம்பெரிய	௪௩
உள்ளார்க்கு	௯௭
உள்ளுணர்	௯௫
உள்ளும்பு	௧௦௭
உள்ளும்புற	௧௧௨
உறுகின்ற	௪௭
உற்றுரமு	௧௦௬
உற்றுரார்	௧௦௧
உன்னில்லை	௮௯
உன்னைத்து	௯௦
ஊ.	
ஊட்டுவிப்பா	௭௦
ஊரிறந்து	௧௧௧
ஊரீருமக்கோ	௭௯
ஊருஞ்சதம	௬௬
ஊறையிறைக	௧௦௩
ஊற்றைச்ச	௬௭
ஊனமுடனே	௧௦௩
ஊனவுடல்	௮௯
ஊனுயுடனு	௧௦௭
ஊனுக்குணி	௧௦௪
ஊன்பொதிந்த	௧௦௨
எ.	
எக்காலம்	௯௮
எச்சிலென்	௮௬
எட்டுத்திசை	௭௮
எண்ணிறந்த	௯௬

பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
எ.	
எண்பத்து	கOகூ
எத்தனைநா	அகூ
எத்தனைதாய்	கOரு
எத்தனைபே	கOக
எத்தனைபே	அசா
எத்தனையூ	அச
எத்தனையோ	கரு
எத்தேசகா	கOரு
எத்தேசமு	ககஉ
எத்தொழி	அசா
எந்தெந்தநா	ககஉ
எந்நாளுமி	கரு
எம்மையுமெம்	சக
எரியெனக்கென்	எஎ
எருமுட்டை	அO
எருவாய்க்கி	அந
எல்லாமறிந்து	சாஅ
எல்லாரும்பட்	கஉ
எல்லாரும்பட்டகள	கந
எழுமலர்த்தண்	ருO
எழுவகைத்	கOசா
எள்ளுக்குளெண்	கOக
எனக்குள்	கOசா
என்வேயெழுந்	உக
என்செயலாவது	எஎ
என்பெற்றதா	எஅ
என்னகுற்ற	கச
என்னசொல்	கசா
என்னதான்	கOஅ
என்னவினை	கந
என்னுயினிமட	க
என்னென்	கக
என்னைத்திருக்	கOசா
என்னையறி	கOசா
என்னையே	கந
என்னோடு	கஉ
ஏ.	
ஏகம்பனேயென்	சO
ஏட்டிற்கடங்	கஎ
ஏணிப்பழுவா	கOந
ஏதப்பட்டா	எஅ
ஏதிலடியாரி	ககO
ஐ.	
ஐங்கரனைத்	கஉ
ஐந்துபுலனு	அஅ
ஐந்துபொறி	கOசா
ஐயமறுத்தவனை	கரு
ஐயிரண்டுதிங்	அஉ
ஐயுந்தொடர்ந்து	எஉ
ஐவகையும்பெற	கOஎ
ஒ.	
ஒக்கமடிந்த	கந
ஒடிவிழுந்து	அந
ஒப்பாரி	கக
ஒப்புவமை	கக
ஒப்புவமை	கஉ
ஒருமடமாது	ககஉ
ஒழிந்ததெங்க	சா
ஒழியாப்பி	அக
ஒளியாய்	கOஎ
ஒளிவந்தவா	கக
ஒற்றியூர	ருசா
ஒன்பதுவா	அசா
ஒன்றுயுயி	கOஅ
ஒன்றிரேடோ	உச
ஒன்றென்றிரு	எஎ
ஓ.	
ஓங்காரங்கெட்	கந
ஓங்காரப்பொ	கO
ஓங்காரமாய்	எக
ஓங்கினவூரக	சக
ஓங்குபரத்து	அகூ
ஓசையொடு	கஅ
ஓட்டாமறபா	சாக
ஓடுமெடுத்த	எO
ஓட்டைத்துரு	கOஉ
ஓதவரிதோ	கச
ஓயாமற்பொ	சாசா
ஓராதேயஞ்	நO
க.	
கங்குகரை	கசா
கங்குல்பக	கந
கங்கையொடு	கத
கச்சார்முலை	சக
கச்சிற்கிடக்	அக
கடங்கடங்க	ககக
கடலானகாம	உO
கடல்நீரு	கசா
கடுஞ்சொல்லி	சாக
கண்டக்கரு	கO
கட்டவுலக	கO
கட்டியனை	சாரு
கட்டுவர்க்கத்	அஅ
கண்டங்கரி	அந
கண்டங்கறுத்	கO
கண்டபுலவர்	கக
கண்டார்க்கு	கச
கண்ணுக்குக்க	அஅ
கண்ணுண்டகா	எரு
கண்ணென்று	உரு
கண்மாயமிட்	கசா

பாட்டு.	பக்கம்.
க.	
கதிபாவது	௨௫
கர்த்தனையீன்ற	௮௮
கரத்தத்தம்பருக	௬௫
கரத்தினன்மா	௩௧
கருமுதற்றொடங்	௧௮
கருவாயுருவா	௧௦௬
கருவிகடொ	௧௦௫
கல்லைப்பிழை	௬௫
கல்லார்சிவகதை	௬௭
கல்லுளிருந்த	௯௭
கல்வியல்ல	௯௫
களவிறந்து	௧௧௦
களிவந்தமு	௯௧
கறையற்ற	௭௮
கற்சட்டுமோ	௧௦௦
கற்புசகலை	௯௩
கற்றவனாய்	௧௧௧
கற்றறிவோ	௧௦௮
கற்றைப்பவ	௪௪
கன்னியழித்	௯௬
கன்னெஞ்சி	௯௮
கா.	
காடேதிரிந்	௭௨
காடோசெடி	௭௩
காட்சிக்கெளி	௯௫
காட்டிவைத்தா	௫௦
காணிப்பொன்	௯௮
காணீர்கதி	௨௧
காதலைச்சும்	௪௪
காதல்தணியே	௯௦
காதள	௬௦
காதென்று	௬௬
காமக்குரோ	௮௮
காமன்கணை	௮௧
காம்பிணங்கு	௬௧
கார்மிக்க	௪௮
கார்முக	௫௦
கார்விடை	௫௦
காலங்கழிந்த	௯௮
காலற்சீறிய	௫௭
காலன்வரு	௮௪
காலையுபா	௭௦
காற்றுத்துருத்தி	௧௦௧
கான்சாயும்	௭௩
கி.	
கிடக்குமொரு	௪௪
கிழவருமாய்	௫
கிறிபலபேசி	௪௫
கீ.	
கீரியாய்க்	௮௧

பாட்டு.	பக்கம்.
கு.	
குடைகொண்	௧
குருமார்க்கமில்	௯௪
குரும்பைமு	௮௮
குருவாகிவந்	௯௩
குருவாய்ப்பர	௧௦௭
குலமொன்று	௧௦௬
கூ.	
கூறுமின்றேண்	௪௬
கெ.	
கெட்டநாள்	௯௧
கே.	
கேடுவருமெ	௯௩
கை.	
கைப்பிடிநா	௬௫
கையாரவே	௭௪
கையொன்று	௭௫
கொ.	
கொக்கிறகு	௯௧
கொட்டாத	௯௮
கொண்டலி	௩௭
கொண்டல்வ	௧௪
கொண்டார்க	௯௪
கொல்லாமற்	௭௦
கொல்வாய்பி	௧௦௮
கொள்ளுங்கடுங்	௪௭
கொள்ளைப்பி	௯௨
கொன்றை	௯௪
கொன்றேனனே	௬௧
கோ.	
கோத்துப்பிர	௧௦௩
ச.	
சகஸ்திர	௧௦௬
சங்கிடத்தா	௬
சடக்கடத்து	௬௮
சடைமேலொ	௩௫
சட்சமய	௧௦௮
சதுர்முகன்	௧௫
சத்திசிவ	௧௦௭
சந்தனமுங்	௧௦௧
சந்திரனை	௧௦௧
சந்துபுனே	௩
சரக்கொன்றை	௯௧
சரியைகிரி	௧௦௫
சற்குரு	௮௧
சா.	
சாதிபேதங்	௧௦௬
சாதியிற்கூட்	௯௪
சாதியிற்கூட்	௯௪
சாந்தமென்று	௧௧௦

பாட்டு.	பக்கம்.
சி.	
சித்தவிகார	௯௫
சிப்பியின்முத்	௯௭
சிலந்தியு	௧௦௬
சிறைவண்டு	௪௮
சிற்றம்பலமு	௮௪
சிற்றெறும்பு	௯௯
சினந்தலை	௭௪
சின்மயநன்	௯௮
சின்னஞ்சி	௧௦௨
சீ.	
சீதப்பனிக்	௭௬
சீயுங்குரு	௭௬
சீறும்விலை	௬௬
சு.	
சுடப்படுவா	௭௨
சுடர்விடுசூ	௩௬
சுட்டிறந்த	௯௪
சுந்தரநீற்றி	௯௧
சும்மாவிருக்க	௯௪
சுரப்பற்று	௭௮
சூ.	
சூதுற்றகொங்	௭௬
செ.	
செங்குமிழி	௯௦
செத்தாரை	௯௫
செந்தாமரை	௧௦௯
செம்பொற்கமல	௧௦௬
செய்யதிருமே	௬
செல்வரைப்-ச	௭௪
செல்வரைப்	௭௯
சென்றேறி	௪௭
சே.	
சேய்தந்தகைம்மை	௪௨
சொ.	
சொக்கிட்டர	௬௮
சொல்லாலே	௯௬
சொல்லால்வ	௬௭
சொல்லிலுஞ்	௭௫
சொல்லுக்கட	௯௪
சோ.	
சோதியான்	௧௧௨
சோறிடுநாடு	௬௯
த.	
தண்டிகை	௧௦௫
தத்துவத்தை	௧௦௮
தந்திரத்தை	௧௦௪
தம்பொற்ப	௪௪
தரித்தேன்மன	௪௦
தருக்கவற்றுன	௪௫
தருமருட்ட	௪௪
தளையாங்கு	௯௩
தவியாதிரு	௭௧
தவிர்ப்பைப	௯௦
தளராமிரு	௪௯
தனமிட்டு	௪௧
தனிமுதலை	௧௦௫
தனுவாதிய	௮௭
தன்மையிற்	௪௧
தன்னுடம்பு	௯௯
தன்னையறிந்	௯௩
தா.	
தாயாகித்தந்	௧௦௭
தாயாகித்தா	௮௯
தாயாருஞ்	௮௦
தாயும்பகை	௭௨
தாழாதேநீள	௧௧௨
தானென்னை	௯௮
தி.	
தித்திக்கவூறு	௯௫
தித்திக்குந்தே	௧௦௨
திரியப்புரமெ	௪௨
திருமால்பய	௬௨
திருவளர்பவ	௧௭
திருவேடமாகி	௭௭
தீ.	
தீவகம்போலே	௯௬
து.	
துணைத்தாம	௪௩
துணையொருந	௪௮
தூ.	
தூக்கியகாலு	௯௧
தூமதிசடை	௫௪
தூருந்தலையு	௯௫
தெ.	
தெத்தபடமா	௯௯
தெய்வச்சி	௭௦
தெய்வத்தாம	௨௨
தெளிதருகின்	௪௦
தே.	
தேசமிறந்த	௯௭
தேடற்றிலகள்	௪௬
தொ.	
தொடரனைத்த	௧௪
தொண்ணூற்ற	௯௩
தொழுவாளிவ	௨௦
தோ.	
தோடவிழும்	௮௫
தோலெலும்பு	௧௦௦
ந.	
நகாரமகார	௧௦௯

பாட்டு.	பக்கம்.
ந.	
நகையாரோ	௯௩
நச்சரவம்	௮௫
நஞ்சுமிழ்பரு	௩
நடமாடியேழு	௩
நடனம்பிரா	௪௪
நண்ணிப்பரவு	௪௬
நம்மைப்பிறவி	௪௨
நரகக்குழி	௮௮
நரகஞ்சுவர்க்	௧௧௦
நரம்புதசை	௧௦௬
நலந்தரநா	௪௦
நல்கும்புகழ்க்	௪௬
நல்லாயெனக்	௬௮
நல்லாரிணக்க	௬௫
நற்பருவமாக	௯௧
நன்னாரிற்பூட்	௬௫
நன்னுதலார்	௪௮
நா.	
நாடிக்கொண்	௭௫
நாட்டமென்றே	௭௭
நாதவிந்து	௧௦௪
நாப்பிளக்கப்	௮௭
நாமத்தினாலெ	௫
நாமந்திரித்	௯௦
நாமநட்ட	௯௮
நாமநவிற்றாய்	௩௪
நாமேயிடை	௩௦
நாயனைய	௯
நாயாய்ப்பிற	௬௭
நாய்க்குண்டு	௭௯
நாய்க்கொரு	௮௧
நாலின்மறை	௭௧
நாலுவகைக்	௧௧௧
நாவாரவே	௬௭
நாவிக்கமல	௧௦௪
நாறுங்குருதி	௭௩
நாறுமுடலை	௬௮
நானெத்தனை	௮௦
நானேநீ	௧௧௦
நானேபிறந்	௩
நான்முகன்பட்	௮௯
நி.	
நிரந்தரமா	௧௦௮
நிலத்திடை	௫௬
நிலத்திமையோ	௪௩
நிலாவுபுகழ்	௪௭
நிலைவிட்டு	௧௦௩
நில்லாமைக்	௮௯
நினைமின்மன	௫௯
நினையார்	௧௧
நினைவார்க்க	௪௬
நின்றநிலையி	௯௦
நீ.	
நீக்காப்பு	௯௨
நீயொன்னிலு	௪௧
நீரொடுசண்	௧௧௧
நீரொளிபோ	௧௭
நீர்க்குமிழியா	௮௮
நீர்க்குமிழிவா	௧௦௨
நீர்மேற்குமிழி	௧௦௯
நீறார்த்தமே	௭௪
நீற்றைப்புனை	௭௯
நூ.	
நூலாலுணர்	௭௯
நெ.	
நெஞ்சமுருகி	௧௦௯
நெஞ்சார்தர	௪௭
நெடியகத்தை	௧௧௧
நெருப்பான	௭௨
நெறிதருசேழ	௫
நெற்றிவிழி	௧௦௪
நே.	
நேமங்கணிட்	௭௯
நேர்த்தமை	௪௮
நேற்றென்று	௧௦௮
நொ.	
நொந்துசுமந்	௮௨
நோ.	
நோக்கிற்று	௩௧
நோயுண்ண	௮௯
ப.	
பஞ்சப்பிரள	௯௭
படைத்து	௧௦௯
படையாலுயி	௪௩
பட்டகளையு	௮௯
பட்டைக்கிழித்	௭௫
பண்டாயநான்	௯௪
பத்தியறியா	௯௫
பத்துத்திசை	௯௫
பத்தும்புகுந்து	௭௩
பத்தெட்டா	௧௦௩
பரப்பார்விசும்	௪௯
பரமென்பா	௧௦௯
பரவித்தனை	௪௫
பரிப்பருந்தின்	௪௭
பருத்திப்பொதி	௬௩
பருப்பதங்கார்	௪௬
பருமுத்துதிர்த்தி	௪௧
பளிங்கிற்	௯௭
பற்றற்றார்	௯௬

பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
பா.	
பாங்குடைக்கோ	௬௫
பாசமுடலாய்	௧௧௦
பாசமெரிதனை	௮௯
பாசவினையை	௯௮
பாடிப்படி	௯௪
பாசம்பாவி	௫௧
பாராமலேற்ப	௭௦
பாராமற்	௧௧௦
பார்க்கிலெளி	௯௮
பார்த்தவிடமெ	௯௪
பார்த்தவிட	௧௩௧
பாலின்சண்ணெ	௯௮
பாவபுண்ணிய	௧௧௦
பாற்கடல்	௬௧
பி.	
பிணவாசமுற்ற	௯௯
பிரமன்படை	௧௦௬
பிறக்கும்பொ	௬௫
பிறந்துமண்மீ	௬௮
பிறப்பைத்தவிர்	௮௯
பிறவாதிருக்க	௭௧
பிறிந்தேனரக	௨௭
பு.	
புட்பாசன	௧௦௦
புண்ணியபு	௩௧
புல்லாகிப்பூடா	௮௮
புனங்குழை	௪௩
பூ.	
பூங்கொத்திருங்	௪௧
பூணும்படிக்	௮௦
பூசையுடன்	௧௦௯
பூதங்களற்று	௬௮
பூசமுங்கரண	௭௧
பூதமொடுதே	௮௯
பூமேலயன	௧
பூரணமாலைதனை	௧௧௦
பூவாணர்போற்	௧௦௩
பூவிராய்மண	௧௦௭
பெ.	
பெண்டுபிள்ளை	௧௦௫
பெண்ணாகி	௯௭
பெயராநலத்	௪௨
பெறுகின்ற	௧௧
பெற்றதுத்தாள்	௦௬
பெற்றுகந்தே	௪௦
பெற்றோர்பிடி	௭
பே.	
பேசாப்பிரம	௯௭
பேசுகயாவரு	௪௨

பாட்டு.	பக்கம்.
பே.	
பேசுவாழி	௯
பேச்சிறந்து	௧௧௦
பேதையெங்கே	௮
பேய்போற்றிரி	௭௮
பை.	
பையரவம்பூண்ட	௧௦௧
பொ.	
பொய்வருநெஞ்சி	௫௧
பொய்யாயப்	௧௦௭
பொய்யானவா	௯௬
பொய்யும்பு	௧௦௮
பொய்யை	௮௪
பொருளுந்த	௨௪
பொருளுடை	௬௬
பொருளுணர்	௫௩
பொல்லாதவ	௬௫
பொல்லாவிரு	௬௬
பொறியாய்ப்	௧௦௮
பொற்பூவும்	௯௭
பொன்னாற்பிர	௭௩
பொன்னுரு	௯௬
பொன்னைநினை	௬௯
போ.	
போக்குவரத்	௧௦௦
போதம்பெறுவி	௨௧
ம.	
மகத்துவம	௧௦௯
மகரங்கிடந்	௯௧
மக்கள்சுற்றத்	௮௮
மஞ்சனமாட்டி	௯௪
மணியாரருவி	௪௬
மணிவாய்முகிழ்ப்	௯
மண்காட்டிப்	௧௦௦
மண்ணாசைப்	௮௭
மண்ணுந்த	௮௪
மண்ணுமுரு	௮௭
மண்பெண்பொ	௧௦௫
மண்முதலா	௯௨
மத்தனொத	௭௨
மந்திக்குருளை	௭௪
மந்திரத்திலா	௮௮
மந்திரமாய்ச்	௧௦௯
மயக்கத்தநல்	௫௦
மயக்கமில்	௫௪
மலர்ந்தபடித்	௪௪
மலையத்தசத்தி	௪௬
மனம்புத்தி	௧௦௮
மனமாயக்	௧௦௭
மனக்கரண	௯௨
மனையாளுமக்	௭௬

பாட்டு.	பக்கம்.
மா.	
மாதருருக்கொ	௮௮
மாதர்பிரபஞ்	௧௦௫
மாதாவுடல்	௮௪
மாதுக்கொருபா	௧௦௧
மாத்தாள	௭௭
மாடுண்டு	௭௭
மாணிக்கத்துள்	௯௪
மாணிக்கமுத்து	௧௦௦
மாண்டார்தலை	௯௦
மாமாயை	௮௭
மாயநட்போ	௬௫
மாயாப்பிர	௧௦௯
மாலைப்பொ	௮௬
மாற்றுஞ்சல	௮௮
மானார்விழி	௮௧
மானுமழுவுங்	௧௯
மி.	
மின்களென்றா	௪௧
மின்னலிக்கும்	௪௮
மு.	
முகம்பாகம்	௫௦
முடிக்குமயிர்	௧௦௩
முடிசார்ந்த	௭௦
முடிவிலொரு	௧௧௦
முட்டற்றம	௬௮
முதலாய்நடு	௧௦௭
முதற்சங்கமு	௮௬
முத்தியளித்தை	௯௦
முந்தித்தவங்	௮௨
முப்பத்திரண்	௧௦௮
முப்பாழுக்கப்	௧௮
முப்பாழும்பா	௧௦௦
முப்போதுமன்	௭௩
முல்லைநில்வெ	௯௧
முற்றொடர்பிற்	௧௦௦
முன்னநீசெய்	௧௦௧
முன்னையிட்	௮௨
முன்னைவினை	௯௩
மூ.	
மூக்குமுனை	௧௦௫
மூச்சென்பா	௧௦௯
மூலத்துதித்	௧௦௪
மூலமறியேன்	௮௭
மூலவித்தாய்	௧௦௭
மூன்றுவகைக்	௯௨
மெ.	
மெத்தமெத்த	௯௯
மெத்தவிகார	௯௨
மெய்த்தொண்	௪௦

பாட்டு.	பக்கம்.
மெ.	
மெய்வாழ்வை	௧௦௫
மென்றுவிழுங்	௮௩
மே.	
மேபிணைவக	௫௦
மேலாகியெங்	௧௧௧
மேலாம்பதங்	௧௧௧
மேலுமிருக்க	௮௫
மேவியபுன்	௨௯
மை.	
மைக்குழம்பு	௯௭
மையாடுகண்	௮௦
யா.	
யாவுமோயிருந்து	௭௧
வ.	
வகுப்பரிவர்போ	௪௩
வங்கிஷமே	௯௭
வசையில்காட்	௨௦
வடிவந்தானு	௮௭
வட்டிவிலு	௮௨
வணங்குமிடை	௧௩
வணக்கந்தலை	௪௦
வந்திக்கண்டா	௨௭
வந்துமணம்பெ	௪௨
வரங்கொண்டி	௪௯
வரிகோல	௬௬
வருத்தநரு	௪௧
வருந்தேன்	௭௪
வருந்தேனிறந்	௨௪
வளையொன்று	௪
வழக்கந்தலை	௯௯
வழிபிழைத்து	௩௯
வளையார்பசி	௩௪
வனவரிதின்	௪௭
வா.	
வாக்கிறந்து	௧௧௨
வாக்கிறந்து	௯௧
வாக்குமனமும்	௯௫
வாக்குமனமுந்	௯௪
வாக்குமனாதீத	௯௨
வாசற்படிகட	௮௫
வாசாமகோசர	௯௫
வாசிதனை	௧௦௫
வாதனைபோ	௧௧௨
வாதுக்குச்	௬௬
வாதுற்றதி	௭௬
வாயாரவா	௧௦௯
வாய்நாறு	௭௮
வாரிதியாய்	௧௮௧
வார்த்தைத்	௮௭
வாலையாய்ப்	௧௦௭

பாட்டு.	பக்கம்.
வா.	
வாவியெல்	௮௩
வாழப்பெரிதெ	௪௭
வாழ்ந்தனமே	௨௫
வாழ்த்தியவ	௯௫
வாழ்வானவா	௯௬
வாழ்வாகவுந்	௧௩
வாளான்மக	௭௩
வானமுதத்தி	௬௭
வாணிற்கதிர்	௧௦௮
வானென்பார	௧௦௮
வானோர்பணி	௯௨
வி.	
விசுத்திமயேச்	௧௦௪
விடக்கேபரு	௭௯
விடப்படுமோ	௭௪
விடைபாய்கொடுமை	௫௦
விட்டிடமுந்	௧௧௨
விட்டுவிடப்	௮௫
விட்டேனுலகம்	௭௭
விண்ணிறந்து	௧௧௧
விதியார்படை	௭௯
வித்தாயமா	௧௦௭
வித்தாய்மா	௧௦௮
வித்சாரம்	௭௧
வித்தியாதத்து	௯௨

பாட்டு.	பக்கம்.
வி.	
வித்தைகற்கு	௮௮
விருந்தாகவ	௬௮
விருப்புவெறு	௧௧௧
விலங்குபுள்	௧௦௭
விலையாகி	௧௦௪
வினைப்போகமே	௭௫
வீ.	
வீசுகரமும்	௯௧
வீடருக்கத்	௧௦௧
வீடுநமக்குத்	௭௫
வீட்டிலொரு	௬௩
வீரகண்டாமணி	௯௦
வீற்றிருந்தா	௮௩
வெ.	
வெட்டவெளியா	௮௫
வெட்டவெளியி	௯௬
வெட்டாத	௮௦
வெந்தாளோ	௮௩
வெந்துயரை	௯௧
வே.	
வேகுதேதீ	௮௨
வேதத்தினுட்	௭௬
வேதப்புரவி	௯௮
வை.	
வையார்மழுப்	௪௧

பாட்டு முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பதினோராந்திருமுறையுள்
திருவெண்காடரென்னும்
பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த
முதலாவது

கோயிறிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

வெண்பா.

பூமேலயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவு
மேத்து கந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. (க)

கலித்துறை.

குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித்தெரிபொற்றிகிரிப், படைகொண்டிகறெறும் பார்த்திவராவதிற் பைம்பொற்கொன்றைத், தொடைகொண்டவார்சடை யம்பலத்தான்றொண்டர்க் கேவல்செய்து, கடைகொண்டபிச்சைகொண் டுண்டிங்குவாழ்தல்களிப்புடைத்தே. (உ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

களிவந்தமுதூறிக் கன்மனத்தை யெல்லாங்
கசியும்படிசெய்துகண்டறிவாரில்லா
வெளிவந்தடியேன்மனம்புகுந்ததென்றால்
விரிசடையும்வெண்ணீறுஞ் செவ்வானமென்ன
வொளிவந்தபொன்னிறமுந்தொன்னடமுங்காட்டு
முடையானுயர்தில்லையம்பலமொன்றல்லா
லெளிவந்தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப்பொய்கொண்
டிடைமிடைந்தபுன்மொழியா லிச்சையுரையோமே. (ங)

இணைக்குறளாசிரியப்பா.

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து

தம்மைமறந்துநின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுநட
மாடுமம்பலவாணநீடு
குன்றக்கோமான்றன்றிருப்பாவையை
நீலமேனிமாதிருத்தங்கையைத்
திருமணம்புணர்ந்தஞான்றுபெருமநின்
றூதவிழ்கொன்றைத்தாருமேதமில்
வீரவெள்விடைக்கொடியும்போரிற்
றழங்குந்தமருகப்பறையுமுழங்கொலித்
தெய்வக்கங்கையாறும்பொய்தீர்
* விரையாக்கலியெனுமாணையுநிரைநிரை
யாயிரம்வகுத்தமாயிருமருப்பின்
வெண்ணிறச்செங்கண்வேழமும்பண்ணியல்
வைதிகப்புரவியும்வானநாடு
மையறுகனகமேருமால்வரையுஞ்
செய்வயற்றில்லையாகியதொல்பெரும்
பதியுமென்
றொருபதினாயிரந்திருநெடுநாமமு
முரிமையிற்பாடித்திருமணப்பந்தரு
ளமரர்முன்புகுந்தறுகுசாத்திநின்
றமர்பெயரொழுதியவரிநெடும்புத்தகத்
தென்னையுமெழுதவேண்டுவனின்னரு
ளாணைவைப்பிற்காரொருவனுவும்
வானுறநிமிர்ந்துகாட்டுங்
கானில்வானுளம்புங்கருடனுதலினே. (ச)

வெண்பா.

ஆதரித்தமாலுமறிந்திலனென்றஃதறிந்தே
காதலித்தநாயேற்குங் காட்டுமே - போதகத்தோற்
கம்பலத்தானீறுககங்கணத்தான்றென்புலியூ
ரம்பலத்தான்செம்பொனடி. (ரு)

கலித்துறை.

அடியொன்றுபாதலமேழிற்குமப்புறம்பட்டதிப்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்ததுமுற்றும்வெள்ளைப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே. (சா)

---

* பொய்தீர்விரையாக் கலியென்பதனுக்கு வேதம், என்று பொருள்கொள்க. அதுவே யவனதாணை இதனுக்குச் சத்தியமெனப் பொருள்கூறுவாருமுளர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நடமாடியேழுலகுமுய்யக்கொண்ட
நாயகரேநான்மறையோர்தங்களோடுந்
திடமாடமதிட்டில்லைக்கோயில்கொண்ட
செல்வரேயுமதருமைதேராவிட்டீ
ரிடமாடியிருந்தவளும்விலக்காவிட்டா
லென்போல்வார்க்குடனிற்கவியல்வதன்று
தடமாலைமுடிசாய்த்துப்பணிந்தவானோர்
* தஞ்சுண்டாயங்கருந்தீநஞ்சுண்டீரே. (எ)

நேரிசையாசிரியப்பா.

நஞ்சுமிழ்பகுவாய்வெஞ்சினமாசுணந்
தன்முதன்முருக்கநென்முதற்சூழ்ந்த
நீர்ச்சிறுபாம்புதன்வாய்க்கெதிர்வந்த
தேரையைவவ்வியாங்கியான்முன்
கருவிடைவந்தவொருநாட்டொடங்கி
மறவாமறலிமுறைபிறழ்பேழ்வா
யயிற்றலையன்னவெயிற்றிடைக்கிடந்தாங்
கருணனியின்றியொருவயிற்றோம்பற்குப்
பல்லுயிர்செகுத்து வல்லிதினருந்தி
யயர்த்தனனிருந்தும்போலும்பெயர்த்துநின்
றெண்டோள்வீசிக்கண்டோருருகத்
தொல்லெயிலுடுத்ததில்லைமூதூ
ராடுமம்பலக்கூத்தனைப்
பாடுதல்பரவுதல்பணிதலோவிலமே. (அ)

வெண்பா.

இலவிதழ்வாய்வீழ்வாரிகழ்வாரவர்தங்
கலவிகடைக்கணித்துங்காணே - னிலகுமொளி
யாடகஞ்சேரம்பலத்தேயாளுடையார்நின்றாடு
நாடகங்கண்டன்பானநான். (௯)

கலித்துறை.

நானேபிறந்துபயன்படைத்தேனயனாரணனெங்
கோனேயெனத்தில்லையம்பலத்தேநின்றுகூத்துகந்த
தேனேதிருவுள்ளமாகியென்றீமையெல்லாமறுத்துத்
தானேபுகுந்தடியேன்மனத்தேவந்துசந்திக்கவே. (௧௦)

கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

சந்துபுனையவெதும்பிமலரணைதங்கவெருவியிலங்குகலையொடு
சங்குகழலநிறைந்தவயலவர்தஞ்சொனலியமெலிந்துகிளியொடு

---

* தஞ்சமென்றபாலது - தஞ்செனக்குறைந்துநின்றது.

பந்துகழல்கண்மறந்துதளிர்புரைபண்டைநிறமுமிழந்துநிறையொடு
பண்புதவிரவனங்களவனொடுநண்புபெருகவிளைந்தவினையன
நந்திமுழவுதழங்கமலைபெறுநங்கைமகிழவணிந்தவரவுக
ணஞ்சுபிழியமுரன்றுமுயலகனைந்துநாலவலைந்தபகிரதி
யந்திமதியொடணிந்துதிலைநகரம்பொனணியுமரங்கினடநவி[மே.
லங்கணரசையடைந்துதொழுதிவளன்றுமுதலெதிரின்றுவளையு

நிலைமண்டிலவாசிரியப்பா.

வரையொன்றுநிறுவியரவொன்றுபிணித்துக்
கடறடவாகமிடலொடும்வாங்கித்
திண்டோளாண்டதண்டாவமரர்க்
கமிர்துணாவளித்தமுதுபெருங்கடவுள்
கடையுகஞ்சென்றகாலத்துநெடுநில
மாழிப்பரப்பிலாழ்வதுபொறாஅ
தஞ்சேலென்றுசெஞ்சேலாகித்தன்
றெய்வவுதரத்துச்சிறுசெலுப்புரையிற்
பௌவமேழேபட்டதுபௌவத்தோ
டுலகுகுழைத்தொருநாஅளுண்டது
முலகமூன்றுமளந்துழியாங்கவ
னீரடிநிரம்பிற்றுமிலவேதெரி
னுணைப்போர்க்கல்லதவன்குறைவின்றே
யினையனாகியதனிமுதல்வானவன்
கேழற்றிருவுருவாகியாழத்
தடுக்கியவேழுமெடுத்தனனெடுத்தெடுத்
தாழியூழிகீழுறக்கிளைந்துங்
காண்பதற்கரியநின்கழலும்வேண்டுபு
நிகிலலோகமுநெடுமறைத்தொகுதியு
மகிலசராசரமனைத்துமுதவிய
பொன்னிறக்கடவுளன்னமாகிக்
காண்டிலாதநின்கதிர்நெடுமுடியு
மீங்கிவைகொண்டுநீங்காதுவிரும்பிச்
சிறியபொதுவின்மறுவின்றிவிளங்கி
யேவருங்காணவாடுதியதுவெனக்
கதிசயம்விளைக்குமன்றேயதிசயம்
விளையாதுமொழிந்ததெந்தைவளையாது
கல்லினும்வலிததுநல்லிதிற்செல்லாது
தான்சிறிதாயினுமுள்ளிடைநிரம்ப
வான்பொயச்சமாயாவாசை
மிடைந்தனகிடப்பவிடம்பெறலருமையி

லைவர்கள்வர்வல்லிதிற்புகுந்து
மண்மகன்றிகிரியிலெண்மடங்குசுழற்ற
வாடுபுகிடந்தபீடினெஞ்சத்து
நுழைந்தனைபுகுந்துதழைந்தநின்சடையுஞ்
செய்யவாயுமையமர்கண்டமு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமு
மெடுத்தபாதமுந்தடுத்தசெங்கையும்
புள்ளியாடையுமொள்ளிதின்விளங்க
நாடகமாடுதிநம்பகூடும்
வேதநான்கும்விழுப்பெருமுனிவரு
மாதிநின்றிறமாதலின்மொழிவது
பெரியதிற்பெரியையென்றுமன்றே
சிறியதிற்சிறியையென்றுமன்றே
நிறைபொருண்மறைகளுனக்குநின்னறைகழ
லிரண்டொடுமறிவிலார்த்துவைத்த
மறையவர்தில்லைமன்றுகிழவோனே. (கஉ)

வெண்பா.

கிழவருமாய்நோய்மூப்புக்கீழ்ப்பட்டுக்காமத்
துழவரும்போயோயுமாகண்டோ - மொழிதெரிய
வாயினுலிப்போதேமன்றினடமாடு
நாயனுரொன்றுரைப்போநாம். (கங)

கலித்துறை.

நாமத்தினுலென் றனுக்திருத்தேனறைமாமலர்சேர்
தாமத்தினுலுன்சரண்பணியேன்சார்வதென்கொடுநான்
வாமத்திலேயொருமானைத்தரித்தொருமானைவைத்தாய்
சேமத்தினுன்றிருத்தில்லைசேர்வதோர்செந்நெறியே. (கச)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெறிதருகுழலையறலென்பர்க ணிழலெழுமதியநுதலென்பர்க
ணில்வினும்வெளிதுநகையென்பர்கணிறம்வருகலசமுலையென்ப [ர்க
ளறிகுவதரிதிவிடையென்பர்க ளடியிணைகமலமலரென்பர்க
ளவயவமினையமடமங்கைய ரழகியரமையுமவரென்செய
மறிமழுவுடையகரனென்கிலர் மறலியைமுனியுமரனென்கிலர்
மதிபொதிசடிலதரனென்கிலர் மலைமகண்மருவுபுயனென்கிலர்
செறிபொழினிலவுதில்லையென்கிலர் திருநடநவிலுமிறையென்கிலர்
சிவகதியருளுமரசென்கிலர் சிலர்நரகுறுவரறிவின்றியே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

அறிவிலொழுக்கமும் பிறிதுபடுபொய்யுங்
கடும்பிணித்தொகையு மிடும்பையீட்டமு

மினையனபலசரக் கேற்றிவினையெனுந்
தொன்மீகாம னுய்ப்பவந்திலைக்
கருவெனுநெடுநக ரொருதுறைநீத்தத்துப்
புலனெனுங்கோண்மீ னலமந்துதொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந்தலைக்குந்
துயர்த்திரையுவட்டிற்பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்பமென்னு நெடுங்கல்வீழ்த்து
நிறையெனுங்கூம்பு முரிந்துகுறையா
வுணர்வெனுநெடும்பாய் கீறிப்புணரு
மாயப்பெயர்ப்படு காயச்சிறைக்கலங்
கலங்குபுகவிழா முன்னமலங்கன்
மதியுடனணிந்த பொதியவிழ்சடிலத்துப்
பையரவணிந்த தெய்வநாயக
தொல்லெயிலுடுத்த தில்லைகாவல
வம்பலர்தும்பை யம்பலவாணநின்
னருளெனுநலத் தார்பூட்டித்
திருவடிநெடுங்கரை சேர்த்துமாசெய்யே. (கசா)

வெண்பா.

செய்யதிருமேனிச்சிற்றம்பலவருக்கென்
னையல்வளைகொடுத்தல்சாலுமே - யையன்றோ
சேயேவருமள்விற்சிந்தாதமாத்திரமே
,தாயேநமதுகையிற்சங்கு. (கஎ)

கலித்துறை.

சங்கிடத்தானிடத் தான்றனதாகச் சமைந்தொருத்தி
யங்கிடத்தாடில்லையம்பலக்கூத்தற்கவிர்சடைமேற்
கொங்கிடத்தார்மலர்க்கொன்றையென்றுயெங்கைநீயுமொரு
பங்கிடத்தான்வல்லையேலில்லையேயுன்பசப்பொழியே. (கஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒழிந்ததெங்களுற வென்கொலோவெரியி லொன்னலார்கள் புரமுன்னோர்நாள், விழுந்தெரிந்துதுகளாகவென்றிசெய்த வில்லி தில்லைநகர்போலியார், சுழிந்தவுந்தியி லழுந்திமேகலை தொடக்க நின்றவர்நடக்கநொந், தழிந்தசிந்தையினும் வந்ததாகினுமோர் சிந்தையாயொழிவதல்லவே, (கசு)

நேரிசையாசிரியப்பா.

அல்லல்வாழ்க்கை வல்லிதிற்செலுத்தற்குக்
கைத்தேருழந்துகார்வருமென்று
வித்துவிதைத்தும் விண்பார்த்திருந்துங்
கிளையுடன்றவிரப்பொருளுடன்கொண்டு

முளைமுதிர்பருவத்துப் பதியெனவழங்கியு
மருளாவையவரம்பிடைநடந்து
மிருளூறுபௌவத் * தெந்திரங்கடாஅய்த்
துன்றுதிரைப்பரப்பிற்குன்றுபார்த்தியங்கியு
மாற்றல்வேந்தற்குச்சோற்றுக்கடன்பூண்டுந்
தாளுழந்தோடியும் வாளுழந்துண்டு
மறியாவொருவனைச்செறிவந்தெருட்டியுஞ்
சொற்பலபுனைந்துங்கற்றனகழறியுங்
குடும்பப்பாச நெடுந்தொடர்ப் பூட்டி
யைவரைந்திடத்திரிப்பநொய்திற்
பிறந்தாங்கிறந்து மிறந்தாங்குபிறந்துங்
கணத்திடைத்தோன்றிக் கணத்திடைக்கரக்குங்
கொப்புட்செய்கையொப்பின்மின்போ
லுலப்பில்யோனிக்கலக்கத்துமயங்கியு
நெய்யெரிவளர்த்துப்பெய்முகில்பெயறருந்
தெய்வவேதியர்தில்லைமூதூ
ராடகப்பொதுவினாடகவிற்றுங்
கடவுட்கண்ணுதனடமுயன்றெடுத்த
பாதப்போதும்பாய்புலிப்பட்டு
மீதியாத்தசைத்தவெள்ளெயிற்றரவுஞ்
சேயுயரகலத்தாயிரங்குடுமி
மணிகிடந்திமைக்குமொருபேராரமு
மருள்பொதிந்தலர்ந்ததிருவாய்மலரு
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநாட்டமுங்
கங்கைவழங்குந்திங்கள்வேணியுங்
கண்ணிடைப்பொறித்துமனத்திடையழுத்தியாங்
குண்மகிழ்ந்துரைக்கவுறுதவஞ்செய்தன
னான்முகன்பதத்தின் மேனிகழ்பதந்தா
னுறுதற்கரியதுமுண்டோ
பெறுதற்கரியதோர் பேறுபெற்றேற்கே. (உ0)

வெண்பா.

பெற்றோர்பிடிக்கப்பிழைத்துச்செவிலியர்கள்
சுற்றோடவோடித்தொழாநிற்கு—மொற்றைக்கைம்
மாமறுகச்சீறியசிற்றம்பலத்தான்மான்றேர்போங்
கோமறுகிற்பேதைக்குழாம். (உக)

---

* எந்திரம் எ - து கப்பல்.

கலித்துறை.

பேதையெங்கேயினித்தேறியுய்வாள்பிரமன்றனக்குத்
தாதைதன்றாதையென்றேத்தும்பிரான்றண்புலிசைப்பிரான் [ணி
* கோதையந்தாமத்தன்கொன்றைகொடானின்று கொல்லவெண்
பூதையுங்காருந்துளியொடுங்கூடியுலாவியவே. (௨௨)

கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

உலவுசலதிவாழ்விடம்மரர்தொழவுணுவென
நுகருமொருவருழியினிறுதி யொருவராழிய
புலவுகமழ் † கரோடிகையுடையபுனிதர்பூசுரர்
புலிசையலர்செய்போதணி பொழிலினிழலின்வாழ்வதோர்
கலவமயிலனார்சுருள்கரியகுழலினார்குயில்
கருதுமொழியினார்கடைநெடியவிழியினாரித
ழிலவிலழகியாரிடைகொடியின்வடிவினார்வடி
வெழுதுமருமையாரொன திதயமுழுதுமாள்வரோ. (௨௩)

இணைக்குறளாசிரியப்பா.

ஆளெனப்புகுந்தின்வந்தடைந்திலமத்தநின்
றாளினைவறலையினியற்றி
வழிவழிவந்தமரபினமொழிவது
னைந்தெழுத்தவையெஞ்சிந்தையிற்கிடத்தி
நனவேபோலநாடொறும்பழகிக்
கனவினுநவிற்றுங் காதலேம்வினைகெடக்
கேட்பதுநின்பெருங்கீர்த்திமீட்பது
நின்னெறியல்லாப் புன்னெறிபடர்ந்தீ
மதியினெஞ்சத்தை வரைந்துநிறுவென
வருத்திசெய்திடுவ துருத்திரசாதனங்
காலையுமாலையுங்கால்பெயர்த்திடுவதுன்
றாலயம்வலம்வருதற்கேசால்பினிற்
கைகொடுகுயிற்றுவ தையநின்னது
கோயிற்பல்பணி குறித்தேயோயா
துருகிநின்னினைந் தருவிசோரக்
கண்ணிற்காண்பதெவ் வுலகினுங்காண்பன
வெல்லாம்
நீயேயாகிநின்றதோர்நிலையே
நாயேன்
றலைகொடுசார்வதுன்சரண்வழியல்லா

---

* சோதையந்தாமத்தன் கொன்றையென்பதூஉம்பாடம்.

† கரோடிகை எ-து தலைமாலை.

லலைகடல்பிறழினுமடாதேயதனும்
பொய்த்தவவேடர்கைத்தகப்படுத்தற்கு
வஞ்சச்சொல்லின்வார்வலைபோக்கிச்
சமயப்படுகுழிசமைத்தாங்கமைவயின்
மானிடமாக்களைவலியப்புகுத்து
மாறுவிரதத்தசப்படுத்தாழ்த்து
வளைவுணர்வெனக்குவருமோவுள்தரு
நுரையுந்திரையு * நொப்புறுகொட்பும்
வரையில்சீகர வாரியுங்குரைகடற்
பெருத்துஞ்சிறுத்தும் பிறங்குவதோன்றி
யெண்ணிலவாகி யிருங்கட்லடங்குந்
தன்மைபோலச்சராசரமனைத்து
நின்னிடைத்தோன்றி நின்னிடையடங்குநீ
யொன்றினுந்தோன்றாயொன்றினுமடங்காய்
வானோர்க்கரியாய்மறைகளுக்கெட்டாய்
நான்மறையாளர் நடுவுபுக்கடங்கிச்
செம்பொற்றில்லைமூதூ
ரம்பலத்தாடு மும்பர்நாயகனே. (௨௪)

வெண்பா.

நாயனையவென்னைப்பொருட்படுத்திநன்களித்துத்
தாயனையனுயருளுந்தம்பிரான்—றூயவிரை
மென்றுழாய்மாலொடயன்றேடவியன்றில்லை
மன்றுளேயாடுமணி. (௨௫)

கலித்துறை.

மணிவாய்முகிழ்ப்பத்திருமுகம்வேர்ப்பவம்மன்றுக்கெல்லா
மணியாயருணடமாடும்பிரானையடைந்துருகிப்
பணியாய்புலன்வழிபோநெஞ்சமேயினிப்பையப்பையப்
பிணியாய்க்கடைவழிசாதியெல்லோரும்பிணமென்னவே. (௨௬)

எழுசீர்க்கழிநெடிலடிச்சந்தவிருத்தம்.

என்றுமினிமடவரலாய்செய்குவ தினமாய்வண்டுகண்மலர்கிண்டித், தென்றுவெனமுரல்பொழில்சூழ்தில்லையுளானார்திருமுடியணிதாமந், தன்றலல்லதுதீராதென்னிடர்தகையாதுயிர்கருமுகிலேறி, மின்றுநின்றதுதுளிவாடையும்வரவீசாநின்றதுபேசாயே. ()

இணைக்குறளாசிரியப்பா.

பேசுவாழிபேசுவாழி
யாசையொடுமயங்கிமாசுறுமனமே

* நொப்பு எ-து தவை.

பேசுவாழி பேசுவாழி
கண்டனமறையுமுண்டனமலமாம்
பூசினைமாசாம்புணர்ந்தனபிரியு
நிறைந்தனகுறையுமுயர்ந்தனபணியும்
பிறந்தனவிறக்கும்பெரியனசிறுக்கு
மொன்றொன்றொருவழிநில்லாவன்றியுஞ்
செல்வமொடுபிறந்தோர் தேசொடுதிகழ்ந்தோர்
கல்வியிற்சிறந்தோர் கடுந்திறன்மிகுந்தோர்
கொடையிற்பொலிந்தோர் படையிற்பயின்றோர்
குலத்தினுயர்ந்தோர் நலத்தினின்வந்தோ
ரனையரொங்குலத்தின ரிறந்தோரனையவர்
பெருநின்றிலபோலுந்தெரி
னீயுமஃதறிதியன்றேமாயப்
பேய்த்தேர்போன்றுநீப்பருமுறக்கத்துக்
கனவேபோன்றுநனவுபெயர்பெற்ற
மாயவாழ்க்கையைமதித்துக்காயத்தைக்
கல்லினும்வலிதாக் கருதிப்பொல்லாத்
தன்மையரிழிவுசார்ந்தனைநீயு
நன்மையிற்றிரிந்த புன்மையையாதலி
னழுக்குடைப்புலன்வழி யிழுக்கத்தினொழுகி
வளைவாய்த்தூண்டிலி னுள்ளிரைவிழுங்கும்
பன்மீன்போலவு
மின்னுபுவிளக்கத்துவிட்டில்போலவு
மாசையாம்பரிசத் தியானைபோலவு
மோசையின்விளிந்த புள்ளுப்போலவும்
வீசியமணத்தின் வண்டுபோலவு
முறுவதுணராச் செறுவுழிச்சேர்ந்தனை
நுண்ணூனூற்றுத்தன்னகப்படுக்கு
மறிவில்கீடத்து நந்துழிப்போல
வாசைச்சங்கிலிப் பாசத்தொடர்ப்பட்
டிடர்கெழுமனத்தினோ டியற்றுவதறியாது
குடர்கெழுசிறையறைக் குறங்குபுகிடத்தி
கறைவதினைந்த கன்றெனவிரங்கி
மறவாமனத்து மாசறுமடியார்க்
கருள்சுரந்தளிக்கு மற்புதக்கூத்தனை
மறையவர்தில்லை மன்றுளாடு
மிறையவனென்கிலை யென்னினைந்தனையே, (உஅ)

வெண்பா.

நினையார்மெலியார்நிறையழியார்வாளாப்
புனைவார்க்குக்கொன்றைபொதுவோ-வனைவிரு
மெச்சியேகாணவியன்றில்லையானருளென்
பிச்சியேநாளைப்பெறும். (௨௯)

கலித்துறை.

பெறுகின்றவெண்ணிலிதாபரும்பேறும்யானுமென்னை
யுறுகின்றதுன்பங்களாயிரகோடியுமோய்வொடுஞ்சென்
றிறுகின்றநாள்களுமாகிக்கிடந்தவிடுக்கணெல்லா
மறுகின்றனதில்லையாளுடையான்செம்பொனம்பலத்தே. (௩0)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்பலவரங்கணரடைந்தவர்தமக்கே
யன்புடையரொன்னுமிதெனனையுரித்துக்
கம்பலமுவந்தருளுவீர்மதனன்வேவக்
கண்டருளுவீர்பெரியகாதலறியாதே
வம்பலர்நிறைந்துவசை பேசவொருமாடே
வாடையுயிரீரமணிமாமையுமிழந்தென்
கொம்பலமருந்தகைமைகண்டுதகவின்றிக்
கொன்றையருளீர்கொடியிரொன்றருளுவீரோ. (௩௧)

இணைக்குறளாசிரியப்பா.

அருளுவாழியருளுவாழி
புரிசடைக்கடவுளருளுவாழி
தோன்றுழித்தோன்றிநிலைதபக்கறங்கும்
புற்புதச்செவ்வியின்மக்கள்யாக்கைக்கு
நினைப்பினுங்கடிதே யிளமைநீக்க
மதனினுங்கடிதேமூப்பின்றொடர்ச்சி
யதனினுங்கடிதேகதுமெனமரணம்
* வாணாள்பருகியுடம்பைவறிதாக்கி
நாளுநாள்பயின்றநல்காக்கூற்ற
மினையதன்மையதிதுவேயிதனை
யெனதெனக்கருதியிதற்கென்றுதொடங்கிச்
செய்தனசிலவேசெய்வனசிலவே
செய்யாநிற்பனசிலவேயவற்றிடை
நன்றென்பசிலவேதீதென்பசிலவே
† யொன்றினும்படாதனசிலவேயென்றிவை

* வாழ்நாள் - வாணாளெனமரீஇயது. † ஒன்றினும் படாத வினையாவன, கைநொடித்தல், கொட்டிவிடல், அமுக்குருட்டல், மூச்சுவிடன்முதலியன. இது, நல்வினை தீவினைக்கு ளடங்காத வேறுவினை யெனவும்படும், இதனை யிலக்கண க்கொத்தானுமுணர்க.

கணத்திடைநினைந்துகளிப்பவுங்கலுழ்பவுங்
கணக்கில்கோடித்தொகுதியவைதா
மொன்றொன்றுணர்வுழிவருமோவனைத்து
மொன்றாவுணர்வுழிவருமோவென்றொன்று
தெளிவுழித்தேறல்செல்லேமளிய
மனத்தின்செய்கைமற்றிதுவேநீயே
யரிமைசாலவெம்பெருமதெரிவுழி
னுண்டாய்த்தோன்றுவயாவையுநீயே
கண்டனையவைநினைக்காணுவதுதா
* னின்வயின்மறைத்தோயல்லையுன்னை
மாயாய்மன்னினைநீயேவாழி
மன்னியுஞ்சிறுமையிற்கரந்தோயல்லை
பெருமையிற்பெரியோய்பெயர்த்துநீயே
பெருகியுஞ்சேணிடைநின்றோயல்லை
தேர்வோர்க்குத்தம்மினுமணியைநீயே
நண்ணியுமிடையொன்றின்மறைந்தோயல்லை
யிடையிட்டுநின்னைமறைப்பதுமில்லை
மறைப்பினுமதுவு
நீயேயாகிநின்றதோர்நிலையே.
அஃதான்று
நினைப்பருங்காட்சிநின்னிலையிதுவே
நினைப்புறுங்காட்சியெந்நிலையதுவே
யினிநனியிரப்பதொன்றுடையமனமருண்டு
புன்மையினினைத்துப்புலன்வழிப்படரினு
நின்வயினினைந்தேமாகுதனின்வயி
னினைக்குமாநினைக்கப்பெறுதலனைத்தொன்று
நீயேயருளல்வேண்டும்வேய்முதிர்
கயிலைபுல்லெனவெறிவிசும்புவறிதாக
விரும்பருய்யவம்பலம்பொலியத்
திருவளர்தில்லைமூதூ
ரருநடங்குயிற்றுமாதிவானவனே. (௩௨)

வெண்பா.

வானோர்பணியமணியாசனத்திருக்கு
மானதசெல்வத்தரசன்றே—மானகம்
பந்திப்பார்நின்றாடும்பைம்பொன்னினம்பலத்தே
வந்திப்பார்வேண்டாதவாழ்வு. (௩௩)

---

* நின்வயின் மறைத்தோயல்லை யுனையாய் மன்னினை நீயேவாழி எனவும் பாடம்.

கலித்துறை.

வாழ்வாகவுந்தங்கள்வைப்பாகவுமறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லையம்பலத்தாயுன்னையன்றியொன்றைத்
தாழ்வா ‡ ரறியார்கடனஞ்சையுண்டிலையாகிலன்றே
மீள்வார்சிலரையன்றோதெய்வமாகவணங்குவதே. (௩௪)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வணங்குமிடையீர்வறிதுவல்லியிடையாண்மேன்
மாரசரமாரிபொழியப்பெறுமனத்தோ
டுணங்கியிவடானுமெலியப்பெறுமிடர்க்கே
யூதையெரிதூவியுலவப்பெறுமடுத்தே
பிணங்கியரவோடுசடையாடநடமாடும்
பித்தரொனவும்மிதயமித்தனையுமோரீ
ரணங்குவெறியாடுமறியாடுமதுவீரு
மையலையுமல்லலையுமல்லதறியீரோ. (௩௫)

நேரிசையாசிரியப்பா.

ஈரவேரித்தார் வழங்குசடிலத்துக்
குதிகொள்கங்கைமதியின்மீதசைய
வண்டியங்குவரைப்பினெண்டோட்செல்வ
வொருபாற்றோடுமொருபாற்குழையு
மிருபாற்பட்ட மேனியெந்தை
யொல்லொலிப்பழனத் தில்லைமூதூ
ராடகப்பொதுவி னாடகநவிற்று
மிமையாநாட்டத் தொருபெருங்கடவுள்
வானவர்வணங்குந் தாதையானே
மதுமழைபொழியும் புதுமந்தாரத்துத்
தேனியங்கொருசிறைக்கானகத்தியற்றிய
தெய்வமண்டபத் தைவகையமளிச்
சிங்கஞ்சுமப்ப வேறிமங்கைய
ரிமையாநாட்டத் தமையாநோக்கத்
தம்மார்புபருகச் செம்மாந்திருக்கு
மானச்செல்வத்து வானோரின்ப
மதுவேயெய்தினுமெய்துகததுமெனத்
தெறுசொலாளருறுசினந்திருகி
யெற்றியுமீர்த்துங் குற்றங்கொளீஇ
யீர்ந்தும்போழ்ந்துமெற்றுபுகுடைந்தும்
வார்ந்துங்குறைத்து மதநாய்க்கீந்துஞ்
செக்குரற்பெய்துந் தீநீர்வாக்கியும்

‡ எறிவார் என்றும் பாடம்.

புழுக்குடையழுவத் தழுக்கியல்சேற்றுப்
பன்னெடுங்கால மழுத்தியின்று
வரையிறண்டத்து மாறாக்கடுந்துயர்
கிரையஞ்சேரினுஞ் சேர்கவுரையிடை
யேனோன்னையாளுதுவிரும்பி
நல்லனெனினு மென்கவவரோ
யல்லனெனினு மென்கவில்லாத்
திருவொடுதிளைத்துப் பெருவளஞ்சிதையா
தின்பத்தழுந்தினு மழுந்துகவல்லாத்
துன்பந்துதையினுந் துதைகமுன்பி
லிளமையொடுபழகிக் கழிமூப்புக்குறுகா
தென்றுமிருக்கினு மிருக்கவன்றி
யின்றேயிறக்கினு மிறக்கவொன்றினும்
வேண்டலுமிலனே வெறுத்தலுமிலனே
யாண்டகைக்குரிசினின் னடியரொடுங்குழுமித்
தெய்வக்கூத்துநின் செய்யபாதமு
மடையவுமணுகவும்பெற்ற
கிடையாச்செல்வங் கிடைத்தலானே. (௫௬)

வெண்பா.

ஆனேறேபோந்தாலழிவுண்டேயன்புடைய
நானேதான்வாழ்ந்திடினு நன்றன்றே - வானோங்கு
வாமாண்பொழிற்றில்லைமன்றைப்பொலிவித்த
கோமானையித்தெருவேகொண்டு. (௫எ)

கலித்துறை.

கொண்டல்வண்ணத்தவனான்முகனிந்திரன்கோமகுடத்
தண்டர்மிண்டித்தொழுமம்பலக்கூத்தனுக்கன்புசெய்யா
மிண்டர்மிண்டித்திரிவாரொனக்கென்னினிநானவன்றன்
றொண்டர்தொண்டர்க்குத்தொழும்பாய்த்திரியத்தொடங்கினனே

இரட்டைக்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொடரநரைத்தங்கமுன்புளவாயின
தொழில்கண்மறுத்தொன்றுமொன்றியிடாதொரு
சுளிவுதலைக்கொண்டுபுன்புலைவாரிக
டுளையொழுகக்கண்டுசிந்தனையோய்வொடு
நடைகெடமுற்கொண்டபெண்டிர்பொறாவொரு
நடலைநமக்கென்று வந்தனபேசிட
நலியிருமற்கஞ்சியுண்டிவெறாவிழு
நரகவுடற்கன்புகொண்டலைவேனினி
மிடலொடியப்பண்டி லங்கையர்கோனொரு

விரலினமுக்குண்டுபண்பலபாடிய
விரகுசெவிக்கொண்டுமுன்புளதாகிய
வெகுளிதவிர்த்தன் றுபொன்றியிடாவகை
திடமருள்வைக்குஞ்செழுஞ்சுடரூறிய
தெளியமுதத்தின் கொழுஞ்சுவைநீடிய
தில்லைநகரிற்செம்பொனம்பலமேவிய
சிவனைநினைக்குந்தவஞ்சதுராவதே. (௩௬)

நேரிசையாசிரியப்பா.

சதுர்முகன் றந்தைக்குக்கதிர்விடுகடவு
ளாழிகொடுத்தபேரருள்போற்றி
முயற்சியொடுபணிந்த வியக்கர்கோனுக்கு
மாநிதியிரண்டுமாறுப்பெருவளத்
தளகையொன்றுந்தளர்வின்றிநிறுவிய
செல்வங்கொடுத்தசெல்வம் போற்றி
தாணிழலடைந்தமாணிக்காக
நாண்முறைபிறழாது கோண்முறைவலித்துப்
பதைத்துவருங்கூற்றைப்படிமிசைத்தெறிக்க
வுதைத்துயிரளித்தவுதவிபோற்றி
குலைகுலைகுலைந்தநிலையாத்தேவர்
படுபேரவலமிடையின்றிவிலக்கிக்
கடல்விடமருந்தினகருணைபோற்றி
தவிராச்சீற்றத்தவுணர்மூவெயி
லொல்லனல்கொளுவியொருநொடிபொடிபட
வில்லொன்றுவளைத்தவீரம்போற்றி
பூமென்கரும்பொடுபொடிபடவிலத்துக்
காமனைப்பார்த்த கண்ணுதல்போற்றி
தெய்வயாளிகைமுயன்று கிழித்தெனக்
கரியொன்றுரித்த பெருவிறல்போற்றி
பண்டுபெரும்போர்பார்த்தனுக்காகக்
கொண்டுநடந்தகோலம்போற்றி
விரற்பதமொன்றில் வெள்ளிமலையெடுத்த
வரக்கனைநெரித்தவாண்மைபோற்றி
விலங்கல்விண்டுவிழுந்தெனமுன்னாட்
சலந்தரற்றடிந்த தண்டம்போற்றி
தாதையையெறிந்தவேதியச்சிறுவற்குப்
பரிகலங்கொடுத்ததிருவுளம்போற்றி
நின்முதல்வழிபடத்தன்மகற்றடிந்த
தொண்டர்மனையிலுண்டல்போற்றி

வெண்ணெயுண்ணவெண்ணுபுவந்து
நந்தாவிளக்கை நந்துபுபெயர்த்த
தாவுபுல்லெலிக்குமூவுலகாள
நொய்தினிலளித்தகைவளம்போற்றி
பொங்குளையழல்வாய்ப்புகைவிழியொருதனிச்
சிங்கங்கொன்றசேவகம்போற்றி
வரிமிடற்றெறுழ்வலிமணியுருபகுவா
யுரகம்பூண்டவொப்பனைபோற்றி
கங்கையுங்கடுக்கையுங் கலந்துழியொருபாற்
றிங்கள்சூடியசெஞ்சடைபோற்றி
கடவுளிருவரடியுமுடியுங்
காண்டல்வேண்டக்கனற்பிழம்பாகி
நீண்டுநின்ற நீளம்போற்றி
யாலம்பில்குநின் சூலம்போற்றி
கூறுதற்கரியநின்னேறுபோற்றி
யேகவெற்பன்மகிழுமகட்கிடப்
பாகங்கொடுத்தபண்புபோற்றி
தில்லைமாநகர்போற்றிதில்லையுட்
செம்பொனம்பலம்போற்றியம்பலத்
தாடுநாடகம்போற்றியென்றுங்
கென்றும்போற்றினுமென்றனக்கிறைவ
வாற்றலில்லையாயினும்
போற்றிபோற்றிநின்பொலன்பூவடிக்கே. (௪0)

திருச்சிற்றம்பலம்.

கோயினான்மாணிமாலை முற்றிற்று.

கணபதிதுணை.

உ-வது திருக்கழுமல

மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

இணைக்குறளாசிரியப்பா.

திருவளர்பவளப் பெருவரைமணந்த
மரகதவல்லி போலொருகூற்றின்
இமயச்செல்வி பிரியாதுவிளங்கப்
பாய்திரைப்பரவை மீமிசைமுகிழ்த்த
அலைகதிர்ப்பரிதி யாயிரந்தொகுத்த
வரன்முறைதிரியாது மலர்மிசையிருந்தெனக்
கதிர்விடுநின்முகங் காண்டொறுங்காண்டொறும்
முதிராவிளமுலை முற்றாக்கொழுந்தின்
திருமுகத்தாமரைச் செவ்வியின்மலரநின்
றையல்வாணுதற் றெய்வச்சிறுபிறை
இளநிலாக்காண்டோறு மொளியொடும்புணர்ந்தநின்
செவ்வாய்க்குமுதஞ் செவ்விசெய்யநின்
செங்கைக்கமல மங்கைவனமுலை
அமிர்தகலச மமைவினேந்த
மலைமகடனாது நயனக்குவளைநின்
பொலிவிறெடுமலர மறையோர்கழுமல
நெறிநின்றுபொலிய நாகர்நாடு
மீமிசைமிதந்து மீமிசையுலகம்
கீழ்முதற்றாழ்ந்து
ஒன்றாவந்த குன்றாவெள்ளத்
துலகமூன் றுக்குங் கேளாகாகி
முதலில்கால மினிதுவீற்றிருந்துழித்
தாதையொடுவந்த வேதியச்சிறுவன்
தளர்நடைப்பருவத்து வளர்பசிவருத்த
அன்னாயோவென் றழைப்பமுன்னின்று
ஞானபோனகத்தரு ளட்டிக்குழைத்த
ஆனாத்திரளை யவன்வயினருள
அந்தணன்முனிந்து தந்தார்யாரென
அவனைக்காட்டுவ னப்பவாவெனத்
தோடுடைய செவியனென்றும்
பீடுடையபெம்மானென்றும்
கையிற் சுட்டிக்காட்ட
ஐயநீவெளிப்பட் டருளினையாங்கே.

வெண்பா.

அருளின்கடலடியே னன்பென்னுமாறு
பொருளின்றிரள்புகலி நாதன் - இருள்புகுதுங்
கண்டத்தானென்பாரைக் காதலித்துக்கைதொழுவார்க்
கண்டத்தார்தாமா ரதற்கு. (௨)

(கட்டளைக்கலித்துறை.)

ஆரணநான்கிற்கு மப்பாலவனறி யத்துணிந்த
நாரணனுன்முக னுக்கரியானடு வாய்நிறைந்த
பூரணனெந்தை புகலிப்பிரான் பொழிலத்தனைக்குங்
காரணனந்தக் கரணங்கடந்த கருப்பொருளே. ௩)

(இணைக்குறளாசிரியப்பா.)

கருமுதற்றொடங்கிப் பெருநாளெல்லாம்
காமம்வெகுளி கழிபெரும்பொய்யெனும்
தூய்மையில்குப்பை தொலைவின்றிக்கிடந்ததை
அரிதினிகழ்ந்து போக்கிப்பொருதிறன்
மையிருணிறத்து மதமுடையடுசினத்
தைவகைக்கடாவும் யாப்பவிழ்த்தகற்றி
அன்புகொடுமெழுகி யருள்விளக்கேற்றித்
துன்பவிருளைத் துறந்துமுன்புற
மெய்யெனும்விதானம் விரித்துநொய்ய
கீழ்மையிற்றொடர்ந்து கிடந்தவென்சிந்தைப்
பாழறையுனக்குப் பள்ளியறையாக்கிச்
சிந்தைத்தாமரைச் செழுமலர்ப்பூந்தவி
செந்தைநீயிருக்க விட்டனனிந்த
நெடுநிலவளாகமு மடுகதிர்வானமும்
அடையப்பரந்த வாதிவெள்ளத்து
நுரையெனச்சிதறி யிருசுடர்மிதப்ப
வரைபறித்தியங்கு மாருதங்கடுப்ப
மாலும்பிரமனு முதலியவானவர்
காலமிதுவெனக் கலங்காநின்றுழி
மற்றவருய்யப் பற்றியபுணையாய்
மிகநனிமிதந்த புகலிநாயக
அருணனிசுரக்கும் பிரளயவிடங்கநின்
செல்வச்சிலம்பு மெல்லெனமிழற்ற
அமையாக்காட்சி யிமயக்
கொழுந்தையுமுடனே கொண்டிங்
கெழுந்தருளத்தகு மெம்பெருமானே. (௪)

வெண்பா.

மானுமழுவுந் திருமிடற்றில் வாழுமிரு
டானும்பிறையுமே தாங்கிநிற்கும்—வானவர்க்கு
வெள்ளத்தேதோன்றிக் கழுமலத்தேவீற்றிருந்தென்
உள்ளத்தேநின்ற வொளி. (௫)

கட்டளைக்கலித்துறை.

ஒளிவந்தவாபொய்மனத்திருணீங்கவென்னுள்ளவெள்ளம்
தெளிவந்தவாவந்துதித்தித்தவாசிந்தியாதவொரு
களிவந்தவாவன்புகைவந்தவாகடைசாரமையத்
தெளிவந்தவாநங்கழுமலவாணர்தம்மின்னருளே. (௬)

இணைக்குறளாசிரியப்பா.

அருள்பழுத்தளிந்த கருணைவான்கனி
ஆராவின்பத் தீராக்காதல்
அடியவர்க்கமிர்த வாரிநெடுநிலை
மாடக்கோபுரத் தாடகக்குடுமி
மழைவயிறுகிழிக்குங் கழுமலவாணநின்
வழுவாக்காட்சி முதிராவிளமுலைப்
பாவையுடனிருந்த பரமயோகி
யாரென்றுணர்த்துவ னெந்தைமேனாள்
அகிலலோகமு மனந்தயோனியும்
நிகிலமுந்தோன்ற நீநினைந்தநாளொடங்கி
எனைப்பலயோனியு மினைப்பரும்பேதத்
தியாரும்யாவையு மெனக்குத்தனித்தனித்
தாயராகியுந் தந்தையராகியும்
வந்திலாதவ ரில்லையானவர்
தந்தையராகியுந் தாயாராகியும்
வந்திராதது மில்லைமுந்து
பிறவாநிலனு மில்லையவ்வயின்
இறவாநிலனு மில்லைபிறிதில்
எனைத்தினுவுயிர்களு மில்லையானவை
தமைத்தினுதொழிந்தது மில்லையனைத்தே
காலமுஞ்சென்ற தியானிதன்மேலினி
இளைக்குமா றிலனேநாயேன்
அந்தரச்சோதிநின் னஞ்செழுத்துநவிலும்
தந்திரம்பயின்றது மிலனேதந்திரம்
பயின்றவர்ப்பயின்றது மிலனேயாயினும்
இயன்றதோர்பொழுதி னிட்டதுமலராச்
சொன்னதுமந்திர மாகவென்னையும்

இடர்ப்பிறப்பிறப்பெனு மிரண்டின்
கடற்படாவகை காத்தனின்கடனே. (எ)

வெண்பா.

கடலானகாமத்தே காழுழ்வர்துன்பம்
அடலாமுபாயமறியார் - உடலாம்
முழுமலத்தையோர்கிலார் முக்கட்பெருமான்
கழுமலத்தைக் கைதொழாதார். (அ)

கட்டளைக்கலித்துறை.

தொழுவாளிவள்வளைதோற்பாளிவளிடர்க்கேயலர்கொண்
டெழுவாளெழுகின்றதென்செயவோவென்மனத்திருந்துங்
கழுவாமணியைக்கழுமலவாணனைக்கையினிற்கொள்
மழுவாளனைக்கண்டுவந்ததென்றூலொர்வசையில்லையே. (கூ)

இணைக்குறளாசிரியப்பா.

வசையில்காட்சி யிசைநனிவிளங்க
மூன்றணிகழ்ந்த பன்னீருகத்து
வேறுவேறுபெயரி னூறின்றியன்ற
மையறுசிறப்பிற் றெய்வத்தன்மைப்
புகலிநாயக விகல்விடைப்பாக
அமைநாண்மென்றோ ளுமையாள்கொழுந
குன்றுகுனிவித்து வன்றோளவுணர்
மூவெயிலெரித்த சேவகத்தேவ
இளநிலாமுகிழ்க்கும் வளர்சடைக்கடவுணின்
நெற்றியிற்சிறந்த வொற்றைநாட்டத்துக்
காமனைவிழித்த மாமுதுதலைவ
வானவரறியா வாதியானே
* கல்லாவுளத்திற் புல்லறிவுதொடர
மறந்துநோக்கும் வெறுந்தண்ணுட்டத்துக்
காண்டொறுங்காண்டொறு மெல்லாம்யாண்டை
யாயினும்பிறவு மென்னதும்பிறரதும்
ஆவனபலவு மழிவனபலவும்
போவதும்வருவது நிகழ்வதுமாகித்
தெண்ணீர்ஞாலத்துத் திரண்டமணலினும்
எண்ணில்கோடி யெனைப்பலவாகி
இல்லனவுளவா யுள்ளனகாணுப்
பன்னாளிருள்வயிற் பட்டேனன்னதும்
அன்னதாதலி னடுக்குமதென்னெனின்
கட்புலன்றெரியாது கொட்புறுமொருவற்குக்
குழிவழியாகி வழிகுழியாகி

---

* சடமாகிய வுடம்பெனக்கொண்டு, கல்லாவுடம்பெனவும் பாடமோதுவர்.

ஒழிவின்றொன்றி னொன்றுதடுமாறி
வந்தாற்போல வந்ததெந்தைநின்
திருவளர்நாட்டக் கருணையிற்பெறலும்
யாவையுமெனக்குப் பொய்யெனத்தோன்றி
மேவருநீயே மெய்யெனத்தோன்றினை
ஓவியப்புலவன் சாயல்பெறவெழுதிய
சிற்பவிகற்ப மெல்லாமொன்றில்
தவிராதுதடவினர் தமக்குச்
சுவராய்த்தோன்றுந் துணிவுபோன்றனவே. (௧0)

வெண்பா.

எனவேயெழுந்தாளென் செய்கிற்பாளின்னம்
சினவேறுகாட்டு தியொன்னு - மினவேகப்
பாம்புகலியாகிமிரும் பன்னுச்சடைமுடிநம்
பூம்புகலியாணிதழிப் போது. (௧௧)

கட்டளைக்கலித்துறை.

போதும்பெறாவிடிற்பச்சிலையுண்டுபுனலுண்டெங்கும்
ஏதும்பெறாவிடினெஞ்சுண்டின்றேயிணையாகச்செப்பும்
சூதும்பெறாமுலைப்பங்கர்தென்றோணிபுரேசர்வண்டின்
தாதும்பெறாதவடித்தாமரைசென்றுசார்வதற்கே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமல மும்மணிக்கோவை

முற்றிற்று.

கணபதிதுணை.

௩-வது திருவிடைமருதூர்

மும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

இணைக்குறளாசிரியப்பா.

தெய்வத் தாமரைச் செவ்விதின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து
கூற்றி னுற்றன் மாற்றிப் போற்றாது
வலம்புரி நெடுமா லேனமாய் நிலம்புக்
காற்றலி னகழ்த் தோற்றாது நிமிர்ந்து
பத்தி யடியவர் பச்சிலை யிடினு
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபாற் றிருவடி யகஞ்சேர்ந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யிற் றோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினு நொந்து தேவர்
மடவரன் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியு மனிச்சமு மெஞ்ச வெஞ்சாத்
திருவொடும் பொலியு மொருபாற் றிருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்க மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறத்துப்
பொலிந்துள தொருபாற் றிருவிடை யிலங்கொளி
யரத்த வாடை விரித்து மீதுறீஇ
யிரங்குமணி மேகலை யொருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகு மொருபாற் றிருவிடை
செங்க ணரவும் பைங்க ணாமையுங்
கேழற் கோடும் வீழ்திர ளக்கு
துடங்கு நூலு மிடங் கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
வொளியுடன் றிகழு மொருபா லாகம்
வாரும் வடமு மேர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்கும மெழுதிப்
பொற்றா மரையின் முற்றா முகிழென
வுலகே ழீன்று நிலையிற் றளரா

மூலையுடன் பொலியு மொருபா லாக
மயில்வா யரவம் வயின்வயி னணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவுந்
தமருகப் பறையு * மமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபாற் றிருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய வாடகக் கழங்குட
னெம்மென் பந்து மம்மென் கிள்ளையுந்
தரித்தே திகழு மொருபாற் றிருக்கர
மிரவியு மெரியும் விரவிய வெம்மையி
னொருபால் விளங்குந் திருநெடு நாட்ட
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டு நீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்
றெம்மனோர்க் கடுத்த † மம்மர்க் கிரங்கி
யுலகேழ் புரக்கு மொருபா லுட்ட
நொச்சிப் பூவும் பச்சை மத்தமுங்
கொன்றைப் போது மென்றுணர்த் தும்பையுங்
கங்கை யாறும் பைங்கட் டலையு
மரவு மதியமும் விரவித் தொடுத்துச்
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பானிற வண்ணங்
காணு வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே யொருபாற் றிருமுடி
•பேணிய
கடவுட் கற்பின் மடவரன் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வமாலை
நீலக் குழன்மிசை வளைஇ மேனிவந்து
வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவுடன் பொலியு மொருபாற் றிருமுடி
யினைய வண்ணத்து நினைவருங் காட்சி
யிருவயி னுருவு மொரு வயிற் றாகி
வலப்பா லுட்ட மிடப்பா னோக்க
வாணுதல் பாக நாணுதல் செய்ய
வலப்பாற் றிருக்கர மிடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலக மேழும் பன்முறை யீன்று

* இனையனதாங்கி எனவும்பாடம். † வெம்மைநோய்க்கிரங்கி எனவும்பாடம்.

மருதிடங் கொண்ட வொருதனிக் கடவுளின்
திருவடி பரவுதும் யாமே நெடுநா
ளிறந்தும் பிறந்து மிளைத்தன மறந்துஞ்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே, (க)

நேரிசைவெண்பா.

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளு மறிவு மனைத்து-மொருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். (உ)

கட்டளைக்கலித்துறை.

வருந்தே னிறந்தும் பிறந்து மயக்கும் புலன் வழிபோய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றி லாசையின்றி
யிருந்தே னினிச்சென் றிரவே னொருவரை யாதொன்றுமே. (ங)

நேரிசையாசிரியப்பா.

ஒன்றினொ டொன்று சென்றுமுகி றடவி
யாடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
வோவநூற் செம்மைப் பூவியல்வீதி
குயிலென மொழியு மயிலியற் சாயன்
மான்மாற விழிக்கு மானூர் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த வெந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்ற
லாரணந் தொடராப் பூரண புராண
நாரண னறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி யாதித் தனிப்பொரு
ளேக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியிற்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழீஇத்
தோற்றும் பொழுதி னீற்றுத் துன்பத்
தியாயுறு துயரமு மியானுறு துயரமு
மிறக்கும் பொழுதி னறப்பெருந் துன்பமு
நீயல தறிகுநர் யாரோ யதனால்
யா னினிப் பிறத்த லாற்றே னஃதான்
றற்பவந் துடைத்த னிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியி னில்லையந் நெறிக்கு

வேண்டலும் வெறுத்தலு மாண்டொன்றிற் படரா
வுள்ளமொன் றுடைமை வேண்டு மஃதன்றி
யைம்புல னேவ லாணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையு
மிதுவென துள்ள மாதலி னிதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙன முன்னங்
கற்புணை யாகக் கடனீர் நீந்தின
ரொற்பிற ருளரோ விறைவ கற்பங்
கடத்தல் யான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைத்தல் யான்பெறவும் வேண்டு நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டு நஞ்சுபொதி
யுறையெயிற் றரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுதலோயே. (ச)

நேரிசைவெண்பா.

கண்ணென்று நந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கு
மெண்ணென்று மூல வெழுத்தென்று—மொண்ணே
மருதவப்பா வென்றமுனே வாழ்த்தாரோன் மற்றுங்
கருதவப்பா லுண்டோ கதி. (ரு)

கட்டளைக்கலித்துறை.

கதியா வதுபிறி தியாதொன்று மில்லைகளே பரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப் போமிது போனபின்னர்
விதியா மெனச்சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே. (சு)

இணைக்குறளாசிரியப்பா.

வாழ்ந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க்கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
யவியடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
யாரா வுண்டி யயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனு மொழுக்கமுங் கல்வியுந்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் னேவல் கேட்குஞ்
சிறாஅர்த் தொகுதியி னுறாஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்று
மெய்யு மானமு மேன்மையு மொரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய வந்நிலைச்

சாவுழிச் சாஅந் தகைய ளாயினு
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோ ளொருத்தி யுண்டிவேட் டிருட்
வெள்ளுக் கெண்ணைபோ லத்தள் ளாது
பொருளி னளவைக்குப் போகம்விற் றுண்ணு
மருளின் மடந்தைய ராகந் தோய்ந்து
மாற்றல் செல்லாது வேற்றோர் மனைவயிற்
கற்புடை மடந்தையர் பொற்பு நனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியு
நச்சி வந்த நல்கூர் மாந்தர் தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியி
னகமலர்ந் திவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுத லின்றி
நாளு நாளு * நாள்பல கழித்தவர்
தாளி னாற்றலுந் தவிர்த்துத் கேளிசழ்ந்
திகழும் பாமு மில்லை யென்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னி னனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையு மொருவ ராக வுன்னு
மேனையோர் வாழ்வும் வாழ்க்கையு நினைமலர்ந்
தியோசனை கமழு முப்பல வாவியிற்
பாசடைப் பரப்பிற் பானிற வன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியு
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக
பத்தருக் கெய்ப்பில் வைப்பென வுதவு
முத்தித் தாள மூவா முதல்வ நின்
றிருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களு மனைவியு மொக்கலுந் திருவும்
பொருளென நினையாதுன் னருளினை நினைந்
திந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தன ரொதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவண
மறுதற் கிளொடு பெறுவது புனைந்து
† சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரொனி னிலையினின் றயின்று

* நாள்பல குறித்தவர் என்றும்பாடம். † சிதவல்-பழுதுபட்ட.

படுதனைப் பாயலிற் பள்ளிமேவி
யோவாத் தகவெனு மரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயி ரனைத்தையு மொக்கப்
பார்க்குநின்
செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கி னுற்றநா யேற்குக்
குளப்படி நீரு மளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியு * மிருவகைப் பொருளு
மொப்பினு மொவ்வாத் துப்பிற் றூதலி
னின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை யேவலென் னுய்த்தலை யேற்றுக்
கண்டது காணி னல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே, (எ)

நேரிசைவெண்பா.

பிறிந்தே னரசம் பிறவாத வண்ண
மறிந்தே னனங்கவே ளம்பிற் - செறிந்த
பொருதவட்ட விற்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருத வட்டந் தன்னுளே வந்து. (அ)

கட்டளைக்கலித்துறை.

வந்திக்கண் டாயடி யாரைக்கண் டான்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாயரன் செம்பொற் கழறிரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயினமன்றமர் தாங்கொடுபோ
யுந்திக்கண் டாய்நிரை யத்துன்னை வீழ்த்தி யுழக்குவரே. (கூ)

இணைக்குறளாசிரியப்பா,

உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
கழப்பின் வாராக் கையறவுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற வகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலு
மார்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி யஞ்சினுக் கஞ்சியுட்சென்று

* மிருவயிற்பேதமும் எனவும்பாடம்.

சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை யிளந்தளிர் காட்ட வருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையி னோங்கி
மெய்ம்மயிர் புளக முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீ ரரும்பிக் கடிமலர் மலர்ந்து
புண்ணிய
வஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளிரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
யறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர.
வெம்மனோர்க ளினிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலரிதின் வராது
மனமெனும் புனத்தை வறும் பாழாக்கிக்
காமக்காடுமூடித் தீமைசெய்
யைம்புலவேட ராறலைத்தொழுக
வின்பப் பேய்த்தேரொட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வா யலமர
விச்சைவித் துதிர்த்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமர நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கு முதவா
திமைப்பிற் கழியு மியற்கையோ ருடைத்தே. (௧௦)

நேரிசைவெண்பா.

உடைமணியி னோசைக் கொதுங்கி யரவம்
படமொடுங்கப் பையவே சென்றங் — கிடைமருத
னையம் புகுவ தணியிழையார் மேலனங்கன்
கையம் புக வேண்டிக் காண். (௧௧)

கட்டளைக்கலித்துறை.

காணீர் கதியொன்றுங் கல்லீரொழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதனநீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப்பிரான்கழன் மேவுதற்கே. (கஉ)

இணைக்குறளாசிரியப்பா.

மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூறும் புழுவி னொழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட்
பிரி யாதொறுக்கும் பிணியோ * தெரிதரல்
இன்ன தியானென் றறியே னென்னை
யேதினுந் தேடினன் யாதினுங் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தையழ லூட்டிக்
கண் படையாகக் காமனை யொருநா
ளுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா வமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
யிருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயி லெறிப்ப
வெண்ணருங் கோடி யிருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
றெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கிழித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றபின்

னின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலு
மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே
னின்னிலை யனைத்தினுங் கண்டே னென்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணுத் தன்மை யோரே. (௧௩)

நேரிசைவெண்பா.

ஓராதே யஞ்செழுத்து முன்னுதே பச்சிலையு
நேராதே நீறு நிரப்பாதே - யாராயோ
வெண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாத
நண்ணுவா மென்னு மது நாம். (௧௪)

கட்டளைக்கலித்துறை.

நாமே யிடையுள்ள வாறறிவாமினி நாங்கள்சொல்ல
லாமே மருதன் மருதவனத்தன்ன மன்னவரைப்
பூமேலணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ளைப்பாரமேற்றுத றக்கதன்றே. (௧௫)

நேரிசையாசிரியப்பா.

அன்றினர் புரங்க ளழலிடை யவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றவ
னுண்பொடி யணிந்த வெண்கோட் செல்வ
கயிலைநடந் தனைய வுயர்நிலை தோன்றாட்
பிறைசெறித் தன்ன விருகோட் டொருதிமிற்
பானிறச் செங்கண் மால்விடைப் பாகு
சிமயச் செங்கோட் டிமயச் செல்வன்
மணியெனப் பெற்ற வணியிய லன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசு மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வைய மேழும் பன்முறை யீன்ற
வைய திருவயிற் றம்மை பிராட்டி
மறப்பருஞ் செய்கை யறப்பெருஞ் செல்வி
யெமையா ளுடைய வுமையா ணங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பனிக்கைபோந் தனைய
தழைசெவி யெண்டோட் டலைவன் றந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை

மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றாதை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினை
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
விறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்று வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ தொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்று கண்ணகன்று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறுமி
வானுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
வடிபெயர்த் திடுவா னொருவ
னடிது வருந்துத னிழற்றீங் கன்றே. (௧௬)

நேரிசைவெண்பா.

அன்றென்று மாமென்று மாறுசம யங்க
ளொன்றென்றொன் றோடொவ்வா துரைத்தாலு - மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
மருதனையே நோக்கி வரும். (௧௭)

கட்டளைக்கலித்துறை.

நோக்கிற்றுக் காம னுடல்பொடி யாக நுதிவிரலாற்
றாக்கிற்றரக்கன் றலைகிழ்ப் படத்தன் சுடர்வடிவா
ளாக்கிற்றுத்தக்கன் றலையுருண் டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயிர்பொன்னி சூழ்மருதானுடைப் புண்ணியமே.

நேரிசையாசிரியப்பா.

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணிவேய்ந்த கைலை நாயக
காளகண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந

பூத நாத பொருவிடைப் பாக
வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமற் காத்தருள் புரியுந்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவருங்
காடு மலையும் புக்குக் கோடையிற்
கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி
யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளினு
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து
முடையைத் துறந்து முண்ணா துழன்றுங்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படைகொண்டுந்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரீங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம்
பழுதின் றுயர்ந்த வெழுநிலை மாடத்துஞ்
செந்தா துதிர்ந்த நந்தா வனத்துந்
தென்ற லியங்கு முன்றி லகத்துந்
தாண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையினு
மயிற் பெடையாலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி யாண்டாண் டிட்ட
மருப்பி னியன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டின் மீமிசைப் படுத்த
வைவகை யமளி யணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதனுண் பஞ்சி
னெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்

பாயன் மீது பரிபுர மிழற்றச்
சாயல னத்தின் றளர்நடை பயிற்றிப்
பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென
வம்மென் குறங்கி னம்மென் கலிங்கங்
கண்ணு மனமுங் கவற்றிப் பண்வர
விரங்குமணி மேகலை யொருங்குடன் கிடந்த
வாடர வல்கு லரும்பெற னுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிப்ப
வணியியல் கமுகை யலங்கரித் ததுபோன்
மணியிய லாரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கு மணிகெழு மென்றோள்
வரித்த சாந்தின் மிசைவிரித் திட்ட
வுத்தரி யப்பட் டொருபா லொளிதர
வள்ளை வாட்டிய வொள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரள நிரைத்தாங்
கொழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலுங் காம பாணமு
மால காலமு மனைத்துமிட் டமைத்த
விரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழன்மிசைப் பொலியு
மஞ்சொன் மடந்தைய ராகந் தோய்ந்துஞ்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்து
மறுசுவை யடிசில்வறி திருந்தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்துந்
தூசி னல்லன தொடையிற் சேர்த்தியு
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலு மனமகிழ்ந் தோங்கி
யிவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திரவெழுத் தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வவத் திற
நின்னது பெருமை யன்றோ வென்னின்
வல்லா னொருவன் கைம்முயன் றெறியினு
மாட்டா வொருவன் வாளா வெறியினு
நிலத்தின் வழாஅக் கல்லே போ
னலத்தின் வழார்நின் னுமைநவின் றோரே. (கசு)

நேரிசைவெண்பா.

காமநவிற் றுய்மனனே நாரியர்கடோ டோய்ந்து
காமநவிற்றிக் கழிந் தொழிய - லாமோ
பொருத வனத்தானையுரி போர்த்தருளு மெங்கண்
மருத வனத் தானை வளைந்து. (௨௦)

கட்டளைக்கலித்துறை

வளையார்பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார்தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார்நரகினுக் கென்கடவார்பொன் னலர்ந்தகொன்றைத்
தலையானிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. (௨௧)

அடிசார்ந் தவர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மின்றிக்
கால மூன்றுங் கடந்த கடவு
ளுள்க்கணுக் கல்லா தூன் கணுக்கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதிச் சுடரொளி
யெறுப்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறித் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேற
றுண்டத் துளையிற் பண்டைவழி யன்றி
யறிவி னுறு நறிய நாற்ற
மேனைய தன்மையு மெய்தா தெவற்றையுந்
தானே யாகி நின்ற * தற்பர
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதிற் றோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினு
மிருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியு மிருவருந் தொடர்ந்து நின்றலமர
மருதிடங் கொண்ட மருத மாணிக்க
வுமையாள் கொழுந வொருமூன் றாகிய
விமையா நாட்டத் தென்றனி நாயக
வடியே னுறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கன்மனக்கயவ ரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை யீர்ப்பக்
கருப்பா சயமெனு மிருட்சிறை யறையிற்
குடரென் சங்கிலி பூண்டு தொடர்ப் பட்டுக்

* தத்துவ என்றும் பாடம்.

கூட்டுச் சிறைப் புழுவி னீட்டுமலத்தழுந்தி
யுடனே வருந்தி நெடுநாட்கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்துந்
தண்டலுளர் மிண்டி வந் தலைப்ப
வுதரநெருப்பிற் பதை பதை பதைத்தும்
வாதமத் திகையி ன் மோதமொத் துண்டுங்
கிடத்த னிற்ற னடத்தல் செல்லா
திடங்குறை வாயிலின் முடங்கி யிருந்துழிப்
பாவப் பகுதியி லிட்டுக் காவற்
கொடியோ னைவரை யேவி நெடிய
வாசைத் தளையி லென்னையு முடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
*பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியு
மைவருங் கடுப்ப வவாவது கூட்டி
யீண்டின கொண்டு மீண்டு வந்துழி
யிட்டுழி யிடாது பட்டுழிப் படாஅ
தின்னா விடுக்க ணெய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடு நெறிகாணே
னின்னை யடைந்த வடியா ரடியார்க்
கென்னையு மடிமை யாகக் கொண்டே
யிட்ட பச்சிலைகொண் டொட்டி யறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டுந்
தீத்திரண் டன்ன செஞ்சடையோனே. (உஉ)

நேரிசைவெண்பா.

சடைமே லொருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமே லொருத்தி பொலிய - ‡ விடையேபோய்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே யிருக்க விவள். (உ௩)

கட்டளைக்கலித்துறை.

இருக்கு மருதினுக் குள்ளிமையோர்களு நான்மறையு
நெருக்கு நெருக்கத்து நீளகத்துச்சென்று மீளவொட்டாத்

* பசியாலுழன்றும் என்றும் பாடம். ‡ இடைபுக்கு என்றும் பாடம்.

திருக்குமறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை
யொருக்குமொருக்கத்தி னுள்ளே முளைக்கின்ற வொண்சுடரோ. ()

நேரிசையாசிரியப்பா.

சுடர்விடு சூலப் படையினை யென்றும்
விடையுகந் தேறிய விமல வென்று
முண்ணா நஞ்ச முண்டனை யென்றுங்
கண்ணாற்காமனைக்காய்ந்தனையென்றுந்
திரிபுர மெரித்த சேவக வென்றுங்
கரியுரி போர்த்த கடவு ளென்று
முரகம் பூண்ட வுரவோ யென்றுஞ்
சிரகஞ் செந்தழ லேந்தினை யென்றும்
வலந்தரு காலனை வதைத்தனை யென்றுஞ்
சலந்தர னுடலந் தடிந்தனை யென்று
மயன்சிர மொருநா ளரிந்தனை யென்றும்
வியந்தவா ளரக்கனை மிதித்தனை யென்றுந்
தக்கன் வேள்வி தகர்த்தனை யென்று
முக்கிரப் புலியுரி யுடுத்தனை யென்று
மேனமு மன்னமு மெட்டா தலமர
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை யென்றுஞ்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயி ருண்ணா
மழல்விழிக் குறளை யழுக்கினை யென்று
மினையன வினையன வெண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்த
றுளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலி
னளப்பரும் பெருமைநின் னளவல தாயினு
† மொன்றி னேயாப் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவ னாதலி னென்னை
யிடுக்கண் களையா வல்லற் படுத்தா
தெழுநிலை மாடத்துச் செழுமுகி லுறங்க
வடித்துத்தட்டி யெழுப்புவ போல
நுண்டுகிற் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலி னீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுட
ரருள்சுரந் தளிக்கு மற்புதக் கூத்த
கல்லா னெறிந்த பொல்லாப் புத்த
னின் னினைந் தெறிந்த வதனா
லன்னவன் றனக்கு மருள்பிழைத் தின்றே. (௨௫)

---

§ என்றன்வாயிற் புன்மொழி என்றும் பாடம்.

நேரிசைவெண்பா.

இன்றிருந்து நாளை யிறக்குந் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ - வென்றிமழு
வாளுடையான் றெய்வ மருதுடையா ளுயேனை
யாளுடையான் செம்பொ னடி. (௨௬)

கட்டளைக்கலித்துறை

அடியாயிரந்தொழி லாயிரவாயிர மாயிரம் பேர்
முடியா யிரங்கண் கண்மூவாயிரமுற்று நீறணிந்த
தொடியா யிரங்கொண்ட தோளிரண்டாயிர மென்னுநெஞ்சே
படியாயிராப்பகற் றென்மருதாளியைப் பற்றிக்கொண்டே.

இணைக்குறளாசிரியப்பா.

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத்தீர்த்தம் புரக்கும் பொன்னி
யயிரா வணத்துறை யாடு மப்ப
கைலாய வாண கௌரி நாயக
* நின்னைவணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்குங் குமர வேளுஞ்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாருகற் செற்ற வீரக்கன்னியும்
நாவின் கிழத்தியு பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரு
மாணப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் சேந்தீக் கடவுளு
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ணன்கும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனு
மெட்டு நாகமு மட்ட வசுக்களு

* நின்னருள்சுரந்து பொன்னடிபணிந்து எனவும் பாடம்.

மூன்றுகோடி யான்ற முனி வரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் றானுந்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியருந்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையு
மத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடினவென்று படாம்பல் வளித்துங்
குவளைப் புனலிற் றவளைய ரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடுமொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்கவேண்டுமென் றடுத்தடுத்திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக்கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துஞ்
சாம்பவிழ்த் துதிர்ந்த சனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரு
மினைய தன்மைய ரெண்ணிறந் தோர்க
ளனைவரு கிற்க யானு மொருவன்
பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையே
னின்னை
யிறைஞ்சில னாயினு மேத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினுங்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னல கனைத்து நன்மை தீமை

யானவை நின்செய லாதலி
ஞனே யமையு நலமில் வழிக்கே. (௨௮)

நேரிசைவெண்பா.

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்க ளெல்லாம் - பொழில்சூழ்
மருதிடத்தா னென்றொருகால் வாய்கூப்ப வேண்டா
கருதிடத்தா நில்லா கரந்து. (௨௯)

கட்டளைக்கலித்துறை.

கரத்தினன் மாலவன் கண்கொண்டுநின்கழல் போற்றநல்ல
வரத்தினையீயு மருதவப்பாமதி யொன்றுமில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையுளாகிவெண் காடனென்னுந்
தரத்தினுமாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே. (௩0)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

முற்றிற்று.

கணபதிதுணை.

௪-வது. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப் புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனென்பணி கொள்ளுதியோகச்சியேகம்பனே. (௧)

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
போகம்பன்னாளுங்கொடுக்கின்ற நாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னாரமெனப்பொலிவுற்றுநன்னீறணியும்
ஆகம்பொன்மாமலையொப்பவனேயென்பனாதரித்தே. (௨)

தரித்தேன்மனத்துன்றிகழ்தருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
யரித்தேனுனைப்பணியாதவரேழைமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிபூணத்தெளிந்தனனே. (௩)

தெளிதருகின்றதுசென்றென்மனநின்றிருவடிவம்
அளிதருநின்னருட்கையமினியிலையந்திச்செக்கர்
ஒளிதருமேனியெம்மேகம்பனேயென்றுகந்தவர்தாள்
தளிதருதூளியென்றன்றலைமேல்வைத்ததன்மைபெற்றே. (௪)

பெற்றுகந்தேனென்றுமர்ச்சனைசெய்யப்பெருகுநின்சீர்
கற்றுகந்தேனென்கருத்தினிதாக்கச்சியேகம்பத்தின்
பற்றுகந்தேறுமுகந்தவனேபடர்நாகக்கச்சின்
சுற்றுகந்தேர்விடைமேல்வருவாய்நின்றுணையடியே. (௫)

அடிநின்றசூழலகோசரமாலுக்கயற்கலரின்
முடிநின்றசூண்முடிகாண்பரிதாயிற்றுக்கார்முகிலின்
இடிநின்றசூழ்குரலேறுடையேகம்பயாமெங்ஙனே
வடிநின்றசூலப்படையுடையாயைவணங்குவதே. (௬)

வணக்கந்தலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றோரிணக்கறிவோமல்லம்வல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்கச்சியேகம்பம்பாடினல்லாற்
கணக்கன்றுமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. (௭)

நலந்தரநாளென்றுசொல்லுவன்கேண்மினல்லீர்களன்பு
கலந்தரனார்கச்சியேகம்பங்கண்டுகனற்றிகிரி
சலந்தரனாகமொழிக்கவைத்தாய்தக்கன்வேள்வியெல்லா
நிரந்தரமாகச்செய்தாயென்றுபூசித்துநின்மின்களே. (௮)

மின்களென்றார்சடைகொண்டலென்றார்கண்டமேனிவண்ணம்
பொன்களென்றார்வெளிப்பாடுதம்பொன்னடிபூண்டுகொண்ட
வென்களென்றாலும்பிரிந்தறியார்கச்சியேகம்பத்தான்
றன்களென்றாருலகெல்லாநிலைபெற்றதன்மைகளே. (கூ)

தன்மையிற்குன்றாத்தவத்தோரிமையவர்தாம்வணங்கும்
வன்மையிற்குன்றாமதிற்கச்சியேகம்பர்வண்கயிலைப்
பொன்மயிற்சாயலுஞ்சேயரிக்கண்ணும்புரிகுழலும்
மென்மையிற்சாயுமருங்குலுங்காதல்விளைத்தனவே. (க0)

தனமிட்டுமைதழுவத்தழும்புற்றவர்தம்மடியார்
மனம்விட்டகலாமதிற்கச்சியேகம்பர்வான்கயிலைச்
சினம்விட்டகலாக்களிறுவினவியோர்சேயனையார்
புனம்விட்டகலார்பகலாம்பொழுதுநம்பூங்கொடியே. (கக)

பூங்கொத்திருந்தழையார்பொழிற்கச்சியேகம்பர்பொற்பார்
கோங்கத்திருந்தகுடுமிக்கயிலையெம்பொன்னொருத்தி
பாங்கொத்திருந்தனையாரணங்கேபடர்கல்லருவி
யாங்கத்திருந்திழையாடிவந்தாற்கண்டடிவருத்தே. (கஉ)

வருத்தந்தருமெய்யுங்கையிற்றழையும்வன்மாவினவுங்
கருத்தந்தரிக்குநடக்கவின்றையகழனிணையத்
திருத்தந்தருளுந்திகழ்கச்சியேகம்பர்சீர்க்கயிலைத்
* துருத்தந்திருப்பதன்றிப்புனங்காக்குந்தொழிலெமக்கே. (கங)

எம்மையுமெம்மைப்பணிகொள்ளுங்கம்பமொழிற்கயிலை
யும்மையுமானிடமிப்புனத்தேவிட்டுவந்தமைந்தர்
தம்மையுமானையுஞ்சிந்தையுநோக்கங்கவர்வவென்றோ
வம்மையுமம்மலர்க்கண்ணும்பெரியீரருளுமினே. (கச)

அருளைத்தருகம்பரம்பொற்கயிலையுளெம்மையரம்
பிருளைக்கரிமறிக்கும்மிவரையருறுத்தியெய்ய
வெருளக்கலைகணைதன்னொடும்போயினவில்லிமைக்கு
மருளைத்தருசொல்லியெங்கோவிலையுண்டிவ்வையகத்தே. (கரு)

வையார்மழுப்படையேகம்பரீங்கோய்மலைப்புனத்து
ஐயார்வருகலையேனங்கரிதொடர்வேட்டையெல்லாம்
பொய்யானவையர்மனத்தவெம்பூங்கொடிகொங்கைபொருப்
பையாரரவிடையாயிற்றுவந்துபரிணமித்தே. (கசு)

பருமுத்துதிர்த்திடுஞ்சீர்மத்தயானைநுதல்பகுந்திட்
டுருமொத்ததிண்குரற்சீயந்திரிநெறியோங்குவைவாய்ப்
பொருமுத்தலைவேற்படைக்கம்பர்பூங்கயிலைப்புனத்துட்
டருமுத்தனநகைத்தன்னசையால்வெற்பசார்வரிதே. (கஎ)

---

* துரு—ஆராய்ச்சி, முதனிலைத்தொழிற்பெயர்.

அரிதன்றிருக்கண்ணிடந்திரம்பாயிரம்போதணிய
அரிதன்றிருவடிக்கர்ச்சித்தகண்ணனுக்கருளுகம்பர்
அரிதன்றிருக்கங்குலியாலழிந்தகயிலையல்லிங்
கரிதென்றிருப்பதெம்பால்வெற்பவெம்மையர்க்கஞ்சுதுமே. (கஅ)

அஞ்சரத்தான்பொடியாய்விழத்தீவிழித்தன்புசெய்வோர்
நெஞ்சரத்தாழ்வுகந்தோர்கச்சியேகம்பர்நீள்கயிலைக்
குஞ்சரத்தாழ்வரைவீழநுங்கொம்புய்யக்கும்பமுழ
வெஞ்சரத்தாரனவோவல்லவோவிவ்வியன்முரசே. (கக)

செய்தந்தைசம்மையுமைகணவன்றிருவேகம்பத்தான்
றுய்தந்தையாயுயிர்காப்போன்கயிலைத்தயங்கிருள்வாய்
வெய்தந்ததோளிநம்மூசலொடும்விளைவேங்கைதன்னைப்
பாய்தந்தூசலுண்டாங்கொண்டதோசைப்பகடுவந்தே. (உ0)

வந்துமணம்பெறிற்பொன்னனையீர்மன்னுமேகம்பர்தம்
முந்துமருவிக்கயிலைமலையுயர்தேனிழிச்சித்
தந்துமலர்கொய்துந்தண்டினைமேயுங்கிளிகடிந்துஞ்
சிந்தும்புகர்மலைக்கச்சுமிச்சாரற்றிரிதவனே. (உக)

திரியப்புரமெய்தவேகம்பனார்திகழுங்கயிலைக்
கிரியக்குறவர்பருவத்திடுதாளம்வினையோம்
விரியச்சுருண்முதலானுமடைந்தோம்விரைவிரைந்து
பிரியக்கதிர்முத்தினீர்பெற்றதென்னங்குப்பேசுமினே. (உஉ)

பேசுகயாவருமைக்கணியாரொன்றுமித்தவொங்கும்
பூசுகையார்திருநீற்றெழிலேகம்பர்பொற்கயிலைத்
தேசுகையார்சிலைவெற்பன்பிரியும்பரிசிலராக்
கூசுகையாதுமில்லாக்குலவேங்கைப்பெயர்நும்மையே. (உ௩)

பெயராநலத்தெழிலேகம்பனார்பிறைதோய்கயிலைப்
பெயராதிருக்கப்பெறுகிளிகாள்புனமேபிரிவின்
றுயரால்வருத்திமனமுமிங்கோடித்தொழுதுசென்ற
தயராதுறையும்வெற்பற்கடியற்கும்விடைதமினே. (உ௪)

நம்மைப்பிறவிக்கடல்கடப்பிப்பவர்நாம்வணங்கு
மும்மைத்திருக்கண்முகத்தெழிலேகம்பர்மொய்கயிலை
யம்மைக்கருங்கண்ணிதன்னொடின்பந்தருந்தண்புனமே
யெம்மைக்கவலைசெயச்சொல்லியோவல்லியெய்தியதே (உரு)

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பரொழிற்கயிலைத்
தயங்குமலர்ப்பொழில்காடையலாடருவித்தடங்கா
முயங்குமணியறைகாண்மொழியீரொழியாதுநெஞ்ச
மயங்கும்பரிசுபொன்னார்சென்றசூழல்வகுத்தெமக்கே. (உசு)

வகுப்பாரிவர்போன் மணத்துக்குநாண்மணந் தன்னொடின்ப
மிகுப்பார்களாருயிரொன்றாமிருவரைவிள்ளக்கள்வாய்
நெகுப்பான்மலர்கொண்டுநின்றார்கிடக்கநிலாவுகம்பர்
தொகுப்பான்மணிசிந்தருவிக்கயிலையிச்சூழ்புனத்தே. (௨௭)

புனங்குழையாதென்று மென்றினைகொய்ததும்போகலுற்ற
கனங்குழையாடற்பிரியநமக்குறுங்கையறவால்
மனங்குழையாவருங்கண்கனிபண்பலபாடுந்தொண்டர்
இனங்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துள்ளே, (௨௮)

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானிடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்னும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. (௨௯)

அன்றும்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நின்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரேல்
என்றுமரசுமுரசும்பொலியாதிருநிலத்தே. (௩௰)

நிலத்திமையோரிற்றலையாப்பிறந்துமறையொடங்கம்
வலத்திமைப்போதும்பிரியாரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளேகம்பங்கூடித்தொழு
நலத்தமையாதவர்வேட்டுவர்தம்மினடுப்படையே. (௩௧)

படையாலுயிர்கொன்றுதின்றுபசுக்களைப்போலச்செல்லு
நடையாலறிவின்றிநாண்சிறிதின்றிநகுங்குலத்திற்
கடையாப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையா
ளுடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. (௩௨)

உத்துங்கயானையுரியார்விரலாலரக்கன்சென்னி
பத்துங்கையானவிருபதுஞ்சோர்தரவைத்திலங்கை
யொத்துங்கையாலவன்பாடக் * கயிலையுள்ளோர்நற்கைவா
ளொத்துங்கையானென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. (௩௩)

அம்பரங்காலனனீர்நிலந்திங்களருக்கனணு
வம்பரங்கொள்வதோர்வேழத்துரியவன்றன்னுருவா
மெம்பரன்கச்சியுளேகம்பத்தானிடையாதடைவா
னம்பரன்றன்னடியாரறிவார்க்குநறுந்துணையே. (௩௪)

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குறங்கும்
பணைத்தோளகலமுங்கண்டத்துநீலமுமண்டத்துமின்
பணைத்தாலனசடையுந்திருமுக்கணும்பெண்ணொர்பக்கத்
தணைத்தாரொழிற்கம்பரெங்கள்பிரானார்க்கழகியவே. (௩௫)

---

* கயிலைகைவாளொடு நாள, என்றும் பாடம்.

தருக்கவற்றான்மிக்கமுப்புரமெய்தயன்றன்றலையை
நெருக்கவற்றோடமழுவாள்விசைத்ததுநெற்களென்றும்
பருக்கவற்றாங்கச்சியேகம்பரத்தர்தம்பாம்புகளின்
றிருக்கயிற்றாலிட்டருளுங்கடகத்திருக்கரமே. (௪௫)

கரத்தத்தமருகத்தோசைகடுத்தண்டமீபிளப்ப
வரத்தத்தபாதநெரித்திட்டவனிதலநெரியத்
தரத்தத்திசைகளுக்கப்புறம்போர்ப்பச்சடைவிரித்து
வரத்தைத்தருகம்பராடுவொல்லியுமாநடமே (௪௬)

நடம்பிரானுகந்துய்யக்கொண்டானென்றுநன்மறையோ
ருடன்வந்துமூவாயிரவரிறைஞ்சிநிறைந்தவன்பின்
கடனன்றிமற்றறியாத்தில்லையம்பலங்காளத்தியா
மிடமெம்பிரான்கச்சியேகம்பமேயாற்கினியனவே. (௪௭)

இனியவரின்னாரவரையொப்பார்பிறரென்னவொண்ணாத்
தனியவர்தையலுடனாமுருவரம்பணித்த
முனியவொன்றுமுகந்தமுக்கண்ணவர்தண்டியன்புக்
கினியவர்காய்மழுவாட்படையார்கச்சியேகம்பரே. (௪௮)

பரவித்தனைநினையக்கச்சியேகம்பர்பண்ணுமையல்
வரவித்தனையுள்ளதெங்கறிந்தேன்முன்னவர்மகனார்
புரவித்தனையடிக்கக்கொடிதாய்விடியாவிரவி
லரவித்தனையுங்கொண்டார்மடவார்முன்றிலாட்டிடவே. (௪௯)

இடவஞ்சுறுக்கெனப்பாயுமஞ்சென்னிநகுதலைகண்
டிடவஞ்சுவர்மடவார்திரிகின்றனரேகம்பத்தீர்
படமஞ்சுவாயதுநாகமிளைக்குமதனுக்குமுற்
படவஞ்சுவரெங்ஙனேபலிவந்திடும்பாங்குகளே. (௫௦)

பாங்குடைக்கோட்புலியின்னதள் கொண்டிர்நும்பாரிடங்க
டாங்குடைகொள்ளப்பலிகொள்ளவந்தீர்தடங்கமலம்
பூங்குடைகொள்ளப்புனற்கச்சியேகம்பங்கோயில்கொண்டீ
ரீங்கிடைகொள்ளக்கலைகொள்ளவந்தீரிடைக்குமின்றே. (௫௧)

இடைக்குமின்றேற்குமிணைமுலையாய்முதியார்கடஞ்சொற்
கடைக்கணன்றாங்கச்சியேகம்பனையங்கொளக்கடவும்
விடைக்குமுன்றோற்றநில்லேனின்றினியிந்தமொய்குழலார்
கிடைக்குமுன்றோற்ற * நஞ்சங்கிதுவோதங்கிறித்துவமே. (௫௨)

கிறிபலபேசிச்சதிரானடந்துவிடங்குபடக்
குறிபலபாடிக்குளிர்கச்சியேகம்பனையங்கொள்ள
நெறிபலவார்குழலார்மெலிவுற்றநெடுந்தெருவிற்
செறிபலவெள்வளைபோயினதாயர்கடேடுவரோ. (௫௩)

---

* நெஞ்சங்கிதுவோ — என்றும் பாடம்.

தேடுற்றிலகள்ளநோக்கந்தெரிந்திலசொற்கண்முடி
கூடுற்றிலகுழல்கொங்கைபொடித்திலகூறுமிவண்
மாடுற்றிலமணியின்மடவல்குலுமற்றிவள்பா
ரூடுற்றிலவெழிலேகம்பனூர்க்குள்ளநல்கிடத்தே. (ருச)

நல்கும்புகழ்க்கடவூர்நன்மறையவனுய்யநண்ணிக்
கொல்கின்றகூற்றைக்குமைத்தவெங்கூற்றங்குளிர்திரைகண்
மல்குந்திருமறைக்காட்டமிர்தென்றுமலைமகடான்
புல்கும்பொழிற்கச்சியேகம்பமேவியபொன்மலையே. (ருரு)

மலையத்தகத்தியனர்ச்சிக்கமன்னிவடகயிலை
நிலையத்தமரர்தொழவிருந்தானெடுமேருவென்னுஞ்
சிலையத்தன்பைம்பொன்மதிற்றிருவேகம்பத்தான்றிகழ்நீ
ரலையத்தடம்பொன்னிசூழ்திருவையாற்றருமணியே. (ருசா)

மணியாரருவித்தடவிமயங்குடக்கொல்லிகல்லின்
றிணியாரருவியினூர்த்தசிராமலையைவணங்க
ளணியாரருவிகவர்கிளியொப்புமின்சாரல்விந்தம்
பணிவாரருவினைதீர்க்குமேகம்பர்பருப்பதமே. (ருஎ)

பருப்பதங்கார்தவழ்மந்தரமிந்திரநீலம்வெள்ளை
மருப்பதங்கார்கருங்குன்றியங்கும்பரங்குன்றம்வில்லார்
நெருப்பதங்காகுதிநாறுமயேந்திரமென்றிவற்றி
லிருப்பதங்காவுகந்தான்கச்சியேகம்பத்தெம்மிறையே. (ருஅ)

* இறைத்தார்புரமெய்தவில்லிமைநல்லிமவான்மகட்கு
மறைத்தார்கருங்குன்றம்வெண்குன்றஞ்செங்குன்றமன்னற்குன்ற
நிறைத்தார்நெடுங்குன்றநீள்கழுக்குன்றமென்றீவினைகள்
குறைத்தார்முதுகுன்றமேகம்பர்குன்றென்றுகூறுமினே. (ருகூ)

கூறுமின்றொண்டர்குற்றாலநெய்த்தானந்துருத்தியம்பேர்
தேறுமின்வேள்விக்குடிதிருத்தோணிபுரம்பழன
மாறுமின்போற்சடைவைத்தவனூரிடைமருதென்
றேறுமினீரெம்பிரான்கச்சியேகம்பமுன்னினைந்தே. (சாo)

நினைவார்க்கருளும்பிரான்றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர்புறம்பியம்பூவணநீர்
பனைவார்பொழிற்றிருவெண்காடுபாச்சிலதிகையென்று
நினைவார்தருநெஞ்சினீர்கச்சியேகம்பநண்ணுமினே. (சாக)

நண்ணிப்பரவுந்திருவாவடுதுறைநல்லநல்லூர்
மண்ணிற்பொலிகடம்பூர்கடம்பந்துறைமன்னுபுன்கூ
ரெண்ணற்கரியபராய்த்துறையோர்கொளெதிர்கொள்பாடிக்
கண்ணிப்பிறைச்சடையோன்கச்சியேகம்பங்காண்மின்சென்றே.()

* மிறைத்தார் புரம - என்றும் பாடம்.

சென்றேறிவிண்ணுறுமண்ணுமலைதிகழ்வல்லமென்பூ
வின்றேறல்பாய்திருமாற்பேறுபாசூரெழிலழுந்தூர்
வன்றேரவன்றிருவிற்பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றோர்தருகச்சியேகம்பமேயார்நிலாவியவே. (௬௩)

நிலாவுபுகழ்த்திருவோத்தூர்திருவாமாத்தூர்நிறைநீர்
சுலாவுசடையோன்புலிவலம்வில்வலங்கொச்சைதொண்டர்
குலாவுந்திருப்பனங்காடுநன்மாகறல்கூற்றம்வந்தா
லலாயென்றடியார்க்கருள்புரியேகம்பராலயமே. (௬௪)

ஆலயங்கார்கருகாவைகச்சூர்திருக்காரிகரை
வேலையங்கேறுதிருவான்மியூர்திருவூறன்மிக்க
சோலையங்கார்திருப்போந்தைமுக்கோணந்தொடர்கடுக்கை
மாலையன்வாழ்திருவாலங்காடேகம்பம்வாழ்த்துமினே. (௬௫)

வாழப்பெரிதெமக்கின்னருள்செய்யுமலர்க்கழலோர்
தாழச்சடைத்திருவேகம்பர்தம்மைத்தொழாதவர்போய்
வாழப்பரற்சுரமாற்றுதளிரடிபூங்குழலெம்
ஏழைக்கிடையிறுக்குங்குயபாரமியக்குறினே. (௬௬)

உறுகின்றவெவ்வழலக்கடமிக்கொடிக்குன்பின்வரப்
பெறுகின்றவண்மையினாலையபேரருளேகம்பனார்
துறுகின்றமென்மலர்த்தண்பொழிற்கச்சியைச்சூழ்ந்திளையோர்
குறுகின்றபூங்குவளைக்குறுந்தண்பணையென்றுகொளே. (௬௭)

கொள்ளுங்கடுங்கதிரிற்கள்ளித்தீச்சிலவேயுலர்ந்து
விள்ளும்வெடிபடும்பாலையென்பாலன்விடலைபின்னே
தெள்ளும்புனற்கச்சியுட்டிருவேகம்பர்சேவடியை
யுள்ளுமதுமறந்தாரெனப்போவதுரைப்பரிதே. (௬௮)

பரிப்பருந்திண்மைப்படையதுகானெனிற்சிறகு
விரிப்பருந்துக்கிரையாக்கும்வெய்யேனஞ்சலஞ்சடைமேற்
றரிப்பருந்திண்கங்கையார்திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருந்திண்சிலையேயுமராயின்மறைகுவனே. (௬௯)

வனவரித்திண்புலியின்னதளேகம்பமன்னருளே
யெனவருபொன்னணங்கென்னணங்கிற்கெனெழிற்கழங்குந்
தனவரிப்பந்துங்கொடுத்தெனைப்புல்லியுமிற்பிரிந்தே
யினவரிக்கல்லதர்செல்வதெங்கேயொல்குமேழைநெஞ்சே. (௭௦)

நெஞ்சார்தரவின்பஞ்செய்கழலேகம்பர்கச்சியன்னாள்
பஞ்சாரடிவைத்தபாங்கிவையாங்கவட்பெற்றெடுத்த
வெஞ்சார்வொழியத்தன்பின்செலமுன்செல்வெடுவெடென்ற
வஞ்சாவடுதிறற்காளைதன்போக்கிவையந்தத்திலே. (௭௧)

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிருபண்பொடுசேம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரொருமைமலர்தின்னத்துன்னுகராவொருத்தல்
பொரப்பார்பொலிநுதலாய்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே. (௮௧)

கச்சார்முலைமலைமங்கைகண்ணுரவெண்ணுன்கறமும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவிமகிழவிண்ணோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுந்தன்மமரு
வச்சாலையும்பரப்பாங்கணிமாடங்களோங்கினவே. (௮௨)

ஓங்கினவூரகமுள்ளகமும்பருருகிடமாம்
பாங்கினினின்றதரியுறைபாடகந்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றவர்மைத்துனிவான்கவிக
டாங்கினநாட்டிருந்தாளதுதன்மனையாயிமையே. (௮௩)

இமையாரரவணியேகம்பர்நெற்றிவிழியின்வந்த
பிழையாவருணம்பிராட்டியதின்னபிறங்கலுன்னு
நுழையாவருதிரிசூலத்தனைக்கரும்பொன்கடுக்கைத்
தழையார்பொழிலுதும்பொன்னேநமக்குத்தளர்வில்லையே. (௮௪)

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தமைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றிதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துளே. (௮௫)

உலவியமின்வடம்வீசியுருமதிர்வுண்முழங்கி
வலவியமாமதம்பாய்முகில்யானைகள்வானில்வந்தாற்
சுலவியவார்குழல்பின்னரொன்பாரிரொனநினைந்து
நிலவியவேகம்பர்கோயிற்கொடியன்னநீர்மையனே. (௮௬)

நீரொன்னிலும்மழுங்கண்முகில்காணெஞ்சமஞ்சலையென்
றூரொன்னிலுந்தமராயுரைப்பாரமராபதிக்கு
நேரொன்னிலுந்தகுங்கச்சியுளேகம்பர்நீண்மதில்வாய்ச்
சேரொன்னிலுந்தங்கும்வாட்கண்ணிதானன்பர்தேர்வரவே. (௮௭)

வரங்கொண்டிமையோர் நலங்கொள்ளுமேகம்பர்கச்சியன்னாய்
பரங்கொங்கைதூவன்மினீர்முத்தமன்பர்தந்தேரின்முன்னே
தரங்கொண்டுபூக்கொண்டுகொன்றைபொன்னாகத்தண்காந்தள்கை
கரங்கொண்டுபொற்சுண்ணமேந்தவும்போந்தனகார்முகிலே [த்தின்

கார்முகமாரவண்கைக்கொண்டகம்பர்கழற்றொழுது
போர்முகமாப்பகைவெல்லச்சென்றார்நினையார்புணரி
நீர்முகமாகவிருண்டுசுரந்தநேரிழைநா
மார்முகமாகவினைக்கட * னீந்துதும்வெய்துயிர்ப்பே. (௮௯)

உயிராயினவன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிரார்புயல்பெற்றதென்னநம்பல்வளைபான்மைகளாந்
தயிரார்பானெய்யொடுமாடியவேகம்பர்தம்மருள்போற்
றயிராவளையழுந்தக் கச்சிறுத்தன கார்மயிலே. (௯0)

கார்விடைவண்ணத்தனன்றேழ்தழுவினுமின்றுதனிப்
போர்விடைப்பெற்றெதிர்மாண்டானெனவண்டர்போதவிட்டார்
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைத்தம்பொனன்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே. (௯௧)

விடைபாய்கொடுமையெண்ணாதுமேலாங்கன்னிவேற்கருங்கட்
கடைபாய்மனத்திளங்காளையர்புல்கொலிகம்பர்கச்சி
மடைபாய்வயலிளமுல்லையின்மான்கன்றோடான்கன்றினங்
கடைபாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலந்தெழுமே. (௯௨)

எழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைத்துணர்மணற்குன்றிற்பரதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க்கூரம்பினேரிரண்டானுமுகத்தனவே. (௯௩)

முகம்பாகம்பண்டமும்பாகமென்றோதியமூதுரையை
யுகம்பார்த்திரோலென்னலமுயரேகம்பர்கச்சிமுன்னீ
ரகம்பாகவார்வினளவில்லையென்னின்பவளச்செவ்வாய்
நகம்பாற்பொழிற்பெற்றநாமுற்றவர்கொள்கநன்மயலே. (௯௪)

மயக்கத்தநல்லிருட்கொல்லுஞ்சுறவொடெறிமகர
மியக்கத்திடுசுழியோதங்கழிகிளரக்கழித்தார்
துயக்கத்தவர்க்கருளாக்கம்பர்கச்சிக்கடலபொன்னூன்
முயக்கத்தகல்வுபொருள்கொண்கநீர்வருமூர்க்கஞ்சுமே. (௯௫)

மேயிரைவைகக்குருகுணராமதுவுண்டுபுன்னை
மீயிரைவண்டோதமர்புகடியவிரிகடல்வாய்ப்
பாயிரைநாசங்கொண்டோன்றொழுங்கம்பர்கச்சிப்பவ்வநீர்
தூயிரைகானன்மற்றாரறிவார்நந்துறைவர்பொய்யே. (௯௬)

---

* நீர்த்துமயர்வுயிர்ப்பே-எனவும் பாடம்.

பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையும்போகவிடா
மெய்வரும்பேரருளேகம்பர்கச்சிவிரையினவாய்க்
கைவரும்புள்ளொடுசெங்கின மார்ப்பநஞ்சேர்ப்பர்திண்டே
ரவ்வருதாமங்களினம்வந்தார்ப்பவணைகின்றதே. (௯௭)

இன்றுசெய்வோமிதனிற்றிருவேகம்பர்க்கெத்தனையு
நன்றுசெய்வோம்பணிநாளையென்றுள்ளிநெஞ்சேயுடலிற்
சென்றுசெயாரைவிடுந்துணைநாளும்விடாதடிமை
நின்றுசெய்வாரவர்தங்களினீணெறிகாட்டுவரே. (௯௮)

காட்டிவைத்தார்தம்மையாங்கடிப்பூப்பெய்யக்காதல்வெள்ள
மீட்டிவைத்தார்தொழுமேகம்பரோதுமிலாதவெம்மைப்
பூட்டிவைத்தார்தமக்கன்பதுபெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. (௯௯)

பாதம்பரவியோர்பித்துப்பிதற்றிலும்பல்பணியும்
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர்மெய்த்தொண்டரே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

௫-வது. திருவொற்றியூர்த் தொகை. *

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியப்பா.

இருநிலமடந்தை யியல்பினி னுடுத்த
பொருகடன்மேகலை முகமெனப்பொலிந்த
ஒற்றிமாநக ருடையோயுருவின்
பெற்றியொன்றுப் பெற்றோர்யாரோ
† மின்னியமின்னின் பிறக்கநின் சடையே
மன்னியவண்டநின் சென்னியின்வடிவே
பாவகன்பரிதி பனிமதிதன்னொடு
மூவகைச்சுடருநின் னுதனேர்நாட்டம்
தண்ணொளியாரந் தாராகணமே
விண்ணவர்முதலா வேறுறிடமாக்
கொண்டுறைவிசும்பே கோலநின்னகம்
எண்டிசைதிண்டோ ளிருங்கடலுடையே
அணியுடையல்குலு மவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தணின் றாளிணைவழக்கே
ஒழியாதோடிய மாருதமுயிர்ப்பே
வழுவாவோசை முழுதுநின்வாய்மொழி
வானவர்முதலா மன்னுயிர்பரந்த
ஊனமின்ஞானத் தொகுதிநின் னுணர்வே
நெருங்கியவுலகினி னீர்மையுநிற்றலும்
சுருங்கலும் விரிதலுந் தோற்றநின்றொழிலே
அமைத்தலுமழித்தலு மாங்கதன்முயற்சியும்
இமைத்தலும்விழித்தலு மாகுநின்னியல்பே
என்றிவைமுதலா வியல்புடைவடிவினோ
டொன்றியதுப்புரு விருவகையாகி
முத்திறக்குணத்து நால்வகைப்பிறவி
அத்திறத்தைம்பொறி யறுவகைச்சமயமோ
டேழுலகாகி யெண்வகைமூர்த்தியோ
டூழிதோறூழி யெண்ணிறந்தோங்கி
எவ்வகையளவினிற் கூடிநின்
றவ்வகைப்பொருளுநீ யாகியவிடத்தே. (க)

---

* ஒருபா வொருபதெனவுங் கூறுவர். † மின்னிய வினபிறங்கு மின் ... எனவும் பாடம்.

இடத்துறைமாதரோ டொருடம்பென்றும்
நடத்தினைநள்ளிரு ணவிற்றினையென்றும்
புலியதளன்பொடு புனைந்தோயென்றும்
பலிதிரிவாழ்க்கை பயின்றோயென்றும்
திருவமர்மாலொடு திசைமுகனென்றும்
அருவமுமுருவமு மானாயென்றும்
உளனேயென்று மிலனேயென்றும்
தளராளென்றுந் தளர்வோனென்றும்
ஆதியென்று மசோகினனென்றும்
போதியிற்பொலிந்த புராணனென்றும்
இன்னவைமுதலாத் தாம்றியளவையின்
மன்னியநூலுடன் பன்மையுண்மயங்கிப்
பிணங்குமாந்தர் பெற்றிமைநோக்கி
அணங்கியவவ்வவர்க்கவ் வவையாகியடை
பற்றிய பளிங்குப்போலும்
ஒற்றிமாநகருடை யோயுருவே. (௨)
உருவாமுலகுக் கொருவனாகிய
பெரியோய்வடிவின் பிறிதிங்கின்மையின்
எப்பொருளாயினு மிங்குளதாமெனின்
அப்பொருளுனக்கே யவயவமாதலின்
முன்னியமூவெயின் முழுங்கெரியூட்டித்
தொன்னீர்வையகந் துயர்கெடச்சூழ்ந்ததும்
வேள்விமூர்த்திதன் றலையினைவிடுத்ததும்
நீள்விசும்பாளிதன் றோளினை நெரித்ததும்
ஓங்கியமறையோற் கொருமுகமொழித்ததும்
பூங்கணைவேளைப் பொடிபடவிழித்ததும்
திறல்கெடவரக்கனைத் திருவிரலூன்றியதும்
குறைபடக்கூற்றினைக் குறிப்பினிலடர்த்ததும்
என்றிவைமுதலாவாள்வினையெல்லாம்
நின்றுழிச்செறிந்தவை நின்செயலாதலின்
உலவாத்தொல்புக ழொற்றியூர
பகர்வோர்நினக்கு வேறின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழி னல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோ பொருளுணர்ந்தோரே. (௩)
பொருளுணர்ந்தோங்கிய பூமகன்முதலா
இருடுணையாக்கையி லியங்குமன்னுயிர்
உருவினுமுணர்வினு முயர்வினும்பணியினும்
திருவினுந்திறலினுஞ்செய்தொழில்வகையினும்
வெவ்வேறாகி வினையொடும்பிரியா

தொல்வரப்பன்மையுண் மற்றவரொழுக்கம்
மன்னியவேலையுள் வான்றிரைபோல
நின்னிடையெழுந்து நின்னிடையாகியும்
பெருகியுஞ்சுருங்கியும் பெயர்ந்துந்தோன்றியும்
விரவியும்வேறாய் நின்றனைவிளக்கம்
ஓவாத்தொல்புக ழொற்றியூர
மூவாமேனி முதல்வநின்னருள்
பெற்றவரறியி னல்லது
மற்றவரறிவரோ நின்னிடைமயக்கே (ச)
மயக்கமில்சொன்னீ யாயினுமற்றவை
துயக்கநின்றிற மறியாச்சூழலும்
உறையிடமுள்ள மாயினுமற்றது
கறைபடவாங்கே கரந்தகள்ளமும்
செய்வினையுலகினிற் செய்வோயெனினும்
அவ்வினைப்பயனீ யணுகாவணிமையும்
இனத்திடையின்பம் வேண்டினிற்பணிவோர்
மனத்திடைவாரி யாகியவனப்பும்,
அன்பினடைந்தவர்க் கணிமையுமல்லவர்ச்
சேய்மையு நாடொறும்
என்பினையுருக்கு மியற்கையவாதலில்
கண்டவர்தமக்கே யூனுடல்கழிதல்
உண்டெனவுணர்ந்தன மொற்றியூர
மன்னியபெரும்புகழ் மாதவ
துன்னியசெஞ்சடைத் தூமதியோயே. (ரு)
தூமதிசடைமிசைச் சூடுதறூநெறி
ஆமதியானென வமைத்தவாறே
அறனுருவாகிய வானேறேறுதல்
இறைவன்யானென வியற்றுமாறே
அதுவவளவனென நின்றமையார்க்கும்
பொதுநிலையானென வுணர்த்தியபொருளே
முக்கணனென்பது முத்தீவேள்வியில்
தொக்கதென்னிடை யென்பதோர்சுருக்கே
வேதமான்மறி யேந்துதன்மற்றதன்
நாதனானென நவிற்றுமாறே
மூவிலையொருதாட் சூலமேந்துதன்
மூவரும்யானென மொழிந்தவாறே
எண்வகைமூர்த்தி யென்பதிவ்வுலகினில்
உண்மையானென வுணர்த்தியவாறே

நிலநீர்தீவளி யகல்வானென்றும்
உலவாத்தொல்புக ழுடையோயென்றும்
பொருளுநற்பூதப் படையோயென்றும்
தெருளாநின்றுலகினிற் றெருட்டுமாறே
ஈங்கிவைமுதலா வண்ணமும்வடிவும்
ஓங்குநின்பெருமை யுணர்த்தவுமுணராத்
தற்கொலிமாந்தர் தம்மிடைப்பிறந்த
சொற்பொருள்வண்மையிற் சுழலுமாந்தர்க்
காதியாகிய வறுதொழிலாளர்
ஓதலோவா வொற்றியூர
சிறுவர்தஞ்செய்கையிற் படுத்து
முறுவலித்திருத்திநீ முகப்படுமளவே. (சா)

அளவினிலிறந்த பெருமையையாயினும்
எனதுளமகலா வொடுங்கினின்றனையே
மெய்யினையிறந்த மெய்யினையாயினும்
வையகமுழுதுநின் வடிவெனப்படுமே
கைவலத்திலைநீ யெனினுங்காதல்
செய்வோர்வேண்டுஞ் சிறப்பொழியாயே
சொல்லியல்கையாற் றுணையலையாயினும்
நல்லுயிர்க்கூட்ட நாயகனீயே
எங்குமுள்ளோ யெனினும்வஞ்சனை
தங்கியவவரைச் சார்விலைநீயே
அஃதான்று
பிறவாப்பிறவியை பெருகாப்பெருமையை
துறவாத்துறவியை தொடராத்தொடர்ச்சியை
நுகராநுகர்ச்சியை நுணுகாநுணுக்கினை
அகலாவகற்சியை யணுகாவணிமையை
செய்யாச்செய்கையை சிறவாச்சிறப்பினை
வெய்யைதணியை விழுமியைநொய்யை
செய்யைபசியை வெளியைகரியை
ஆக்குதியழித்தி யானபல்பொருள்
நீக்குதிதொகுத்தி நீங்குதியடைதி
ஏனையவாகிய வெண்ணில்பல்குணம்
நினைதொறுமயக்கு நீர்மையவாதலின்
ஓங்குகடலுடுத்த வொற்றியூர
ஈங்கிதுமொழிவார் தம்
சொன்னிலைசுருங்கினல்லது
நின்னியலறிவோர் யாரிருநிலத்தே. (எ)

நிலத்திடைப்பொறையா யவாவினினீண்டு
சொலத்தகுபெருமைத் தூரவாக்கை
மெய்வளியையொடு பித்தொன்றாக
ஐவகைநெடுங்காற் றுங்குடனடிப்ப
நரையெனு நுரையே நாடொறும்வெளுப்பத்
திரையுடைத்தோலே செழுந்திரையாகக்
கூடியகுருதி நீரினுணிறைந்து
மூடியவிரும லோசையின்முழங்கிச்
சுடுப்சிவெகுளிச் சுறவினமெறியக்
குடரெனு * மாலாக் கூட்டம்வந்தொலிப்ப
ஊன்றடியெலும்பி னுட்டிடலடைந்து
தோன்றியபல்பிணிப் பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பே கண்டமாக
மேதகுநிணமே மெய்ச்சாலாக
முழக்குடைத்துளையே முகங்களாக
வழுக்குடைமூக்கா ரோதம்வந்தொலிப்ப
இப்பரிசியற்றிய வுடலிருங்கடலுட்
டுப்புரவென்னுஞ் சுழித்தலைப்பட்டிங்
காவாவென்னுநின் னருளினைப்பெற்றவர்
நாவாயாகிய நாதநின்பாத
முந்திச்சென்று முறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச் செவ்வியலிருத்தி
உருகியவார்வப் பாய்பூரித்துப்
பெருகியநிறையெனுங் கயிற்றிடைப்பிணித்துத்
துன்னியசுற்றச் சுடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப் பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங் கடுவெளியற்றி
தூமச்சோதிச் சுடர்க்குறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித் துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவி னீள்கரையேற்ற
வாங்கயாத்திரை போக்குதிபோலும்
ஓங்குகடலுடுத்த வொற்றியூரோயே. (௮)
ஒற்றியூர வுலவாநின்குணம்
பற்றியாரப் பரவுதல்பொருட்டா
என்னிடைப்பிறந்த வின்னுப்புன்மொழி
நின்னிடையணுகா நீர்மையவாதலின்
ஆவலித்தழுதலி லகன்றதம்மனைக்

* ஆலா = ஓர்வகை நீர்ப்பறவை.

கேவலஞ்செய்மையிற் கேள்ளாளாயினும்
பிறித்தற்கரிய பெற்றியதாகிக்
குறைவினிலூர்த்துங் குழவியதியல்வினை
யறியாதெண்ணி லூழிப்பிறவியின்
மயங்கிக்கண்ணிலர் கண்பெற்றாங்கே
தாய்தலைப்படநின் றாளிணைவணக்கம்
வாய்தலையறியா மயக்குறும்வினையேன்
மல்கியவின்பத் தோடுடன்கூடிய
வெல்லையிலவாவினி லியற்றியவாகக்
கட்டியநீயே யவிழ்க்கினல்லது
தெட்டனையாயினும் யானிதற்கறியேன்
றுன்னிண்டயிருளெனுந் தூற்றிடையோதுங்கி
வெள்ளிடைகாண விருப்புறுவினையேன்
றந்தையுந்தாயுஞ் சாதியுமறிவுநஞ்
சிந்தையுந்திருவுஞ் செல்கதித்திறனுந்
துன்பமுந்துறவுந் தூய்மையுமறிவு
மின்பமும்புகழு மிவைபலபிறவுஞ்
சுவையொளியூறோசை நாற்றந்தோற்ற
மென்றிவைமுதலா விளங்குவவெல்லா
மொன்றநின்னடிக்கே யொருங்குடன்வைத்து
நின்றனனன்றனியே நின்னடியல்லது
சார்வுமற்றின்மையிற் றளர்ந்தோர்காட்சிச்
சேர்விடமதனைத் திறப்படநாடி
யெய்துதற்கரியோ யானினிச்
செய்வதுமறிவனோ தெரியுங்காலே (௯)

காலற்சீறிய கழலோய்போற்றி
மூலத்தொகுதி முதல்வபோற்றி
ஒற்றிமாநக ருடையோய்போற்றி
முற்றுமாகிய முதல்வபோற்றி
யணைதொறுஞ்சிறக்கு மமிர்தேபோற்றி
யிணைபிறிதில்லா வீசபோற்றி
யார்வஞ்செய்பவர்க் கணியோய்போற்றி
தீர்விலின்சுவைத் தேனேபோற்றி
வஞ்சனைமாந்தரை மறந்தோய்போற்றி
நஞ்சினையமிர்தா நயந்தோய்போற்றி
விரிகடல்வையக வித்தேபோற்றி
புரிவுடைவனமாப் புணர்ந்தோய்போற்றி
காணமுன்பொருள் கருத்துறைசெம்மைக்

காணியாகிய வரனேபோற்றி
வெம்மைதண்மையென் றிவைகுணமுடைமையிற்
பெண்ணேடாணெனும் பெயரோய்போற்றி
மேவியவவர்தமை வீட்டினிற்படுக்குந்
தீபமாகிய சிவனேபோற்றி
மாலோய்போற்றி மறையோய்போற்றி
மேலாய்போற்றி வேதியபோற்றி
சந்திரபோற்றி தழலோய்போற்றி
யிந்திரபோற்றி யிறைவபோற்றி
யமராபோற்றி யழகாபோற்றி
குமராபோற்றி கூத்தாபோற்றி
பொருளேபோற்றி போற்றியென்றுனை
நாத்தழும்பிருக்க நவிற்றினல்ல
தேற்றுதற்குரியோர் யாரிருநிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருப்பாடற்றிரட்டு.

முதலாவதுகோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

* நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்கு மிறந்தனபிறக்கும்
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருத்தனசிறுக்குஞ் சிறுத்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனபிறந்தன பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைக்கொன்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன
ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்
பீளையுநீரும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீருந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருவழி
சலமுஞ்சீயுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படநாறுஞ்

* நினைமின்மன்னே, என்பது இழிவிற்சிறப்பாக வந்த ஒருமையிற் பன்மைமயக்கம்.

சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலரக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

உ-வது. கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடுங்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாத பித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேச்சுமைத்தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப்பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் * பத்தம்
காற்றிற் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை

---

* பா - சம் - சட்டு.

ஈழக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னுருவிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே.

௩-வது. கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்ததி லுளைந்திடு
நினைவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்

இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரொனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றிலாடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
னடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் றாடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெருமானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கலமுனக்கே.

௪-வது. கச்சித்திருவகவல்.

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமெய்ப் பிறவியு மாறுடற் றுதித்து

மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்செனு வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்காற்
றுள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுடை நாறுங் கின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவு மிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றூய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்

தக்க தலையோட் டின்மூளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக னுய்நா ளென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடைவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்பழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமாலை.

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லந்
துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே, (௧)

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்காலத்தச்சன்
வெட்டிமுறிக்குமரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கியழுவார்மயானங்குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோவிறைவா கச்சியேகம்பனே. (௨)

கைப்பிடிநாயகன்றூங்கையிலேயவன்கையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமன்முன்வைத்தயல்வளவி
லொப்புடன்சென்றுதுயினீத்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவேனிறைவாகச்சியேகம்பனே. (௩)

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவைநன்னார்தப்பினாற்
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே. (௪)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வுமெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. (௫)

பொல்லாதவனெறிநில்லாதவனைம்புலன்கடமை
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பாற்
செல்லாதவனுண்மைசொல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே. (௬)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (௭)

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௮)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (௯)

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்புன்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே. (௧0)

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனக்கோ
வெரிக்கோவிரையெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே. (௧௧)

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டியென்கண்ணெதிரே
மாதென்றுசொல்லிவருமாயைதன்னைமறலிவிட்ட
தூதென்றெண்ணாமற்சுகமென்றுநாடுமித்துற்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பேனிறைவாகச்சியேகம்பனே. (௧௨)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே. (௧௩)

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. (௧௪)

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பி
லிருளறுசொல்லினுங்காணத்தகுங்கச்சியேகம்பனே. (௧௫)

பருத்திப்பொதியினைப்போலேவயிறுபருக்கத்தங்க
டுருத்திக்கறுசுவைபோடுகின்றார்துறந்தோர்தமக்கு
வருத்தியமுதிடமாட்டாரவரையிம்மாநிலத்தி
லிருத்திக்கொண்டேனிருந்தாயிறைவா கச்சியேகம்பனே. (௧௬)

பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையென்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறொக்குமேயறிவோருளத்தில்
வல்லாரறிவாரறியார்தமக்குமயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கேயிறைவா கச்சியேகம்பனே. (௧௭)

வாதுக்குச்சண்டைக்குப்போவார்வருவார்வழக்குரைப்பார்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்கழிந்துமயங்கிடுவார்விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தாரிறைவா கச்சியேகம்பனே. (௧௮)

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுபெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண் கச்சியேகம்பனே. (௧௯)

அப்பென்றும்வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுணவேற்றுமைதான்பலசார்தலினாற்
செப்பிலபக்குவபக்குவமாயுள்ளசீவனிலு
மிப்படியேயிற்பனெந்தைபிரான் கச்சியேகம்பனே. (௨௦)

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய் கச்சியேகம்பனே. (௨௧)

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம்பற்றுமையாபுரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன்றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையாயிறைவா கச்சியேகம்பனே. (௨௨)

பெண்ணாகிவந்தொருமாயாபிசாசம்பிடித்தெட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவா கச்சியேகம்பனே. (௨௩)

நாவாரவேண்டும்விதஞ்சொல்லுவாருனைநான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள்கைதான்வரண்டாற்
போய்வாருமென்றுநடுதலைக்கேகுட்டும்பூவையருக்
கீவார்தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. (௨௪)

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநினையார்நின்னாமநினைவிற்சற்று
மில்லாரிருந்தென்னிறந்தென்புகல்கச்சியேகம்பனே. (௨௫)

வானமுதத்தின்சுவையறியாதவர்வண்கனியின்
றூனமுதத்தின்சுவையெண்ணல்போலத்தனித்தனியே
தேனமுதத்தின்றெளிவாயஞானஞ்சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவைநன்றல்லவோகச்சியேகம்பனே. (௨௬)

ஊற்றைச்சரீரத்தையாபாசக்கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்தோற்பையைப்பேசரிய
காற்றிற்பொதிந்தநிலையற்றபாண்டத்தைக்காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேகம்பனே. (௨௭)

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூ
லல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (௨௮)

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. (௨௯)

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின்மேன்மயலாகிப்புன்மாதருக்குட்
பறந்துழன்றேதடுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே. (௩0)

பூதங்களற்றுப்பொறியற்றுச்சாணாம்புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக்
காதங்கரணங்களுமற்றவானந்தக்காட்சியிலே
யேதங்களைந்திருப்பேனிறைவாகச்சியேகம்பனே. (௩௧)

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெபஞ்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்கொல்லுகண்டாய்கச்சியேகம்பனே. (௩௨)

சடக்கடத்துக்கிரைதேடிப்பலவுயிர்தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்துமிகமெலிந்து
படக்கடித்தின்றுழல்வார்கடமைக்கரம்பற்றிநம
னிடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே. (௩௩)

நாறுமுடலைநரிப்பொதிசோற்றினைநான்றினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத்தோகையர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ்சோருங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. (௩௪)

சொக்கிட்டரண்மனைப்புக்குட்டிருடியதுட்டர்வந்து
இக்குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவநிந்தைசெய்து
மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்துவீடிச்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. ()

விருந்தாகவந்தவர்தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார்நின்றுமத்தைப்போற்றிநித்த
மருந்தாமுலைப்பங்கனொன்றுதுபாதகரம்புவியி
லிருந்தாவதேதுகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (௩௬)

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி
வல்லானறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறுசூழ்விதியின்படிதுக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலேயென்பர்காண்கச்சியேகம்பனே. (௩௭)

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்ற
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (கூஅ)

கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைக்காமுகரைக்
கொடும்பவமேசெயுநிர்மூடர்தம்மைக்குவலயத்து
ணெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
விடும்பரையேன்வகுத்தாயிறைவாகச்சியேகம்பனே. (கூகூ)

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்கவென்றே
நின்றேனின்சன்னிதிக்கேயதனாற்குற்றநீபொறுப்பா
யென்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே. (சo)

திருவேகம்பவிருத்தம்.

அன்னையெத்தனையெத்தனையன்னையோவப்பனெத்தனையெத்தனையப்பனோ, பின்னையெத்தனையெத்தனைபெண்டிரோ பிள்ளையெத்தனையெத்தனைபிள்ளையோ, முன்னையெத்தனையெத்தனைசன்மமோ மூடனாயடியேனு மறிந்திலே, னின்னமெத்தனை யெத்தனை சன்மமோவென்செய்வேன்கச்சியேகம்பநாதனே.

திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத்தோளார்க்கும்பொன்னுக்குங்காசினிக்குந்
தாம்பிணங்கும்பலவரசையும்விட்டுத்தனித்துச்செத்துப்
போம்பிணந்தன்னைத்திரளாகக்கூடிப்புரண்டினிமேற்
சாம்பிணங்கத்துதையோவென்செய்வேன்றில்லைச்சங்கரனே. (க)

சோறிடுநாடுதுணிதருங்குப்பைதொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடுமேனியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே. (உ)

அழலுக்குள்வெண்ணெயெனவேயுருகிப்பொன்னம்பலத்தார்
நிழலுக்குணின்றுதவமுஞற்றுமனிட்டரெமின்னோர்
குழலுக்கிசைந்தவகைமாலைகொண்டுகுற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென்விதிவசமே. (ங)

ஓடாமற்பாழுக்குழையாமலோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (ச)

பாராமலேற்பவர்க்கில்லையென்றுமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமன்மனமயர்ந்து
போராமற்சேவைபிரியாமலன்புபெறாதவரைச்
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௫)

கொல்லாமற்கொன்றதைத்தின்னாமற்சூத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவிலும்பொய்
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மாயையிலே
செல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௬)

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவதுங்கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே. (௭)

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதிதுயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (௮)

ஆயும்புகழ்த்தில்லையம்பலவாணருகிற்சென்றாற்
பாயுமிடபங்க்டிக்குமரவம்பின்பற்றிச்சென்றாற்
பேயுங்கணமும்பெருந்தலைப்பூதமும்பின்றொடரும்
போயென்செய்வாய்மனமேபிணக்காடவர்போமிடமே. (௯)

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
லாடுமருட்கொண்டிங்கம்பலத்தேநிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே. (௧௰)

ஊட்டுவிப்பானுமுறக்குவிப்பானுமிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப்பானுமுயங்குவிப்பானுமுயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினைப்பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே. (௧௧)

அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தான்
மடியாமற்செல்வவரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே. (௧௨)

தெய்வச்சிதம்பரதேவாவுன்சித்தந்திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பனமாமன்னர்வாழ்வும்புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேமண்டலீகர்தம்மேடையெங்கே
கைவைத்தநாடகசாலையெங்கேயிதுகண்மயக்கே. (௧௩

உடுப்பானும்பாலனமுண்பானுமுய்வித்தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்றுகேள்விசெய்வானுங்கெதியடங்கக்
கொடுப்பானுந்தேகியென்றேற்பானுமேற்கக்கொடாமனின்று
தடுப்பானுநீயல்லவோதில்லையானந்தத்தாண்டவனே. (கச)

வித்தாரம்பேசினுஞ்சோங்கேறினுங்கம்பமீதிருந்து
தத்தாவென்றோதிப்பவுரிகொண்டாடினுந்தம்முன்றம்பி
யொத்தாசைபேசினுமாவதுண்டோதில்லையுண்ணிறைந்த
கத்தாவின்சொற்படியல்லாதுவேறில்லைகன்மங்களே. (கரு)

பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. (கசு)

தவியாதிருநெஞ்சமேதில்லைமேவியசங்கரனைப்
புவியார்ந்திருக்கின்றஞானகரனைப்புராந்தகனை
யவியாவிளக்கையென்னம்பலத்தாடியையைந்தெழுத்தாற்
செவியாமனீசெவித்தாற்பிறவாமுத்திசித்திக்குமே. (கஎ)

நாலின்மறைப்பொருளம்பலவாணரைநம்பியவர்
பாலிலொருதரஞ்சேவிக்கொணுதிருப்பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர்கைவிலங்கைத்தைப்பர்மீண்டுமொரு
காலினிறுத்துவர்கிட்டியுந்தாம்வந்துகட்டுவரே. (கஅ)

ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப்
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பர்களே. (கசு)

அத்தனைமுப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
நித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே. (உ0)

திருவெண்காட்டுத் திருவிசைப்பா.

பூதமுங்கரணம் பொறிகளைம்புலனும் பொருந்தியகுணங்களோர்மூன்றும், நாதமுங்கடந்தவெளியிலேநீயுநானுமாய்நிற்குநாளதோ, வாதமுஞ்சமயபேதமுங்கடந்த மனோலயவின்பசாகரனே, ஏதுமொன்றறியேன்யாதுநின்செயலேயிறைவனேயேக நாயகனே. (க)

யாவரோயிருந்தும் யாவரோவாழ்ந்தும் யாவரோயெமக்குறவராயும், தேவரீரல்லாற் றிசைமுகமெனக்குத் திருவுளமறியவேகூள

தோ, பாவலாஒருவன் செந்தமிழ்க்கிரங்கிப்பரவையாருடலைமாற்ற, ஏவலாளாகியிரவெலாமுழன்றவிறைவனையேகநாயகனே.()

உண்டதேயுண்டு முடுத்ததேயுடுத்து மடுத்தடுத்துரைத்ததேயுரைத்தும், கண்டதேகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தனகடவுநாளெல்லாம், விண்டதா மரைமேலன்னம் வீற்றிருக்கும்விழவருவீதிவெண்காடா, அண்டரோபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே. (௺)

வேறு.

மத்தனைதயிருண்டானு மலர்மிசைமன்னினானும்
நித்தமுந்தேடிக்காணுநிமலனே யமலமூர்த்தீ
செய்த்தனைக்கயல்பாய்நாங்கூர்ச்சேந்தனைவேந்தனிட்ட
கைத்தனைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே. (க)

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநிழலருகே
யிரும்பார்திருவுளமெப்படியோவின்னமென்னையன்னைக்
கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோகண்ணன்காணரிய
திருப்பாதமேதருமோதெரியாதுசிவன்செயலே. (க)

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்று வேண்டுவல்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. (க)

சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பதநந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே. (உ)

திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
யோடேயெடுத்தென்னவுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே. (க)

தாயும்பகைகொண்டபெண்டிர்பெரும்பகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும்பகையிச்செகமும்பகை
யாயும்பொழுதிலருஞ்செல்வநீங்கிலிங்காதலினாற்
றேயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சுதந்திரமே. (உ)

* திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடம்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே. (௧)

திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே. (௧)

பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு பொன்படைத்தோன், றன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டத் தன்மையைப்போ, லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுண்டு னைப்பணியு, மென்னாற்பிரயோசனமேதுண்டுகாளத்தியீச்சுரனே.

வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன்மாதுசொன்ன
சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனானினிச்சென்
றாளவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே. (௩)

முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவுமோகத்திலாற்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீச்சுரனே. (௪)

இரைக்கேயிரவும்பகலுந்திரிந்திங்கிளைத்துமின்னா
ரரைக்கேயவலக்குழியருகேயசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந்தமியேனையாண்டருள்பொன்முகலிக்
கரைக்கேகல்லாலநிழற்கீழமர்ந்தருள்காளத்தியே. (௫)

நாறுங்குருதிச்சலதாரைதோற்புரைநாடொறுஞ்சீ
யூறுமலக்குழிகாமத்துவாரமொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துளசிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய்திருக்காளத்தியீச்சுரனே. (௬)

கைலாயம்.

கான்சாயும்வெள்ளிமலைக்கரசேநின்கழனம்பினே
னூன்சாயுஞ்சென்மமொழித்திடுவாய்கரவூரனுக்காய்
மான்சாயச்செங்கைமழுவலஞ்சாய்வனைந்தகொன்றைத்
தேன்சாயநல்லதிருமேனிசாய்த்தசிவக்கொழுந்தே. (௧)

இல்லந்துறந்து பசிவந்தபோதங்கிரந்துதின்று
பல்லுங்கறையற்றுவெள்வாயுமாயொன்றிற்பற்றுமின்றிச்
செல்லும்பொருளுமிழந்துசுகானந்தத்தூக்கத்திலே
யல்லும்பகலுமிருப்பதென்றோகயிலாயத்தனே. (உ)

சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்றுச்செய்கையற்று
நினைந்ததுமற்றுநினையாமையுமற்றுநிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந்தானந்தநித்திரைதங்குகின்ற
வனந்தலிலென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே. (ங)

கையாரவேற்றுநின்றங்ஙனந்தின்றுகரித்துணியைத்
தையாதுடுத்துநின்சன்னிதிக்கேவந்துசந்ததமு
மெய்யாரநிற்பணிந்துள்ளேயுரோமம்விதிர்விதிர்ப்ப
வையாவென்றோலமிடுவதென்றோகயிலாயத்தனே. (ச)

நீறார்த்தமேனியுரோமஞ்சிலிர்த்துளநெக்குநெக்குச்
சேறாய்க்கசிந்துகசிந்தேயுருகிநின்சீரடிக்கே
மாறாத்தியானமுற்றானந்தமேற்கொண்டுமார்பிற்கண்ணீ
ராறாய்ப்பெருகிக்கிடப்பதென்றோகயிலாயத்தனே. (ரு)

செல்வரைப்பின்சென்றுசங்கடம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்பரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிடவேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே (சு)

மந்திக்குருளையொத்தேனில்லைநாயேன்வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ்சிந்தையையானென்செய்வேனெனைத்தீதகற்றிப்
புந்திப்பரிவிற்குருளையையேந்தியபூசையைப்போ
லெந்தைக்குரியவன்காணத்தனேகயிலாயத்தனே. (எ)

வருந்தேன்பிறந்துமிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியவர்கூட்டம்விடேனியலஞ்செழுத்தா
மருந்தேனருந்துவனின்னருளாற்கயிலாயத்தனே. (அ)

மதுரை.

விடப்படுமோ விப்பிரவஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோ நின்னருளின்றியே தினமேயலையக்
கடப்படுமோ வற்பர்வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோ சொக்கநாதாசௌந்தரபாண்டியனே.

உடைகோவணமுண்டுறங்கப்புறந்திண்ணையுண்டுணவிங்
கடைகாயிலையுண்டருந்தத்தண்ணீருண்டருந்துணைக்கே
விடையேறுமீசர்திருநாமமுண்டிந்தமேதினியில்
வடகோடுயர்ந்தென்னதென்கோடுசாய்ந்தென்னவான்பிறைக்கே.

வீடுநமக்குத்திருவாலங்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவேயொருவருமிங்கில்லையே. (உ)

நாடிக்கொண்டீசனைநாட்டமுற்றாயிலைநாதரடி
தேடிக்கொண்டாடித்தெளிந்தாயிலைசெகமாயைவந்து
மூடிக்கொண்டோமென்றுங்காமாயுதங்கண்முனிந்தவென்றும்
பீடிப்பையோநெஞ்சமேயுனைப்போலிலைப்பித்தர்களே. (ந)

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே. (ச)

கண்ணுண்டுகாணக் கருத்துண்டு நோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்க வீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே. (ரு)

சொல்லினுஞ்சொல்லின்முடிவினும்வேதச்சுருதியினு
மல்லினுமாசற்றவாகாயந்தன்னினுமாய்ந்துவிட்டோ
ரில்லினுமன்பரிடத்தினுமீசனிருக்குமிடங்
கல்லினுஞ்செம்பினுமோவிருப்பானெங்கள்கண்ணுதலே. (சு)

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாதுகண்டாய்சிவன்பாதநினை
நினைப்போரைமேவுநினையாரைநீங்கிநெறியினின்றா
லுனைப்போலொருவருண்டோமனமேயெனக்குற்றவரோ. (எ)

பட்டைக்கிழித்துப்பருவூசிதன்னைப்பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்கையின்முன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயக்காரிதன்காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோவிங்ஙனேசிவன்மீண்டதுவே. (அ)

சூதுற்றகொங்கையும்மானார்கலவியுஞ்சூழ்பொருளும்
போதுற்றபூசனைக்கென்செயலாஞ்செய்தபுண்ணியத்தால்
தீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டானென்றன்கைதனிலே. (௯)

வாதுற்றதிண்புயரண்ணாமலையர்மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும்புகலுநெஞ்சேயிந்தப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமென்றேடிப்புதைத்ததிரவியமென்
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (௧௦)

வேதத்தினுட்பொருண் மண்ணாசை மங்கையைவிட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்தபுண்ணியத்தா
லாதித்தன்சந்திரன்போலே வெளிச்சமதாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே. (௧௧)

மனையாளுமக்களும் வாழ்வுந் தனமுந் தன்வாசன் மட்டே
யினமானசுற்றமயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகினுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே. (௧௨)

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகம்
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே. (௧௩)

சீயுங்குருதிச்செழுநீர்வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன்றில்லாதபோதுபகலிரவா
யீயுமெறும்பும்புகுகின்றயோனிக்கிரவுபகன்
மாயுமனிதரைமாயாமல்வைக்கமருந்தில்லையே. (௧௪)

சீதப்பனிக்குண்டுசிக்கெனக்கந்தைதினமிரந்து
நீதுய்க்கச்சோறுமனைதோறுமுண்டுநினைவெழுந்தால்
வீதிக்குணல்லவிலைமாதருண்டிந்தமேதினியி
லேதுக்குநீசலித்தாய்மனமேயென்றும்புண்படவே. (௧௫)

ஆறுண்டு தோப்புண்டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டுகந்தைநெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவிமயங்குநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே. (௧

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்று வெய்யிலுடங்கி வந்தாற்
றடுக்கப்பழையவொருவேட்டியுண்டுசகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணையெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறைவில்லையே. (௧

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே. (கஅ)

மாத்தானவத்தையுமாயாபுரியின்மயக்கத்தையு
நீத்தார்தமக்கொருநிட்டையுண்டோநித்தனன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப்பசித்தாற்புசித்துவிழித்துயின்று
பார்த்தாலுலகத்தவர்போலிருப்பர்பற்றற்றவரே. (கக)

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர் செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்நல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே. (உ0)

நாட்டமென்றேயிருசற் குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே. (உக)

என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
யுன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைப்பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோவிங்ஙனேவந்துமூண்டதுவே. (உஉ)

திருவேடமாகித்தெருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றுனைப்பதம்பணிந்தேன்
கருவாகுமேதக்கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோவிங்ஙனேசிவனுற்றதுவே. (உந)

விட்டேனுலகம்விரும்பேனிருவினைவீணருடன்
கிட்டேனவருரைகேட்டுமிரேன்மெய்கெடாதநிலை
தொட்டேன்சுகதுக்கமற்றுவிட்டேன்றொல்லைநான்மறைக்கு
மெட்டேனெனும்பரமென்னிடத்தேவந்திங்கெய்தியதே. (உச)

அட்டாங்கயோகமுமாதாரமாறுமவத்தையைந்தும்
விட்டேறிப்போனவெளிதனிலேவியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்சம்மதிப்பாலூறலுண்டுமகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்பமென்னைவிழுங்கியிருக்கின்றதே. (உரு)

எரியெனக்கென்னும்புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோவெனக்கெனுந்தான்புசிக்க
நரியெனக்கென்னும்புன்னாயெனக்கென்னுமிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தேனிதனாலென்னபேறெனக்கே. (உசு)

அண்ணறன்வீதியர சிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநாலொன்பதாமவரோவலுநண்ணுமிவ்வூர்
துண்ணென்பசிக்குமடைப்பள்ளியானசுகமுமெல்லா
மெண்ணிலிகாலமவமேவிடுத்தனமெண்ணரிதே. (உஎ)

என்பெற்றதாயருமென்னைப்பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிப்புலம்பிவிட்டார்
கொன்பெற்றமைந்தரும்பின்வலம்வந்துகுடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்றுமில்லையுடையவனே. (உஅ)

கறையற்றபல்லுங்கரித்துணியாடையுங்கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும்பொல்லாதவூணும்புறந்திண்ணையுந்
தறையிற்கிடப்புமிரந்துண்ணுமோடுஞ்சகமறியக்
குறைவற்றசெல்வமென்றேகோலமாமறைகூப்பிடுமே. (உகூ)

எட்டுத்திசையும்பதினாறுகோணமுமெங்குமொன்றாய்
முட்டித்ததும்பிமுளைத்தோங்குசோதியைமூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங்கக்கத்தில்வைப்பர்கருத்தில்வையார்
பட்டப்பகலையிரவென்றுகூறிடும்பாதகரே. (௩0)

வாய்நாறுமூழன்மயிர்ச்சிக்குநாறிடுமையிடுங்கண்
பீநாறுமங்கம்பிணவெடிநாறும்பெருங்குழிவாய்ச்
சீநாறும்யோனியழுநாறுமிந்தியச்சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க்கோவிங்ஙனேமனம்பற்றியதே. (௩க)

உரைக்கைக்குநல்லதிருவெழுத்தைந்துண்டுரைப்படியே
செருக்கித்தரிக்கத்திருநீறுமுண்டுதெருக்குப்பையிற்
றரிக்கக்கரித்துணியாடையுமுண்டெந்தச்சாதியினு
மிரக்கத்துணிந்துகொண்டேன்குறைவேதுமெனக்கில்லையே. ()

ஏதப்பட்டாயினிமேற்படும்பாட்டையிதென்றறிந்து
போதப்பட்டாயில்லைநல்லோரிடஞ்சென்றுபுல்லறிவால்
வாதைப்பட்டாய்மடமாதர்கலவிமயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமேயுனைப்போலில்லைபித்தருமே. (௩௩)

சுரப்பற்றுவல்வினைசுற்றமுமற்றுத்தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர்கையிணக்கற்றுக்கவலையற்று
வரப்பற்றுநாதனைவாயாரவாழ்த்திமனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோபரமாபரமானந்தமே. (௩

பேய்போற்றிரிந்துபிணம்போற்கிடந்திட்டபிச்சையெல்லா
நாய்போலருந்திநரிபோலுழன்றுநன்மங்கையரைத்
தாய்போற்கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மைசொல்லிச்
சேய்போலிருப்பர்கண்டீருண்மைஞானந்தெளிந்தவரே. (௩ரு

விடக்கேபருந்தின் விருந்தேசமண்டலவீணனிட்ட
முடக்கேபுழுவந்துறையிடமேநலமுற்றுமிலாச்
சடக்கேகருவிதளர்ந்துவிட்டாற்பெற்றதாயுந்தொடாத்
தொடக்கேயுனேச்சுமந்தேனின்னினிதுசுகமெனக்கே. (௩௬)

அழுதாற்பயனென்னநொந்தாற்பயனென்னவாவதில்லை
தொழுதாற்பயனென்னநின்னையொருவர்சுடவுரைத்த
பழுதாற்பயனென்னநன்மையுந்தீமையும்பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோசலியாதிரொன்னைநெஞ்சே. (௩௭)

செல்வரைப்பின்சென்றுபசாரம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்பரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்குநல்லேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனுலநீழலரும்பொருளே. (௩௮)

ஊரீருமக்கோருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக்கழுவேற்றுநீற்றைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீங்கிச்சகநகைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே. (௩௯)

நீற்றைப்புனைந்தென்னநீராடப்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லைமாமறைநா
லேற்றிக்கிடக்குமெழுகோடிமந்திரமென்னகண்டா
யாற்றிற்கிடந்துந்துறையறியாமலலைகின்றையே. (௪௰)

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந்தாற்பதினாலுலகு
நீங்காமனீங்கிநிறையாநிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே. (௪௧)

விதியார்படைப்புமரியாரளிப்பும்வியன்கயிலைப்
பதியார்தொடைப்புநம்பாலணுகாதுபரானந்தமே
கதியாகக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவெனநீ
மதியாதிருமனமேவிதுகாணன்மருந்துனக்கே. (௪௨)

நாய்க்குண்டுதெண்டுநமக்குண்டுபிச்சைநமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திரபஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறுதிகைப்புண்டுநின்றபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன்றன்னருணோக்கங்கணோக்குதற்கே. (௪௩)

நேமங்கணிட்டைகள்வேதங்களாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ்சந்திசெபமந்த்ரயோகநிலை
நாமங்கள்சந்தனம்வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர்செய்யும்பூசைகள்சர்ப்பனையே. (௪௪)

நானெத்தனைபுத்திசொன்னாலுங்கேட்டிலைநன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட்டுழலுகின்றாயினியேதுமிலா
வானத்தின்மீனுக்குவன்றூண்டிலிட்டவகையதுபோற்
போனத்தைமீளநினைக்கின்றனையென்னபுத்தியிதே. (சரு)

அஞ்சக்கரமெனுங்கோடாலிகொண்டிந்தவைம்புலனாம்
வஞ்சப்புலக்கட்டைவேரறவெட்டிவளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சக்களைபறித்தேன்வளர்த்தேன்சிவபோகத்தையே. (சசு)

தாயாருஞ்சுற்றமும்பெண்டிருங்கைவிட்டுத்தாழ்ந்திடுநா
ணீயாருநானாரெனப்பகர்வாரந்தநேரத்திலே
நோயாரும்வந்துகுடிகொள்வரோகொண்டநோயுமொரு
பாயாருநீயுமல்லாற்பின்னையேதுநட்பாமுடலே. (சஎ)

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி,
தோயுமலக்குட்டையாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங்கடமாமென்றுபேசுவதை
நீயுமறிந்திலையோபொருட்டேடிநினைந்தனையே. (சஅ)

பூணும்படிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனைக்
காணும்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே. (சகூ)

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவர்க்
கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருதாதநெஞ்சங்கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோகுருநாதன்மொழிந்ததுவே. (ரு0)

எருமுட்டைபிட்கினுதிர்ந்திடுஞ்செல்லுக்கெவரழுவார்
கருமுட்டைபுக்குக்கழலகன்றாய்கனதுக்கமதாய்ப்
பெருமுட்டுப்பட்டவர்போலழும்பேதையிர்பேத்துகிறீ
ரொருமுட்டும்வீட்டுமரணமென்றைக்குமோதுமினே. (ருக)

மையாடுகண்ணியுமைந்தரும்வாழ்வுமனையுஞ்செந்தீ
யையாநின்மாயையுருவெளித்தோற்றமகிலத்துள்ளே
மெய்யாயிருந்ததுநாட்செலநாட்செலவெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே (ருஉ)

ஆயாய்பலகலையாய்ந்திடுந்தூயவருந்தவர்பாற்
போயாகிலுமுண்மையைத்தெரிந்தாயில்லைபூதலத்தில்
வேயார்ந்ததோளியர்காமவிகாரத்தில்வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின்றனைமனமேயென்னபித்துனக்கே. (ருங)

அடியாருறவுமரன்பூசைநேசமுமன்புமன்றிப்
படிமீதில்வேறுபயனுளதோபங்கயன்வகுத்த
குடியானசுற்றமுந்தாரமும்வாழ்வுங்குயக்கலங்கள்
தடியாலடியுண்டவாறொக்குமென்றினஞ்சார்ந்திலரே. (௫௪)

ஆங்காரப்பொக்கசங்கோபக்களஞ்சியமாணவந்தா
னீங்காவரண்மனைபொய்வைத்தகூடம்விண்ணீடிவளர்
தேங்கார்பெருமதிற்காமவிலாசமித்தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந்தெப்படிஞானம்பலிப்பதுவே. (௫௫)

ஒழியாப்பிறவியெடுத்தேங்கியேங்கியுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக்கவுடதங்கேட்டியறுதியனை
மழுமான்கரத்தனைமால்விடையானைமனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்திவிம்மியழுநன்மைவேண்டுமென்றே. (௫௬)

நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாக்குவராரதருந்துவராரதுபோலுடம்பு
ஈக்கிரையாவதல்லாலேதுக்காமிதைச்செப்புமினே. (௫௭)

கச்சிற்கிடக்குங்கனதனத்திற்கடைக்கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்றவேழைநெஞ்சேயிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடியுண்ணாமுலைபங்கர்பாதத்திலே
தைச்சுக்கிடமனமேயொருகாலுந்தவறில்லையே. (௫௮)

மானார்விழியைக்கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோனாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனாலும்பேறிருந்தாலுநற்பேறிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே. (௫௯)

சற்றாகினுந்தன்னைத்தான்றியாய்தனையாய்ந்தவரை
யுற்றாகிலுமுரைக்கப்பொருந்தாயுனக்கானநிலை
பற்றாய்குருவைப்பணியாய்பரத்தையர்பாலிற்சென்றென்
பெற்றாய்மடநெஞ்சமேயுனைப்போலில்லைபித்தனுமே. (௬௦)

உளியிட்டகல்லையுமொப்பிட்டசாந்தையுமூத்தையறப்
புளியிட்டசெம்பையும்போற்றுகிலேனுயர்பொன்னெனவே
யொளியிட்டதாளிரண்டுள்ளேயிருத்துவதுண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும்வேண்டிலனே.

திருச்சிற்றம்பலம்.

தாயாருக்குத் தகனகிரியை
செய்கையிற் பாடிய
வெண்பா.

ஐயிரண்டுதிங்களாவங்கமெலாநொந்துபெற்றுப்
பையவென்றபோதேபரிந்தெடுத்துச் – செய்யவிரு
கைப்புறத்திலேந்திக்கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி. (க)

முந்தித்தவங்கிடந்துமுந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனையாதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். (உ)

வட்டிலிலுந்தொட்டிலிலுமார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலிலும்வைத்தென்னைக்காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். (ந)

நொந்துசுமந்துபெற்றுநோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத்தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன். (ச)

அரிசியோநானிடுவேனாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்துமகிழாம – லுருசியுள்ள
தேனேயமிர்தமேசெல்வத்திரவியபு
மானேயெனவழைத்தவாய்க்கு. (ரு)

அள்ளியிடுவதரிசியோதாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோகூசாமன் - மெள்ள
முகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. (சு)

விருத்தம்.

முன்னையிட்டதீமுப்புரத்திலே
பின்னையிட்டதீதென்னிலங்கையி
லன்னையிட்டதீயடிவயிற்றிலே
யானுமிட்டதீமூள்கமூள்கவே. (எ)

வெண்பா.

வேகுதேதீயதனில்வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியேனையகோ – மாகக்
குருவிபறவாமற்கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்தகை. (அ)

வெந்தாளோசோணகிரிவித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னைமறந்தாளோ - சந்ததமு
முன்னையேநோக்கியுகந்துவரங்கிடந்தென்
றன்னையேயீன்றெடுத்ததாய். (௯)

வீற்றிருந்தாளன்னைவீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்துநீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்களேதென்றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். (௧0)

இடைமருது.

மென்றுவிழுங்கிவிடாய்கழிக்கநீர்தேட
லென்றுவிடியுமெனக்கென்கோவே-நன்றி
கருதார்புரமூன்றுங்கட்டழலாற்செற்ற
மருதாவுன்சந்நிதிக்கேவந்து. (௧)

ஒற்றி.

கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போலவழகியதாந் - தொண்ட
ருடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு. (௨)

ஒடுவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன் - கூடுவருந்துந்
தேவாதிதேவன்திருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி. (௩)

வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர் - பூவுலகி
லீதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றியூர். (௪)

திருவாரூர்.

ஆரூரரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென்
றூரூர்கடோறுமுழலுவீர் - நேரே
யுளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர். (௫)

எருவாய்க்கிருவிரன்மேலேழுபுழுக்கூட்டுக்
கருவாய்க்கேகண்கலக்கப்பட்டாய் - திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடந்தாயே
நீரோடுந்தாரைக்கேநீ. (௬)

திருக்காஞ்சி.

எத்தனையூரெத்தனைவீடெத்தனைதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்கவேனென்றே - னித்த
மெனக்குக்களையாற்றுயேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ. (எ)

கச்சிக்காரோணம்.

அத்திமுதலெறும்பீறுனவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா - மெத்தப்
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரே. (அ)

திருக்காளத்தி.

பொய்மையொழியாய்புலாலைவிடாய்காளத்தி
யையனையெண்ணயறஞ்செய்யாய் - வெய்ய
சினமேயொழியாய்திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்னமாண்பு. (கூ)

திருவிருப்பையூர்.

மாதாவுடல்சலித்தாள்வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்துவிட்டானே - நாதா
விருப்பையூர்வாழ்சிவனேயின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற்கா. (கo)

திருவையாறு.

மண்ணுந்தணலாறவானும்புகையாற
வெண்ணரியதாயுமிளைப்பாறப் - பண்ணுமயன்
கையாறவுமடியேன்காலாறவுங்கண்பா
ரையாதிருவையாறு. (கக)

குற்றாலம்.

காலன்வருமுன்னேகண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னேயூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு. (கஉ)

பொது.

சிற்றம்பலமுஞ்சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடிவிட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதேபேதைமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதேகண். (க)

தோடவிழும்பூங்கோதைத்தோகையுனையிப்போது
தேடினவர்போய்விட்டார்தேறியிரு - நாடிநீ
யென்னைநினைத்தாலிடுப்பிலுதைப்பேனு
னுன்னைநினைத்தாலுதை. (உ)

வாசற்படிகடந்துவாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லையண்ணலே - யாசைதனைப்
பட்டிறந்தகாலமெலாம்போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச்சொல். (௩)

நச்சரவம்பூண்டானைநன்றூத்தொழுவதுவு
மிச்சையிலேதானங்கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும்வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந்தானேசுகம். (௪)

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன் - பெருக்க
வழைத்தாலும்போகேனரனேயென்றேக
மிளைத்தாலும்போகேனினி. (௫)

விட்டுவிடப்போகுதுயிர்விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகின்றூர்சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனையேத்துங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவேசுகம். (௬)

ஆவியொடுகாயமழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம்படையாதே - மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும்வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலேதிரி. (௭)

வெட்டவெளியானவெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணுதே - இட்டமுடன்
பற்றென்றூற்பற்றூதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவேவைத்தவினிப்பு. (அ)

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பைநம்பியிருப்பரோநெஞ்சகமே
வைப்பிருக்கவாயின்மனையிருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண்மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக்கண்டு (௯)

மேலுமிருக்கவிரும்பினையேவெள்விடையோன்
சீலமறிந்திலையேசிந்தையே - கால்கைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டுக்குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச்சுட்டுவிடக்கண்டு. (௧௦)

ஒன்பதுவாய்த்தோற்பைக்கொருநாளைப்போலவே
யன்புவைத்துநெஞ்சேயலைந்தாயே - வன்கழுக்க
டத்தித்தத்திச்சட்டைதட்டிக்கட்டிப்புட்டுக்
கத்திக்குத்தித்தின்னக்கண்டு. (கக)

இன்னம்பிறக்கவிசைவையோநெஞ்சமே
மன்னரிவரொன்றிருந்துவாழ்ந்தவரை - முன்ன
மெரிந்தகட்டைமீதிலிணைக்கோவணத்தை
யுரிந்துருட்டிப்போட்டதுகண்டு. (கஉ)

முதற்சங்கமுதூட்டுமொய்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்குபூட்டுங் - கடைச்சங்க
மாம்போதனவூதுமம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமிவாழ்ந்தநலம். (கங)

எத்தனைநாள்கூடியெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்பதல்லவோ - வித்தகனார்
காலைப்பிடித்துமெள்ளக்கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப்போமே. (கச)

எச்சிலென்றுசொல்லியிதமகிதம்பேசாதே
யெச்சிலிருக்குமிடமறியீ - ரொச்சிறனை
யுய்த்திருந்துபார்த்தாலொருமைவெளிப்படும்பின்
சித்தநிராமயமாமே. (கரு)

எத்தனைபேர்நட்டகுழியெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபேர்பற்றியிழுத்தவிதழ் - நித்தநித்தம்
பொய்யடாபேசும்புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடாவுய். (கசா)

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந்தீங்கினைநீயுன்னாதே - பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்பநாய்நரிகள்பேய்கழுகு
தம்மதென்றுதாமிருக்குந்தான். (கஎ)

எத்தொழிலைச்செய்தாலுமேதவத்தைபட்டாலு
முத்தர்மனமிருக்குமோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளையாடியிருகைவீசிவந்தாலுந்
தாதிமனநீர்க்குடத்தேதான். (கஅ)

மாலைப்பொழுதினறுமஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினக்கிட்டுவிழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள்பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள்பின். (கசு)

மக்கள்சுற்றத்தாசைமறக்கேனேயென்குதே
திக்கரசாமாசையதுதீரோனேயென்குதே.

வித்தைகற்குமாசையதுவிட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசைசிதையேனேயென்குதே.

மந்திரத்திலாசைமறக்கேனேயென்குதே
சுந்தரத்திலாசைதுறக்கேனேயென்குதே.

சுட்டுவர்க்கத்தாசைகழலேனேயென்குதே
செட்டுதனிலாசைசிதையேனேயென்குதே.

மாற்றுஞ்சலவைமறக்கேனேயென்குதே
சேர்ற்றுக்குழியுமின்னந்தூரோனேயென்குதே, (க0)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

ஐந்துபுலனுமடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந்தேறேனேயென்குதே.

காமக்குரோதங்கடக்கேனேயென்குதே
நாமேயரசென்றுநாடோறுமெண்ணுதே.

அச்சமாங்காரமடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங்கழலேனேயென்குதே.

நீர்க்குமிழியாமுடலைநித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுயராசையழியேனேயென்குதே.

கண்ணுக்குக்கண்ணொதிரேகட்டையில்வேகக்கண்டும்
எண்ணுந்திருமாயிருப்போமென்றெண்ணுதே.

அநித்தியத்தைநித்தியமென்றாதரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதேதனைமறக்கேனென்குதே.

நரகக்குழியுமின்னுநான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்குலுனைக்கெடுப்பேனென்குதே.

குரும்பைமுலையுங்குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிழியுமென்றனுவியுண்பேனென்குதே.

மாதருருக்கொண்டுமறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங்கரக்காயுருகிறண்டா.

கந்தனையீன்றருளுங்கன்னிவனநாதா
எந்தவிதத்திலுனேறிப்படருவண்டா. (உ0)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

புல்லாகிப்பூடாய்ப்புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க்கழிந்தநாள்போதாதோ.

கிரியாய்க்கிடமாய்க்கெட்டநாள்போதாதோ
கீரியாயூர்வனவாய்நின்றநாள்போதாதோ.

பூதமொடுதேவருமாய்ப்போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய்வீந்தநாள்போதாதோ.

அன்னைவயிற்றிலழிந்தநாள்போதாதோ
மன்னவனாய்வாழ்ந்துமரித்தநாள்போதாதோ.

தாயாகித்தாரமாய்த்தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச்சென்றநாள்போதாதோ.

நோயுண்ணவேமெலிந்துநொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப்பிறந்தநாள்போதாதோ.

ஊனவுடல்கூன்குருடாயுற்றநாள்போதாதோ
ஈனப்புசிப்பிலிளைத்தநாள்போதாதோ.

பட்டகளையும்பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டேனென்றுகேளாதும்போதாதோ.

இல்லாமைக்கேயழுதுநின்றநாள்போதாதோ
எல்லாருமென்பாரமெடுத்தநாள்போதாதோ.

காமன்கணையாற்கலைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தாலிடியுண்டல்போதாதோ.

நான்முகன்பட்டோலைநறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமிதேக்குண்டல்போதாதோ.

உருத்திரனார்சங்காரத்துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலைவாவென்றழைத்தையிலை. (௩௨)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலைபின்னாகக்கொண்டையிலை
இறப்பைத்தவிர்த்தையிலையென்னென்றுகேட்டையிலை.

பாசமெரித்தையிலைபரதவிப்பைத்தீர்த்தையிலை
பூசியநீற்றைப்புனையென்றளித்தையிலை.

அடிமையென்றுசொன்னையிலையக்குமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுன்றன்வேடமளித்தையிலை.

உன்னிலழைத்தையிலையொன்றாக்கிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தினீயழைத்துவைத்தையிலை.

ஒங்குபரத்துளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியானெமக்கென்றுரைத்தையிலை.

நாமந்தரித்தையிலை நானொழியநின்றையிலை
சேமவருளிலெனைச்சிந்தித்தழைத்தையிலை.

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை
சித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை.

தவிர்ப்பைத்தவிர்த்தையிலை தானாக்கிக்கொண்டையிலை
அவிப்பரியதீயாமென்னாசைதவிர்த்தையிலை.

நின்றநிலையினிறுத்தியெனைவைத்தையிலை
துன்றுங்கரணமொடுதொக்கழியப்பார்த்தையிலை.

சட்டவுலகக்காட்சிக்கட்டொழியப்பார்த்தையிலை
நிட்டையிலேநில்லென்றுநீநிறுத்திக்கொண்டையிலை. (௬௨)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக்கிட்டிவரப்பாரோடா.

காதல்தணியேனோகண்டுமகிழேனோ
சாதல்தவிரேனோ சங்கடந்தான்தீரேனோ.

உன்னைத்துதியேனோவூர்நாடிவாரேனோ
பொன்னடியைப்பாரேனோபூரித்துநில்லேனோ.

ஓங்காரப்பொற்சிலம்பினுல்லாசம்பாரேனோ
பாங்கானதண்டைபலபணியும்பாரேனோ.

வீரகண்டாமணியின்வெற்றிதனைப்பாரேனோ
சூரர்கண்டுபோற்றுமந்தச்சுந்தரத்தைப்பாரேனோ.

இடையில்புலித்தோலிருந்தநலம்பாரேனோ
விடையிலெழுந்தருளும்வெற்றிதனைப்பாரேனோ.

ஆனையுரிபோர்த்தவழகுதனைப்பாரேனோ
மானைப்பிடித்தேந்துமலர்க்கரத்தைப்பாரேனோ.

மாண்டார்தலைபூண்டமார்பழகைப்பாரேனோ
ஆண்டார்நமக்கென்றமைந்துதிரியேனோ.

கண்டங்கறுத்துநின்றகாரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழுவினின்றதோற்றமதைப்பாரேனோ.

அருள்பழுத்தமாமதியாமானநத்தைப்பாரேனோ
திருநயனக்கடையொளிருஞ்செழுங்கொழுமைபாரேனோ.

செங்குமிழின்றுண்டம்வளர்சிங்காரம்பாரேனோ
அங்கனியைவென்றவதரத்தைப்பாரேனோ.

முல்லைநிலவெறிக்குமூரலொளிபாரோனோ
அல்லார்புருவத்தழகுதனைப்பாரோனோ.

மகரங்கிடந்தொளிரும்வண்மைதனைப்பாரோனோ
சிகரமுடியழகுஞ்செஞ்சடையும்பாரோனோ.

கங்கையொடுதிங்களணிந்தகாட்சிதனைப்பாரோனோ
பொங்கரவைத்தானசடையிற்பூண்டவிதம்பாரோனோ.

சரக்கொன்றைபூத்தசடைக்காட்டைப்பாரோனோ
எருக்கறுகூமத்தையணியேகாந்தம்பாரோனோ.

கொக்கிறகுசூடிநின்றகொண்டாட்டம்பாரோனோ
அக்கினியையேந்திநின்றவாநந்தம்பாரோனோ.

தூக்கியகாலுந்துடியிடையும்பாரோனோ
தாக்குமுயலகன்மேற்றாண்டவத்தைப்பாரோனோ.

வீசுகரமும்விகசிதமும்பாரோனோ
ஆசையளிக்குமபயகரம்பாரோனோ.

அரிபிரமர்போற்றவமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர்பேரழகைப்பாரோனோ.

சுந்தரநீற்றின்சொகுசுதனைப்பாரோனோ
சந்திரசேகரனையத்தயவுசெய்தல்பாரோனோ. (௯௭)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கெட்டநாள்கெட்டாலுங்கிருபையினிப்பாரோடா
பட்டநாள்பட்டாலும்பதமெனக்குக்கிட்டாதோ.

நற்பருவமாக்குமந்தநாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்றவேகாந்தங்கிட்டாதோ.

வாக்கிறந்துநின்றமவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத்தற்சுத்திகிட்டாதோ.

வெந்துயரைத்தீர்க்குமந்தவெட்டவெளிகிட்டாதோ
சிந்தையையந்தீர்க்குமந்தத்தேறலதுகிட்டாதோ.

ஆனவடியார்க்கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னையுணர்த்துவித்தல்கிட்டாதோ.

என்னென்றுசொல்லுவண்டாவென்குருவேகேளடா
பின்னையெனக்குநீயல்லாற்பிறிதிலையே. (௯௮)

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

அன்னவிகாரமதுவற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிகாரந்தொலைந்தவிடங்கிட்டாதோ.

உலகவிகாரமொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார்வசியாதுங்கிட்டாதோ.

ஒப்புவமைபற்றொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத்தெளிந்தவிடங்கிட்டாதோ.

வாக்குமனாதீதவகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின்றாளிணைக்கேயான்போற்றி. (எ௨)

பட்டணத்தார் முதல்வன் முறையீடு
முற்றிற்று.

அருட்புலம்பல்.

ஐங்கரனைத்தெண்டனிட்டேனருளடையவேண்டுமென்று
தங்காமல்வந்தொருவன்றற்சொருபங்காட்டியெனை.

கொள்ளைப்பிறப்பறுக்கக்கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

ஆதாரமோராறுமைம்பத்தோரக்ஷரமும்
சூதானகோட்டையெல்லாஞ்சுட்டான்றரிசறவே.

மெத்தவிகாரம்விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந்தலைகெட்டுவெந்ததடி.

என்னோடுடன்பிறந்தாரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியேதரித்திருக்கமாட்டேண்டி.

எல்லாரும்பட்டகளமென்றுதொலையுமடி
சொல்லியழுதாற்றுயரமெனக்காறுமடி.

மண்முதலாமைம்பூதமாண்டுவிழக்கண்டேண்டி
விண்முதலாமைம்பொறிகள்வெந்துவிழக்கண்டேண்டி.

நீக்காப்புலன்களைந்துநீறாகவெந்ததடி
வாக்காதியைவரையுமாண்டுவிழக்கண்டேண்டி.

மனக்கரணமத்தனையும்வகைவகையேமட்டழிய
இனக்கரணத்தோடேயெரிந்துவிழக்கண்டேண்டி.

ஆத்துமதத்துவங்கள்அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோபோதமிழந்தானே.

வித்தியாதத்துவங்கள்வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையைந்தினையுஞ்சுட்டான்றரிசறவே.

மூன்றுவகைக்கிளையுமுப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக்கருவேரறுத்தாண்டி.

குருவாகிவந்தானோகுலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோவுருவழிக்கவந்தானோ.

கேடுவருமென்றறியேன்கெடுமதிகண்டோற்றாமல்
பாடுவருமென்றறியேன்பதியாண்டிருந்தேண்டி.

எல்லாரும்பட்டகளமின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும்பொறியிலியைக்கண்டேண்டி.

உட்கோட்டைக்குள்ளிருந்தாரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைக்குள்ளிருந்தாரறுபதுபேர்பட்டார்கள்

ஒக்கமடிந்ததடியூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாங்கரிக்கோட்டையாச்சுதடி. (௧௭)

தொண்ணூற்றறுவரையுஞ்சுட்டான்றுரிசறவே
கண்ணேறுபட்டதடிகருவேரறுத்தாண்டி.

ஓங்காரங்கெட்டதடியுள்ளதெல்லாம்போச்சுதடி.
ஆங்காரங்கெட்டதடியடியோடறுத்தாண்டி.

தரையாங்குடிலைமுதல்தட்டுருவவெந்ததடி
இரையுமனத்திடும்பையெல்லாமறுத்தாண்டி.

முன்னைவினையெல்லாமுழுதுமறுத்தாண்டி
தன்னையறியவேதானொருத்தியானேண்டி.

என்னையேநானறியவிருவினையுமீடழித்துத்
தன்னையறியத்தலமெனக்குச்சொன்னாண்டி.

தன்னையறிந்தேண்டிதனிக்குமரியானேண்டி
தன்னந்தனியேதனியிருக்கும் பக்குவமோ.

வீட்டிலொருவரில்லைவெட்டவெளியானேண்டி
காட்டுக்கெறித்தநிலாகனவாச்சேகண்டதெல்லாம்.

நகையாரோகண்டவர்கள்நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள்பார்த்தாருக்கேச்சலவோ.

இந்நிலைமைகண்டாண்டியெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டிகற்பைக்குலைத்தாண்டி.

கற்புக்குலைத்தமையுங்கருவேரறுத்தமையும்
பொற்புக்குலைத்தமையும்போதமிழந்தமையும்.
என்னவினைவருமோவின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம்பலித்ததடிசோர்வறவே.
கங்குல்பகலற்றிடத்தேகாட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டிபார்த்தானைப்பார்த்திருந்தேன்.

சாதியிற்கூட்டுவரோசாத்திரத்துக்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லாமுள்ளபடியாச்சுதடி.

என்னகுற்றஞ்செய்தேனோவெல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லாமறியாரோவம்புவியில்.

கொன்றானைத்தின்றேனோதின்றானைக்கொன்றேனோ
எண்ணாததெல்லாமெண்ணுமிச்சைமறந்தேனோ.

சாதியிற்கூட்டுவரோசமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம்பேச்சுக்கிடமாச்சுதடி.

கண்டார்க்குப்பெண்ணலவோகாணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெலாமுணலாதுண்பர்களோ.

கொண்டார்கள்கொண்டதெல்லாங் கொள்ளாதார்கொள்ளுவ
விண்டவர்கள்கண்டவரோகண்டவர்கள்விண்டவரோ. [ரோ

பண்டாயநான்மறைகள்பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந்தோற்றியொடுங்குமதோ.

ஓதவரிதோவொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும்விளங்கும்பெருமையன்காண். (கூஎ)

வாக்குமனமுங்கடந்தமனோலயன்காண்
நோக்கவரியவன்காணுண்ணியரினுண்ணியன்காண்.

சொல்லுக்கடங்கான்காண்சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோனின்றவன்காண்.

சுட்டிறந்தபாழ்தனிற்சுகித்திருக்கச்சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோவெழுதினவன்கைப்பிழையோ.

சும்மாவிருக்கவைத்தான்சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதெனவடையவிழுங்கினண்டி.

பார்த்தவிடமெல்லாம்பரமாகக்கண்டேனடி
கோத்தநிலைகுலைத்தகொள்கையறியேனடி.

மஞ்சனமாட்டிமலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானேனின்றநிலைகாணேனடி.

பாடிப்படித்திருந்தும்பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாமலுருக்கெட்டுவிட்டேனடி.

மாணிக்கத்துள்ளொளிபோல்மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார்பேசாப்பெருமையன்காண்.

அன்றுமுதலின்றளவுமறியாப்பருவமதில்
என்றும்பொதுவாயிருந்தநிராமயன்காண்.

சித்தவிகாரத்தாலேசின்மயனைக்காணாமல்
புத்திகலங்கிப்புகுந்தேன்பொறிவழியே.

பத்தியறியாமற்பாழிற்கவிழ்ந்தேனடி
ஒத்தவிடமித்திரையென்றொத்துமிருந்தேனடி.

செத்தாரையொத்தேனடிசிந்தைதெளிந்தேனடி
மற்றொருமில்லையடிமறுமாற்றங்காணேனடி.

கல்வியல்லகேள்வியல்லகைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடியெங்குநிறைந்ததடி.

வாசாமகோசரத்தைமருவியிடங்கொண்டாண்டி
ஆசுசமில்லாண்டியறிவுக்கறிவாண்டி.

பத்துத்திசைக்குமடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்குமிடைவிடாதேகமடி.

தித்திக்கவூறுமடிசித்தமுடையார்க்குப்
பத்திக்கட்டுட்படித்தபரஞ்சோதியடி.

உள்ளுணர்வாய்நின்றவர்தமுணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளதிலேயேறிக்குறையாண்டி.

தூருந்தலையுமிலான்றோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாமலகண்டமாய்நின்றாண்டி.

எத்தனையோவண்டத்திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலுமணுவுங்குறையாண்டி.

வாக்குமனமும்வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான்பொருவரியபூரணன்காண். (௬௭)

காட்சிக்கெளியான்காண்கண்டாலுங்காணான்காண்
மாட்சிமனம்வைத்தார்க்குமாணிக்கத்துள்ளொளிகாண்.

வாழ்த்தியவனைவழிபட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண்சொல்லிறந்தசோதியன்காண்.

ஐயம்றுத்தவனையாராய்வாருண்டானால்
வையகத்தேவந்துமலர்ப்பாதம்வைத்திடுவான்.

அணுவுக்குமேருவுக்குமகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றுஞானக்கரும்பின்றெளிவான்காண்.

எந்நாளுமிந்நாளுமிப்படியாயப்படியாய்ச்
சொன்னாலுங்கேளான்காண்சோத்திரத்திற்கொள்ளான்காண்

ஆத்தாளுக்காத்தாளாமப்பனுக்குமப்பனுமாம்
கோத்தார்க்குக்கோத்தநிலைகொண்டகுணக்கடல்காண்.

இப்போபுதிதோடியெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போதருளறிவுந்தந்தாண்டி.

பற்றற்றார்பற்றாகப்பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டிகூடியிருந்தாண்டி.

வெட்டவெளியிலெனைமேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடிபார்த்திருந்தாரெல்லோரும்.

வாழ்வானவாழ்வெனக்குவந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டிசற்றுங்குறையாமல்.

பொய்யானவாழ்வெனக்குப்போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்குவெறும்பாழாய்விட்டதடி.

கன்னியழித்தவனைக்கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியேனீதென்னமாயமடி.

சொல்லாலேசொல்லுதற்குச்சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்துமிப்போதறியார்கள்.

கண்மாயமிட்டாண்டிகருத்துமிழந்தேண்டி
யுண்மாயமிட்டவனையுருவழியக்கண்டேண்டி.

என்னசொல்லப்போறேனானிந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகுகாய்த்ததடிகண்ணார.

ஆர்ந்தவிடமத்தனையுமருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாஞ்சவாதுமணக்குதடி.

இந்தமணமெங்குமியற்கைமணமென்றறிந்து
அந்தசுகாதீதத்தருட்கடலில்மூழ்கினண்டி.

இரும்புநிறைநீர்போலவெனைவிழுங்கிக்கொண்டாண்டி.
அரும்புநிறைவாசனைபோலன்றேயிருந்தாண்டி.

அக்கினிகற்பூரத்தையறவிழுங்கிக்கொண்டாற்போல்
மக்கினம்பட்டுள்ளேமருவியிருந்தாண்டி.

கடல்நீருமாறும்போற்கலந்துகரைகாணேண்டி
உடலுமுயிரும்போலுட்கலந்துநின்றாண்டி (ருஎ)

பொன்னுமுரைமாற்றும்போற்பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடிமாணிக்கத்துள்ளொளிபோல்.

கங்குகரையில்லாண்டிகரைகாணக்கப்பலடி
எங்குமளவில்லாண்டியேகமாய்நின்றாண்டி.

தீவகம்போலென்னைச்சேர்ந்தபரசின்மயன்காண்
பாவகமொன்றில்லாண்டிபார்த்திடமெல்லாம்பரங்காண்

உள்ளார்க்குமுள்ளாண்டியூருமில்லான்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

அப்பிறப்புக்கெல்லாம்அருளாயமர்ந்தாண்டி.
இப்பிறப்பில்வந்தாணிவனுகுமெய்ப்பொருள்காண்.

நீரொளிபோலெங்குநிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும்பரந்தபராபரன்காண்.

நூலாலுணர்வரியநுண்மையினுநுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற்பரந்தபரிபூரணன்காண்.

உளக்கண்ணுக்கல்லாதூன்கண்ணாலோருமதோ
விளக்குச்சுடரொளிபோன்மேவியிருந்தாண்டி.

கல்லுளிருந்தகனலொளிபோற்காரணமாய்ப்
புல்லியிருந்தும்பொருவரியபூரணன்காண்.

பொற்பூவும்வாசனைபோற்போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற்காணுக்கயலவருக்கு.

மைக்குழம்புமுத்தும்போன்மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங்கருவறுத்தகாரணர்க்கு.

பளிங்கிற்பவளமடிபற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சியைவெள்ளியென்பார்கிட்டாதார்கிட்டுவரோ.

ஏட்டுக்கடங்காண்டியெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லாநம்புரவிசெய்தாண்டி.

அஞ்சப்பிரளயத்துமிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்றுணயனத்தழல்விழியான்.

அகங்காக்கும்புறங்காக்கும்அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத்திசைபத்துங்காக்குமடி.

பேசாப்பிரமமடிபேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள்அணுகாதபேரொளிகாண்.

தேசமிறந்தவன்காண்திசையிறந்ததெண்கடல்காண்
ஊசிமுனையூன்றவில்லாவுறுபொருள்காண்.

சிப்பியின்முத்தொளிகாண்சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோலமர்ந்தவரும்பொருள்காண்.

ஆலாவிருட்சமடியளவிலாச்சாகையடி.
மேலாம்பதங்கள்விசும்பூடுருவுமெய்ப்பொருள்காண்.

வங்கிஷமெல்லாங்கடந்துமருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும்ஆய்ந்தவரும்பொருள்காண்.

நாமநட்டமானதடிநவிலவிடமில்லையடி
காமனைக்கண்ணாலெரிக்கக்கனல்விழித்தகாரணன்காண்.

கொட்டாதசெம்பொனடிகுளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடியீப்புகாத்தேனமுதம்.

காணிப்பொன்னாணியுடன்கல்லுரைமாற்றின்னதென்றே
ஆணியுடன்கூட்டியடங்கலிட்டுக்கொண்டாண்டி.

அளவிறந்தவண்டத்தாரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும்பேசாப்பிரமமடி.

கன்னெஞ்சினுள்ளேகழுநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளேயிணையடிகள்வைத்தாண்டி.

வேதப்புரவியடிவிரைந்தோடியும்மறியார்
காதற்றஞானமடிகாண்பார்கருத்துடையோர்.

பாசவினையைப்படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடிநில்லென்றுசொன்னாண்டி.

ஓசையொடுங்குமிடமோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும்பிரமமிதுவென்றாண்டி.

சின்மயநன்னோக்காற்சிற்சுருபங்காட்டியெனைத்
தன்மயமாயாக்கியேதானவனாய்நின்றாண்டி.

தானென்னைப்பார்த்தாண்டிதன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டிநவிலவிடமில்லையடி.

இன்றிருந்துநாளைக்கிறக்கிறபேரெல்லாரும்
என்றும்பரிபூரணத்திலினிதிருக்கச்சொன்னாண்டி.

பார்க்கிலெளிதலவோபற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்டவவனிதனில்வந்தாண்டி.

இத்தனைகாலமடியிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடியிரும்பினுமைநீரானேன்.

எக்காலம்பட்டதடியிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனானரகில்.

காலங்கழிந்ததடிகர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவுநாமநட்டமாச்சுதடி.

முப்பாழுக்கப்பால்முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிக்கொண்டான்காண்.

பாலின்கணெய்யிருந்தாற்போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய்தமவிழுங்கிக்கொண்டாண்டி.

தெத்தபடமானேண்டிதீயிரும்பினீரானேன்
ஒத்தவிட்கித்திரையென்றோதுமுணர்வறிந்தேன்.

ஒப்புமுவமையுமற்றோதவரிதாயபொருள்
இப்பூவினிற்குருவேயென்னவந்தோன்றாள்வாழி.

ஒப்பாரிசொல்லிடினுமுவமைபிழைத்திடினும்
முப்பாழுங்கற்றுணர்ந்தோர்முன்னோர்பொறுத்தருள்வார்.

அருட்புலம்பல் — முற்றும்பெற்றது.

பட்டணத்துப்பிள்ளையார்

இறந்தகாலத்திரங்கல்.

வார்த்தைத்திறமில்லாமனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச்சதுரிழந்துகெட்டேனே.

மெத்தமெத்தச்செல்வாக்கில்வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த்தாணடந்துகெட்டேனே.

வழக்கந்தலங்களினுமண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற்பதியிழந்துகெட்டேனே.

ஆணிபொருந்துமரும்பூமியத்தனையுங்
காணிநமதென்றுகனம்பேசிக்கெட்டேனே.

ஆசாரமில்லாவசடருடன்கூடிப்
பாசாங்குபேசிப்பதியிழந்துகெட்டேனே.

குருமார்க்கமில்லாக்குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளேகருத்தழிந்துகெட்டேனே.

ஆலமருந்துமரன்பெருமையெண்ணமல்
பாலர்பெண்டீர்மெய்யென்றுபதியிழந்துகெட்டேனே.

பிணவாசமுற்றபெருங்காயமெய்யென்று
பணவாசையாலேபதியிழந்துகெட்டேனே.

கண்டபுலவர்கனக்கவேதான்புகழ
உண்டவுடம்பெல்லாமுப்பரித்துக்கெட்டேனே.

எண்ணிறந்தசென்மமெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற்பதியிழந்துகெட்டேனே.

சிற்றெறும்புசற்றுந்தீண்டப்பொறாவுடம்பை
உற்றுறுச்சவுஞ்சுடவுமொப்பித்துமாண்டேனே.

தன்னுடம்புதானேதனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாமலின்பமென்றுமாண்டேனே.

தோலெலும்புமாங்கிஷமுந்தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புஞ்சுற்றமென்றுவீறுப்பாய்மாண்டேனே.
போக்குவரத்தும்பொருள்வரத்துங்காணாமல்
வாக்கழிவுசொல்லிமனமறுகிக்கெட்டேனே.

இறந்தகாலத்திரங்கல்
முற்றுப்பெற்றது.

பட்டணத்துப்பிள்ளையார்

நெஞ்சொடுபுலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டிமாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்றதேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங்கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போலலைந்தனையேநெஞ்சமே. (௧)

புட்பாசனவணையிற்பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணியோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்றிமுயங்கிலையேநெஞ்சமே. (௨)

முப்பாழும்பாழாய்முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானின்றாடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பியேற்றவர்க்கொன்றீயாமல்
துப்பாழாய்வந்தவினைசூழ்ந்தனையேநெஞ்சமே. (௩)

அன்னம்பகிர்ந்திங்கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ்சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற்பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாகவெண்ணினையேநெஞ்சமே. (௪)

முற்றொடர்பிற்செய்தமுறைமையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றோமென்றெண்ணாதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாமலரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற்கண்மறந்துவிட்டனையே. (௫)

மாணிக்கமுத்துவயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்காதனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன்கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே. (௬)

கற்கட்டுமோதிரநற்கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்றத்திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர்பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே. (௭)

முன்னநீசெய்ததவமுப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும்பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச்சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற்காட்டியற்றாய்நெஞ்சமே. (அ)

பையரவம்பூண்டபரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பறித்துத்தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங்காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிருமாந்துவிட்டனையேநெஞ்சமே. (௯)

மாதுக்கொருபாகம்வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும்போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்தமண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீயெண்ணினையேநெஞ்சமே. (௧0)

அஞ்சருளைப்போற்றியைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்குநினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கிமறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச்சிந்தைசெய்வாய்நெஞ்சமே. (௧௧)

அற்புதமாயிந்தவுடலாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித்தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன்உடைமைபெருவாழ்வைநம்பிச்
சர்ப்பத்தின்வாயிற்றவளைபோலானேனே (௧௨)

உற்றாரார்பெற்றாருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென்மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங்கன்றதுபோலேயுருகிச்
சிற்றுகிச்சிற்றின்பஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௧௩)

வீடிருக்கத்தாயிருக்கவேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப்பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கன்றிருக்கவைத்தபொருளிருக்கக்
கூடிருக்கநீபோனகோலமென்னகோலமே (௧௪)

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்தும்பரிமளமும்
விந்தைகளாப்பூசிமிகுவேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்றகன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனாயென்றெண்ணிலையேநெஞ்சமே. (௧௫)

காற்றுத்துருத்திகடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தையுண்டென்றிறுமாந்து
பார்த்திரங்கியன்னம்பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போலவளாவினையேநெஞ்சமே. (௧௬)

நீர்க்குமிழிவாழ்வைநம்பிநிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவுமன்னம்பசித்தோர்க்களியாமல்
போர்க்குளெமதூதன்பிடித்திழுக்கும்போது
ஆர்ப்படுவாரொன்றேயறிந்திலையேநெஞ்சமே. (கஎ)

சின்னஞ்சிறுநுதலாள்செய்தபலவினையான்
முன்னந்தமார்பின்முளைத்தசிலந்திவிம்மி
வன்னந்தளதளப்பமயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ணவறிந்திலையேநெஞ்சமே. (கஅ)

ஓட்டைத்துருத்தியையுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்தரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்துவெளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்றுகருதிலையேநெஞ்சமே. (கசு)

ஊன்பொதிந்தகாயமுளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீசற்குருவைப்போற்றாமல்
கான்பரந்தவெள்ளங்கரைபுரளக்கண்டேகி
மீன்பரந்தாற்போலேவிசாரமுற்றாய்நெஞ்சமே. (உ0)

உடக்கையொருக்கியுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்றுசார்ந்தங்கிழுமாந்தை
உடக்கைத்தகர்த்தேயுயிரையமன்கொள்கையிலே
யடக்கமாய்வைத்தபொருளங்குவாமாட்டாதே. (உக)

தித்திக்குந்தேனைத்தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தானமுப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன்பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினைசூழ்ந்தனையேநெஞ்சமே. (உஉ)

அஞ்செழுத்தாயெட்டெழுத்தாயைம்பத்தோரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய்நின்றபெருமானைப்போற்றாமல்
வஞ்சகமாயுற்றமுலைமாதர்வலைக்குள்ளாகிப்
பஞ்சரித்துத்தேடிப்பாழுக்கிறைத்தோமே. (உங)

அக்கறுகுகொன்றைதும்பையம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத்தொழுதுவணங்காமல்
மக்கள்பெண்டிர்சுற்றமுடன்வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென்றெண்ணினையேநெஞ்சமே. (உச)

ஆண்டகுருவினருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாயவீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதுநல்லார்பொய்மாய்கைக்குள்ளாகித்
தூண்டிலகப்பட்டுத்துடிக்கின்றேனானேனே. (உரு)

ஏணிப்பழுவாயிருளையறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலைபேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க்கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போலாகினனேநெஞ்சமே. (உ௬)

கோத்துப்பிரகாசங்கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியேகயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டடியேன்வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவிலிருந்தபிணமானேனே. (உ௭)

நிலைவிட்டுடலையுயிர்நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற்றின்றானைச்சேராமல்
வலைபட்டுழலுகின்றமான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற்றட்டழிந்தாய்நெஞ்சமே. (உ௮)

முடிக்குமயிர்ப்பொல்லாமுழுக்குரம்பையின்றாரின்
இடைக்குநடைக்குமிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத்தையனைநாயனையேன்
விடக்கையிழந்தமிருகமதுவானேனே. (உ௯)

பூவாணர்போற்றும்புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச்சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந்தலைபுகுந்தநாய்போலே
ஆகாதநெஞ்சமேயலைந்துதிரிந்தாயே. (௩0)

பத்தெட்டாயீரைந்தாய்ப்பதின்மூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றதேரோவியத்தைப்போற்றாமல்
தேத்திட்டுநின்றதிரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சேவிடவுமறியாயே. (௩௧)

அஞ்சுமுருவாகியைமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்தவிளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற்பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல்நானலைந்துகெட்டேனே. (௩உ)

ஊனமுடனேயுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்துமண்ணுலகின்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்களாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம்போய்ப்பிழைத்தோமில்லையே. (௩௩)

ஊறையிறைக்கின்றவுப்பிருந்தபாண்டத்தை
நாறாமல்நாறிநழுவும்புழுக்கூட்டை
வீறும்புரத்தைவிரும்புகின்றதெப்படியென்
ஏறுதநாட்டிலகன்றிருந்தேனில்லையே. (௩௪)

அரியவரிதேடியறியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும்பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக்காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்டகரியதுபோலானேனே. (௬௫)

தந்திரத்தையுன்னித்தவத்தைதமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னிமயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமாமேலொளியைக்காணமல்
அந்தரத்தேகோலெறிந்தஅந்தகன்போலானேனே. (௬௬)

விலையாகிப்பாணனுக்குவீறடிமைப்பட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற்றின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோலாணவத்திஞலைழுங்கி
யுலைவாய்மெழுகதுபோலுருகினையேநெஞ்சமே. (௬௭)

நெஞ்சொடுபுலம்பல்
முற்றிற்று.

பட்டணத்துப்பிள்ளையார்
அருளிச்செய்த

பூரணமாலை.

மூலத்துதித்தெழுந்தமுக்கோணசக்கரத்துள்
வாலைதனைப்போற்றாமல்மதிமறந்தேன்பூரணமே. (௧)

உந்திக்கமலத்துதித்துநின்றபிரமாவைச்
சந்தித்துக்காணமற்றட்டழிந்தேன்பூரணமே. (௨)

நாவிக்கமலநடுநெடுமால்காணமல்
ஆவிகெட்டியானுமறிவழிந்தென்பூரணமே. (௩)

உருத்திரனையிரதயத்திலுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங்கலங்கினேன்பூரணமே (௪)

விசுத்திமயேசுரனைவிழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம்பதறினேன்பூரணமே. (௫)

நெற்றிவிழியுடையநிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற்பொறியழிந்தேன்பூரணமே. (௬)

நாதவிந்துதன்னைநயமுடனேபாராமல்
போதமயங்கிப்பொறியழிந்தேன்பூரணமே. (௭)

உச்சிவெளியையுறுதியுடன்பாராமல்
அச்சமுடனானுமறிவழிந்தேன்பூரணமே. (௮)

மூக்குமுனையைமுழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானுமறிவழிந்தேன்பூரணமே. (௯)

இடைபிங்கலையினியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந்தயங்கினேன்பூரணமே. (௧0)

ஊனுக்குணீநின்றுலாவினதைக்காணாமல்
நானென்றிருந்துநலனழிந்தேன்பூரணமே. (௧௧)

மெய்வாழ்வைநம்பிவிரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப்புலம்பினேன்பூரணமே. (௧௨)

பெண்டுபிள்ளைதந்தைதாய்பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்றுநம்பியுடலழிந்தேன்பூரணமே. (௧௩)

தண்டிகைபல்லாக்குடனேசகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பியுணர்வழிந்தேன்பூரணமே. (௧௪)

இந்தவுடலுயிரையெப்போதுந்தான்சதமாப்
பந்தமுற்றுநானும்பதமழிந்தேன்பூரணமே. (௧௫)

மாதர்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப்பொறியழிந்தேன்பூரணமே. (௧௬)

சரியைகிரியாயோகந்தான்ஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற்பயனழிந்தேன்பூரணமே. (௧௭)

மண்பெண்பொன்னாசைமயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற்கலங்கினேன்பூரணமே. (௧௮)

[redacted]முதலைப்பார்த்துத்தனித்திருந்துவாழாமல்
அனியாயமாய்ப்பிறந்திங்கலைந்துநின்றேன்பூரணமே. (௧௯)

ஈராறுதண்கலைக்குளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராமலறிவழிந்தேன்பூரணமே. (௨0)

வாசிதனைப்பார்த்துமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்துகாலலுத்தேன்பூரணமே. (௨௧)

கருவிகடொண்ணூற்றாறிற்கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராமலீடழிந்தேன்பூரணமே. (௨௨)

உடலுக்குள்நீநின்றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்துகாலலுத்தேன்பூரணமே. (௨௩)

எத்தேசகாலமுநாமிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராமலுருவழிந்தேன்பூரணமே. (௨௪)

எத்தனைதாய்தந்தையிவர்களிடத்தேயிருந்து
பித்தனாயானும்பிறந்திறந்தேன்பூரணமே. (௨௫)

பெற்றவளுக்தாள்தாயார்பிறந்தவுக்தேன்யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்துபுகலருள்வாய்பூரணமே. (உசு)

உற்றாரழுதவுத்தாருறன்முறையார்சுட்டவுத்தார்
பெற்றவுத்தாள்தாயார்பிறந்தவுத்தேன்பூரணமே. (உஎ)

பிரமன்படைத்தவுத்தான்பிறந்திறந்துநானவுத்தேன்
உரமுடையவக்கினிதானுண்டவுத்தான்பூரணமே. (உஅ)

எண்பத்துநான்குநூறாயிரஞ்செனனமுஞ்செனித்துப்
புண்பட்டுநானும்புலம்பினேன்பூரணமே. (உகூ)

என்னையறியாமலெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாமலுடலிழந்தேன்பூரணமே (௩O)

கருவாயுருவாய்க்கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்றதறிகிலேன்பூரணமே. (௩க)

செம்பொற்கமலத்திருவடியைப்போற்றுமல்
பம்பைகொட்டவாடும்பசாசானேன்பூரணமே. (௩உ)

எனக்குள்ளேநீயிருக்கவுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீரவரமருள்வாய்பூரணமே. (௩௩)

எழுவகைத்தோற்றத்திருந்துவினையாடினதைப்
பழுதறவேபாராமற்பயனிழந்தேன்பூரணமே. (௩ச)

சாதிபேதங்கள்தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்றுமயங்கினேன்பூரணமே. (௩ரு)

குலமொன்றாய்நீபடைத்தகுறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்துமயங்கினேன்பூரணமே (௩சு)

அண்டபிண்டமெல்லாமணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின்குறிப்பறியேன்பூரணமே. (௩எ)

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ்சற்குருவைப்போற்றும
லகத்தினுடையாணவத்தாலறிவழிந்தேன்பூரணமே. (௩அ)

ஐந்துபொறியையடக்கியுனைப்போற்றுமல்
நைந்துருகிநெஞ்சநடுங்கினேன்பூரணமே. (௩கூ)

என்னைத்திருக்கூத்தாவிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியாதுடலழிந்தேன்பூரணமே. (சO)

நரம்புதசைதோலெலும்புநாற்றத்துக்குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல்மயங்கினேன்பூரணமே. (சக)

சிலந்தியுடைநூல்போற்சிவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல்நலமழிந்தேன்பூரணமே. (சஉ)

குருவாய்ப்பரமாகிக்குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவானதறிகிலேன்பூரணமே. (௪௩)

ஒளியாய்க்கதிர்மதியாயுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்றவியனறியேன்பூரணமே. (௪௪)

இடையாகிப்பிங்கலையாயெழுந்தசுழுமுனையாய்
உடலுயிராய்நீயிருந்தவுளவறியேன்பூரணமே. (௪௫)

மூலவித்தாய்நின்றுமுளைத்துடல்தோறும்மிருந்து
காலனெனவழிக்குங்கணக்கறியேன்பூரணமே. (௪௬)

உள்ளும்புறம்புமாயுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியாதிருந்தேனேபூரணமே. (௪௭)

தாயாகித்தந்தையாய்த்தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்றநிலையறியேன்பூரணமே. (௪௮)

விலங்குபுள்ளூர்வனவசரம்விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்றகுறிப்பறியேன்பூரணமே. (௪௯)

ஆணாகிப்பெண்ணாயலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்றவகையறியேன்பூரணமே. (௫௦)

வாலையாய்ப்பக்குவமாய்வளர்ந்துகிழந்தானாகும்
பாலையாய்நின்றபயனறியேன்பூரணமே. (௫௧)

பொய்யாய்ப்புவியாய்ப்புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்றவியனறியேன்பூரணமே. (௫௨)

[illegible]ய்மணமாகிப்பொன்னாகிமாற்றாகி
நாவாய்ச்சொல்லானநயமறியேன்பூரணமே. (௫௩)

முதலாய்நடுவாகிமுப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகிநின்றவியலறியேன்பூரணமே. (௫௪)

ஊனாயுடலுயிராயுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனாய்ருசியானதிறமறியேன்பூரணமே. (௫௫)

வித்தாய்மரமாய்விளைந்தகனிகாய்பூவாய்ச்
சித்தாகிநின்றதிறமறியேன்பூரணமே. (௫௬)

ஐவகையும்பெற்றுலகவண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்றதிறமறியேன்பூரணமே. (௫௭)

மனமாய்க்கனவாகிமாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்றநிலையறியேன்பூரணமே. (௫௮)

சத்திசிவமிரண்டாய்த்தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்றதிறமறியேன்பூரணமே. (௫௯)

பொறியாய்ப்புலனாகிப்பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்றவளவறியேன்பூரணமே. (௬0)

வானிற்கதிர்மதியாய்வளர்ந்துபின்னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்தவுயிர்ப்பறியேன்பூரணமே. (௬௧)

பொய்யும்புலையுமிகப்பொருந்திவீண்பேசலன்றி
ஐயோவுனையுரைக்கவறிகிலேன்பூரணமே. (௬௨)

நிரந்தரமாயெங்குநின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப்பதமறியேன்பூரணமே. (௬௩)

கொல்வாய்பிறப்பிப்பாய்கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்பிறர்க்குட்செயலறியேன்பூரணமே. (௬௪)

வாரிதியாய்வையமெல்லாமன்னுமண்டபிண்டமெல்லாஞ்
சாருதியாய்நின்றதலமறியேன்பூரணமே. (௬௫)

வித்தாய்மரமாய்வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்ததரமறியேன்பூரணமே. (௬௬)

தத்துவத்தைப்பார்த்துமிகத்தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராமலுய்வாரோபூரணமே. (௬௭)

ஒன்றாயுயிராயுடல்தோறுநீயிருந்தும்
என்றுமறியார்களேழைகள்தாம்பூரணமே. (௬௮)

நேற்றென்றுநாளையென்றுநினைப்புமறப்பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்றவளமறியேன்பூரணமே. (௬௯)

மனம்புத்திசித்தமகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலமானநிலையறியேன்பூரணமே. (௭0)

உருப்பேதமின்றியுயர்ந்தசத்தபேதம்தாய்க்
குருப்பேதமாய்வந்தகுணமறியேன்பூரணமே. (௭௧)

சட்சமயபேதங்கள்தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென்றுரைத்தனையேபூரணமே. (௭௨)

முப்பத்திரண்டுறுப்பாய்முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்படுவித்தைத்திறமறியேன்பூரணமே. (௭௩)

என்னதான்கற்றாலென்னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதாருய்வரோபூரணமே. (௭௪)

கற்றறிவோமென்பார்காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப்பிறப்பறுமோபூரணமே. (௭௫)

வானென்பாரண்டமென்பார்வாய்ஞானமேபேசித்
தானென்பார்வீணர்தனையறியார்பூரணமே. (௭௬)

ஆதியென்பாரந்தமென்பாரதற்குணடுவாயிருந்த
சோதியென்பார்நாதத்தொழிலறியார்பூரணமே. (எஎ)

மூச்சென்பாருள்ளமென்பார்மோனமெனுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்னுடையபோறியார்பூரணமே. (எஅ)

பரமென்பார்பானுவென்பார்பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன்வழியறியார்பூரணமே. (எகூ)

எத்தனைபேரோவெடுத்தெடுத்துத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றுனதறிகிலேன்பூரணமே. (அ0)

நகாரமகாரமென்பார்நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார்வகையறியார்பூரணமே. (அக)

மகத்துவமாய்க்காமமயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற்பயனழிந்தேன்பூரணமே. (அஉ)

உண்மைப்பொருளையுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலேபிறந்திறந்தேன்பூரணமே. (அந)

வாயாரவாழ்த்திமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்துக்கலங்கினேன்பூரணமே. (அச)

சந்திரனைமேகமதுதான்மறைத்தவாறதுபோற்
பந்தமுறையானுமுனைப்பார்க்கிலேன்பூரணமே. (அரு)

செந்தாமரைத்தாளைத்தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றிங்கலைந்தேனுன்பூரணமே. (அசு)

நீர்மேற்குமிழிபோல்நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான்றட்டழிந்தேன்பூரணமே. (அஎ)

நெஞ்சமுருகிநினைத்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்கவகையறியேன்பூரணமே. (அஅ)

எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைந்திருந்த
துள்ளமறியாதுருகினேன்பூரணமே. (அகூ)

மாயாப்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்தே
யோயாச்சனனமொழித்திலேன்பூரணமே. (கூ0)

பூசையுடன்புவனபோகமெனும்போக்கியத்தால்
ஆசையுற்றேநானுமறிவழிந்தேன்பூரணமே. (கூக)

படைத்துமழித்திடுவாய்பார்க்கிற்பிரமாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாத்துலங்குவிப்பாய்பூரணமே. (கூஉ)

மந்திரமாய்ச்சாத்திரமாய்மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத்தகுமோதான்பூரணமே. (கூந)

அல்லாய்ப்பகலாயனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்ததொடர்பறியேன்பூரணமே. (கூச)

நரகஞ்சுவர்க்கமெனநண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்பதறிகிலேன்பூரணமே. (கூரு)

பாவபுண்ணியமென்னும்பகுப்பாய்ப்படைத்தழித்திங்
காவலையுண்டாக்கிவைத்தவருளறியேன்பூரணமே. (கூசா)

சாந்தமென்றுங்கோபமென்றுஞ்சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும்படைத்தனையேபூரணமே. (கூஎ)

பாசமுடலாய்ப்பசுவதுவுந்தானுயிராய்
நேசமுடனீபொருளாய்நின்றனையேபூரணமே. (கூஅ)

ஏதிலடியாரிரங்கியிகத்தில்வந்துன்
பாதமதில்தாழப்பரிந்தருள்வாய்பூரணமே. (கூகூ)

நானேநீநீயேநானுமிரண்டுமொன்றானால்
தேனின்ருசியதுபோற்றெவிட்டாய்நீபூரணமே. (க00)

முடிவிலொருசூனியத்தைமுடித்துநின்றுபாராமல்
அடியிலொருசூனியத்திலலைந்தேனேபூரணமே. (க0க)

பூரணமாலைதனைப்புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில்ஞானந்தழைப்பிப்பாய்பூரணமே. (க0உ)

பூரணமாலை முற்றும்.

நெஞ்சொடுமகிழ்தல்.

:o:

அன்றுமுதலின்றளவுமாக்கையொடுசூட்சியுமாய்
நின்றநிலையறியநேசமுற்றாய்நெஞ்சமே. (க)

அங்கங்குணர்வாயறிவாகியெநிரம்பி
எங்கெங்குமானநிலையேகரித்தாய்நெஞ்சமே. (உ)

அலையாதபேரின்பவானந்தவெள்ளத்தில்
நிலையாயுருவிறந்துநின்றனையேநெஞ்சமே. (ங)

பாராமற்பதையாமற்பருகாமல்பாதொன்றும்
ஓராதுணர்வுடனேயொன்றினையேநெஞ்சமே. (ச)

களவிறந்துகொலையிறந்துகாண்பனவுங்காட்சியும்போ
யளவிறந்துநின்றநிலையன்புற்றாய்நெஞ்சமே. (ரு)

பேச்சிறந்துசுட்டிறந்துபின்னிறந்துமுன்னிறந்து
நீச்சிறந்துநின்றநிலைநேசமுற்றாய்நெஞ்சமே. (சா)

விண்ணிறந்துமண்ணிறந்துவெளியிறந்துவொளியிறந்
எண்ணிறந்துநின்றநிலையேகரித்தாய்நெஞ்சமே.

பார்த்தவிடமெங்கும்பரமெனவேயுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக்கொண்டனையேநெஞ்சமே. (௮)

ஊரிறந்துபேரிறந்துவொளியிறந்துவெளியிறந்து
சீரிறந்துநின்றநிலைசேர்ந்தனையேநெஞ்சமே. (௯)

ஆண்பெண்ணலியென்றழைக்கவரிதாய்நிறைந்து
காணவரிதாயவிடங்கண்ணுற்றாய்நெஞ்சமே. (௧௦)

ஆங்காரமச்சமகற்றியறிவினொடு
தூங்காமற்றூங்கிச்சுகம்பெற்றாய்நெஞ்சமே. (௧௧)

ஆதியாய்நின்றவகண்டபரிபூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ்சார்வுற்றாய்நெஞ்சமே. (௧௨)

விருப்புவெறுப்பில்லாதவெட்டவெளியதனில்
இருப்பேசுகமென்றிருந்தனையேநெஞ்சமே. (௧௩)

ஆருமுறாப்பேரண்டத்தப்புறத்துமிப்புறத்தும்
நீருமுப்புமென்னநிலைபெற்றாய்நெஞ்சமே. (௧௪)

உடனாகவேயிருந்துமுணரவரியானோடு
கடனீருமாறும்போற்கலந்தனையேநெஞ்சமே. (௧௫)

நெடியகத்தைப்போக்கிநின்றசழக்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற்பற்றினையேநெஞ்சமே. (௧௬)

மேலாகியெங்கும்விளங்கும்பரம்பொருளிற்
[redacted]றுமென்சுவைபோற்பற்றினையேநெஞ்சமே. (௧௭)

நீரொடுதண்ணாலிவிண்டுநீரானவாறேபோல்
ஊரொடுபேரில்லானோடொன்றினையேநெஞ்சமே. (௧௮)

இப்பிறப்பைப்பாழ்படுத்தியிருந்தபடியேயிருக்கச்
செய்பவரிதாயவிடஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௧௯)

மேலாம்பதங்களெல்லாம்விட்டுவிட்டாராய்ந்து
நாலாம்பதத்தினடந்தனையேநெஞ்சமே. (௨௦)

கடங்கடங்கடோறுங்கதிரவனூடாடி
யடங்குமிடந்தானறிந்தன்புற்றாய்நெஞ்சமே. (௨௧)

கற்றவனாய்க்கேட்டவனாய்க்காணானாய்க்காண்பவனாய்
உற்றவனாய்நின்றநிலையொன்றுபட்டாய்நெஞ்சமே. (௨௨)

நாலுவகைக்கரணநல்குபுலனைந்துமொன்றாய்ச்
சீலமுற்றுநின்றநிலைசேர்ந்தனையேநெஞ்சமே. (௨௩)

காட்டிடமும்விண்ணிடமுமண்ணிடமுங்
ருதன்மையெனக்கண்ணுற்ருய்நெஞ்சமே. (௨௪)

தந்தநாளுமிருந்தபடியேயிருக்க
அந்தச்சுகாதீதமாக்கினையேநெஞ்சமே. (௨௫)

வாக்கிறந்துநின்றமனோகோசரந்தனிலே
தாக்கறவேநின்றதிலேதலைசெய்தாய்நெஞ்சமே. (௨௬)

எத்தேசமுநிறைந்தேயெக்காலமுஞ்சிறந்து
சித்தாயசித்தினிடஞ்சேர்ந்தனையேநெஞ்சமே. (௨௭)

தாழாதேநீளாதேதன்மயமதாய்நிறைந்து
வாழாதேவாழமருவினையேநெஞ்சமே. (௨௮)

உள்ளும்புறம்புமுவட்டாதவானந்தக்
கள்ளருந்திநின்றதிலேகண்ணுற்ருய்நெஞ்சமே. (௨௯)

வாதனைபோய்நிட்டையும்போய்மாமௌனராச்சியம்போய்
பேதமறநின்றவிடம்பெற்றனையேநெஞ்சமே. (௩0)

இரதம்பிரிந்துகலந்தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தனல்பால்மேவினையேநெஞ்சமே. (௩௧)

சோதியான்சூழ்பனிநீர்சூறைகொளுமாறேபோல்
கீதிகுருவின்றிருத்தாள்நீபெற்ருய்நெஞ்சமே. (௩௨)

நெஞ்சொடுமகிழ்தல் முற்றிற்று.

பட்டணத்துப்பிள்ளையார்

உடற்கூற்றுவண்ணம்.

தன தன தான, தன தன தான, தந்த தனந்தன தந்த தனந்த
தனனதனந்த, தனனதனந்த, தானனதானன தானதனந்த.

ஒருமடமாதுமொருவனுமாகி, யின்பசுகந்தருமன்புபொருந்தி
யுணர்வுகலங்கிஒழுகியவிந்து, ஊறுசுரோணிதமீதுகலந்து.

பனியிலொர்பாதிசிறுதுளிமாது, பண்டியில்வந்துபுகுந்துதிரண்டு, பதுமவரும்புகமடமிதென்று, பார்வைமெய்வாய்செவிகால்கைகளென்ற,

உருவமுமாகியுயிர்வளர்மாத,மொன்பதுமொன்றுநிறைந்துமடந்தை, யுதரமகன்றுபுவியில்விழுந்து, யோகமும்வாரமு நாளுமறிந்து.

மகளிர்கள்சேனைதரவணையாடை, மண்படவுந்தியுதைந்துகவிழ்ந்து, மடமயில்கொங்கையமுதமருந்தி, யோரறிவீரறிவாகிவளர்ந்து.

ஒளிநகையூறலிதழ்மடவாரு, வந்துமுகந்திடவந்துதவழ்ந்து
மடியிலிருந்துமழலைமொழிந்து, வாவிருபோவெனநாமம்விளம்ப.

உடைமணியாடையரைவடமாட, வுண்பவர்தின்பவர்தங்க
ளொடுண்டு, தெருவிலிருந்துபுழுதியளைந்து, தேடியபாலரொடோ
டிநடந்து.

அஞ்சுவயதாகிவிளையாடியே. (௧)

உயர்தருஞானகுருவுபதேச, முந்தமிழின்கலையுங்கரைகண்டு
வளர்பிறையென்றுபலரும்விளம்ப, வாழ்பதினாறுபிராயமும்வந்து.

மயிர்முடிகோதியறுபதநீல, வண்டிமிர்தண்டொடைகொண்
டைபுனைந்து, மணிபொனிலங்குபணிகளணிந்து, மாகதர்போகதர்
கூடிவணங்க.

மதனசொரூபனிவனெனமோக, மங்கையர்கண்டுமருண்டுதி
ரண்டு, வரிவிழிகொண்டுசுழியவெறிந்து, மாமயில்போலவர்போ
வதுகண்டு.

மனதுபொறுமலவர்பிறகோடி, மங்கலசெங்கலசந்திகழ்கொங்கை
மருவமயங்கியிதழமுதுண்டு, தேடியமாமுதல்சேரவழங்கி.

ஒருமுதலாகிமுதுபொருளாயி, ருந்ததனங்களும்வம்பிலிழந்து
மதனசுகந்தவிதனமிதென்று, வாலிபகோலமும்வேறுபிரிந்து.

வளமையுமாறியிளமையுமாறி, வன்பல்விழுந்திருகண்களிருண்டு
வயதுமுதிர்ந்துநரைதிரைவந்து, வாதவிரோதகுரோதமடைந்து.

செங்கையினிலோர்தடியுமாகியே. (௨)

வருவதுபோவதொருமுதுகூனு, மந்தியெனும்படிகுந்திநடந்
மதியும்அழிந்துசெவிதிமிர்வந்து, வாயறியாமல்விடாமன்...

துயில்வருநேரமிருமல்பொருது, தொண்...
துவறந்து, துகிலுமிழந்துசுணை...
கோரணிகொண்டு.

கலியுகமீதிலிவர்மரியா...
கலகலவென்றுமல...

கடன்முறைபேசுமெனவுரைநாவு,றங்கிவிழுந்துகைகொண்டு மொழிந்து, கடைவழிகஞ்சியொழுகிடவந்து, பூதமுநாலுசுவாச முநின்று.

நெஞ்சுதடுமாறிவருநேரமே. (௩)

வளர்பிறைபோலவெயிறுமுரோம, முஞ்சடையுஞ்சிறுகுஞ்சி யும்விஞ்ச, மனதுமிருண்டவடிவுமிலங்க, மாமலைபோல்யமதூதர் கள்வந்து.

வலைகொடுவீசியுயிர்கொடுபோக, மைந்தரும்வந்துகுனிந்தழ நொந்து, மடியில்விழுந்துமனைவிபுலம்ப, மாழ்கினரேயிவர்கால மறிந்து.

பழையவர்காணுமெனுமயலார்கள்,பஞ்சுபறந்திடநின்றவர்பந்த ரிடுமெனவந்துபறையிடமுந்த,வேபிணம்வேகவிசாரியுமென்று.

பலரையுமேவிமுதியவர்தாமி,ருந்தசவங்கமுவுஞ்சிலரொன்று[பை. பணிதுகில்தொங்கல்களபமணிந்து, பாவகமேசெய்துநாறுமுடம்

வரிசைகெடாமலெடுமெனவோடி, வந்திளமைந்தர்குனிந்து சுமந்து, கடுகிநடந்துசுடலையடைந்து, மானிடவாழ்வெனவாழ் வெனநொந்து.

விறகிடைமூடியழல்கொடுபோட, வெந்துவிழுந்து முறிந்து நிணங்க, ளுருகியெலும்புகருகியடங்கி, யோர்பிடிநீறுமிலாதவுட ம்பை,

நம்புமடியேனையினியாளுமே. (௪)

வண்ணமுற்றிற்று.